சரசுவதிமகால் வெளியீடு எண் 96.

நாற்கவிராச நம்பி இயற்றிய

அகப்பொருள் விளக்கவுரை.

T. 2816

கி. பி. 1962.] [சகம் 1884.

உ

பரமபதி துணை

நாற்கவிராச நம்பி இயற்றிய

அகப்பொருள் விளக்கவுரை

★

இஃது

பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்துப் பதித்தவர்

பண்டித. வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை

ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சரசுவதிமால் நூல் நிலையம்

★

பதிப்பித்தவர்

ஷை நூல் நிலையக் கமிட்டியினருக்காக

கௌரவ காரியதரிசி

உயர்திரு. சே. கோபாலன் பி. ஏ. பி. எல். அவர்கள்

சகம் 1884, (சுபகிருது) 1962.

விலை ரூ. 9—[illegible].p.

ஸரஸ்வதீமஹால் நூல் வெளியீட்டு எண். 96.

இந்நூல்

யூனியன் கவர்ண்மெண்டார் பொருளுதவியினால்

வெளியிடப் பெற்றது.

உ

நாற்கவிராச நம்பியகப் பொருள் விளக்கவுரை

(உள்ளுறை)

1 முகவுரை

2 பதிப்புரை

3 அகப்பொருள் விளக்க முன்னுரை

4 நூலாசிரியர் வரலாறு

5 பொருளடக்கம்

6 அகப்பொருள் விளக்கவுரை 1 முதல் 420 முடிய

7 நூற்பா முதற்குறிப்பகராதி 421—433

8 முதல்கரு உரிப்பொருள்களின் குறிப்புரை 434—433

9 பிழை திருத்தம்

முகவுரை

" மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமுந் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குங் கருணைசெய் தானே "

என்பது திருமந்திரச் செய்யுள் (10ந் திருமுறை)

மக்கட்பிறப்பினர் ஒருவர் தம்கருத்தினைப் பிறர்அறிந்து கொள்வதற்கும், பிறருடைய உள்ளக்கருத்தினைத் தாம் அறிந்துகொள்வதற்கும் கருவியாக அமைந்த ஒலித் தொகுதியே மொழியாகும். இம்மொழி பதினெண் வகைப் படும். 'பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்' என்பது திருமந்திரம். இப்பதினெண்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றும். மொழிகளை முதன்முதலில் ஆக்கித்தந்தவர் எல் லாம்வல்ல இறைவன் ஆவர் என்பது எல்லாநூல்களின் உட் கிடக்கையாம். வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கண் குமரியும், மேற்கின்கண் குடகமும், கிழக்கின்கண் கடலும், ஆகிய இந்நான்கு எல்லைக்குட்பட்ட தமிழகத்து இறைவனால் அருளிச்செய்யப்பட்ட பெரியதமிழ் என்னுங்கடலுள் எழுத் தும் சொல்லும், பொருளும், யாப்பும், அணியும் ஆகிய ஐந்துவகை இலக்கணங்களையும் ஒருசேரச்செய்தவர் அகத்திய முனிவரர், தொல்காப்பிய முனிவர், புத்தமித்திரர் வைத்தியநாத நாவலர், முத்துவீரு உபாத்தியாயர், வீரமா முனிவர், பவணந்திமுனிவர், சாமிகவிராசர் முதலானோர் ஆவர். இவ்வைந்திலக்கணங்களையும் தனித்தனியாகவும் செய் துள்ளனர். அவர்கள் நேமிநாதர், ஐயனாரிதனார், இறையனார், நாற்கவிராசநம்பி, பெருமாள்கவிராயர், அமிதசாகரனார்,

அம்பிகாபதி, முதலாயினோர்ஆவர். அகப்பொருள் இலக்கணத்தைத் தனித்து இயற்றினவர் இறையனார். நாற்கவிராச நம்பி, பெருமாள் கவிராயர் என்பவர். இவர்கள் செய்த நூல்கட்கு இறையனார் களவியல், நம்பியகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், எனப்பெயர் வழங்கும்.

இவற்றுள் நடுவணதாகிய அகப்பொருள் விளக்கத்தைச் செய்தவர் பாண்டிநாட்டில் புளிங்குடியென்னும் ஊரில் உய்யவந்த தேவநாயனாரின் மகனார் நாற்கவிராசநம்பி யென்பவர். இவர் காலத்தில் பொய்யாமொழிப் புலவரும் இருந்து இவ்வகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் தஞ்சைவாணன்கோவை யெனும் பிரபந்தத்தைச் செய்தனர் என வரலாறு காணப்பெறுகின்றது.

இந்நூலானது நமதுநாட்டிற் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றது. சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்விற்கும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இந்த அகப்பொருள் விளக்கவுரைநூலினை பாண்டித்துரைத் தேவர் அவர்களால் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. யாழ்பாணத்தில் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரால் இவ்வுரையினைத்தழுவிப் புத்துரை ஒன்று வெளி வந்து உலாவிற்று. பின்னர் விளக்கமான வகையில் அச்சிடப் பெறவில்லை. இதுகாறும் அச்சிடப்பட்ட அகப்பொருள் விளக்க வுரையின்கண் காணப்பெறுத பாடபேதங்களும், உரைநயங்களும், உதாரணச்செய்யுட்களும் எங்கள் சரசுவதி மால் நூல்நிலைய ஓலைச்சுவடியில் உள்ளன எனலை அறிவிக்க தமிழ்நாட்டு அரசினர் ஏற்றுக்கொண்டு அச்சிற் பதிப்பிக்க ஆணையிட்டுள்ளனர். அவ்வாணை வழிநின்று நூல்நிலையத்தி லுள்ள பல ஏட்டுப்பிரதிகளையும் அச்சுப்பிரதிகளையும் ஒப்பு நோக்கி விரைவில் அச்சிட்டு முடித்தவர் எங்கள் சரசுவதி மால் நூல் நிலயத்திலிருந்து ஓய்வுபெற்ற தமிழாசிரியர் பண்டித வித்துவான் திரு, இராம. கோவிந்தசாமி பிள்ளை

யவர்கள் ஆவர். இவர்கள் பல்லாண்டுகள் திருவையாற்று அரசர்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக இருந்தவர். இவர் உழைப்பு மிகவும் பாராட்டற்பாலது. இந்திய அரசினர் கட்கும் சென்னை அரசினருக்கும் தமிழகம் என்றுங் கடமை பட்டுள்ளது. இப்பதிப்பினை நம் நாட்டினர் பெரிதும் ஏற்றுக் கொள்ளும் என நம்புகின்றேன்.

தூக்கும்பனுவற்றுறைதோய்ந்தகல்வியுஞ்சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப்பணித்தருள்வாய்வடநூற்கடலும்
தேக்குஞ்செழுந்தமிழ்ச்செல்வமுந்தொண்டர்செந்நாவினின்று
காக்குங்கருணைக்கடலே சகலகலாவல்லியே (குமரகுருபரர்)

இங்ஙனம்,

சரசுவதிமால் நூல்நிலையம்
தஞ்சாவூர் 12—7—62

சே. கோபாலன்,
கௌரவ காரியதரிசி.

உ

முகவுரை

“ ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே ”

திருமூலர்

கடலாற்சூழப்பட்ட இந்நிலவுலகினில் காணப்படும் உயிர்த்தொகைகள் அறிவுவகையான் அறுவகைப்படும் என்பது பண்டையோர் கண்ட முடிபு. தொல்காப்பிய முதலிய பேரியல் நூல்களும் இதனை வற்புறுத்தா நிற்கும். “மக்கடாமே யாறறிவுயிரே” என்ற தொல்காப்பியச் சூத்திரங் கொடு பார்க்கின்றுழி மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் கருவி வழியாகவறியும் ஐயறிவும் இவற்றினைத்தக்க இன்ன தகாதன இன்னவென்றுணரும் மனவறிவும் கூட்ட ஆறுயிற்று. இம் மக்கட் பிறப்பினர் உடல் வேறுபாட்டால் பால் வகையான் இருவகைப்படுவர். ஆண்பால், பெண் பால் என; மேல்நாடு, கீழ்நாடு ஆகிய இருவகை நாட்டினரும் மனவுணர்வுடையராயினும், கீழ்நாட்டினரது மனவுணர்வும் ஒழுகலாறும், பண்பாடும், கடவுட்பற்றும், உயிர்களிடத் திரக்கமும், ஆன்மீகவுணர்ச்சியும், உடல்உயிர்உலகம் இவற்றினையறியும் தத்துவ ஞானமும் பிறவும் பிறநாட்டினர் எய்துவதெனல் அரிது. அவை நாட்டின் பண்பும் அங்குவாழ்வார்தம் ஒழுகலாறும்அறம், பொருள், இன்பம், வீடடைதற் குரியவாய்ப்பும் அமையவில்லை யெனல் மிகையாகாது.

'வடவேங்கடந தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' எனப் பனம்பாரனுர் பாயிரம் பகராநிற்கும். 'அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்' என அதங்கோட்டாசானையும், பல்புகழ்நிறுத்தபடிமையோன் எனத்தொல்காப்பியரையும் பாயிரம் பாராட்டுகின்றது. இவற்ருன் நல்லுலகத்துச்சான்ருேர் வழி நின்று நாற்பொருள் அறிந்து கடைப்பிடித்தலும், நான்மறைமுற்றி வேதவழி நிற்றலும் இதன் முடிவாய்ந்து தவ வேடங் கொண்டு பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்ருனும் நில்லாவுலகம் புல்லிய நெறித்தென்று' வீட்டின் பற்று மேவற்கு நெறி வகுத்தல் வேண்டுமெனல் புலனுகா நிற்கும். இந்நாற் பொருள்களையும் உள்ளவாறுணர்த்துதற்குரியர் கடவுளும், கடவுள்அருள்வழி நின்ருரும், இருவகைப்பற்றும் முற்றும் விட்டபெரியாரும் ஆவர். இவர்கள் மறைகள் ஆகமம் முதலிய அரியநூல்களை நல்லாசிரியர்பால் நல்லொழுகக் முறை நின்று கற்றவர்கள். இவர்கள் மாணவர் நிலையிற் பயின்று இல்லறந்துறவறமெனு மிருவகையறங்களையும் மேற் கொளற்பாலர் ஆவர், என்பது நூல்களின் முடிபு.

"காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே—ஓதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருஞ்
கண்ணிரண்டு மொன்றையே காண்" என்னும் பாடலால்

ஒத்தவன்புடைய தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு ஒரு கருமஞ் செய்தாற்ருன் இனிதுமுடியும். இன்றேல் முடியாதென்பதுபுலனும். இல்லறச்செயலிவ்வாருயின் துறவறச் செயல் எவ்வாறெனில் " காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி யோதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது " என்பது தமிழ் மறை. இவ்வாறு தத்தையங்கனையார் தங்கண்மேல்வைத்த தயாவை நூறு நூருயிரங்கூறிட்டு, அத்தில் அங்கொருகூறரனிடத்தில் ஆக்கிப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவராவர்.

வள்ளுவரும், இல்லறவியலில் அன்புடைமையும் துறவறவியலில் அருளுடைமையும் அமைத்திருத்தலையும் நோக்குதல் வேண்டும். வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்து. இஃது துறவறமாகிய சாரணவகையாற் பெறப்படுவது என்று தெரிவிக்கின்றனர். நூற்கள் "நாற்பொருள் பயக்கு நடைநெறித்தாகி" எனவும் "அறம் பொருள் இன்பம் வீட்டை தனூற்பயனே" எனவும்,

"மலர்தலையுலகிற் பலநூலாய்ந்து
செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவது உய்வதும்"

எனவும் வரும்செய்யுட்களால் நூல்களான் நுவலப் படுவன நான்குமேயாம் என்பதும் உறுதிப்பொருள் இவையே யென்பதும் அறியக்கிடக்கின்றது.

வள்ளுவர்கண்ட முப்பாலுள் இன்பப்பால் (காமத்துப் பால்) என்பதும் ஒன்று. அப்பாலுள் களவியல் கற்பியல் என இருவியல்கள் பகுக்கப்பட்டு அவ்வியல்களின் இன்ப நிலையின் ஒழுகலாறுகள் வரம்புடன் வகுக்கப்பட்டுள. எண்ணாயிரமாண்டுகளின் முன்னர் அகத்தியத்தின் வழிவந்த தொல்காப்பியரும் தாங்கண்ட பேரியல்நூலின்கண் எழுத்தாலாயது சொல்லென்றும் அச்சொல்லறிவுறுப்பது பொருள் என்றும், அச்சொற்றொடர் உரைச்செய்யுள், பாச்செய்யுள் என இரு பகுதித்து என்றும் அச்செய்யுள் வழி பொருள் புலனாம் என்றும், பொருளறிவுறுப்பதே பொருளதிகாரம் என்றுங் கூறப்பட்டுள்ளது. ஒல்காப்பெரும் புகழ் தொல்காப்பியர். பொருளதிகாரத்து ஒன்பதியல்களில், அகத்திணையியல் புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என ஐந்தியல்களில் பொருளினைப்பற்றியே யுரைப்பாராயினர். அவற்றுள் அகமும் களவும் கற்பும் ஆயவை இன்பங் கண்ணியதாகும். என்பதறியற்பாலதாகும்.

இங்ஙனமாகக் கூறப்படும் கருவிநூல்களால் முதனூற் பொருளை முட்டின்றுணர்ந்து கட்டறுத்து வீடுபெறுவர் மக்களாவர், தமிழகத்து மக்கட் பண்பினர் " கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெற்றவராயினர். ஒருபழம்பாட்டு பெண்பாற்கற்பினர் இவரெனத் தொகுக்கின்றது.

அப்பாடலாவது:—

'முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங்
 கையர்மகிமை மொழியப் போமோ
ஒக்குமெரி குளிரவைத்தாள் ஒருத்திவில்வே
 டனையெரித்தாள் ஒருத்தி மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தியெழு
 பரிதடுத்தாள் ஒருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா
 வென் றொருத்தி கூறி னாளே'

என்பதாம்.

ஆண்பாலர்க்கும் இங்ஙனமாகிய கற்புத்தன்மையுண் டெனல் தாமே யமையுமாதலின் இதனைப்பெரிதும் வற்புறுத் தப் பெற்றிலது போலும். நிறை, பொறை, அன்பு, ஒழுக்கம், ஆய நற்பண்புகள் இருபாலார்க்கும் பொதுவேயா கும். இதனையடுத்து அறுபது சூத்திரங்களையுடைய " இறை யனார்களவியல் " எனும் பெருநூல் ஒன்று தோன்றிற்று. இதன்பெருமை மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரதேவ நாயனார் அருளிச்செய்த பேருரையானே நன்கு அறியப் பெறும். இதற்கும் பிற்றைக்காலத்தே ஐந்திலக்கணநூல் கள் வந்துறலாயின.

வீரசோழியம், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தொன்னூல்விளக்கம், சுவாமிநாதம் முதலியனவாம். தனித் தனியே இலக்கணம் வகுக்கப்பட்ட நூல்களுமுள. அவையே நாற்கவிராசநம்பியகப்பொருள், மாறனகப்பொருள், புறப்

பொருள்வெண்பாமாலை, தண்டியலங்காரம், நேமிநாதம், நன்னூல், யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை முதலியனவாம்.

இங்ஙனமாக ஆயிரமாண்டுகட்கு முன்னர்த்தோன்றிய அகப்பொருள் விளக்கமெனுநூல் தமிழகத்தில் உள்ளார்தம் பண்பாட்டினை நன்குவிளக்குவதாயிற்று. இதனைத் தஞ்சை வாணன் கோவையுரையாசிரியராகிய சொக்கப்ப நாவலர் கூறுவதாவது.

தலைமகன் தலைமகள் இவர்தம் இயலாவது (இல்லது, இனியது, நல்லது, என்றுபுலவரால் நாட்டிக்கூறப்பட்ட புனைந்துரையாற் றோன்றினராவது) பிணி, மூப்பு, இறப்புக் களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலமும் குணமும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய்ப் பொருவிறந்திருத்தலாம்.

'பிறப்பே குடிமை யாண்மை யாண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே'

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரவிதியால் இப்பத்து வகையும் ஒத்திருப்பது. இவற்றுள் ஆண்டு என்பது இருவர்க்கும் களவிற்காணும்போதில் எத்தனையாண்டு கூறவேண்டு மென்று கூறின் பதினையாண்டும் பதின்றிங்களும் புக்கதலைவனும், பதினோராண்டும் பதின்றிங்களும் புக்க தலைமகளும் களவொழுக்கத்திலிகழ்வர். இக்களவின்வழித் தாயே பொற்பமை கற்பு ஒழுக்கம் நிகழா நிற்கும்.

இங்ஙனமாக

'மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழி
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப'

ஆகலின் மக்கட்பிறப்புற்றவர் குறிக்கோள் 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் நற்றாளைத்தொழுது பிறவிய றுத்துப் பிறவாநெறியாகிய பேராவியற்கை யெய்துத லொன்றேயாம். எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி யறிவாலாய பயன் மெய்யுணர்வினையுடையானது நற்றாளைத் தொழல் வேண்டுமெனவும் இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்திக்கிடப்பர் என்று வள்ளுவர் வாய்மொழியும் கண்டுகோடல் வேண்டும். அகப்பொருளில் ஆள்வினையெனப்படும் ஆண்மை ஆடவர்க் குரியது. பெட்பமுறுந்தன்மை யெனப்படும் பெண்மை மகடூஉக்குரியது தலைவிக்குப் பன்னிராட்டைப் பிராயமும் தலைவற்குப் பதினாறாட்டை பிராயமும் குறித்தது முறையே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது நூற் றுணிபாகும். உருவொத்தாலாவது ஆடவர்க்கும் மகளிர்க்கும் ஓதிய இலக்கணமெல்லாம் நிறைந்த மாட்சியான் உளத்தின் கண் உண்டாவதோர் தருக்கு. நிறுத்தகாமவாயில் என்பது:- அவ்வுருவு பற்றிநிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய இயற்கை யன்பு. நிறை என்பது:- தன் மறையினை (இரகசியத்தினை) பிறர் அறியாவாறு நெஞ்சினை நிறுத்தல் அருள் என்பது:— தொடர்பு பற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண் மேலுஞ் செல் வதாகிய கருணை. உணர்வு என்பது:- அறிவுடைமை. அஃதா வது உலகியலாற் செய்யத்தகுவது அறிவது. திரு என்பது:- பொருளுடைமையும் அதுகொண்டு நுகர்வதுமாகாது, எஞ் ஞான்றும் ஒருபடித்தாய்ச் செல்வத்தகவிற்றாய் உள்ளதோர் உள்ள நிறைவு.

'செல்வ மென்பது சிந்தையினிறைவே,
அவா வெனப்படுவது அல்கா நல்குரவே' என்னும் ஆன்றோர் வாக்கும் அறுதியிட்டறையா நிற்கும்.

அகப்பொருளாவது யாதோவெனின் அகத்திணைய பய னென்பது, ஆயின், அகம் என்பது யாதோவெனின், ஒருவ னும் ஒருத்தியும் தம்முள் ஒத்த வன்பினராய்க் கூடுங் கூட் டத்தின்கட் பிறந்தவின்பம். அக்கூட்டத்தின் பின்னர் ஆண்டு அநுபவித்த அக்காலத்தில் இன்பம் எவ்வாறிருந்தது என்று அவ்விருவரில் ஒருவரையொருவர் கேட்கின், தத்தமக் குப் புலப்பட கூறப்படாததாய் உள்ளத்துணர்வே நுகர்ந்து உரைக்கில் வெளிப்படாது அகத்தே நிகழ்தலின் அகம் எனப் பெயராயிற்று, ஆயின் அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓராகுபெயர் ஆம் என்பது தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் என்பதற்கு நச்சினார்க் கினியரும் இவ்வாறே யுரையுரைத்தார் என்றுணர்க.

பொருள் என்பது யாதோவெனின் அகத்திற்கும் புறத் திற்கும் பொது வென்பது. அகத்தைச்சார்ந்துவரும் பொரு ளெல்லாம் அகப்பொருள் எனப்படும். புறத்தைச் சார்ந்து வரும்பொருள் எல்லாம் புறப்பொருள் எனப்படும். அகம்— இன்பம், புறம்-அறனும் பொருளும். இனிச் சுவையொன்பா னுள் இஃது இன்பச்சுவையின்பாற் படும் என்றுரைப்பர். அச்சுவை யாவையோ வெனின் வீரம், அச்சம், இழிபு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம். இவற் றுள் சாந்தமொழிந்த வெட்டுங் கூறப்படுவன. அவற்றுள், இச்சுவை காமமென்று சொல்லப்படும். காமம் எனினும் இன்பம் எனினும், சிருங்காரம் (சிங்காரம்) எனினும் ஒக்கும் ஆதலால் அகப்பொருட்கோவை இன்பச்சுவை யெனப்படும்.

(இஃது எனைத்து வகையாற் கூறப்பட்டதோ வெனின் களவு கற்பு எனும் இரண்டுகைகோளாற் கூறப்படும். கை கோள் என்பது யாதோவெனின் கையென்பது ஒழுக்கம். கோள் என்பது கொள்ளுதல். நிறைகோட்பறை யென்பது போல நின்றது. எனவே களவொழுக்கம் கற்பொழுக்கம் எனப்பட்டது.)

களவாவது யாதோவெனின் தலைமகனும் தலைமகளும் கொடுப்போரும் அடுப்போரும் இன்றிப் பான்மைவகையால் (ஊழின்முறையால்) தாமேயெதிர்ப்பட்டுப் புணர்தல், ஆத லின் இவ்வியற்குக் களவியல் என்று பெயராயிற்று என்பது. களவென்பது தருமநெறியன்றே இலக்கணம் பலவற்றினும் கூறியவழக்குப் பயிற்சியாய் வருவதென்னையெனின், களவி னிற் றீங்குதருவதாய் நரகத்துக்கேதுவாயது செய்யத்தகாத களவென்றறிக.

அறஞ்செய்ய மறமாகவும், மறஞ்செய்ய அறமாகவும் வருதலுமுள. அஃதென்னையெனின், தக்கன் வேள்விசெய்ய அவனுக்கே தீங்குதருதலின் அறஞ்செய்ய மறமாயிற்று. ஒரு வன் அயலார் மனைவியைக் கைதொட்டான், அப்போதொரு வனைக் கரிகூறக் கூவினாள்; கூவவே கைதொட்டானை யீர்த் துப்போய் அரசன் முன்விடக் கரியோனை யழைத்து உள்ள வாறுகரிகூறு என்ன, அவன் கைதொட்டதில்லை யெனக் கரி கூறினான்; கரிகூறவே, அவனைப்போ வென்று அரசன் விடுத் தனன். ஆங்குப் பொய் புகன்றது அறமாயிற்று. இவன் கை தொட்டானெனின் அவன் றலையோடு முடியும்.

இனிப்பொய்யுங் களவும் இரண்டிற்கு மொக்குமென்பது ஆதலாற் களவினும் நன்குதருங்களவுமுண்டு. இக்களவு கேடுமுதலிய துன்பங்களைத் தருவதன்று. எண்மணத்துள் ஒருமணமாய்க் நாந்தருவநெறியென்று மறையொழுக்கமாய்க் கூறப்பட்டதாகலின் தருமவொழுக்கமெனப்படும். நாகபட் டினத்தில் புத்தர்தெய்வம் பசும்பொன்னாற் செய்திருந்த தனைத் திருமங்கையாழ்வார் களவிற்கொண்டுவந்து திருவ ரங்கத்து மதில்செய்வித்தனர். அதனால் அவர் அச்சமயத் தில் கடவுட்டன்மையராய் விளங்கினார். அவரைக் குற்றங் கூறுவார் ஒருவருமிலர். ஆதலால், களவினும் நன்குதரு களவும் உண்டென்றறிக.

ஆயின், களவென்று பெயர் கூறவேண்டுவ தென்னை யெனின், வேதத்தினைப் பலபொருளும் மறைந்திருக்குங் காரணத்தால் மறையென்று, பெயர் கூறினாற்போல, பிறரறியாமை இருவருங் கலந்த உள்ளத்தராய்க் கூடுதலிற் களவியல் என்று பெயராயிற்று. பின் கற்பின்வழிநின்று விளங்குதலாற் குற்றமின்றெனக் கொள்க.

இக்களவொழுக்கத்திற்கு முன்னர்க் கைக்கிளை கூறப்படும் என்னை,

' மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப ''
(நம்பி—அகத்திணை. 28)

என்பதிலக்கண மாகலின்.

கைக்கிளை யென்பது யாதோவெனின், கையென்பது சிறுமை; கிளையென்பது உறவு; ஆதலிற் சிறுமை யுறவென்பது கைக்கிளையென்று பெயராயிற்று. கைக்குடை—சிறுகுடை, கைவாய்க்கால்—சிறுவாய்க்கால், கையரிவாள்—சிற்றரிவாள், என்பன வழக்கிடத்துஞ் சிறுமைகுறித்து வருதல்காண்க. அஃதென்னையெனின், ஒருதலைக்காமமெனப் பட்டுத் தலைமகன் கூற்றாய் நிகழ்தலின், அதனுள் முதலாவது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிவு, ஆக நான்கும் பற்றி சிற்றுறவு நிகழப்பெறும். காட்சியாகிய காணுமியல்பு யாதோவெனின், முன்சொன்ன தலைவனும், கடுங்கண்யானையும் தறுகட்பன்றியும், கருவரையும், இருநிலனும் பெருவிசும்பும் அனையார் அரிமான்றுப்பினர் பற்பல நூறாயிரம் கூர்வேல் இளைஞர் தற்சூழச் செல்வான், அவனும் உடன் பிறந்து உடன்வளர்ந்து உடனீராடிச் சீர்உடன்பெருகத் தால் உடனூட்டப் பாலுடனுண்டு பல்லுடனெழுந்து சொல்லுடன் கற்றுப் பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் விழுப்பமும்

ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பல நூறுயிரவர் கண்ணுமனமுங் கவரு மொண்ணுதன் மகளிர் சூழத் தாரகை நடுவண்தண்மதிபோலச் செல்வாள், என்று கூறவே தமிய ராய்ப் புணர்ந்தா ரென்பதனோடு மாறுகொள்ளுமெனின் மாறுகொள்ளாது. அவளாயங்களும் விளையாட்டு விருப்பி னால் பிரியும். என்னை பிரியுமாறெனின் தழைவிழைதக்கன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தனசெய்து மென்றும் போது மேதக்கன கொய்துமென்றும், மயி லொடு மாறுஇகலுதும் என்றும், வாச மலர்க்கொடி யூசலா டுது மென்றும், பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோவென்றும் இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோ எனவும் இவ்வகை நினைத்துப் பிரிப.

இவ்வகை அவளைத் தமியளாக்கிப் பிரிபவோவெனின் எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் கூட்டத்தினராதலானும், பான்மையும் அவ்வகைத்தாதலானும், பிறவாறு நினையார் பிரிவர் என்பது, ஆயின் அவ்வகைப்பட்ட ஆயத்திடை என் றும் பிரிந்தறியாதாள் தனியே நிற்குமோவெனின், நிற்கும், தான் பயின்ற விடமும் தன்னுயத்தோடொக்கு மாகலா னென்பது. யாண்டு நிற்குமோவெனின், சந்தனமும், சண் பகமும் தேமாவும், தீம்பலாவும், ஆசினியும், அசோகமும், கோங்கமும், வேங்கையும், குரவும் விரிந்து நாகமும், தில கமும், நறவமும், மாந்தியும், மரவமும், மல்லிகையும், மௌ வலொடு மணங்கமழ்ந்து பாதிரியும், பராரைஞாழலும், பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து பொரிப் புன்கும், புன்னுகமும், முருக்கொடு மூகை சிறந்து வண்டடைந்து தேனுர்ந்து வரிக்குயில்கள், வரிபாடத் தண்தென்றல் இடை விராய்த்தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண் மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்புதுடைத்துப் பசும் பொன்பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்.

கண்டு பெரியதோர் காதல் களிகூரத் தன்செம்மலர்ச் சீறடிமேற் சிலம்புகிடந்து சிலம்ப அம்மலரணி கொம்பர் நடைகற்பதென நடந்துசென்று, நறுமலர் வேங்கை நாண் மலர் கொய்தாள். கொய்விடத்து மாந்த விளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லிமண்டபத்திற் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற் கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து ஞான்றுவந்திழிதரும் அணியருவி பொன் கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தோடு வயிரமுந்தி அணி கிளரும் ஆடகப்பாறைமேல் அதிர்குரன் முரசின் இரட்ட வண்டுந் தேனும், யாழ்முரல வரிக்குயிலுங் கிளியும்பாட, தண்டாது தவிசுடைப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை நீல வில் வட்டம் விரிந்தாற்போலத் தன் கோலக்கலாபங் கொளவிரித்து, முளையிள ஞாயிற்றின் விரிகதிர் எறிப்ப ஓரிளமயிலாடுவது நோக்கி நின்றாள்.

அப்பால் தலைமகனும் பற்பல நூறுயிரங்கூர்வேல் இளைஞ ரொடு நளிமாமலைச்சாரல் வேட்டைபோய் விளையாடுகின்றான் ஆண்டெழுந்ததோர் கடமானின் பின்னோடிக் காவல்இளைஞ ரிற் கையகன்று நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற் கான்யாற்று நிற்கச்செய்து, தொடுகழல் அடியதிரச் சுருளி ருங்குஞ்சி பொன்னுணிற்பிணித்து, கமழ்நறுங்கண்ணிமேற் கணவண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொ ழில் பரந்துநாற, வரிசிலையொடு கணையேந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று, அவள் நின்ற இரும்பொழிலிலே புகும், யாங்ஙனமேயெனின், வடகடலிட்ட ஒருநுகத்தொரு துளைத் தென்கடலிட்ட ஒருகழிசென்று கோத்தாற்போல ஒருவரை யொருவர் காண்டல் நிமித்தமாகத் தமியராய்க் காண்பதென்பது.

" வளைபயில கீழ்கடனின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல்
[லோன்கயிலை

கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக்
[கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேன்நய வேன்றெய்வ
[மிக்கனவே "

என்பது மாணிக்கவாசகர் மொழிந்த திருக்கோவையாராகும். இங்ஙனமாகத் தலைவனும் தலைவியும் கண்டு பின் தலைவன் ஐயந்துணிவு;குறிப்பறிவுற்று இயற்கைப் புணர்ச்சி யெய்துவன். இயற்கை புணர்ச்சிமுதல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் ஈறுகிய பதினேழு கிளவிகளும் இது நூற்றெண்பது துறைகளும் உடையதுகளவியல் ஆகும்.

,,இன்பமும் பொருளும் அறனு மென்றுங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமை யோரே " என்பது

சூத்திரம். மறையோடுற்ற பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம், காந்தருவம், ஆசுரம் இராக்கதம் பைசாசம் ஆகிய மன்றல் எட்டனுள் அன்பின் ஐந்திணைமருங்கில் ஐந்தாவது மணமாகிய யாழோர்கூட்டமாம் கந்தருவர் ஒழுகலாற்றில் ஒழுகாநின்ற தலைமகனும், தலைமகளும் இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடாதிய நால்வகைக் கூட்டமுங்கூடிப் பின்னர்ப் பல்லோர் அறிய பறையறைந்து நாட்கேட்டுத் திருமணம் முற்றி இல்லறமாகிய நல்லற வாழ்க்கையில் கற்பொழுக் கினின்று விருந்தினர்ப்பேணி ஐம்புலத்தாறு ஓம்பி வரையா நாளின் மகப்பேறு குறித்துத் தக்க மக்களை யீன்று இன்ப வாழ்க்கையில் நிற்பர்.

"அன்பி னைந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்ற லெட்டனுள்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர் " என்பது இறையனார் களவியற் சூத்திரம்.

இதலினின்றே வீடடைதலாகிய பேரின்ப வாழ்விற்கு முயலுவர் என்பதே இந்நூலின் உட்கிடையாகும். களவொழுக்கமாகிய பெரும்பிரிவில் ஒவ்வொன்றினைப் பற்றியெடுத்துக் கிளத்துதலால் (வகைப்படுத்திச் சொல்லுதலால்) கிளவியென்னும் சிறு பிரிவில், யாற்றின்கண் இறங்கி நீராடி நீருண்ணும் துறைபோன்ற வகையில் (துறைகளாகிய வகையும்) அமைந்துள்ளன.

இந்நூலின் கண் இயல்கள் ஐந்தாகும். (1) அகத்திணையியல் (2) களவியல் (3) வரைவியல் (4) கற்பியல் (5) ஒழிபியல் என்பனவாம்.

1 அகத்திணையியல் இன்பமாகிய ஒழுக்கத்தின் இலக்கணம் உணர்த்துதலால் அகத்திணையியல் என்னும் பெயருடையதாயிற்று.

2 களவுஇயல், களவு என்னும் கைகோளின் இலக்கணம் உணர்த்துதல்பற்றி இவ்வியல் களவியல் எனப்பட்டது. களவு—கள்ளப்புணர்ச்சி, இயல்—இலக்கணம்.

3 வரைவுஇயல் — வரைவின் இலக்கணங்கூறுதலால் இவ்வியல் வரைவியல் என்னும் பெயர்த்தாயிற்று, வரைவு-(வதுவை) மணம், இயல்—இலக்கணம்.

4 கற்புஇயல்—கற்பு என்னும் கைகோளின் இலக்கணங் கூறுதலால் இவ்வியல் கற்பியல் என்னும் பெயருடையதாயிற்று. கற்பாவது தன்கணவனைத்தெய்வம் என்றுணர்வதோர் கொள்கை. "அதுகொண்டானிற் சிறந்த தெய்வம் இன்று எனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இருமுது குரவர் கற்பித்தலானும் அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் ஐயர்பாங்கினும், அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று" என்று நச்சினார்க்கினியர் கூறுவர்.

(5) ஒழிபு இயல்:— முன்னர்க்கூறப்படாமல் எஞ்சி நின்றவைகளைக் கூறலால் இவ்வியல் ஒழிபியல் என்னும் பெயருடையதாயிற்று ஒழிபு-எஞ்சியது. இயல்—இலக்கணம் உலகத்துப் புலவோரால் ஆராய்ந்து பேசப்பட்ட அருமையான தமிழ் நூலிலே வழங்கப்படும் **அகப்பொருளானது** கைக்கிளை யெனவும், ஐந்திணையெனவும் பெருந்திணையென வும் எழுவகையான பெற்றியை யுடையதாகும். அவ்வகப் பொருள் பழைமையான நெறிதவறாமல் இல்லதனையும் வரு ணித்துக்கூறும் புனைந்துரையானும், உலகிலே என்றும் வழங் கும் நெறியாகிய உலகியலானும் சொல்லப்படுவதாகும். ஐந் திணையுடையது அன்புடைக்காமம் ஆகலின் அன்புடைக் காமங் காரணமாக களவு நிகழ்வுறும்.

இக்களவு:-

"உளமலிகாதற் களவெனப்படுவது
ஒருநான்கு வேதத்திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்தியல்பின தென்ப"

என்பதனால் களவியல் கற்பிக்கப் படுகின்றது.

வரைவு:-

" வரைவெனப்படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையும்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே"

என்பதனால் வரைவியல் வரையப்படுகின்றது.

கற்பு:-

" பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலும் ஊட லுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும்"

என்பதனால் கற்பியல் கழறப்படுகின்றது.

ஒழிபு:-

" ஒழிபெனப்படுவது அகப்பாட்டுறுப்பும்
வழுவும் அமைதியுந் தழுவியதாகும்"

என்பதனால் ஒழிபியல் உரைக்கப்படுகின்றது.
இங்ஙனமாக அகப்பொருள் ஐந்தாகப் பகுத்து அதன் தொகை வகையாயவற்றினை விளக்குகின்றது.

களவியல் பற்றி முன்னர்க் கூறப்பட்டது. தலைவன் தலைவியைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங்கொடாதொழியவும் மணச்சடங்கொடு பொருந்த மணஞ்செய்துகோடல் வரைவு ஆகும். அகத்திணையியலின்கண் களவு கற்பென இரண்டை வகுத்து அவ்விரண்டிற்கும் நடுவே வரைவியல் என ஒன்று கூறியவதனால் முன்னதனொடு மாறு கொள்ளுமெனின் மாறுகொள்ளாது. என்னை?—, கற்பிற்குநிமித்தமாய வரைவு கூறுதலான் இதுவுங்கற்பின்பாற்படும். ஆயின் இதனைக் கற்பின்பாற்படுத்துக் கூறாது வரைவியலென வேறாக ஓர் இயல் கூறியதென்னையெனின் வரைவுமலிவு முதலாக உடன் போக்கிடையிடு ஈறாகப்பலவகைப்பட்டு ஒவ்வோர் வகைக்குக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டு நடத்தலின் விளங்குவதற்கு வரைவியல் என வேறு கூறப்பட்டது. ஆயின் இவ்வியலின் வருங் கிளவிகட்குக்கைகோள் களவென்று கூறுவதோ, கற்பென்றுகூறுவதோ எனின், கற்பு என்று கூறப்படும்.

என்னை, புணர்தலும், புணர்தனிமித்தமும் குறிஞ்சியாயினவாறுபோல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கை நிமித்தமாய் வரைவும் கற்பென்றே கொள்ளப்படுமென்றுணர்க,

"வரைவு மலிவே யறத்தொடு நிலையென்
றுரையமையிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்"

(ந. அ. பொ)

என்னுஞ் சூத்திரவிதியால் வரைவு, வரைவுமலிவும் அறத்தொடுநிலையும் என விரண்டுவகைப்படும். அவற்றுள் வரைவு மலிவு என்பது—வரைவு தொடங்கி நடக்குமுயற்சிமிகுதல்.

"வரைவு முயல்வுணர்த்தல் வரைவெதிர்வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்"

என்னுஞ் சூத்திரவிதியால், வரைவு மலிதல் நால்வகைப்படும்

"வரைவெனப்படுவது உரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக்கடியயர்ந்து கொளலே"

என்பதனுல் வரைவியலின் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. ஆகவே, (1) வரைவுமலிதல் (2) அறத்தொடுநிற்றல் (3) உடன்போக்கு (4) கற்பொடுபுணர்ந்தகவ்வை (5) மீட்சி (6) தன்மனைவரைதல் (7) உடன்போக்கிடையீடு (8) வரைதல் ஆகிய எட்டு உட்பிரிவுகளையுடைத்தாகும் இவ்வரைவியல்

கற்பியல்:- கற்பிக்கப்படுதலாற் கற்பாயிற்று.

"பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலும் ஊட லுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவியதாகும்"

என்பதனுல் கற்பின் இலக்கணம் ஒருவாறறிதல் கூடும்.

இஃது (1) இல்வாழ்க்கை, (2) பரத்தையற்பிரிவு, (3) ஓதற்பிரிவு, (4) காவற்பிரிவு, (5) தூதிற்பிரிவு, (6) துணைவயிற்பிரிவு, (7) பொருள்வயிற்பிரிவு, என ஏழு பிரிவுகளையுடையதாகும். இப்பிரிவினுல் ஏற்படும் நன்மையாவது:— தலைவற்கும் தலைவிக்கும் உள்ள மனவொருமைப்பாடும், மனவொருமைப்பாட்டால் இல்வாழ்க்கைக்கண் பெரும்பற்றும் இப்பெரும்பற்றுல் நன்மக்கட்பேறும், நன்மக்கட்பேற்றுல் இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் சுவர்க்கமும் சித்திக்கும். மக்களொடுமகிழ்ந்து மனையறங்காத்து மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழி தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித் தொலைவில் சுற்றமொடு துறவறங்காப்பர், என்பது இலக்கணமாதலின், துறவறங்காரணமாக முத்தியாகிய காரியஞ் சித்திக்குமெனல் அறுதியிடப்பட்டுளது.

'அறம் பொருளின்பம் வீடு அடைதனூற் பயனே'
என்னுஞ் சூத்திரத்துப் பொருள்கூறுஞ் சிவஞானமுனிவரர் வீடெனவாளாகூறுது வீடடைதல் என்முர்; பேரின்பமாகிய சாத்தியமாகலின். துறவறம் சாதனம் `சாத்தியம் வீடு என்பது புலப்பட வைத்தார் ஆவர். என்பதுபுலனுகு மன்றே!

இதுகாறும் கூறியவாற்ருன் அகப்பொருட் பெற்றியும் அதன் குறிக்கோளும், அதனையாக்குவித்தவாசிரியரின் உட்கிடையும் இந்நூல், பண்டைத்தண்டமிழர்தம் ஒழுகலாற்றினையும், ஒழுகும் பெற்றியையும், தமிழ்மக்கள் நிலங்களைப் பகுத்து வகுத்து முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பொருள்களைக் குறித்து, நாடகவழக்கு உலகியல்வழக்கு என இரு நெறியிடைப் படுத்திக்களவு கற்பு என இருகைகோள்முறை நிறீஇ வாழ்க்கையின் அடிப்படையில் அன்புநெறியில் இல்லற நடாத்தி அருள் நெறியில் துறவறவழியொழுகி இருவகைப்பற்றும் முற்ற விடுத்து

"பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்னும் குறளுக்கிலக்காகி இறைவன் பற்றினை முற்றப் பற்றி,

"ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்"

என்ருங்கு பேராவியற்கை பெறும்பேறு பெறல்வேண்டும். என்பதையும் தெரிக்குமுகத்தான் அமைந்துள்ளது வாழ்க தமிழகம்.

" சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவ ரியார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே ! சகல கலாவல்லியே "

குமரகுருபரர்.

தஞ்சாவூர்
12—7—62

பண்டித வித்துவான்,
இராம. கோவிந்தசாமி பிள்ளை,
ஓய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர்,
சரசுவதிமால் நூல்நிலையம்.

உ

பதிப்புரை.

" திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம் "

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் தொன்மையும் தமிழர் நாகரீகமும் எந்நாட்டினரும் நன்கறிந்ததென்பது வரலாற்று நூல்களறிவியாநிற்கும். அத்தமிழ்மொழியினைப் போற்றிப் பரவாதாரி யார்? மூவாயிரமாண்டுகள் அரசின் கீழிருந்து மூவாயிரஞ்செய்யுட்கள் செய்த திருமூலரும், காரிகையாருக்கு நாரியோர்பாகன் தமிழ்மொழியினை நவின்றருளினன் என்றருளிச் செய்துள்ளார்.

" வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம் "

என்னும்வெண்பாவினை நோக்குழித் தொல்காப்பியமெனும் பேரியனூலும் இதனுட்பட்டதென்பது புலனாகின்றது. தண்டமிழின் மேலாந்தரமுடைய தொல்காப்பிய இலக்கணமானது எழுத்துச்சொற்பொருள் என்னும் மூவகை யிலக்கணமுடையதாகும். அவற்றுள் பொருள் இலக்கணத்தினை ஒன்பதுவகைப்படுத்தியுள்ளார். இலக்கணம் ஐந்தினுள் நடுவணதாகிய பொருள் இலக்கணம் அகப்பொருள் புறப்பொருள் என விருவகைத்தாகும். இவ்வகப்பொருள் விளக்க

வுரை முதற்கண்ஏட்டுப்பிரதியினின்றும் அச்சிற்பதிப்பித்த வர் நான்காஞ் சங்கநிறுவியவரும், பாலவனத்தம் குறுநில மன்னரும் ஆகிய பெருந்திரு. பொன். பாண்டித்துரைசாமித் தேவர் அவர்களாற் பாராட்டப்பெற்றவரும் மதுரைத்தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரும் அடியேனுடைய பேராசிரியரும் ஆகிய திரு, உ. வே. திருநாராயணையங்கார் சுவாமிகள் ஆவார். இதனை அக்காலத்துப் பெரிதும் போற்றி னர். இதனை யடுத்துச் சுன்னுகம் திரு. அ. குமாரசாமிப் புலவரும், திருகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும் அகப்பொருள் விளக்கப்புத்துரை யென்று ஒரு நூல் வெளி யிட்டனர். இதனிடைச் சில துறைகட்கு விளக்கங்களும் சங்கநூல் மேற்கோள்களும் தரப்பெற்றுள்ளன. இதற்கப் பால் அகப்பொருள் விளக்கவுரையும் கிடைப்பதரிதாயிற்று. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் சங்கப்பதிப்பினைத் தழுவி யச்சிட்டு வருகின்றனர். இப்பதிப்புக்களில் காணப் பெருத பலபாடாந்தரங்களும் மேற்கோட்செய்யுட்களும், எங் கள் சரசுவதிமால் நூல்நிலையத்தின்கண் உள்ள ஏட்டுப்பிரதி களிடை காணப்பெற்றன. ஏட்டின்கண் உள்ளவாறே பிரதி செய்யப்பெற்று வெளிவர முயற்சிக்கப்பெற்றது. அகப் பொருள விளக்கஞ்செய்தவரே உரைவகுத்துள்ளனர் என்பது

" அகப்பொருள் விளக்கமென்று அதற்கொருநாமம்,
புலப்படுத்து இருளறப் பொருள் விரித்தெழுதினன்"

என்னும் பாயிரத்தான் அறியக்கிடக்கின்றது. இங்ஙனமாக திருவாவடுதுறையாதீனத்துச் சுவாமிநாத தேசிகர் இலக்க ணக்கொத்துரையும், திருவாரூர் வைத்தியநாத நாவலர் இலக்கண விளக்கவுரையும், ஆழ்வார் திருநகரி(திருக்குருகூர்) சுப்பிரமணியதீட்சிதர் பிரயோக விவேகவுரையும் செய்துள் ளனர்.

" நூல்செய்த வன்அந் நூற்குரை செய்தல்
முறையே யெனிலே யறையக் கேணீ

முன்பின் பலரே யென்கண் காணத்
திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்
றமிழ்க்கிலக் காகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்
அன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநகர்
அப்பதி வாழுஞ் சுப்பிர மணிய
வேதியன் றமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை யெழுதின னென்றே பலவே"

என்னும் இலக்கணக்கொத்துரை உரைச் சூத்திரத்தாற் காணல்கூடும். நூலும் உரையும் செய்தவகையினை; இவ்வகையில் நூலும் உரையும் ஒருவரே செய்தலாகும் என்பதற்குப் போதியசான்றுள்ளது இவ்வகையிற்றான் நாற்கவிராசநம்பி யகப்பொருள் விளக்கவுரை தலைமைபெற்றுத் திகழ்கின்றது. இந்நூலினை நூற்பாக்களை பெரிய எழுத்துக்களிலும், உரைப்பகுதிகளைச் சிறிய எழுத்துக்களிலும், உதாரணச் செய்யுட்களைச் சீர்பிரித்தும், செப்பமானமுறையில் அச்சிடப்பட்டுள்ளது. இதனை நன்கு ஆராய்ந்து பயில்வார்களாக. இப்பதிப்பிடையயர்வினால் சிற்சிலவழுக்கள் நேர்ந் திருத்தல் கூடும். அதனைப் பெருமக்களாயினுர் பொறைசெய்வார்களாக.

இதன் நலங்களை நன்குணர்ந்த சென்னை திருவாளர் V. கண்ணையன் பீ. ஏ. அவர்கள் அச்சிடற்காணை தந்தனர். உடனடியாகப் பிரதிசெய்யமுயற்சித்து முடிக்கப்பெற்றது. இதனைப்பிரதிசெய்து கொடுத்த நூல்நிலையத்துப் பிரதிசெய்யும் அலுவலாளர் திரு. ப. இராசரத்தினம் அவர்கள் ஆவர். அவருடன் பிரதியையொப்புநோக்குதல் செய்து கொண்டு அரசினர் ஆணையுடன் அச்சிடமுயன்றேன். அச்சிடுகையில் காகிதப்பிரதிசெய்தல், (புறாப்) ஒத்துப்பார்த்தல், அரும்பத அகராதி, துறைக்குறிப்பு, நூற்பா அகராதி முதலியன குறித்தல் ஆகிய பேருதவி புரிந்தவர், திருவையாறு

ஸ்ரீ சிவாசராவ் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியை வித்துவான் திருவளர்செல்வி, கோ திலகவதியம்மையார் அவர்கள் இவர்கட்கு எல்லாம்வல்ல செந்தமிழ்த்தேசிகனாகிய திரு முருகப்பெருமான் நல்லருட்பாலிப்பாராக. **வெற்றிவேல் அச்சக முதல்வர் திருவாளர். பக்கிரிசாமி பிள்ளை** அவர்கள் இந்நூல் விரைவில் வெளிவர நல்லுதவிபுரிந்தனர். அவர்கட்கு என் நன்றி யென்று மொன்றுவதாக. இனியடுத்து வருநூல்கட்கும் இவ்வுதவிபுரிவாராக.

சரசுவதிமால் நூல்நிலைய நிர்வாகக்கமிட்டித்தலைவரும், திருவையாறு அரசர்கல்லூரி, தஞ்சைச் சரபோசி மன்னர் கலைக்கல்லூரி ஆயவற்றினை நன்குபுரந்துவருபவரும், நூல் நிலையங்கள் நன்னூல்நிலையங்களாக வரல்வேண்டுமெனுங் குறிக்கோளுடையவரும் ஆகிய தஞ்சைமாவட்டத் தண்டல் நாயகம் (கலெக்டர்) கனம், பெருந்திரு. மு. **சந்திரசேகரன்** ஐ.ஏ.எஸ். அவர்கட்கு என்நன்றியை என்றும் உரித்தாக்குகின்றேன்.

" பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியி லேனைத்
தன்றிறமு மறிவித்து நெறியுங் காட்டி
யன்னையையும் அத்தனையும் போல வன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னானே "

—அப்பர்.

திருவையாறு
12—7—62

பண்டித, வித்துவான்,
இராம. கோவிந்தசாமிபிள்ளை
ஒய்வுபெற்ற தமிழாசிரியர்.

நாற்கவிராச நம்பி வரலாறு

இப்புலவர் பெருமான் பாண்டிமண்டலத்தில் பொருநை யாற்றங்கரையிலுள்ள புளிங்குடியென்னும் பேரூரில் உய்ய வந்தார் என்பவரின் புதல்வராவர். சைனசமயத்தவர் என்பது பாயிரத்தால் நன்கறியலாம். "விளையும் பயிர் முளை யிற் றெரியும்" எனும் பழமொழிக்கிலக்காய் இளமைப்பருவத்திலேயே நல்லாசிரியர்பால்பலநூல்களையும் கற்றுணர்ந்து ஆசு. சித்திரம், வித்தாரம், மதுரம் எனும் நாற்கவிகளையும் பாடுதலில் வல்லுநராயினர். இவர் பிள்ளைத்திருநாமம் நம்பி என்பதாகும். இப்புலவர் பெருமான் இலக்கண இலக்கியங்களில் லல்லுநராயிருத்தலைக்கண்ட அப்பாண்டிமண்டலத்துள்ள சிறுநாடுகளுள் ஒன்றாகிய மாறைநாட்டில் தஞ்சாக்கூர் என்னும் ஊரில் மாவலிவாணவமிசத்தைச் சேர்ந்த சந்திரவாணன் என்னும் வேளாளப்பிரபு. அந்நாட்டையாண்ட கோமாறவர்ம திரிபுவன சக்ரவர்த்தி குலசேகர தேவருக்கு அமைச்சராகவும் சேனாதிபதியாகவும் தமிழ்ப்புலமை மீக்கூர்ந்தவர் தம்மைச் செவ்வனே நன்கு ஆதரிக்கும் வள்ளலாகவும் வாழ்ந்தனர். மாறை நாடெனப்படுவது தென்பாண்டி நாட்டில், கொற்கை, வல்லம், தஞ்சாக்கூர், மல்லை என்னும் நான்கு ஊர்களுக்கும் இடைப்பட்டுப் பொருநையாற்றங்கரையிலுள்ள நாடு. மாவலிவாண கோவரையர் என்பார் 8-ம் நூற்றாண்டில் மாறை நாட்டில் பாண்டியருடைய பட்டந்தரித்துச் செந்தமிழ்நாட்டையும் செந்தமிழையும் போற்றிவந்தனர் என்பதை ஸ்ரீ வில்லிபுத்தூர்ச் சாசனங்களாலும் ரைஸ் வோக்ஸ் என்ற ஆங்கிலப் புலவர்கள் எழுதிய நூல்களாலும் நன்கறியக்கிடக்கும் இவரது புலமையும், பொய்யாமொழிப் புலவர் புலமையும் பெருமையுங்கண்ட தஞ்சைவாணன்

கவிராயராகிய நம்பியாரிடம் தொல்காப்பியம் இறையனூர் களவியல் முதலிய பேரியல் நூல்களிற்கண்ட அகப்பொருள் இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் வனப்பின்படி நூல் ஒன்றுயாக்கவும், புலவராகிய பொய்யாமொழியாரிடம் இந்நாலிலக்கணத்திற்கேற்ப கோவையொன்றுபாடித்தருகவெனவும் வேண்டினர். அவ்வாறே இரு பெரும்புலவர்களும் அகப்பொருள் விளக்கத்தையும் உரையையும் கோவையெனும் பேரியல் நூலினையும் தமிழுலகுபோற்றுமாறு யாத்தனர் என்பது சதகங்களாலும் பிறநூல்களாலும் அறியற்பாலதாகும். **இவருடைய வரலாறு:**— பாயிரத்தின்கண் நன்கறியக்கிடக்கும்.

அதுவருமாறு:— பூக்கள் நிறைந்த சம்புவென்னும் நாவன் மரத்தினையுடைய மிகப் பெரிய மேருவினது உச்சியின்கண் ஒருங்கே குழுமின முப்பத்து முக்கோடி அமரரும் வேண்டிக்கொண்டமையால் அங்குநின்றும் போந்து குழிந்த கையாலே (உள்ளங்கையினுல்) விந்தமலையென்னும் வீறுறு கிரியினது மிகையினைத்தீர்த்து அலைகடலினையடக்கி, பொதியமாமலையின் கண்ணே எழுந்தருளியிருந்த ஐந்தவித்த பெருந்தவத்தோனுகிய அகத்தியனாரிடத்து இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழினையும் முறையுறக் கற்ற மாணுக்கர் பன்னிருவருள்ளும் தலைமை வாய்ந்த தொல்காப்பினுற் செய்யப்பட்ட கோடாத பெரியபொருள் என்னும் நூலுள் அகப்பொருட்குரிய இலக்கணத்தை யுளப்படக் கூட்டிக்கொண்டு அகப்பொருளிலக்கணத்தைக் கடவாத சங்கத்தாருடைய செய்யுட்களை யாராய்ந்து அவ்விலக்கண விலக்கியங்களுட் கலந்து கிடந்த கிளவிகளைச் சேர்த்து அடைவுடன் நிறுத்தி அவ்வடைவிற்கேற்பச் சூத்திரஞ் செய்து அந்நூற் ககப்பொருள் விளக்கமென்று ஒரு பெயரை வெளிப்படுத்தி மயக்கந் தீர வுரையைப் பரப்பி எழுதினன். (நூலும் உரையையும்நம்பியே செய்தார் என்பதற்குச்சான்று இலக்கணக் கொத்துரையிற்

காணத்தகும்) தேவரும் மக்களும் சிறப்புற மதிக்கச் சந்திராதித்யம் நித்தியவிநோதம் சகலாபாசனம்என்னும் முக்குடையின்கீழ் உயர்ந்த அழகினையுடைய சிங்கஞ்சுமந்த பொன்னணைமேல் நிறைமதி மூன்றுகவிப்ப உதயமென்னும் பெரியமலையின்கண்ணே இளஞ்சூரியன் ஒன்றிருந்தாற் போன்று அழகுதக இருந்தருளி, உண்மைப் பொருளினையருளிச்செய்தோனுடைய திருவடிகளைச் சேர்ந்த மேலோனென்றும், திருப்புளிங்குடி யென்னும் ஊரகத்துத்தோன்றிய உய்ய வந்தானென்றுஞ் சொல்லப்படாநின்ற முத்தமிழாசானுடைய மைந்தன். இவ்வுலகின்கண் உண்டாய ஆரியமும் தமிழும் ஆகிய இருகலையும் ஒருங்கேகற்ற ஒருபெரியநாயகன் பாற்கடல்போலும் பலவாகிய புகழைப் பரப்பின நாற்கவிராச நம்பியென்னும் பெயருடையான் என்பதாம். காலம் பாண்டியன் குலசேகரன் காலமாம். ஆகவே ஒருவாறு நம்பியென்பவரின் வரலாறு காணப்பட்டது. இவ்விலக்கணநூற்கு இலக்கியம் வகுத்துத்தந்த பொய்யாமொழிப் புலவர் தம் வரலாறு ஒரு சிறிதாராய்வாம்.

பொய்யாமொழிப்புலவர்.

இவர் தொண்டைமண்டலத்திலே செங்காட்டங் கோட்டத்துறையூரிலே சைவவேளாளர் மரபில் உதித்தவர். இவர்மரபினரே அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் அட்டாவதானிச்சொக்கப்ப நாவலருமாவர். இவர் வயிரபுரம்என்னும் ஊரிலே தமிழாசிரியர் ஒருவரிடங் கல்விபயின்று வருங்கால், ஒருநாள் தமது ஆசிரியரின் தோட்டத்தினைக்காவல் புரிந்து வரச்சென்றார். சென்றவர் அத்தோட்டத்தின் பக்கத்திலுள்ள காளிகோயிலுக்கும் அண்மையிலுள்ள அணிமரநிழலில் படுத்துறங்கிவிட்டனர். உறங்கும் போழ்து தோட்டத்துப் பயிரையெல்லாங் குதிரைமேய்ந்து அழிப்பதாகக் கனாக்கண்டு

விழித்தெழுந்து பார்க்கையில், அவ்வூரையாளும் அரயனாகிய காளிங்கராயனுடைய குதிரையானது மேய்ந்து பயிரையழித்தமையைக் கண்டு மனவருத்தமும் ஆசிரியருடைய பணியில் உதாசீனமுங்கொண்டு அச்சமுற்று, அக்கோயிலுட்புக்கு அங்கெழுந்தருளியுள்ள தேவியை வணங்கி வேண்டினர். அப்போழ்து தேவியானவள் இவரது அன்பாலும் பழவினையாலும் கண்ணுறக்கண்டு தரிசிக்கத்தோன்றி அருள்புரிந்து கரந்தனள். அத்தேவியினருளால் கலையுணர்வும், கவிபாடும்வன்மையும் கைவரப்பெற்றுப் பயிர்நட்டமான பரவசத்தால் அடியிற்கண்ட வெண்பாவினைப் பாடினர்.

" வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே !
காய்த்த புனத்தினிற் காலைவைத்துச் -- சாய்த்துக்
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ "

என்பதாம்.

அவ்வெண்பா பாடினவுடன் அக்குதிரை அங்கே வீழ்ந்திறந்தது. இச்செய்தியினை முற்றவறிந்த ஆசிரியரானவர் அரையனறியில் அவன் சினத்திற் காளாக வேண்டிவருமேயெனக்கவலாநிற்க, அதனையறிந்த புலவர் அப்பாட்டினையே ஈற்றடியைமாற்றிவைத்து

" குதிரைமீ ளக்கொண்டு வா "

என்று பாடக் குதிரை உயிர்பெற்றெழுந்தது. அதனைக் கண்டோரனைவரும் வியப்படைந்தனர். குரவரும் தமது அருமை மாணவரைத் தழுவி அவர்வாக்காகிய பாடல் தப்பாது தன்பலனைத்தந்த காரணத்தால்,

" பொதியி லகத்தியனும் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச்
செங்காட்டங் கோட்டத் துறையூரெனுந் தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான் "

என்னும் வெண்பாவைப்பாடி வாழ்த்தினர். அன்று தொடங்கி அவருக்குப் பொய்யாமொழிப்புலவர் என்னுங் காரணப்பெயரே வழங்க இயற்பெயர் மறைவதாயிற்று. அதுமுதற் காளிதேவியினருளால் புலமையும் கவித்துவமும் மிக்கு விளங்கினர்.

ஒருநாள் செவ்வேற்கடவுள் அடியார் வேடத்துடன் பொய்யாமொழியாரிடஞ் சென்று "குமரனைப் பாடுதிர்" என, அதற்கு அவர் "கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடோம்" என்றனர். உடனே குமாரபரமேசுவரனாகிய அடியவர் நாண முற்றாற்போல விடைகொண்டு ஏகினர்.

மதுரையிற் பழையசங்கத்தைப் பாண்டியனால் மீளத் தாபிக்க நினைந்து வழிக்கொண்டு திரிசிராமலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள 'தாயுமான தயாபரனைத் துதித்துறைந்தனர். அதுபோது, தாயுமானதயாபரன் புலவர்முன் புலவர்போற் றோன்றி,

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுக்குங்—காட்டானை
தேனி ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர்க் கரந்தான் மலை"

எனத்தாம் விரும்பியுள்ள திருத்தலமிது என்று குறிப்பிக்கப் பொய்யாமொழியார்,

"அங்கம் புலியத ளாடையைச் சார்த்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பங்கர்க் கிடம்பனை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டானையைத்தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே"

என்னுங் கட்டளைக்கலித்துறையினைப்பாடித் துதித்துப் பணிந்தனர். பின்னர், அங்கிருந்து புறப்பட்டுத் தனிவழிச்

செல்லுங்கால் முருகப்பெருமான் வெருக்கொள் வேட்டுவ உருவந்தாங்கி வழிமறித்துக்கொண்டு தம்பெயரை முட்டை என்றுகூறித்தம்மீது உடன்போக்கில் நற்றாயிரங்கலாகவொரு (செய்யுள்)பாடல்இசைக்கும்படிச் செப்பப் புலவர்பெருமான்

> " பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
> என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
> மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
> கானவேன் முட்டைக்குங் காடு "

எனும் வெண்பாவினைப் பாடினர், வேட்டுருத்தாங்கிய செவ்வேட்பரமன் புலவரே! கள்ளிப் பொறிபறக்குங்கானலில் வேலமுள் வெந்தெரியாது கிடந்தது எங்ஙனம்? என நகையாடி, நான் பாடுகின்றேன் கேள் என்று பொய்யாமொழியார் மீது,

> " விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
> எழுந்த சுடர்சுடுமென் றேங்கி—செழுங்கொண்டல்
> பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
> பொய்யா மொழிப்பகைஞர் போல் "

என்னும் வெண்பாவினைப்பாடி, 'நீர் முன் குஞ்சைப் பாடேனென்ற வாயால் இப்போது முட்டையைப் பாடியது வியப்பே' என்றுரைத்த மாத்திரையில், புலவர் பெருந்தகையார் அங்ஙனம் வந்தவர் முருகக்கடவுளே எனத்துணிந்து தம்பிழை பொறுக்கும்படி வணங்கித் துதிக்க முருகப்பெருமான் தம் முருக்காட்டி அவர் நாவின்கண் வேலால் சடாக்கர மறுவை யெழுதி யருள்புரிந்து மறைந்தருளினர். இப்புலவர் பெருமான் கானையார்கோயில் என்னுந் திருக்கானப்பேர் இறைவனைவணங்கி யவ்வூர்த்தாசி கூத்தாளிடஞ் சென்று ஏதேனுங் கேட்கலாமென்று விரும்பினர். விரும்பிய வண்ணம் அவர் வீட்டையடைந்து கூத்தாளும், அவடாயும், அவள் தாயும் குருடிகளாக விருக்கக்கண்டு மனமிரங்கி அவர்கட்குக் கண்கள் வருமாறு:-

" கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
ஆத்தாண் முகத்தி லரவிந்த மாத்தாடன்
ஆத்தாண் முகத்திலிரண் டம்பு "

என அவர்கள் அனைவரும் கண்பெற்றுப்புலவரை யுபசரித்தனர் இச்செயலுணர்ந்த அவ்வூர் வேசையர்கள் எழுபதின்மர் இவர்பால் கவி பெறவிரும்பி யெண்ணிப் பொன்காணிக்கைதந்து வேண்டினர். அவர்களைப்பார்த்துப் புலவர்,

" வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன்றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே லீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே லீட்டுவர் பொற்கால் "

என்றுபாடிவிட்டு மதுரையை யடைந்தனர். ஆண்டு வணங்கா முடிப்பாண்டியனைக்கண்டு சங்கந்தாபிக்க வேண்டுமென்றனர். அவனுடன் திருக்கோயில் சென்றுவணங்கினர். வணங்கியபோது பாண்டியனைப் பார்த்து ஆலவாய் அண்ணல் திருமுடியிலிருக்குந் திங்களின் மரபில் வந்துதோன்றிய அவ்விறைவன் றன்அடியிணையினை வணங்கலாமோ ? எனுங் கருத்தையமைத்து

" குழற்கா லிரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றோநின் றிருக்குலம் நீயவன்றன்
அழற்கா லவிர்சடைமீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங்க முடிக்கைதவனே"

எனப்பாடினர். அங்ஙனம்பாடித்தெரிவிக்கவும் பாண்டியன் புலவரிடத்து மதிப்பிலாது அங்கு விக்கிரக உருவாகவிருக்கும் சங்கப்புலவரைச் சிரக்கம்பம், கரக்கம்பம் செய்விக்க எனப் புலவரிசைந்து:

" உங்களிலே யாெனாருவ னெவ்வெவனோ வொவ்வேனோ
திங்கட் குலன றியச் செப்புங்கள்—சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடெழுதா ரேமெழுவீ ரென்று "

எனப்பாடினர். அவ்வகை நாற்பதிற்றுென்பான் புலவரும் செய்யப் பின்னும் பாண்டியன், அங்குப் பொற்றுமரையில் அமிழ்ந்த சங்கப்பலகையை மிதக்கப்பாடுக எனப் புலவர்:—

" பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும்
பாவேந்த ருண்டென்னும் பான்மையாற்—கோவேந்தன்
மாற னறிய மதுராபுரித் தமிழோர்
வீறணையே சற்றே மித "

எனப்பாட எக்காலத்திலோ அமிழ்ந்த சங்கப்பலகை வெளியிற் றோன்றியது. இவ்வற்புதங்களைக் கண்ட பாண்டிய மன்னரானவர், புலவர்தம் தெய்விகத்தன்மையை வியந்து பாராட்டித் தான்புரிந்த தவறுகளையும் அவமதிப்புக்களையும் பெரிதும் பொறுத்தருள்க எனவேண்டினர். அவ்வாறு அரசன் பலபடியாகப் பாராட்டியதைக்கண்ட பொய்யாமொழியார்: பங்கமில் சங்கப்புலவராய் இறையனாரும், நாமகளும், அகத்தியனாரும், வள்ளுவரும் போன்ற தெய்வப்புலவர்கள் வரிசையில் சேரத்தக்கவன் எனலை யுலகம்பொறுக்குமோ எனும் பொருள்புலப்படத் தன்கருத்தை யமைத்துப்பணிவு தோன்ற,

" அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் றரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின் "

என்றுபாடினார்.

பாண்டிய மன்னனுக்கு அமைச்சனும் தமிழ்ப்புலவர் தமைப்புரக்கும் புரவலனும் மாறைநாட்டுத் தஞ்சாக்கூரில்

வாழ்ந்தவனுமாகிய தஞ்சைவாணனைக் காணும்பொருட்டுப் பொய்யாமொழிப்புலவர் தஞ்சாக்கூர் வந்தணுகினர். புலவரை நலம்பெற வரவேற்றுத் தமிழில் நம்பியகப்பொருளுக் கிலக்கியமாக வித்தாரகவியாற் பாடப்பெறும் தொண்ணூற்றுறு பிரபந்தவகைகளுள் ஒன்றுன கோவையெனுஞ் சிறுகாப்பியத்தினைப்பாடித் தரவேண்டினர், அதற்கிணங்கிப் பொய்யாமொழிப்புலவர் அத்தஞ்சைவாணனையே பாட்டுடைத் தலைவனுக வைத்துத் தஞ்சைவாணன் கோவை யெனவொருநூல்பாடிமுடித்தனர். பின் அரசவைக்கண் புலவர்களைக்கூட்டி யவர்கள் முன்னிலையில் அரங்கேற்றுவித்தனன். பொய்யாமொழிப்புலவருக்குத் தஞ்சைவாணன் பெருமகிழ்வோடும் ஒவ்வொருபாட்டிற்கும் ஒருபொற்றேங்காயில் முக்கண்ணிலும் மூன்றிரத்தினங்கள் பதித்துப் பரிசாக வழங்கினுன். அதற்கப்புலவர்பெருமான் மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. பின்னர் ஒருமுறை கானப்பேரெய்தித் தாசிவிட்டினையடைய அவர்கள் கதவினைத் திறவா திருப்பப் பழையகுருடி கதவைத் திறடியெனக் கண்மறைந்து அவர்கள் திகைப்புண்டனர். மீண்டும் வேண்டக் கோபப்பிரசாதக் கண்களைத் தந்தருளினர். இங்ஙனமாக இவர்செய்த அற்புதங்கள் மிகப்பலவாம்.

பின்னர்ச்சோணுடடைந்தனர். அக்காலச் சோழனுடன் அமைச்சுரிமை பூண்டிருந்த ஏழூர்கட்கதிபனுகிய சீநக்கவள்ளலைச் சந்தித்துப் பிசிராந்தையும் கோப்பெருஞ்சோழனும் போலப் பெருநட்பு பூண்டனர். அரசுரையாண்ட வேளாளப் பிரபுவாகிய சீநக்கமுதலியார் இன்றெறென்று புலவராகிய தமக்கு அறியாமுன்னர், பசிக்குணவளித்தனர். அதனைக் குறித்துப் புலவர்:

" அளிகொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிகொள் சீநக்க லின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்த்
தெளியும் போதெலாம் தித்தியா நிற்குமே "

எனப்பாடினர். பின்னர்ப்பெருநட்புப்பூண்ட சீநக்கவள்ளலார் புலவரை விட்டுப்பிரிய மனமிலராயினர். அக்காலத்தே சோழமண்டலமாகிய தஞ்சையையாண்ட அரசன்மீது,

"திறையின் முறைகொணர்ந்து தெவ்வரெல்லா மீண்ட
இறையு மிறைகடக்க லாகா—அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போர்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் றஞ்சைத் தெரு"

எனச்சிறப்பித்துப் பாடினர்.

பொய்யாமொழிப்புலவர் அரசூரில் சீநக்கனுடன் இருக்கும்நாளில் கண்டியூரிலிருந்து வண்ணத்தி யொருத்திப் புலவர் உளம்மகிழுமாறு ஆடைகளை வெளுத்துத்தந்தனர். அதற்கப்புலவர் பெருந்தகையார்

"தூசுதூ சாக்குவர் பாவை சுடர்த்தொடிக்கை
ஆசிலாக் கண்டியூ ராரணங்கு—வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகங் கால்"

எனப்பாடினர். இங்ஙனமிருப்பக் குலோத்துங்கச் சாவகன் என்னும் புலையனொருவன் புலவருக்குக் கொடுமை செய்யத் தொடங்கினன். அதற்குப்புலவர் பொறுக்கலாற்றாது அப் புலையன் உடல் வெடிக்கப் பாடினார்.

"கோதில்குல மங்கைக் குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனால்—மாது
துளையாது முத்துவடந் தூக்கினாள் ஆரம்
விளையாடு செப்பிரண்டின் மேல்"

என்பதாம், இங்ஙனமாகப் பல வற்புதம் புரிந்தனர் என்ப.

புலவரும் சீநக்கரும் பெருநட்புக் கொண்டொழுகுநாளில் ஒருநாள் இரவில் இருவரும் நெடுநேரம் உரையாடிக்கொண்டு சீநக்கப் புரவலர் கட்டிலின் இருந்தே யுறங்கிவிட்டனர். பின்னர் சீநக்கப்பிரபு உணவருந்தி நிலாமுற்றத்திலுலாவி விட்டு

பின்னர் தம் படுக்கை யறைக்குவந்து பார்த்துப் புலவரை மெல்லத் தட்டியெழுப்பிச் சற்றுவிலகிப் படுத்துக் கொள்க. யானும் ஒருபுறம் படுப்பேன் என்று கூறினான். உறக்கமயக்கம் நீங்கிய புலவர் துணுக்குற்றார். சீநக்கப்பிரபுவின் மனைவியாரும் யாதுமறியாது கோதிலாத்தன்மையுடன் படுத்துறங்கிப் பின்னெழும்பாமல் முன்னெழும்பிவரப் பின்னர் ஒருவர் ஒருவராக வெளிவர இதனைக்குற்றமாகக் கொண்டு அரசவைக்கண் புலவரையழைத்துசாவ, அரசன் புலவர்மீது ஐயுறவுகொள்ளாது நிற்ப உடனடியாகப்புலவர்

" தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப் பொன்சொரியும் கொற்றவன்றன் கண்டியூர்
ஊரைவாய் மூடவுரையறிந்தோ மில்லையே "

எனப்பாடினர். புலவர் ஏதுங்குற்றம் இல்லையெனப்பலவாறு தேற்றியமர்வித்தனன் '(கர்ணன் துரியோதனன் நட்புப்போலும் என்றுகூடக் கூறலாம்போலும்) இவ்வாறாக ஈருடல் ஓருயிர்போல வள்ளலும் புலவரும் நட்புப்பூண்டு வாழுநாளில் உணர்ச்சியொத்த நட்பின்உறுதியினையாய்வான் போன்று தென்றிசைக்கோன் ஒன்றி சீநக்கனாது ஆவியினை அகற்றினான். இதனையறிந்த பொய்யாமொழியார் விரைந்தோடிவந்து, சீநக்கப்பிரபுவுடன் அவன்றலைவியும் உடன்கட்டை யேறினாள் என்பதைக்கண்டு சிதையில் எரிந்துகொண்டிருப்பதனைக்கண்டு பொறுக்கொணாது வருந்திநிற்குஞ் சோழனைப்பார்த்து

" வாழி சோழவென் வாய்மொழி கேண்மோ !
ஊழி நிலவெறி மாளிகை யின்வயிற்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் றனிச்செல் பவனே !
நானு மேகுவன் நற்றுணை யவற்கே "

என்றுகூறி முதலியாரைக் கிடத்தியிருக்கும் சிதையருகு சென்று

" அன்றுநீ செல்லக் கிடவென்ரு யாயிழையோ
டின்றுநீ வானுலக மேறினும் — மன்றல்கமழ்
மானெக்கும் வேல்விழியார் மாறனே! கண்டியூர்ச்
சீனக்கா செல்லக் கிட "

என்றுபாடவும் சிதை விலகிக்கொடுப்பத் தாமும் தீயில் வீழ்ந்து உயிர்துறந்து துறக்கம்புக்கனர். தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடற்றிரட்டு, தமிழ்ப்புலவர்சரிதம், அபிதான கோசம், அபிதானசிந்தாமணி, தஞ்சைவாணன்கோவை யுரை, மண்டலசதகங்கள், சேயூர் முருகன்பிள்ளைத்தமிழ் திருப்புகழ் முதலிய நூல்களிற் பொய்யாமொழிப்புலவர் தம்வரலாறு காணப்பெறும். ஆகவேபொய்யாமொழிப்புலவர் கோவர்ம திரிபுவனச்சக்கரவர்த்தி குலசேகரதேவர் காலமாகிய கி. பி. 12-ம் நூற்ருண்டு (இற்றைக்கு 700 ஆண்டுகட்கு முன்) என்பதும் இவரும் நாற்கவிராசநம்பியும் ஒரே காலத்தவர் என்பதும் அறியக்கிடக்கும். சிலர்

வஞ்சிப் பொய்யாமொழிப்புலவரும் இவரும் ஒருவரே யென்பர். அன்னார் இவரை நாற்கவிராசநம்பிக்கு முற்பட்ட காலத்தவர் என்றும் நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரத்தால் வஞ்சிப்பொய்யாமொழியாரும் திருத்தக்க தேவரும் சமகாலத்தவராக அறியப்படுதலால், திருதக்க தேவர் காலம் ஆயிரமாண்டுகட்குமுன் ஆகும் அவரும் இவரும் வேறே யாவர் என்று அறியற் பாற்றும்,

வாழ்க பொய்யாமொழிப்புலவர் ! வாழ்க தமிழகம் !!

உ

அகப்பொருள் விளக்கவுரை

பொருளடக்கம்

	பொருள்	பக்கம்	எண்
	சிறப்புப்பாயிரம்	1 முதல்	8
I	அகத்திணையியல்	9	73
II	களவியல்	74	249
1	இயற்கைப்புணர்ச்சி		82
2	வன்புறை		91
3	தெளிவு		94
4	பிரிவுழிமகிழ்ச்சி		95
5	பிரிவுழிக்கலங்கல்		96
6	இடந்தலைப்பாடு		100
7	பாங்கற்கூட்டம்		102
8	பாங்கிமதியுடன்பாடு		114
9	பாங்கியிற்கூட்டம்		125
10	பகற்குறி		161
11	பகற்குறியிடையீடு		173
12	இரவுக்குறி		177
13	இரவுக்குறியிடையீடு		192
14	வரைதல்வேட்கை		203
15	வரைவுகடாதல்		216

	பொருள்	பங்கம்	எண்
16	ஒருவழித்தணத்தல்		228
17	வரைவிடைவைத்துப்பொருள்வயிற் பிரிவு		236
III	**வரைவியல்**	250	319
1	வரைவுமலிதல்		251
2	அறத்தொடுநிலை		257
3	உடன்போக்கு		669
4	கற்பொடுபுணர்ந்தகவ்வை		283
5	மீட்சி		303
6	தன்மனைவரைதல்		308
7	உடன்போக்கிடையீடு		313
8	வரைதல்		317
IV	**கற்பியல்**		320
1	இல்வாழ்க்கை		321
2	பரத்தையிற்பிரிவு		327
3	ஓதற்பிரிவு		348
4	காவற்பிரிவு		350
5	தூதிற்பிரிவு		351
6	துணைவயிற்பிரிவு		352
7	பொருள்வயிற்பிரிவு		353
V	**ஒழிபியல்**	357	385
1—2	திணையுங்கைகோளும்		357
3	கூற்று		358
4	கேட்போர்		364
5	இடம்		365

பொருள்	பக்கம்	எண்
6 காலம்		365
7 பயன்		366
8 முன்னம்		366
9 மெய்ப்பாடு		366
10 எச்சம்		367
11 பொருள்வகை		367
12 துறை		368
13 உள்ளுறையுவமம்		373
14 வெளிப்படையுவமம்		374
15 இறைச்சிப்பொருள்		374
16 அகப்புறக்கைக்கிளை		374
17 அகப்பொருட்பெருந்திணை		375
18 அகப்புறப்பெருந்திணை		376
19 அகப்பாட்டினுட்பாடப்படுந் தலைவர்கள்		377
20 அகப்புறப்பாட்டு		332
21 திணைமயக்கம்		332
VI பிற்சேர்க்கை	390	393
1 இறையனார்களவியன்மூலம்	394	400
2 களவித்தொகைவகைகளின்பொருள்		401
3 நூற்பாமுதற்குறிப்பகராதி		421
4 முதல்கருஉரிப்பொருள்களின்குறிப்புரை		434
5 பிழைதிருத்தம்		441

" அகப்பொரு ளிலக்கணம் அநுதினம் பயில்வோர்
இகப்பருஞ் செல்வம் எய்திவாழ் குவரே "

உ

சரசுவதிதோத்திரம்

வெண்பா

" படிக நிறமும் பவழச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி " 1

" ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர் " 2

கம்பர்

கட்டளைக்கலித்துறை

வெண்டாமரைக்கன் றிநின்பதந்தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத்தகாதுகொலோசகமேழுமளித்
துண்டானுறங்கவொழித்தான்பித்தாகவுண்டாக்கும் [வண்ணங்
கண்டான்சுவைகொள்கரும்பேசகலகலாவல்லியே 3

நாடும்பொருட்சுவைசொற்சுவைதோய்தரநாற்கவியும்
பாடும்பணியிற்பணித்தருள்வாய்பங்கயாசனத்திற்
கூடும்பசும்பொற்கொடியேகனதனக்குன்றுமைம்பாற்
காடுஞ்சுமக்குங்கரும்பேசகலகலாவல்லியே 4

அளிக்குஞ்செழுந்தமிழ்த்தெள்ளமுதார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும்படிக்கென்றுகூடுங்கொலோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும்பனுவற்புலவோர்கவிமழைசிந்தக்கண்டு
களிக்குங்கலாபமயிலேசகலகலாவல்லியே' 5

தூக்கும்பனுவற்றுறைதோய்ந்தகல்வியுஞ்சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப்பணித்தருள்வாய்வடநூற்கடலும்
தேக்குஞ்செழுந்தமிழ்ச்செல்வமுந்தொண்டர்செந்நாவினின்று
காக்குங்கருணைக்கடலேசகலகலாவல்லியே 6

பஞ்சப்பிதந்தருசெய்யபொற்பாதபங்கேருகமென்
னெஞ்சத்தடத்தலராததென்னேநெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசமுயர்த்தோன்செந்நாவுமகமும்வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்திருந்தாய்சகலகலாவல்லியே 7

பண்ணும்பரதமுங்கல்வியுந்தீஞ்சொற்பனுவலுமியான்
எண்ணும்பொழுதெளிதெய்தநல்காய்எழுதாமறையும்
விண்ணும்புவியும்புனலுங்கனலும்வெங்காலுமன்பர்
கண்ணுங்கருத்துநிறைந்தாய்சகலகலாவல்லியே 8

பாட்டும்பொருளும்பொருளாற்பொருந்தும்பயனுமென்பாற்
கூட்டும்படிநின்கடைக்கணல்காய்உளங்கொண்டுதொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த்தீம்பாலமுதந்தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள்ளோதிமப்பேடேசகலகலாவல்லியே 9

சொல்விற்பனமும்அவதானமுங்கவிசொல்லவல்ல
நல்வித்தையுந்தந்தடிமைகொள்வாய்நளினாசனஞ்சேர்
செல்விக்கரிதென்றொருகாலமுஞ்சிதையாமைநல்கும்
கல்விப்பெருஞ்செல்வப்பேறேசகலகலாவல்லியே 10

சொற்கும்பொருட்குமுயிராமெய்ஞ்ஞானத்தின்
[றோற்றமென்ன
நிற்கின்றநின்னைநினைப்பவர்யார்நிலந்தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின்பிடியோடரசன்னநாணநடை
கற்கும்பதாம்புயத்தாயேசகலகலாவல்லியே' 11

மண்கண்டவெண்குடைக்கீழாகமேற்பட்டமன்னருமென்
பண்கண்டளவிற்பணியச்செய்வாய்படைப்போன்முதலாம்
விண்கண்டதெய்வம்பல்கோடியுண்டேனும்
[விளம்பிலுன்போற்
கண்கண்டதெய்வமுளதோசகலகலாவல்லியே' 12

(குமரகுருபரர்)

உ

பரமபதி துணை

அகப்பொருள் விளக்கம்.

மூலமும் உரையும்

சிறப்புப்பாயிரம்

பூமலி நாவன் மாமலைச் சென்னி
யீண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கி மலயத் திருந்த
விருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொருள்
அகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
யிகப்பருஞ் சான்றோ ரிலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தாங்
ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தரும் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீழ்
ஏந்தெழி லரிமா னேந்துபொன் னணைமிசை
மதிமூன் றுகவிப்ப வுதய மால்வரைக்
கதிரோன் றிருந்தெனக் காண்டக விருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய

வெத்தமன் புளிங்குடி யுய்யவந் தானெனும்
முத்தமி ழாசான் மைந்த னித்தலத்
திருபெருங் கலைக்கு மொருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பது பாயிரம்:— பாயிரமென்பது புறவுரை யென்றவாறு. ஆயின், நூல்கேட்பான் புகுந்தே நூல்கேளாது புறவுரை கேட்டாற் பயனென்னை யெனின்?

'பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினி து விளங்கும்'

என்பவாகலாற் பாயிரங் கேட்டே நூல் கேட்கவேண்டும். அப்பாயிரம், பொதுப்பாயிரமுஞ் சிறப்புப் பாயிரமும் என விரண்டு வகைப்படும். அவற்றுண், முன்னையது நான்முகத் துரைப்பினு முரையா தொழியினும் அமையுமாதலிற் பொதுப்பாயிர மென்றாயிற்று. பின்னையது நான்முகத் துரைக்க வேண்டுதலிற் சிறப்புப் பாயிர மென்றாயிற்று.

அச்சிறப்புப் பாயிரம் எட்டு வகைப்படும்.

'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

என்றாராகலின்.

இனி யிதனைக் காலமுங் களனுங் காரணமுங் கூட்டிப் பதினொன்றென்பாரு முளர். என்னை?

'காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே'

என்றாராகலின்.

ஆக்கியோன்பெயரென்பது:— நூல் செய்த வாசிரியரின் பெயராயிற்று, **வழி**, நூலின் வழியாயிற்று, **எல்லை**, நூனடக்குமெல்லையாயிற்று, **நூற்பெயர்**, நூலின் பெயராயிற்று **யாப்பு**, தொகுத்தலும், விரித்தலும், தொகைவிரியும், மொழிபெயர்த்தலுமென்னும் நான்கனுள் ஒன்றனு னூல் செய்தலாயிற்று, **நுதலியபொருள்**, நூலாற் கருதப்பட்ட பொருளாயிற்று, **கேட்போர்**, நூல்கேட்டற் குரியாராயிற்று, **பயன்**, நூல்கற்றதனாலாய பயனாயிற்று, **காலம்**, நூல் செய்த காலமாயிற்று, **களன்** நூலரங்கேறிய வவைக் களமாயிற்று, **காரணம்**, நூல் செய்தற்குக் காரணமாயிற்று.

இப்பதினொன்ற னுள்ளும் பாயிரச் சூத்திரத்து ளெடுத்தோதப் படாதன எல்லையும், கேட்போரும், பயனும், காலமும், களனும் என்னு மைந்துமாம். அவற்றையும் ஒருவாற்ரு னுய்த்துணர்ந்து அல்லாத வாறும் இச்சூத்திரப் பேருரையிற் காண்க.

(இ-ள்) பூமலி நாவல் வேண்டலிற் போந்து என்பது. பூ மிக்க நாவலையுடை பெரிய மேருவின துச்சியின் கண்ணே திரண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் வேண்டிக் கொள்கையாலே அங்கு நின்றும் போந்து. (எ—று)

குடங்கையின் அடக்கி: என்பது-குழிந்த கையாலே விந்தமென்னு நெடிய மலையினது மிகையைத்தீர்த்து அலைகடலினை யடக்கி. (எ—று)

குடங்கையி னென்பதனை யிரண்டிடத்துங் கூட்டிக் கொள்க.

மலயத்-தன்பால் (எ—து.) பொதிய மலையின் கண்ணே யிருந்த பெருந்தவத்தோ னாகிய வகத்தியன் பக்கத்து (எ-று)

இயற்றமிழ்—பன்னிருவருள் எ—து. இயலிசை நாடக மென்னு முத்தமிழுள்ளு மியலாகிய தமிழைக் கற்ற மாணாக்கர் பன்னிருவருள்ளும். (எ—று)

தலைவ—பெரும்பொருள் என்பது. முதல்வனாகிய தொல்காப்பியனா லருளிச் செய்யப்பட்ட கோடாத பெரிய பொருளென்னும் நூலுள். (எ—று)

அகப்—தழீஇ எ—து அகப்பொருட்குரிய விலக்கணத்தையுளப்படக் கூட்டிக்கொண்டு. (எ—று)

இகப் — நோக்கி எ—து அகப்பொருளிலக்கணத்தைக் கடவாத சங்கத்தாருடைய செய்யுட்களை யாராய்ந்து (எ—று)

தொகு—நிறீஇ எ—து அவ்விலக்கண விலக்கியங்களுட் கலந்து கிடந்த கிளவிகளைச் சேர்த்தடைவுபட விறுத்தி.

(எ—று)

சூத்திரம் வகுத்தாங்கு எ—து. அவ்வடைவிற் கேற்பச் சூத்திரஞ் செய்து, (எ—று)

அகப்—படுத்து எ—து. அந்நூற் ககப்பொருள் விளக்க மென்றொரு பெயரை வெளிப்படுத்தி (எ—று)

இருளற—எழுதினன் எ—து. மயக்கந் தீர வுரையைப் பரப்பி யெழுதினன் (எ—று)

மாந்தரும் — வாழ்த்த எ—து. அமரரும் மனிதரும் மதிக்க (எ—று)

முக்குடைக்கீழ் எ—து. முக்குடையின்கீழ் (எ—று)

ஏந்—மிசை எ—து. உயர்ந்த வழகினையுடைய சிங்கஞ் சுமந்த பொன்னணைமேல் (எ—று)

மதி—விருந்து எ-து. நிறைமதி மூன்று கவிப்ப வுதய மென்னும் பெரிய மலையின் கண்ணே, யிளஞாயி றொன்றிருந்தாற்போல வழகுதக விருந்தருளி (எ—று)

தத்துவம்—மைந்தன் எ—து. உண்மைப் பொருளை யருளிச் செய்தோனுடைய திருவடிகளைச்சேர்ந்த மேலோன் திருப்புளிங்குடி யென்னும் ஊரகத்துத் தோன்றிய மெய்ய வந்தானென்றுஞ் சொல்லப்படா நின்ற முத்தமிழாசானுடைய மைந்தன் (எ—று)

இத்தல-குரிசில் எ—து. இவ்வுலகத்தின்கண் உண்டாய ஆரியம் முத்தமிழ் என்னு மிரண்டு கலைக்கு மொரு பெரிய நாயகன் (எ—று)

பால்—என்பவனே எ—து. பாற்கடற் போலும் பலவாகிய புகழைப் பரப்பின, **நாற்கவிராச நம்பி** என்னும் பெயரையுடையோன் (எ—று)

மாமலைச் சென்னி யென்புழி யாருமுருபுஞ், சென்னியிண்டிய வென்புழி யேழாமுருபுந் தொக்கன. போந்து, தீர்த்து அடக்கி யென்னும் வினையெச்சங்கள் அடுக்காய் இருந்த வென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன; அப்பெயரெச்சம் இருந்தவன் என்னும் பெயர் கொண்டது. இயற்றமிழென்பது, இருபெயரொட்டு. தமிழையென விரண்டாவது விரிக்க. பெரும்பொரு ளென்புழி யுள்ளென்னு மேழா முருபு தொக்கது. தழீஇ, நோக்கித், தொகுத்து, நிறீஇ, வகுத்துப் புலப்படுத்தென்னும் வினையெச்சங்கள் அடுக்காய் எழுதினனென்னும் முற்றுவினை கொண்டன. ஆங்கென்பதசை. வாழ்த்தப் பகர்ந்தோ னென வியையும். இருந்து என்னும் வினையெச்சம் பகர்ந்தோ னென்னும் தொழிற் பெயருட் பகர்த லென்னுந் தொழிலோடு முடிந்தது. பரப்பிய வென்னும் பெயரெச்சம், நாற்கவிராச னென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. நாற்கவியாவன:— ஆசு, மதுரம் சித்திரம் வித்தார மென்பனவாம், பாற்கடல் பல்புகழ் என்புழியுவமந் தொக்கது. நம்பி யென்னு மியற்பெயர் எழுதினனென்னும் முற்றுவினைப் பயனிலை கொண்டது.

ஆக்கியோன் பெயர் **நம்பி. வழி** தொல்காப்பியத்தின்வழி; அதன் வழியாயினும் தொல்காப்பியம் வழிநூலாயினமையின் இது, சார்பு நூலெனப்படும். எல்லையு மதனுனே யடங்கும். நூற்பெயர் அகப்பொருள் விளக்கம். யாப்பு தொகுத்தி யாத்தல். நுதலிய பொருள், அகப்பொருள்; கேட்போர் கற்று வல்லோர்; பயன் விடுபேறு. காலம் பாண்டியன் குலசேகரன் காலம். களம் அறிவோரவைக்களம், காரணம் கிளவிகளை யடைவுறக் கோத்தல். இவை யெல்லாம் பாயிரத்தியல் பெனக் கொள்க.

பாயிரம் முற்றிற்று.

இதனைப் பிற்காலத்தார் செய்த தென்பர்.

சிறப்புப்பாயிரம்

'பூமிசை நடந்த,

வாமனை வாழ்த்தி வடமலைச் சென்னி
ஈண்டிய கடவுளர் வேண்டலிற் போந்து
குடங்கையி னலைகட லடக்கி யீண்டிய
தென்மலை யிருந்த விருந்தவ னியற்றமிழ்
கெழீஇய வகப்பொரு டழீஇ நோக்கி
வழிகொடுத்து நிறீஇ வகுத்துப் புலப்படுத்தாங்
கிகப்பி லகப்பொருள் விளக்கம் பகர்ந்தன னெழுதிச்
செந்தமிழ் நாட்டு மைந்தன் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பதும், இந்நூலின் சிறப்புப் பாயிரமே யென்பதும், இதுவே இந்நூலின் பழைய சிறப்புப்பாயிர மென்பதும், சுன்னாகம், அ. குமரசாமிப் புலவரும், திருக்கோணமலை, த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும் எழுதி வெளிப்படுத்திய புத்துரையினால் விளங்குகின்றது.

அகப்பொருட் சூத்திரத் தொகை.

வெண்பா

'அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிகுத்தகள வைம்பதுடன் மேனுன்— கிருத்த
வரைவிருபத் தொன்பஃது மன்னுங்கற் பீரைந்
துரையொழிபு நாற்பஃதோ டொன்று'

அகப்பொரு ளுரிப்பொருள்.

'போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம்-நோக்குங்கால்
இல்லிருத்தன் முல்லை யிரங்க னறுநெய்தல்
சொல்விரிந்த நூலின் றொகை.

உ

நூல்

முதலாவது

அகத்திணையியல்.

1] மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
வருந்தமி ழகப்பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

என்பது, சூத்திரம். மேற் பாயிரத் திலக்கண முணர்த்திப் போந்தாம். இனி நூலிலக்கண முரைக்கின்றாம், அஃதுரைக்குங்கால், நூன்முதலிய துரைத்தலும், நூலு ளதிகார முதலிய துரைத்தலும், அதிகாரத்து ளோத்து முதலிய துரைத்தலும், ஓத்தினுட் சூத்திர முதலிய துரைத்தலும் என நான்கு வகையா னுரைத்தல் வேண்டும்.

அவற்று ணூன்முதலிய துரைக்குங்கால் நூலாமாறும், நூலென்ற சொற்குப் பொருளாமாறும் உரைத்தல்வேண்டும்.

அவற்று ணூலாமாறுரைக்குங்கால், நூன் மூன்று வகைப்படும். அவை, முதனூலும், வழிநூலுஞ், சார்பு நூலு மென,

என்னை?

'முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.'

என்றாராகலின்.

அவற்றுண் முதனூலாவது வரம்பிலறிவன் பயந்த தாகும்.

என்னை?

'வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்'

என்றாராகலின்;

வழிநூலாவது, முதனூலின் வழி தப்பாமற் பின்னரும் வேண்டும் விகற்பங்காட்டி வழுவாமற் சொல்லுவது.

என்னை?

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்'

என்றாராகலின்.

சார்பு நூலாவது அவ்விருவர் நூலின் முடிந்த பொருளை யோருபகார நோக்கி யொரு கோவைப்பட வைப்பது;

என்னை?

'இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.'

என்றாராகலின்.

நூலென்ற சொற்குப் பொருளுரைக்குங்கால் தந்திர மென்னும் வடமொழியை நூலென்று வழங்குவது தமிழ் வழக்கெனக் கொள்க. நூனுதலிய துரைத்தலாவது, இந்நூ லின்னது கருதிற்றென்றுரைத்தல். அது, தமிழ் நுதலிற் றென்றலாம். அந்நூன் மூன்று வகைப்படும். இயனூலும்,

இசை நூலும், நாடக நூலுமென. அவற்று, ளியனூன் மூன்றுவகைப்படும். எழுத்துஞ், சொல்லும், பொருளுமென;

என்னை?

'தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி'

என்றாராகலின்,

அஃதேல், யாப்பு மலங்காரமு மவற்றுள்யாதனு ளடங்கு மோவெனின்; அவையிரண்டும் பொருளினுளடங்கும், எனக் கொள்க. அதிகார நுதலிய துரைத்தலாவது:— இவ்வதி கார மின்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வதிகார மென்னுத லிற்றோவெனின், அதுபாயிரவுரையு ளுரைத்துப் போந்தாம். (தமிழ் நுதலிற்றென்றது) இவ்வதிகார மகத்திணை யியலுங், களவியலும், வரைவியலுங் கற்பியலும் ஒழிபியலு மென வைந் தோத்துங் கொண்டதாம். அதிகாரத்து ளோத்து நுத லிய துரைத்தலாவது, இவ்வதிகாரத்து ளிவ்வோத் தின்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வதிகாரத்து ளிவ்வோத் தென் னுதலிற்றோவெனின் அகத்திணை யிலக்கணமுணர்த்திற்று எனக் கொள்க. (யிலக்கண முணர்த்துத னுதலிற் றெனக் கொள்க.) ஓத்தினுட் சூத்திர நுதலிய துரைத்தலாவது, இவ் வோத்தினு ளிச்சூத்திர மின்னது கருதிற் றென்றல்.

ஆயின், இவ்வோத்தினு ளிச்சூத்திர மென்னுதலிற்றோ வெனின் அகப்பொரு ளெல்லாந் தொகுத்து உணர்த்து தனுதலிற்று. அன்னதாதலி னிச்சூத்திரப் பொருளுரைப் பவே விளங்கும்.

அப்பொருளுரை நான்கு வகைப்படும்; கருத்துரைத் தலுங், கண்ணழித் துரைத்தலும், பொழிப்புத் திரட்டலு, மகலங் கூறலுமென.

என்னை?

'கருத்துரை கண்ணழிவு பொழிப்புத் திரட்ட
லகலங் கூற லெனநால் வகைத்தே
புகலுஞ் சூத்திரப் பொருளுரை யென்ப'

என்றாராகலின்,

அவற்றுள் கருத்துரைத்தலாவது, சூத்திரத்துட்கோ ளுரைத்தல்.

என்னை?

'சூத்திரத் துட்கோள் சொல்லல் கருத்துரை'

என்றாராகலின்.

கண்ணழித்தலாவது, சூத்திரத்துட் சொற்றொறுஞ் சொற் றொறும் பொருளுரைத்தல்.

என்னை?

'சொற்றொறுஞ் சொற்றொறுந் துணிபொரு ளுரைத்தல்
கற்றறி புலவர் கண்ணழி பென்ப'

என்றாராகலின்.

பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரத்துப்பொருளை யெல் லாந் தொகுத்துரைத்தல்.

என்னை?

'பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே'

என்றாராகலின்,

அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய் தற்குக் கடாவும் விடையு முள்ளுறுத்து விரித்துரைத்தல்.

என்னை?

'அகல மென்ப தாசறக் கிளப்பின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே'

என்றாராகலின்,

அவற்றுள், கருத்துரை முற்கூறப்பட்டது.

இனிக்கண்ணழிக்குமாறு:—மலர்தலை யுலகத்து என்பது, பரந்த விடத்தையுடைய தமிழ்நாட்டகத் தென்றவாறு. புலவோ ராய்ந்த வருந்தமி ழகப்பொருள் என்பது—தலைச்சங்கத் தோரு மிடைச்சங்கத்தோருங் கடைச்சங்கத்தோரு மாகிய சான்றோரா (லாயப்பட்ட) லாராயப்பட்ட தமிழ் நூலகத்தகப் பொருளென்றவாறு. கைக்கிளை யைந்திணை பெருந்திணையென வெழு பெற்றித்தாகும் என்பது. கைக்கிளையு, மைந்திணையும் பெருந்திணையுமென வேழியல்பினை யுடைத் தென்றவாறு.

என்னை?

'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப'

என்றாராகலின்.

பொழிப்புத்திரட்டலாவது—பரந்த விடத்தை யுடைத்தாகிய தமிழ்நாட்டிடத்து மூன்று வகைப்பட்ட சங்கத்தோரானு ராயப்பட்ட வரிய தமிழ்நூலகத்து அகப்பொருளாவது கைக்கிளையு மைந்திணையும் பெருந்திணையுமென வேழியல்பினை யுடைத்தா மென்றவாறு.

அகலமாவது (இனி அகலங்கூறுமாறு)—இச்சூத்திரத்துள் மலர்தலை யுலகென்பதி யாதோவெனின் வினைத்தொகை யெனக் கொள்க. வினைத்தொகையாவது ஒருகாலத்துக்கே யுரித்தாகாது மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்பதாம். மூன்று காலமாவன, இறந்தகாலம், நிகழ்கால, மெதிர்கால

மென்பனவாம் (இறப்பு, நிகழ்வு, எதிர்வென்பனவாம்) அஃது வற்றோடு வருங்கால் மலர்ந்தவென்றும் மலராநின்ற வென்றும் மலருமென்றும்வரும். அவற்றுள்; ஈண்டுமலர்ந்த வென்பதே பொருளாம். தலையுலகென்புழி (தலையுலகத் தென்புழி) இரண்டா முருபு மேழா முருபுந் தொக்கன. புலவோ ரென்னு மெழுவாய்க்கு ஆய்ந்த வென்னும் வினை பயனிலையா மாயினு மதுவே பெயரெச்ச வாய்பாடாதலா னருந்தமிழென்னும் பெயரோடு முடியும் (முடிந்தது) அருந்தமி ழகப்பொருளென்புழி ஏழாமுருபு தொக்கது. அகப்பொரு ளென்னு மெழுவாய் பெற்றித் தென்னுங் குறிப்புவினை கொண்டது. கைக்கிளை, யைந்திணை, பெருந்திணை யென வும்மைத்தொகையா யேழென்னுந் தொகை பெற்றன. எனவென்ப தெண்ணிடைச் சொல்.

2] அகப்பொருள் சொல்லப்படுந்திறன்

அதுவே,
புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

என்பது சூத்திரம் என்றுதலிற் றோவெனின், மேற் சொல்லப்பட்ட வகப்பொருட்குரிய விதி யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அதுவே, அவ்வகப்பொரு ளில்லது முள்ளது மாகிய விரண்டு கூறு பாட்டானும் பழையநெறி பிழையாமற் கூறப்படு மென்றவா று.

என்னை?

'நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கங்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினு
முரிய தாகு மென்மனர் புலவர்'

என்றாராகலின். (2)

3] கைக்கிளை யின்ன தென்பது

அவற்றுட்,
கைக்கிளை யுடைய தொருதலைக் காமம்.

(இச்சூத்திரம்) நிறுத்த முறையானே கைக்கிளைக்குரிய காமப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட வகப்பொருள் விகற்பமாகிய வேழனுட் கைக்கிளை யென்பதனுடைய பொருளொருதலைக்காம மென்றவாறு. அவற்று ளென்பதனை மேல் வருகின்ற சூத்திர மிரண்டற்குங் கந்துரைக்க.

4] ஐந்திணை யின்ன தென்பது.

ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்.

(எ, சூன்) ஐந்திணைக்குரிய காமப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) ஐந்திணை யென்பதனுடைய பொருளன்புடைக்காம மென்றவாறு. (காமமாமென்றவாறு)

5] பெருந்திணை யின்ன தென்பது

பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம்.

(எ, சூன்) பெருந்திணைக்குரிய காமப் பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) பெருந்திணை யென்பதனுடைய பொருள் பொருந்தாக்காம மென்றவாறு. இவற்றின் விகற்பமெல்லாம் மேலே காட்டப்படும். (5)

6] ஐந்திணையின் பெயர்

குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே,

(எ, சூ ன்) நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந் திணையு மொழித்து, நிலம் வகுக்கப்படு மைந்திணைக்கு முரிய பெயருணர்த்துத லுதலிற்று.

(இ ள்) குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலுமாகிய வைந்திணைக்கும் பொருந்திய பெயரா மென்றவாறு,

என்னை?

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமு
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்றாராகலின்,

மற்றிதனுட் பாலைக்குத் திணையில்லை யாலோவெனின், னது நிலமின்மையா னொழிக்கப்பட்ட தெனக் கொள்க. அஃதே லீண்டுக் கூறிய தென்னை யெனின், மதுரைக் காஞ்சியுள்,

'பாலை சான்ற சுரஞ் சார்ந்தொருசா ரென்பதனானும், பிறவாற்றானுங் கூறப்பட்ட தெனக்கொள்க. அஃதற்றாக, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென், றிம்முறை யெண்ணாது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென் றெண்ணிய தென்னை யெனின்? (தென்னையோ வெனின்) அச்சூத் திரத்துட்.

'சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' என்ற வும்மை பிறவாற்றாற் சொல்லவும் படுமென்பதுபட நிற்றலானும், பத்துப்பாட்டுங் கலித்தொகையு மைங்குறுநூறுங் கீழ்க் கணக்குஞ் சிற்றட்டகமும் முதலாகிய சான்றோர் செய்யுட் களெல்லாம் வேண்டிய முறையானே வைத்தலானு, மிவ்

வாற்று னெண்ணப்பட்டதெனக் கொள்க. மற்றுக் குறிஞ்சி முதலாகிய பெயர் நிலங்கட் கெய்திய வாறென்னை யெனின்? உலகத்தார் வழங்கிப் போந்த முறைமையாமெனக் கொள்க, அன்றியும் குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலு மென்னும் பொருள்க ளவ்வந் நிலத்திற்குச் சிறந்தனவா கலானவற்றாற் பெற்ற பெயரெனவுமாம்.

என்னை?

'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு,
பெருந்தேனிழைக்கு' மெனவும்.

'கோடுறு பல்காய் வாலிணர்ப்பாலை' யெனவும்

'முல்லையந் தண்பொழில்' எனவும்

'மருதமா நீழ' லெனவும். 'பாசடை நிவந்த கணைக்கா னெய்த' லெனவுஞ் சான்றோரா லெடுத்துக் கூறப்படுதலா லெனக்கொள்க. இவையாகு பெயராம். (6)

7] ஐந்திணைக்கு முரிய பொருள்கள்

அவைதாம்,
முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொருளெனமுறை
நுதற்பொருண் மூன்றினு நுவலப் படுமே.

(எ. சூ-ன்) ஐந்திணைக்கு முரிய பொதுவாகிய பொருளுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட குறிஞ்சி முதலாகிய வைந்திணை தாம் முதற்பொருளுங் கருப்பொருளு முரிப் பொருளுமென முறையானே கருதுதலை யுடைய பொருள் மூன்றானுஞ் சொல்லப்படுமென்றவாறு.

என்னை?

'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந் தனவே,
பாடலுட் பயின்றவை நாடுங் காலை'

என்றுராகலின்.

அவைதாம் நுவலப்படுமெனக் கூட்டுக, எனவெனப் படுவ தெண்ணிடைச்சொல். (7)

8] முதற் பொருளின் வகை

நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே முதற்பொருளின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) முதற்பொருளாவது நிலமும் பொழுதுமென விரண்டு கூற்றினை யுடைத்தா மென்றவாறு.

என்னை?

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந்தோரே' (8)

என்றுராகலின்,

9] நிலமாகிய முதற்பொருளின் வகை.

வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
யெனவீ ரைவகைத் தனையிய னிலமே.

(எ, சூ-ன்) முதற்பொருளின் பாகுபாடாகிய விரண் டனுள்ளு முன்னதாகிய நிலத்தின் வரையறை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட வியல்பினையுடைய நில மென்னு முதற்பொருள் வரையும் வரைசார்ந்த விடமுஞ்

சுரமுஞ் சுரஞ்சார்ந்த விடமுங், காடுங் காடு சார்ந்த விடமும் பழனமும் பழனஞ் சார்ந்த விடமுங் கடலுங், கடல் சார்ந்த விடமும் எனப் பத்து வகையினை யுடைத்தென்றவாறு இவற்றிற்கு விதி மேலே காட்டப்பட்டன. இவற்றை யைந் திற்கும் நிரனிறையாகக் கொள்க. புறவெனினுங் காடெனினு மொக்கும். பழனமென்புழி யேகாரந் தொக்கதாயினுங் குற்ற மின்றாம்.

என்னை?

"எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக் குறித் தியலு மென்மனார் புலவர்"

என்றாராகலின்.

அணையவியலெனற்பாலது அணையியலென விகார மாயிற்று. (9)

10] காலமாகிய முதற்பொருளின் வகை

'பெரும்பொழு தென்று சிறுபொழு தென்று
விரண்டு கூற்ற தியம்பிய பொழுதே'

(எ,சூ-ன்) பொழுதென்னு முதற்பொருளின் பாகுபாடு ணர்த்துத லுதலிற்று

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட, பொழுதென்னு முதற் பொருள் பெரும்பொழுதென்றுஞ் சிறுபொழுதென்று மிரண்டு பகுதியினை யுடைத்தென்றவாறு.

என்று வென்பதெண்ணிடைச் சொல். (10)

11] பெரும்பொழுதின் வகை

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றுங்
கிருமூன் று திறத்தது தெரிபெரும் பொழுதே.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே பெரும்பொழுதினது பாகுபாடுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) கார் முதலாக வேனி லீறாகச் சொல்லப்பட்ட வாறு பகுதியினை யுடைத்தாம். புலவரா லாராயப்பட்ட பெரும்பொழு தென்றவாறு.

ஆங்கசை. (ஆங்கு—அசை) (11)

12] சிறுபொழுதின் வகை

மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

(எ, சூ ன்) சிறுபொழுதின் பாகுபா டுணர்த்துத றுத லிற்று.

(இ-ள்) மாலைமுதலாக நண்பக லீறாகச் சொல்லப்பட்ட வைவகையினை யுடைத்தா மவ்வவ் வொழுக்கத்திற் குரிய சிறுபொழு தென்றவாறு.

அவற்றுள், **மாலையாவது** உச்சிக்குப் பின்னும் வெய்யோன் படுதற்கு முன்னு முண்டாகிய காலம், யாமமாவது, இடை யிரவு. வைகறையாவது விடியற்காலம். எற்படு காலையாவது வெய்யோன் படுகிறபொழுது. நண்பகலாவதுருச்சிப் பொழுது. **கை யென்ப தொழுக்கம்.** (12)

(குறிப்பு) காலையாவது, நிசியின் முன்னும், எற்பாட்டின் பின்னு முண்டாகிய காலம் என்பது மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

13] குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

அவற்றுட்,
கூதிர் யாம முன்பனி யென்றிவை
யோதிய குறிஞ்சிக் குரிய வாகும்.

(எ, சூ,ன்) குறிஞ்சிக் குரிய பெரும் பொழுதுஞ் சிறு பொழுது முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாகிய பதினொன்றி னுள்ளுங் கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய மூன்றும் மேற் சொல்லப்பட்ட குறிஞ்சிக்குரியவா மென்றவாறு.

இதனுட் பெரும் பொழுதாகிய முன்பனியைக் கூதிரென்பதனோடு சேரக்கூறு தியாமமாகிய சிறுபொழுதின்பிற் கூறிய தென்னையோ எனின், அது கூதிரின்றுணைச் சிறப்புடைத்தன்மையி னவ்வாறு கூறப்பட்டதெனக் கொள்க. வருகின்ற சூத்திரத்திற்கு மொக்கும். *(13)*

14] பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

வேனி னண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலை தனக்கே.

(எ,சூ,ன்) பாலைக்குரிய பெரும் பொழுதும் சிறுபொழுதும் ஆமாறு உணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பாலைக்கு வேனிலும் நண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதியானுரியவா மென்றவாறு.

இனி, அவற்றது சிறப்புண்மையும் சிறப்பின்மையும் எற்றாற் பெறுவது, எனின் 'குறிஞ்சி' கூதிர்யாம மென்மனார் புலவர்' எனவும் 'பனியெதிர் பருவமு முரித்தென மொழிப' எனவும், நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனிலொடு, முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே' எனவும் 'பின்பனிதானு முரித்தென மொழிப' எனவுங் கூறியவதனாற் பெறுது மெனக் கொள்க. *(14)*

15] முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

மல்குகார் மாலை முல்லைக் குரிய.

(எ, சூன்,) முல்லைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறு பொழுது முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மிகாநின்ற கார்காலமும் மாலைக்காலமுமாகிய விரண்டு காலமும் முல்லைக்குரியவா மென்றவாறு.

என்னை?

'காரு மாலையு முல்லைக் குரிய'

என்றுராகலின். (15)

16] மருதத்திற்குரிய சிறுபொழுது

இருள்புலர் காலை மருதத்திற் குரித்தே.

(எ, சூன்) மருதத்திற் குரிய சிறுபொழு துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மருதத்துக்கு விடியற்கால முரித்தென்றவாறு

என்னை?

'வைகுறு விடியன் மருத மென்ப. 'வைகுறு விடியன் மருதம்'

என்றுராகலின். (16)

17] நெய்தற்குரிய சிறுபொழுது

வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.

(எ, சூ-ன்) நெய்தற் குரிய சிறுபொழு துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) வெய்யோன் படுகின்ற காலை யதற்குரித் தென்றவாறு என்னை? 'எற்படு, (எற்பாடு) நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்' என்றுராகலின். 17

18] மருதம் நெய்த லென்னும் இரண்டற்குரிய பெரும் பொழுது.

மருத நெய்த லென்றிவை யிரண்டிற்கு
முரிய பெரும்பொழு திருமூன் றும்மே.

(எ, சூ-ன்) மருதத்திற்கும் நெய்தற்கு முரிய பெரும் பொழுதுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மருதமும் நெய்தலு மென்ற விரண்டிற்கும் பெரும்பொழுதா று. முரியவொன்றவா று இஃதெற்றாற்பெறு துமோவெனின், ஞாபகத்தாற் பெறுவது வெனக் கொள்க. அஃதி யாதோவெனின் ஏனை மூன்றற்கும் பெரும்பொழுது கூறிப் போந்தார் (கூறிப் போந்து) மருதத்திற்கும் நெய்தற் கும் பெரும்பெழுது கூறுததனுலெனக் கொள்க. அதனுற் பெரும்பொழுதா று முரியவாமெனக் கொள்க. 18

19] கருப்பொருள் வகை.

ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர முணுப்பறை யாழ்பண்
டொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.

(எ, சூ-ன்) கருப்பொருளின் பாகுபா டுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தெய்வ முதலாகத் தொழிலீறுகச் சொல்லப் பட்ட பதினுன்கு வகை யுடைத்தாங் கருப் பொருளென்ற வா று.

என்னே ?

'தெய்வ முணுவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
யிவ்வகை பிறவுங் கருவென மொழிப'

என்றுராகலின்,

மற்று அக் கருப்பொருள் எண் பதினுலென்று வரை யறுத்த தென்னை? இதனு ளெடுத்தோதப்பட்ட தெட் டன்றேயெனின், ஒழிந்தவாறு மிச்சூத்திரத்துப் பிறவென்று மிலேசாற் கொள்ளப்பட்டன. (19)

20] குறிஞ்சியின் கருப்பொருள்.

விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கைக் குறிஞ்சி காந்த
ளாரந் தேக்ககி லசோக நாகம்
வேரலை வனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோ ளைவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தே னழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

(எ, சூ-ன்) குறிஞ்சிக் கருப்பொரு ளுணர்த்துத லுதலிற்று,

(இ-ள்) சேய் முதலாகச் சுனையாட லீறுகச் சொல்லப் பட்டன வெல்லாங் குறிஞ்சிக் கருப்பொருளா மென்றவாறு. (20)

21] பாலையின் கருப்பொருள்.

கன்னி விடலை காளை மீளி
யின்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்

மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுது செந்நாய் கல்கழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
வுழிஞ்சில் பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பஃதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக் கருப்பொருளே.

(எ, சூ ன்) பாலைக்குரிய கருப்பொருளாமா றுணர்த்துத லுதலிற்று. (21)

(இ-ள்) கன்னி முதலாகச் சூறையாட லீறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பாலைக்குக் கருப்பொருளா மென்றவாறு.

22] முல்லையின் கருப்பொருள்.

நெடுமால் குறும்பொறை நாடன் றோன்றல்
*மடியில் கற்பின் மனைவி கிழத்தி
யிடைய ரிடைச்சிய ராய ராய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கானியாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவங்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக் கதிர் வர கொடு சாமை முதிரை
யேற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தரமுடன் வித்த
லவைகளைக் கட்ட லரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதல்

*வடுவில் கற்பின் (பா. பே.)

மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன் முல்லைக் கருப்பொருளே

(எ,சூ-ன்.) முல்லைக்குரிய கருப்பொரு ளுணர்த்துதனுத லிற்று.

(இ-ள்) நெடுமால் முதலாகக் கானியா றுடலீறுகச் சொல்லப்பட்டன வெல்லா முல்லைக் கருப்பொருளா மென்ற வாறு. (22)

23] மருதத்தின் கருப்பொருள்.

இந்திர னூரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
யுழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலைவண் டானை மகன்றி லுறை
யன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா வெருமை நீர்நாய்
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெ லந்நெல் லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருத
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்ட
லரிதல் கடாவிட லகன்குளங் குடைதல்
வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

(எ, சூ-ன்) மருதத்திற்குரிய கரும்பொரு ளுணர்த்துத னுதலிற்று.

(எ, சூ-ன்) இந்திரன் முதலாக வருபுனலாட லீறுகச் சொல்லப்பட்டன வெல்லா மருதத்திற்குரிய கருப்பொருளா மென்றவாறு. (23)

24] நெய்தலின் கருப்பொருள்

வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமவல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்திய
ரளவ ரளத்திய ரலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டின
மூவர் நீர்க் கேணி கவர் நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவுமீ னுப்புப் விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்த
லுணங்கவை விற்றல்மீ னுணக்கல்புள் ளோப்ப
னெடுங்கட லாட னெய்தற்கருப் பொருளே.

(எ, சூ-ன்) நெய்தற்குரிய கருப்பொருளுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) வருணன் முதலாகக் கடலாட லீறுகச் சொல்லப்பட்டனவெல்லாம் நெய்தற்குக் கருப்பொருளா மென்றவாறு.

இச்சூத்திரங்களுட் டெய்வ முதலாகத் தொழி லீறுகச் சொல்லப்பட்ட கருப்பொருள் பதினான்கும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க. (24)

25] உரிப்பொருள்

புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலு
மிரங்கலு மிவற்றி னிமித்தமு மென்றாங்
கெய்திய வுரிப்பொரு ளாயிரு வகைத்தே.

(எ. சூ-ன்) உரிப்பொருளின் பாகுபா டுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேலெய்திய வுரிப்பொருள் புணர்தலும் புணர்த னிமித்தமும், பிரிதலும், பிரித னிமித்தமு, மிருத்தலு மிருத்த னிமித்தமு மூடலு மூட னிமித்தமு மிரங்கலு மிரங்க னிமித்தமு மெனப் பத்து வகையினை யுடைத்தா மென்றவாறு.

என்னை ?

"புணர்தல் பிரித லிருத்த லிரங்க
லூட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

என்றாராகலின்,

இச்சூத்திரத்தானும் ஐந்திணையையும் வேண்டிய முறை யானே வைத்தெண்ணலா மென்பது பெறப்பட்டது.

அவற்றுட் குறிஞ்சிக் குதாரணம்—

''இன்னிசை யுருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானாட் கங்குற்
காடுதேர்வேட்டத்து விளிவிடம் பெறாஅது
வரியதள்படுத்த சேக்கைத் தெரியிழைத்
தேனூறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட !
வனைந்துவர லிளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற

நின்மார் படைதலி னினிதா கின்றே
நும்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுந்
தண்வர லசைஇய பண்பில் வாடை
பதம்பெறு கல்லா திடம் பார்த்து நீடிய
மனைமர மொசிய வொற்றிப்
பலர்மடி கங்கு னெடும் புறநிலையே''

என வரும். (அகநானூறு)

பாலைக் குதாரணம்:—

''அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலற் றிகிரிக்
கடுங்கதி ரெறித்த விடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்
நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை யுழிஞ்சில்
உள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொ ளியவின்
விழுத்தொடை மறவர் வில்விட வீழ்ந்தோ
ரெழுத்துடை நடுக லின்னிழல் வதியு
மருஞ்சுரக் கவலை நீந்தி யென்று
மில்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காத
லருளே காதல ரென்றறி'நீயே''

எனவரும். (அகம்)

முல்லைக் குதாரணம்:—

''முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப

மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேர
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரின் நாறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே"

எனவரும். (அகம்)

மருதத்திற்குச் செய்யுள்:—

நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி பாக்கத்து
நாட்டுறைப் பட்ட மோட்டிரு வராஅற்
றுடிக்கட் கொழுங்குறை நொடுத்துண் டாடி
வேட்டமறந்து துஞ்சுங் கொழுநற்குப் பாட்டி
யாம் பலகலிலை யமலைவெஞ் சோறு
தீம்புளிப் பிரம்பின் றிரள்கனி யளைஇ
விடியல் வைகறை யிடூஉ மூர!
தொடுகலங் குறுக வாரற் றந்தை
கண்கவி னழித்ததன் தப்பற் றெறுவர
வொன்றுமொழிக் கோசர் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதிய னுறந்தைக் கொடுங்குழை
யன்னி ஞிமிலியி னியலு
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே.

எனவரும். (அகம்)

நெய்தற்குச் செய்யுள் :—

"கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னை குடம்பை சேர
வசைவண் டார்க்கு மல்குறு காலை
யழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையறு பிணையத்
துயரஞ் செய்துநம் மருளா ராயினு
மறுஅ லியரோ வவருடைக் கேண்மை
யளியின் மையி னவணுறை முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்பும்
தண்ணுமை வெரீஇய தடந்தா ணாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
யகமடற் சேக்குந் துறைவ
னின்றுயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே"

என வரும். (அகம்.)

இவற்றுண் முதலுங் கருவு முரிப்பொருளும் வந்தவாறு கண்டு கொள்க. (25)

26] கைகோளின் வகை,

அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

(எ, சூ-ன்) ஐந்திணைக்குரிய ஒழுக்க வரையறை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) எல்லை யில்லாத வின்பத்தையுடைய வைந்திணை யிடத்துக் களவுங் கற்பு மென விரண்டொழுக்க நிகழு மென்றவாறு.

களவுங் கற்பு மென வும்மை விரிக்க, கைகோ ளென்பது ஒழுக்கம். (26)

27] களவொழுக்கத்தின்கண் நிகழும் புணர்ச்சி வகை

இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப் பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

(எ, சூன்) நிறுத்த முறையானே களவென்றுங் கைகோளிற் புணர்ச்சி யுணர்த்துத றுதலிற்று.

(இ-ன்) மேற் சொல்லப்பட்ட களவெனறுங் கைகோளிற் புணர்ச்சி, இயற்கைப் புணாச்சி, யிடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டமென நான்கு வகையினை யுடைத்தா மென்றவாறு.

என்னை ?

'காமப் புணர்ச்சியு மிடந்தலைப் பாடும்
பாங்கொடு தழா லுங் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே"

என்றுராகலின். (27)

28] கைக்கிளை நிகழுங்காலம்

மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.

(எ, சூ-ன்) கைக்கிளை நிகழுமிட முணர்த்துதனுதலிற்று

(இ-ன்) இச்சூத்திரம் பொருள்படுங் கிளை நரம்பினை யுடைத்தாகிய யாழினையுடைய கந்திருவர் விரும்புங் களவிற் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவரென்றவாறு. (28)

29] கைக்கிளை யின்னதென்பது

அதுவே,
காமஞ் சான்ற விளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

(எ, சூ-ன்) கைக்கிளைக்குரிய விலக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையாவது காம நுகர்தற் கமைந்த யிளமையை யுடைய தலைமகளிடத் துண்டாகிய குறிப்பினைத் தானறியு மளவுந் தலைமகனவளைச் சார்ந்து நின்று (சாராது நின்று) தன்வசமாகிய நெஞ்சினோடு சொல்லுதலா மென்றவாறு, (29)

30] கைக்கிளைக் குரிய தலைமக்கள்,

மறையோர் மன்னர் வணிகர்சூத் திரரெனு
மிறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே,

(எ, சூ-ன்) கைக்கிளைக் குரிய தலைமக்களை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளை, மறையோரும் மன்னவரும், வணிகருஞ், சூத்திரருமாகிய நால்வகைத் தலைமக்கட்கே கூடுவதா மென்றவாறு. (30)

31] இதுவுமது.

அதுவே,
மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை
யிழிந்தோர் தம்மு ளுயர்ந்தோரு மெய்துப.

(எ, சூ-ன்) கைக்கிளைக் கெய்துவதோர் வேறுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி, யைந்து நிலத்து முறையும் நிலை மக்களுட் டலைமக்களும் பெறுவரென்றவாறு,

உம்மை யிழிவு சிறப்பாதலாற் சிறுபான்மை நோக்கி நின்றதெனக் கொள்க. (31)

32] இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்.

தெய்வந் தன்னி னெய்தவுங் கிழத்தியி
னெய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி.

(எ, சூ-ன்) இயற்கைப் புணர்ச்சிக் கிலக்கண முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியுள்ளு மியற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவும் படும், தலைமகளாற் பெறவும்படு மென்றவாறு படுமென்றதனையிரண்டிடத்துங்கூட்டிக் கொள்க, (32)

33] இயற்கைப் புணர்ச்சிக்கொரு சிறப்புவிதி

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும்.

எ,சூ-ன். இயற்கைப் புணர்ச்சிக் கெய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வத்தாற் பெறுங் காலத்து-முயற்சி யின்றித்தானே முடிவதாமென்றவாறு.

எனவே, யப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதாகு மென்பதாயிற்று, முயற்சியின்றி

முடிவதற்கு விதி 'சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி' யென்பதாம். (33)

34] களவொழுக்கின்கண் புணர்ச்சி நிகழுந்திறம்

உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங்
கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய.

(எ, சூ-ன்) எய்தாத தெய்துவித்த னுதலிற்று.

(இ-ள்) உள்ளத்தாற் புணரும் புணர்ச்சியு மெய்யுற் றுப் புணரும் புணர்ச்சியு மென்று மிரண்டுந் தலைமகற்குந் தலைமகட்கு முரியவாங் களவிற் புணர்ச்சிக்கண் ணென் றவாறு.

கள்ளமென்பது களவு (34)

35] உள்ளப் புணர்ச்சி நிகழும் காலம்.

பொருவிறந் தோற்குப் பெருமையு முரனும்
நன்னுதற் கச்சமு நாணமு மடனும்
மன்னிய குணங்க ளாதலின் முன்னம்
உள்ளப் புணர்ச்சிக் குரிய தாகும்.

(எ, சூ-ன்) உள்ளப் புணர்ச்சி நிகழுமிட முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பெருமையு முரனுந் தலைமகற்கு நிலைபெற்ற குணமாதலானு மச்சமும் நாணு மடனுந் தலைமகட்கு நிலை பெற்ற குணமாதலானு மேற் சொல்லப்பட்ட விரண்டு புணர்ச்சி யுள்ளும் உள்ளப் புணர்ச்சி முன்னிகழ்தற் குரித்தா மென்றவாறு. உரனெனினு மறிவெனினும் ஒக்கும். பெருமையென்பது பழியும் பாவமு மஞ்சுதல். அறிவென்பது தக்கதறிதல். அச்சமென்பது காணாதொன்று கண்டாற் பெண்

டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க் கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமை யெனக் கொள்க. அவை யவர்க்குக் குணமாகிய வாறென்னை யெனின்,

"பெருமையு முரனு மாடூஉ மேன" எனவும்,
"அச்சமு நாணு மடனுமுந் துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய வாகும் (குரியவென்ப "

எனவுஞ் சொன்னாராகலி னெனக் கொள்க. (35)

36] மெய்யுறு புணர்ச்சி நிகழுங் காலம்.

காட்சி முதலாச் சாக்கா டீறாக்
காட்டிய பத்துங் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே.

(எ, சூ-ன்) மெய்யுறு புணர்ச்சி நிகழுமிட முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) காட்சியும், வேட்கையும், ஒருதலையுள்ளுதலும், மெலிதலும், ஆக்கஞ் செப்பலும், நாணுவரை யிறத்தலும், நோக்குவ வெல்லா மவையே போறலும், மறத்தலும், மயக்கமுஞ், சாக்காடும் என்னும் பத்தவத்தையு மொருங்கே நிகழுமாயிற், றலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற் குரித்தாமென்றவாறு.

அவற்றுள், காட்சியாவது—தலைமகளைத் தலைமகன் தனியிடத்துக் காண்டல். வேட்கையாவது — இவளைப் பெற வேண்டுமென்னு முள்ள நிகழ்ச்சி. ஒருதலை யுள்ளுதலாவது —இடைவிடாது நினைத்தல். மெலிதலாவது—உடம்பு வாடுதல். ஆக்கஞ் செப்பலாவது – தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற படியைப் பிறர்க் குரைத்தல். நாணுவரை யிறத்தலாவது — நாணத்தி னெல்லையைக் கடத்தல். நோக்குவ வெல்லா மவையே போறலாவது — காணுமவை யெல்லா

மவளுறுப்புக்களே போலத் தோற்றுதல். மறத்தலாவது— அறிவு திரிதல். மயக்கமாவது—மோகித்தல். சாக்காடாவது- இறந்து படுதல். இவற்றுட் சாக்கா டொழிந்த வொன்பது மேற் காட்டுதும் (மேலே காட்டுதும்). அஃதே லிவற்றுக் கிலக்கணம் யாண்டுப் பெறுதுமெனின்;

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப" எனவும்,

"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கஞ் செப்ப னுணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தல் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"

எனவும் வந்த சூத்திரங்களிற் பெறுதுமெனக்கொள்க. (36)

37] களவுப் புணர்ச்சி நிகழுமிடம்.

பகற்குறி யிரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்தோர் புணர்ச்சிநிக ழிடனே.

(எ, சூ-ன்) குறியின் பாகுபா டுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அன்பினு லமைந்தோர் புணர்ச்சி நிகழுமிடம் பகற்குறியு மிரவுக்குறியு மென்னும் இரண்டு பகுதியினை யுடையவா மென்றவாறு. (37)

38] பகற்குறியிரவுக்குறிகளின் இலக்கணம்.

இல்வரை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி
யில்வரை யிகவா வியல்பிற் றாகும்.

(எ,சூ-ன்) குறிகட் கிலக்கண முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பகற்குறி யில்லி னெல்லையைக் கடந்ததாம். இர வுக்குறி யில்லினெல்லையைக் கடவாததா மென்றவாறு. (38)

39] களவொழுக்கின்கண் நிகழும் பிரிவின்வகை

ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகும்
நிறைதரு காதன் மறைவினிற் பிரிவே.

(எ, சூ-ன்) களவிற் பிரியும் பிரிவு வரையறை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) ஒருவழித் தணத்தலும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலு மெனவிரண்டு பகுதியினை யுடைத்ததாம், நிறைந்த காதலையுடைய களவின்கட் பிரியும் பிரிவென் றவாறு.

அவற்று, ளொருவழித் தணத்தலாவது, ஒரூரின்கண்ணு மொருநாட்டின் கண்ணும் பிரிதல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலாவது, வரைவிடை வைத்துக் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பொருள்வயிற் பிரிதலெனக் கொள்க. (39)

40] ஒருவழித்தணத்தலின் இலக்கணம்

அவற்றுள்,
ஒருவழித் தணத்தற்குப் பருவங் கூறார்.

(எ, சூ-ன்) ஒருவழித் தணத்தற் குரிய தோரிலக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட விரண்டனுள்ளு மொருவழித் தணத்தல் காடிடை யிட்டும் நாடிடையிட்டும் பிரியப் படாமையி னிதற்குப் பருவ வரையறை சொல்லார் சான்றோ ரென்றவாறு. (40)

41] வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலி னிலக்கணம்

வரைவிடை வைத்துப் பொருள் பிரிவோ
ரிருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்.

(எ, சூ-ன்) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோ (பிரிதற் கிலக்கண) ரிலக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் காடிடை யிட்டும் நாடிடை யிட்டும் பிரியப்படுதலி னஃதிரண்டு திங்களி னிகவாமை யுடைத்தென்று சொல்லுவ ராசிரியர் என்றவாறு.

என்னை ?

'களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்
திங்க ளிரண்டி னகமென மொழிப'

என்றாராகலின். (41)

42] களவு நிகழுங்காலம்

களவு வெளிப்படா முன்னும் பின்னும்
விளையு நெறித்தென விளம்பினர் வரைவே.

(எ, சூ-ன்) வரைவு நிகழுமிட முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) களவு வெளிப்படா முன்னுங் களவு வெளிப் பட்ட பின்னும் விளையும் நெறியினை யுடைத்தாம் வரை வென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

களவு வெளிப்படா முன்று மென்றதனால் களவு வெளிப் பட்ட பின்று மெனத் தந்துரைக்கப்பட்டது. இவ்வா றுரைத்தற் கிலக்கணம் யாதோவெனின்

'களவு வெளிப்படா முன்னுற வரைதல்
களவு வெளிப்பட்ட பின்னுற வரைதலென்
றுயிரண் டென்ப வரைத லாறே'

என்பதாம். (42)

43] களவு வெளிப்படுதற்குமுன் நிகழும் வரைவிற் கிலக்கணம்.

நான்குவகைப் புணர்வினுந் தான்றெருண்டு வரைதலும்
பாங்கினிற் பாங்கியிற் றெருளுற்று வரைதலுங்
களவு வெளிப்படா முன்வரைத லாகும்.

(எ, சூ ன்) களவு வெளிப்படா முன்னிகழும் வரைவுக் கிலக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட வியற்கைப் புணர்ச்சி முதலாகிய (நான்கு வகைப்) புணர்ச்சிக் கண்ணுந் தலைமகன் றானே தெருண்டு வரைதலும் பாங்கனாலாதல் பாங்கியாலாதல் தெருட்டப்பட்டு வரைதலுமாகிய விவை களவு வெளிப் படாத முன் வரைவா மென்றவாறு. (43)

44] களவு வெளிப்பட்டபின் வரைதற் கிலக்கணம்.

உடன்போய் வரைதலு மீண்டு வரைதலு
முடன்போக் கிடையீ டுற்று வரைதலும்
களவுவெளிப் பட்டபின் வரைத லாகும்.

(எ, சூ-ன்) களவு வெளிப்பட்ட பின்னிகழும் வரைவிற் கிலக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) புணர்ந்துடன் போய்த் தலைமகன் றன்னூரின் கண்ணே வரைதலும் மீண்டுவந்து தம்மூரின்கண்ணே வரைதலும் உடன் போக்கிடை யீடுபட்டுத் தலைமகன் தலைமகள் தமரை வழிபட்டு வரைதலுமாகியவிவை களவு வெளிப்பட்ட பின் வரைதலா மென்றவாறு (44)

45] உடன்போய் வரைதல்.

அவற்றுள்
உடன்போய் வரைத லொருவகைத் தாகும்.

(எ, சூ-ன்) உடன்போய் வரைதல் வகையுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட மூன்றனுள்ளு, முடன் போய்த் தன்னூரின்கண்ணே வரைதலாகிய வஃதொரு வகையினை யுடைத்தாம் என்றவாறு. (45)

46] மீண்டு வரைதலின் வகை

அவண்மனை வரைதலுந் தன்மனை வரைதலு
மெனமீண்டு வரைத லிருவகைத் தாகும்.

(எ, சூ-ன்) மீண்டு வரைதலின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலை மகள் மனையின் கண்ணே வரைதலுந், தலை மகன் மனையின் கண்ணே வரைதலுமென விரண்டு வகையினை யுடைத்தா முடன்போய் மீண்டு தம்மூரின் கண்ணே வரைதலென்றவாறு. (46)

47] அறத்தொடுநிலை நிகழுமிடம்.

ஆற்றா றஞ்சினு மவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினுங் காப்புக்கை மிகினு
மாற்றுறத் தோன்று மறத்தொடு நிலையே.

(எ, சூ-ன்) அறத்தொடுநிலை நிகழுமிட முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலைமகன் வரும்வழி யுண்டாகிய வேதத்தினை யஞ்சிய விடத்துந் தமர் வரைவெதிர் கொள்ளாத விடத்தும் பிறர் வரைவு நேருமிடத்துங் காவல் கைமிகுந்த விடத்தும் நெறிப்படப் புலப்படு மறத்தொடு நிலையென்றவாறு.

என்னை ?

'காப்புக்கை மிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்,
அவனூ றஞ்சுங் கால மாயினு
மந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்ற லேழைக்கு முரித்தே'

என்றாராகலின். (47)

43] அறத்தொடு நிற்றற் குரியாரும் அவர்கள் அறத்தொடு நிற்கும் நெறியும்.

தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குஞ்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே.

(எ, சூ-ன்) அறத்தொடு நிற்றற் குரியாரை யுணர்த்துத னுதலிற்று,

(இ-ள்) தலைவி முதலாகிய நால்வரு மிவ்வா றறத் தொடு நிற்றற் குரியரென்று சொல்லுவ ரகப்பொருளிலக்கண மறிந்தோ ரென்றவாறு. (48)

49] தலைமகளறத்தொடு நிற்கு மிடம்.

ஒருபுணரொழிந்தவற் றொருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவு
மிறைவனைச் செவிலி குறிவயிற் காணவும்
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணு
மனநடைக் கிழத்தி யறத்தொடு நிற்கும்.

(எ, சூ-ன்) தலைமகளறத்தொடு நிற்குமிட முணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) பாங்கியிற் கூட்டம் என்றுமொன்று நீங்கிய மூன்று புணர்ச்சிக் கண்ணும், தலைமக ஞெருவழித் தணத்தலானும், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலானுஞ், செவிலி தலைமகனைக் குறிவயிற் காண்டலானு, மிற் செறித்தலானுந், தனக்கு வருத்தம் மிகுமாயிற் றன்னை யவள் வினவிய விடத்தும், வினவாதவிடத்துந், தலைமகள் பாங்கிக் கறத்தொடு நிற்குமென்றவாறு.

பாங்கிக் கென்ப ததிகாரத்தான் வந்தது. இதற்கு விதி யாதோவெனின்?

> "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
> வரையா நாளிடை வந்தோன் முட்டினு
> முரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணுந்
> தானே கூறுங் காலமு முளவே" யென்பதாம்.

(49)

50] பாங்கி யறத்தொடு நிற்குந் திறம்.

முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளிற்
சின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

(எ, சூ-ன்) பாங்கி யறத்தொடு நிற்குந் திறமுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) முன்னிலைப் புறமொழியும், முன்னிலை மொழியுமாகிய விரண்டினுனும் பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குமென்றவாறு,

51] செவிலி யறத்தொடு நிற்குந் திறம்.

செவிலிநற் றாய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

(எ, சூ-ன்) செவிலி யறத்தொடு நிற்றல் (நிற்குந் திறம்) உணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) செவிலி யறத்தொடு நிற்குங் காலத்து நற்ருய்க்கு விளங்க வறிவிக்கு மென்றவாறு. (51)

521 நற்ருய் யறத்தொடு நிற்குந்திறம்.

நற்ருய் யறத்தொடு நிற்குங் காலைக்
குரவருந் தன்னையுங் குறிப்பி னுணர்ப.

(எ, கு-ன்) நற்ருய் யறத்தொடு நிற்குந் திறமுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நற்ருய் யறத்தொடு நிற்குங் காலத்துச் சொல்லாடப் பெருளாதலிற் றலைமகடந்தையுந் தன்னையுமவள் குறிப்பினுனே யறிவரென்றவாறு.

என்னை ?

'தந்தையுந் தன்னையு முன்னத்தி ணுணர்ப'
என்ருராகலின். (52)

53] அறத்தொடு நிற்பார்க்கு வினு நிகழுமிடம்,

பாங்கி தலைவியை வினவுஞ் செவிலி
பாங்கியை வினவும் பாங்கி தன்னையும்
நற்ருய் தானும் வினவுஞ் செவிலியிற்
பொற்ருெடிக் கிழத்தியை யுற்று நோக்கின்.

(எ, கு-ன்) அறத்தொடு நிற்பார்க்கு வினு நிகழுமிடமுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலைமகண் மாட்டு வேறுபாடு கண்டுழிப் பாங்கி முதலாகிய மூவரு மிவ்வாறு வினவப் பெறுவரென்றவாறு.

'பாங்கி தன்னையு' மென்ற வும்மை 'நற்ருய் செவிலியை வினவுதலன்றி' யென்னும் பொருள்பட நின்றது. 'நற்ருய் தானு' (மென்னு) மும்மை 'பாங்கியைச் செவிலி வினவுத

லன்றி' யென்னும் பொருள்பட நின்றது இவ்வாறு நற்றாய் வினவுவது செவிலியைப் போலத் தலைமகளை யுற்றுப்பார்த்த விடத்தெனக் கொள்க. (53)

54] உடன் போக்கு நிகழ்ந்த விடத்து அறத்தொடு நிற்றற் குரியார்

ஆங்குடன் போயுழி யறத்தொடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் *பயந்த தாயும்

(எ, சூ-ன்) புணர்ந்துடன் போயவிடத் தறத்தொடு நிற்றற் குரியாரை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலைமகனும் தலைமகளும் புணர்ந்துடன் போய காலத் தறத்தொடு நிற்பார் தோழியுஞ் செவிலியு நற்றாயு மென்றவாறு.

ஆங்கென்பதசை (54)

55] கற்பின் வகை

களவின்வழி வந்த கற்பும் பொற்பமைக்
களவின்வழி வாராக் கற்புமென் றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே

(எ, சூன்) கற்பின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கற்புக் களவிற் புணர்ச்சி வழியான் வந்த கற்புங் களவிற் புணர்ச்சி வழியான் வாராக் கற்புமென விரண்டு பகுதியினை யுடைத்தா மென்றவாறு.

அஃதேற் களவின் வழிவந்த கற்பினை முற்கூறியதென் னை யெனின் ?

---

* பயந்தநற் றாயும் (எனவும் பாடம்)

"முற்ப டப்புண ராதசொல் லின்மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே"

யென்றாராகலின், அதனது சிறப்பு நோக்கி யெனக்கொள்க. (55)

56] கற்பிற் புணர்ச்சியின் வகை.

குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்ட மென்
றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி

(எ, சூ-ன்) கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி வரையறை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி குரவராற் புணரும் புணர்ச்சியும், வாயில்களாற் புணரும் புணர்ச்சியுமென விரண்டு பகுதியினை யுடைத் தென்றவாறு.

இவற்றுட், குரவரிற் புணர்ச்சியாவது வதுவைக் கூட்டிப் புணரும் புணர்ச்சி. வாயில்களாற் புணரும் புணர்ச்சியாவது புலவி தீர்த்துப் புணரும் புணர்ச்சி யெனக்கொள்க.(56)

57] களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சிக்கொரு சிறப்பிலக்கணம்.

அவற்றுட்,
களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி
கிளைஞரி னெய்தாக் கேண்மையு முடைத்தே
யுடன்போய் வரைதலு முண்மையான

(எ, சூ-ன்) களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சிக் கெய்தியதோர் வேறுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட விருவகைக் கற்பினுள்ளுங் களவின் வழிவந்த கற்பினுட் புணரும் புணர்ச்சி தலைமகள் சுற்றத்தாராற் பிறப்படாத (பெறப்படாத) கோட்பாட்

டினையு முடைத்தாம் புணர்ந்துடன் போய்த் தலைமகன் தன்னூரின் கண்ணே வரைந்து கோடலு முண்டாதலா னென்றவாறு.

என்னை ?

'கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போய காலை யான'

என்றாராகலின். (57)

58] கற்புக் காலத்துத் தலைவன்பால் நிகழும் நிகழ்ச்சி.

மறையின் புணர்ச்சியு மன்றற் புணர்ச்சியு
மிறைவற் கெய்தலுண் டிருவகைக் கற்பினும்

(எ, சூ-ன்) தலைமகற்குக் கற்புக் காலத்து நிகழு மொழுக்க வேறுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட விருவகைக் கற்பின் கண்ணுந் தலைமகற்குக் களவிற் புணர்ச்சியும் வதுவைப் புணர்ச்சியும் பொருந்துத லுண்டென்றவாறு, (58)

59] தலைவன்பால் நிகழும் அந்நிகழ்ச்சிகளுக்கு உரிய மகளிர்.

காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவ ருரிய ரவையிரண் டிற்கும்

(எ, சூ-ன்) அவ்வொழுக்க மிரண்டிற்கு முரிய மகளிரை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) காதற் பரத்தையர் முதலாகிய மூவகையோருந் தலைமக னவ்வாறொழுகு மொழுக்க மிரண்டிற்கு முரியரென்றவாறு, (59)

60] அவருள், களவிற் புணர்ச்சிக் குரிய மகளிர்

அவருட்
காதற் பரத்தையர் களவிற் குரியர்.

(எ, சூ-ன்) களவிற் குரிய மகளிரை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட மூவகை யோருள்ளுங் காதற் பரத்தையர் களவொழுக்கத்திற் குரியரென்றவாறு. (60)

61] மன்றற் புணர்ச்சிக்குரிய மகளிர்.

ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்

(எ, சூ-ன்) வதுவைப் புணர்ச்சிக்குரிய மகளிரை யுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) காமக் கிழத்தியும், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியு மாகிய விருதிறத்தோரும் வதுவைப் புணர்ச்சிக் குரிய மகளி ரென்றவாறு. (61)

62] கற்பி னிகழும் பிரிவின் வகை.

பரத்தையிற் பிரித லோதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் ககற
லுதவிக் கேக னிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

(எ, சூ-ன்) கற்பிற் பிரிவு (கற்பிற் பிரியும் பிரிவின்) வரையறை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பரத்தையிற் பிரிதன் முதலாக நிதியிற் கிகத்த லீறாக வறுவகையினை யுடைத்தாங் கற்பின்கட் பிரியும் பிரிவென்றவாறு.

என்னை ?

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணி பரத்தையென்
ருங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே'

யென்ருராகலின்; அஃதே லீண்டுப் பரத்தையிற் பிரிவு முற் கூறிய தென்னை யெனின் (தென்னையோ வெனின்)? அது தொல்காப்பியனாரது துணிபெனக் கொள்க. (62)

63] பரத்தையிற் பிரிவின் வகை.

**அயன்மனைப் பிரிவயற் சேரியி னகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான.**

(எ, சூ-ன்) தலைமகற் குரிய சில தொழிலுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) அயன் மனைப் பிரிவு முதலாகிய மூன்று தொழி லும் (பிரிவும்) தலைமகற் குரியனவாம்.

பரத்தையிற் பிரியுங் காலத் தென்றவாறு. (63)

64] அயன் மனைப் பிரிவுக்குக் காரணம்.

**கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாத்
தழீஇய வயன்மனைத் தலைவன் பிரியும்.**

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே யயன்மனைப் பிரிவுக் கேதுவுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பொருந்திய காமக் கிழத்தியர் காரணமாகத் தலைமகன் ருெடர்ந்த வயன்மனைக் கண்ணே பிரியுமென்ற வாறு. (64)

65] அயற்சேரிப் பிரிவுக்குக் காரணம்.

பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும்
இன்னியல் விழவு மேது வாக
வவனயற் சேரியி னகலு மென்ப.

(எ, சூ-ன்) அயற் சேரியிற் பிரிவுக் (கேது) கெய்துவ துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தியுங் காதற் பரத்தையும் இனிய தன்மையுடைய விழவுங் காரணமாகத் தலைமக னயற் சேரியின் கண்ணே பிரியுமென்றவாறு. (65)

66] புறநகர்ப் போக்குக்குக் காரணம்.

விருந்திற் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்
டிளமரக் காவின் விளையா டற்கும்
புனலா டற்கும் புறநகர்ப் போகும்.

(எ, சூ-ன்) புறநகர்ப் போக்கிற் (கேது) கெய்துவ துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இளமரக்காவின் கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல் காரணமாகவுந் தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர்மே லேற்றிக்கொண்டு நகர்ப்புறத்திலே போமென்றவாறு.

நகர்ப்புறம் என மாறுக. (66)

67] தலைவிக்கு ஊடல் நிகழுமிடம்.

ஊட லவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

(எ, சூ-ன்) தலைமகட் கூட னிகழுமிட முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) அம்மூன்று பிரிவின் கண்ணுந் தலைமகட் கூடல் பொருந்து மென்றவாறு. (67)

63] ஊடலைத் தணிக்கும் வாயில்கள்,

தொழிலவல் பாணன் பாடினி கூத்த
ரிளையர் கண்டோ ரிருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி யறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் ருமை யென்றிவை யூடன்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கடாமே (ளாகும்)

(எ, சூ-ன்) மேற் சொல்லப்பட்ட விவையனைத்துந் தலைமக ளூடலை மருந்தாய்த் தீர்க்கும் வாயில்களா மென்ற வாறு.

(மேற் சொல்லப்பட்ட வாயில்களாவன விவையென்ப துணர்த்த லுதலிற்று.)

(இ-ள்) பாணன் முதலாக வாற்ருமை யீருகச் சொல் லப்பட்ட விவையனைத்துந் தலைமக ளூடலைத் தீர்க்கும் வாயில் களா மென்றவாறு,

இதனு ளுயர்திணையு மஃறிணையும் விரவியெண்ணி யிவையென வஃறிணையாற் ருெகை கொடுத்தது.

என்னை ?

"பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெய
ரஃறிணை முடிவின செய்யு ளுள்ளே"

யென்ருராகலின். (68)

69] ஓதற் பிரிவு: வேத மோதற் குரியார்.

ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்.

(எ, சூ-ன்) ஓதற் றொழிற் குரியதோர் சிறப்புணர்த் துத னுதலிற்று.

(இ-ள்) ஓதலென்றுந் தொழி லந்தண ரரசர் வணிக ரென்கின்ற (வைசிய ரென்கின்ற) மூவர்க்கு முரித்தென்ற வாறு. (69)

70] ஏனைக் கல்விக் குரியர்.

அல்லாக் கல்வி யெல்லார்க்கு முரித்தே.

(எ, சூ-ன்) ஒழிந்த கல்வியது தன்மை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) வேதமல்லாத கல்வி நால்வர்க்கு முரித்தென்ற வாறு. (70)

71] படைக்கல முதலியன பயிலுதற் குரியார்.

படைக்கலம் பயிறலும் பகடுபிற வூர்தலு
முடைத்தொழி லவர்க்கென வுரைத்திசி னோரே.

(எ, சூ-ன்) நாவினாற் கற்குங்கல்வி யல்லாத தொழி லுரிமை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) படைக்கலங்களைக் கற்றலும் யானையுந் தேருங் குதிரையு முதலாயின வூர்தலும் மூவர்க்கு முடைமையாகிய தொழிலெனச் சொன்னார் புலவ ரென்றவாறு.

'பிற' வென்றதனாற் றேருங், குதிரையு, முதலாயின வுங் கொள்ளப்பட்டன. 'பகடு பிற' என்றது வும்மைத் தொகை.

72] காவற் பிரிவின் வகை

**அறப்புறங் காவ னாடுகா வலெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.**

(எ, சூ-ன்) காவற் றொழிற் பாகுபா டுணர்த்துத னுத லிற்று.

(இ-ள்) அறப்புறங் காவலும் நாடுகாவலுமென விரு கூற்ற தாம் மேம்பாடுற்ற காவற் றொழிலின் பாகுபா டென்றவாறு. (72)

73] அறப்புறங் காவற்கு உரியார்

**அவற்றுள்
அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே.**

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே யறப்புறங் காவற் றன்மை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லிய விரண்டனு ளறப்புறங் காவ லென்பது நால்வர்க்கு முரித்தென்றவாறு. (73)

74] நாடு காவலுக் குரியார்

மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே

(எ, சூ-ன்) நாடு காவற்றன்மை யுணர்த்துத னுத லிற்று.

(இ-ள்) நாடு காவவென்ப தரசர்க் குரித்தென்றவாறு (74)

75] தூதிற் பிரிவுக்கு உரியார்.

**வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந்
தூது போதற் றொழிலுரித் தாகும்.**

(எ, சூ-ன்) தூது போதற் ஜெழிலின் றன்மை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பார்ப்பாரும், வேந்தரு, மென்னு மிருவர்க்கு முரித்தாந் தூது போதற் ஜெழிலென்றவாறு.

பகைதணி வினையெனினுந் தூதுவினை யெனினு மொக்கும்.

"வயலைக் கொடியின் வாடிய மருங்கு
லுயலு லூர்திப் பயலைப் பார்ப்பா
னெல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
யேணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே"

என்பதனாலும்,

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே"

என்பதனாலு மவ்விருவருக்குந் தூதுபோதற் ஜெழி லுரித்தாயினவாறு கண்டுகொள்க, (75)

76] நாடுகாவற் பிரிவுக்கும் தூதிற் பிரிவுக்கும் ஒருசிறப்பு விதி.

சிறப்புப் பெயர் பெறிற் செப்பிய விரண்டு
முறற்குரி மரபின வொழிந்தோ ரிருவர்க்கும்.

(எ, சூ-ன்) நாடு காவற் ஜெழிற்குந் தூது போதற் ஜெழிற்கு முரியரோர் வேறு பாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அரசனாற் சிறப்புப் பெயர் பெற்றோராயின் வணிகருஞ் சூத்திரரு மென்னு மிருவருக்கும் மேற் கூறிய நாடு காவற் றொழிலும், தூது போதற் றொழிலும் ஆகிய விரண்டு தொழிலும் பொருந்துதற் குரிய மரபினவா மென்ற வாறு. உரிய மரபென்பது விகாரம். (76)

77] துணைவயிற் பிரிவுக்குரியார்

உதவி யந்தண ரொழிந்தோர்க் குரித்தே.

(எ, சூ-ன்) உதவித் தொழிலின் றன்மை யுண்மை யுணர்த்துத னுதலிற்று. (உதவியிற் றொழி லுரிமை யுணர்த்துத னுதலிற்று.)

(இ-ள்) வேந்தர்க் குற்றுழி யாகிய தொழிலந்தண ரொழிந்த மூவர்க்கு முரித்தா மென்றவாறு. (77)

78] நான்கு வருணத்தார்க்கு முரியபிரிவு,

பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவு
முரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

எ. சூ-ன்) நால்வர்க்கும் பொதுவாகிய தொழிலிவை யென்ப துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பரத்தையிற் பிரிவும் பொருள் வயிற் பிரிவு மாகிய விரண்டு மேற்சொல்லப்பட்ட காவலர்க்கு (நால்வர்க்கு முரியவா மென்றவாறு. (78)

79] நிலமக்களுள் தலைமக்களுக்கு உரிய பிரிவு

இழிந்தோர் தமக்கு மிவற்றுண்மேம் பட்டவை
யொழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்

(எ. சூ ன்) நிலமக்களுட் டலைமக்கட் குரிய தொழி லுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இவ்வறுவகைத் தொழிலுள்ளு மேம்பட்டன வாகிய வோதலு நாடுகாவலுந் தூது போதலுமாகிய மூன்று மொழித் தல்லாதன வெல்லா மிழிந்தோராகிய நிலமக்களுட் டலைமக்கட்கு முரியவாமெனச் சொன்னு ரறிவோ ரென்றவாறு. (79)

80] தலைமகன் பிரிவுக்குக் காரணம்.

கல்வி முதலா வெல்லா வினைக்குஞ்
சொல்லி யகறலுஞ் சொல்லா தகறலு
முரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

(எ. சூ-ன்) பிரியுந் தலைமகற் குரியதோர் விதி (இலக்கண) யுணர்த்துத லுதலிற்று.

(இ ள்) கல்வி முதலாகிய வைந்து வினைக்குந் தலைமகன் றலைமகட்குச் சொல்லிப் பிரிதலு முரியன். சொல்லாது பிரிதலு முரியன் றலைமக னென்றவாறு. (80)

81] இதுவுமது.

சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு

(எ, சூ-ன்) இதுவுமது.

(இ-ள்) தலைமகன் றலைமகட்குச் சொல்லாது பிரியும், ஆயினுந் தோழிக்குச் சொல்லியே பிரியு மென்றவாறு. (81)

82] இதுவுமது,

குறிப்பி னுணர்த்துங் பெறற்கருங் கிழத்திக்கு.

(எ, சூ-ன்) இதுவுமது.

(இ-ள்) தலைமகன் சொல்லாது பிரியுமாயினுங் குறிப் பினு னுணர்த்துந் தலைமகட் கென்றவாறு.

தலைமகன் வாயாற் சொல்லா தொழியினும் குறிப்பினாலே தலைமகளறியும்படி யுணர்த்துவன் என்பது (புத்துரை)

83] தலைமக்கள் பிரிந்து செல்லுந்திறன்.

காலிற் சேறலுங் கலத்திற் சேறலு
மூர்தியிற் சேறலு நீதி யாகும்.

(எ, சூ-ன்) பிரியுங் காலத்து நால்வர்க்கும் பொதுவாகிய தொழிலுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) காலிற் சேறன் முதலாகிய மூன்று மெல்லாப் பிரிவின் கண்ணு மெல்லார்க்கு மியல்பா மென்றவாறு. (83)

84] அங்ஙனஞ் செல்லுதற்கண் அந்தணர்க்குரிய சிறப்பு விதி.

புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்கு
கலத்திற் சேறல் கடனன் றென்ப.

(எ, சூ-ன்) அந்தணர்க்கு ஆகாத தொழிலுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) காலிற் சேறன் முதலாகிய (மூன்றுள்ளுங் கலத்திற்சேறலாகிய தொழில் கல்வியினுன்மிக்க வந்தணர்க்கு முறைமை யன்றென்று சொல்லுவர் புலவரென்றவாறு. (84)

85] அரசர் முதலிய தலைமக்கள் குலமாதரொடு செல்லற் காகாதவை.

வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்குங்
குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.

(எ, சூ-ன்) அரசர் முதலாகிய மூவர்க்கு மாகாததோர் தொழிலுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) குலமடமாதரொடு கூடக்கலமிசைச் சேறலுங் குலமாதரொடு கூடப்பாசறைச் சேறலுமாகிய விரண்டும் வெற்றியுயர் சிறப்பினையுடைய வேந்தர் முதலாகிய மூவர்க் குங் குற்றமெனச் சொல்லுவர் கற்றுவல்லோ ரென் றவாறு.

குலமடமாத ரென்பதனை யிரிடத்துங் கூட்டிக்கொள்க.

"மணன்மலி பூங்கானல் வருகலன்க ணோக்கிக்
கணவன்வரக் கல்லுருவ நீத்தாள்"

என்பதனாற் குலமடமாதரொடு கலமிசைச் சேறலாகாமை யறிக.

"பரியிருங் கங்குலுந் தமிய ணீங்கித்
தம் மூரோளே நன்னுதல் யாமே
........யிரவுத்துயின் மடிந்த தானை
யுரவுச்சின வேந்தன் பாசறை யோமே"

என்பதனாற் குலமாதரொடு பாசறைக்கட் செல்லாமையறிக. குலமாதரொடு செல்லா ரெனவே, பரத்தையரோடு செல்வ ரென்பது பெற்றும்.

'துயிலின்றி யானிந்தத் தொழுனையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளியறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுநருளராயின்

என்பதனாற் பரத்தையரோடு பாசறைக்கட் சென்றவாறறிக. ஏனையது வந்தவழிக் கண்டு கொள்க. (85)

86] தலைமகன் செலவழுங்கலு முண்டென்பது

ஓதன் முதலா வோதிய வைந்தினும்
பிரிவோ னழுங்கற்கு முரிய னாகும்.

(எ, சூ-ன்) இதுவுந் தலைமகற்குப் பிரிவிடத்துரிய வேறுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) ஓதன் முதலாகச் சொல்லப்பட்ட வைந்தின் கண்ணும் பிரியுந் தலைமகன் போதற்கே யன்றிப் போகாமைக்கு முரியனென்றவாறு (முரியனுமென்றவாறு). (86)

87] செலவழுங்கற் குரிய விடம்

இல்லத் தழுங்கலு மிடைச்சுரத் தழுங்கலு
மொல்லு மவற்கென வுரைத்திசி னோரே.

(எ, சூ-ன்) இதுவுமது.

(இ-ள்) பிரியக் கருதிய தலைமக னவ்வில்லின் கண்ணே செலவழுங்குதலு மிடைச் சுரத்தின் கண்ணே செலவழுங்குதலுமென விரண்டிற்கு முரியனெனக் கூறினர் புலவரென்றவாறு.

இவற்றுக் கிலக்கியம்,

"புணரிற் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே யாயிடைச்
சேறினுஞ் செல்லா யாயினுங் நல்லதற்
குரியை வாழியென் னெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்ப
ணோடுமீன் வழியிற் கெடுக யானே
விழுநீர் வியலகந் தூணி யாக
வெழுமா ணளக்கும் விழுநிதி பெறினுங்
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்க

ணமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தன
னெனையதாகுக வாழிய பொருளே'' எனவும்,

''புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதி
நிறங்கிளர் நிரையிதழ்ப் பொலிந்த வுண்கண்
ணுள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சே
செல்ல றீர்கஞ் செல்வா மென்றுஞ்
செய்வினை முடியா தெய்வஞ் செய்த
லெய்யா மையோ டிழிவு தலைத்தருமென
வுறுதி தூக்கத் தூங்கி யறிவே
சிறிது நனிவிரைய லென்று மாயிடை
யொளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே''

என்வரும் (எனவும் வரும்) (87)

88] செலவழுங்கற்குக் காரணம்

தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையும்
அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்

(எ, சூ) எய்தியது விலக்குத (விலக்குவ தோரிலக்கணமு முணர்த்துத) லுதலிற்று

(இ-ள்) இல்லகத்துத் தலைமகளையுந் தன்னெஞ்சினையுந் தேற்றுதல் காரணமாகவு மிடைச்சுரத்துத் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவு) மழுங்குதல் மாத்திர மல்லது தலைமகன் போகானல்ல னென்றவாறு.

இல்லகத்துத் தலைமகளைத் தேற்றியதற்குச் செய்யுள் வருமாறு:

"பொன்னு மணியும் போலுமி யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்
போதும் பணையும் போலுமி யாழநின்
மாத ருண்கணும் வனைப்பின் றோளு
மிவைகாண் டோறு மகமெலிந் தியாறு
மறநிலை பெற்றோ ரனையே னதன்றலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே னினையின்
யாதுநிற் பிரிவா மடந்தை
காத லுறுங் கடலினும் பெரிதே"

எனவரும். பிறவுமன்ன. (88)

89] ஓதற்பிரிவிற்குக் காலவரையறை.

அவற்றுள்,
ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே.

(எ, சூ-ன்) ஓதற் பிரிவுக் கியாண்டு வரையறை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட பிரிவுகளு ளோதற்குப் பிரியும் பிரிவு மூன்றியாண் டெல்லை யுடைத்தென்றவாறு (டெல்லையினை யுடைத்தென்றவாறு).

என்னை ?

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது"

என்றாராகலின். (89)

90] தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்னும் மூன்றற்குங் காலவரையறை.

தூதிற் பிரிவுந் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவு மோர்யாண் டுடைய.

(எ, சூ-ன்) தூதிற் பிரிவு முதலாய மூன்று பிரிவுக்கும் வரையறை யுணர்த்துத றுதலிற்று.

(இ-ன்) தூதுகாரணமாகப் பிரியும் பிரிவுந் துணையிட மாகப் பிரியும் பிரிவும் பொருள் காரணமாகப் பிரியும் பிரிவு மோரியாண்டி னெல்லைதனை யுடைய வென்றவாறு.

என்னை ?

"வேந்துறு தொழிலே யாண்டக மே" எனவும்,

"பிரிவினீட்ட நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரியதன்றே யாண்டு வரையறுத்தல்" எனவும்,

" தூதும் பொருளு மோதிய தாகும்"

எனவுஞ் சொன்னாராகலின்,

அஃதேற் பரத்தையிற் பிரிவுக்கும் காவற் பிரிவுக்கும் யாண்டு வரையறாத தென்னையெனின் (தென்னையோவெ னின்) அவை காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படா மையி னீண்டுவரையறுத்தில ரெனக் கொள்க. (90)

(91) பரத்தையிற் பிரிவு நிகழ்தற் காலம்

பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் னீரா று நாளுங்
கருவயிற் றுறாஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

(எ, சூ-ன்) பரத்தையிற் பிரிந்த தலைமகற் குரிய தோரி லக்கண முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நீராடியபின் பன்னிரு நாளுங் (பன்னிரண்டு நாளுங்) கருப்படுங் காலமாதலாற் பரத்தையிற் பிரிந்த தலை

மகன் அப்பன்னிரெண்டு நாளுந் தலைமகளைப் பிரியப்பெறான் பூப்பு நிகழுங் காலத்தென்றவாறு.
என்னை?

"பூப்பின் புறப்பா டீரா று நாளு
நீத்தகன் றுறைத லகத்தா றன்றே
(நீத்தகன் றுறையாரென்மனார் புலவர்)
பரத்தையிற் பிரிந்த காலையான" எனவும்,

"தீண்டாநாண் முந்நாளு நோக்கார்நீ ராடியபின்
னீரா று நாளு மிகவற்க வெண்பதே
பேரறி வாளர் துணிவு'

எனத் தொல்காப்பியனாரும், பெருவாயின் முள்ளியாரு மெடுத்தோதினாராகலின் (91)

92] ஓதற்குப் பிரிந்தவன் செய்தற்காகாதன

ஓதற் ககன்றோ னொழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறாஅன்

(எ, சூ-ன்) ஓதற்குப் பிரிந்த தலைமகற் காகாத தோரிலக்கண முணர்த்துதனுதலிற்று.

(இ-ன்) ஓதற்குப்பிரிந்த தலைமகனவ்வோதலை யொழிந்திடை யிடை யிட்டு மீண்டு வருதற் குடன்படவு மவ்விடத்துத் தலைமகளை நினைந்து புலம்பவும் பெறானென்றவாறு. (92)

93] தூதுந் துணையுங் காரணமாகச் சென்றாற்கொரு சிறப்பு விதி

தூதுந் துணைமையு மேது வாகச்
சென்றோ னவ்வினை நின்று நீட் டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.

(எ, சூ-ன்) தூதுந் துணையுங் காரணமாகப் பிரிந்த தலைமகற்கெய்துவதோர் வேறுபா டுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தூது காரணமாகவு முதவி காரணமாகவும் பிரியுந் தலைமகனத் (பிரிந்த தலைமகனைத்) தொழில்கள் பிரிவிற்குரிய வோரியாண்டின் (பிரிவிற் குரியதோர் யாண்டின்) முடியாது நீட்டித்த காலத்துப் பாசறைக் கண்ணே யிருந்து தலைமகளை நினைந்து வெறுத்துப் புலம்புதல் பெறுமென்ற வாறு

அஃதாயின வாறென்னை யெனின்,

"மூன்றன் பகுதியு மண்டிலத் தருமையுந்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலு"

மென்னு மிலக்கணத்தா ணுயிற்றெனக் கொள்க. (93)

94] கற்புக் காலத்துத் தலைமகளுக் குரிய வொழுகலாறு

பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தலு
நீத்தமை பெருது நின்று கிழவோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலுங்
கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநெனொடு வந்தெதிர் கோடலு மவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியு
மாலைவெள் ளருவியு மலையுங் கானமுங்
கண்டுவிளை யாடலுங் கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியுங் குளனு
மாடிவிளை யாடலுங் கூடுங் கிழத்திக்கு

(எ, சூ-ன்) தலைமகட்குக் கற்புக் காலத்துரிய வொழு கலா றெல்லாந் தொகுத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பூத்தமை சேடியிற் புரவலர்க் குணர்த்தன் முத லாகக் குளனுட லீறுகச் சொல்லப்பட்டன வெல்லாங் கற்புக் காலத்துத் தலைமகட்குப் பொருந்துமென்றவாறு.

கற்பென்பததிகாரத்தான் வந்தது. இவற்றிற் குதார ணம் மேலே காட்டப்படும். (94)

(95) வாயில்களுள் பாணர்க்குரிய செயல்

வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுஞ்
சேயிழை யூட றீர்த்தலும் போயுழி
யவணலந் தொலைவுகண் டழுங்கலு மவன்வயிற்
செல்ல விரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலுஞ்
சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குரைத்தலு (குணர்த்தலு)
மணிநலம் பெற்றமை யறியான் போன்றவட்
பணிவொடு வினுதலும் பாணற் குரிய.

(எ, சூ-ன்) வாயில்களுட் பாணர்க் குரியன வெல்லாந் தொகுத் துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) வாயில் வேண்டன் முதலாகச் சொல்லப்பட் டன வெல்லாம் பாணர்க் குரியன வென்றவாறு. (95)

96] விறலிக் குரிய செயல்

செலவிற் றேற்றலும் புலவியிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுந்
தெரியிழை விறலிக் குரிய வாகும்.

(எ, சூ-ன்) விறலிக் குரியன வெல்லாந் தொகுத்துணர்த் துத னுதலிற்று.

(இ-ள்) செலவிற் றேற்றன் முதலாகச் சொல்லப்பட் டன வெல்லாம் விறலிக் குரியனவா மென்றவாறு. (96)

97] கூத்தர்க் குரிய செயல்

செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலுங்
கலனணி புணர்த்தலுங் காம நுகர் புணர்த்தலும்
புலவி முதிர்காலைப் புலங்கொள வேதுவிற்
றேற்றலுஞ் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலும் மீண்டுவர வுணர்த்தலுங்
கூற்றரு மரபிற் கூத்தர்க் குரிய.

(எ, சூன்) கூத்தர்க் குரியன வெல்லாந் தொகுத்துணர்த் துத னுதலிற்று.

(இ-ள்) செல்வம் வாழ்த்தன் முதலாகச் சொல்லப்பட் டன வெல்லாங் கூத்தற் குரியனவா மென்றவாறு (97)

98] இளையோர்க் குரிய செயல்

மடந்தையை வாயில் வேண்டலும் வாயி
லுடன்படுத் தலுமவ ளூட றீர்த்தலுங்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலுஞ்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிற
ஞென்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் தொழிலெனற்குரிய
(மொழிப)

(எ, சூ-ன்) இளையோர்க் குரியனவெல்லாந் தொகுத் துணர்த்துத னுதலிற்று

(இ-ள்) மடந்தையை வாயின் வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லா மிளையோர்க் குரியனவா மென்ற வாறு. (93)

99] கண்டோர்க் குரிய செயல்

தீதுடைப் புலவி தீர்த்தலு மவன்வரல்
காதலிக் குரைத்தலுங் கண்டோர்க் குரிய

(எ, சூ-ன்) கண்டோர்க் குரியன வெல்லாந் தொகுத் துணர்துத லுதலிற்று.

(இ-ள்) புலவி தீர்த்தன் முதலாகிய வெல்லாங் கண் டோர்க் குரியனவா மென்றவாறு. (99)

100] பார்ப்பனர்க் குரிய செயல்

இளமையும் யாக்கையும் வளமையு மேனவும்
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலுஞ்
செலவழுங்கு வித்தலுஞ் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோர்க் குரிய

(எ, சூ-ன்) இருவகைப் பாங்கரிற் பார்ப்பனப் பாங்கர்க் குரிய வெல்லாந் தொகுத் துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இளமை முதலாகச் சொல்லப்பட்டன வெல் லாம் பார்ப்பனப் பாங்கர்க் குரியவா மென்றவாறு. பிறவு மென்றதனால் வாயில் வேண்டன் முதலாயினவுங் கொள்க. (100)

101] சூத்திரப் பாங்கர்க் குரிய செயல்

நன்மையி னிறுத்தலுந் தீமையி னகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரர்க் குரிய.

(எ, சூ-ன்) சூத்திரப் பாங்கர்க் குரியன வெல்லாம் தொகுத்துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நன்மையி லிறுத்ரன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாஞ் சூத்திரர்க் குரியவா மென்றவாறு.

சொன்னவையும் பிறவு மென்றதனால் வாயில் வேண்டன் முதலாயினவுங் கொள்க (101)

102] பாகற் குரிய செயல்

சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலு
வாயினேர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித் ததன்பின் வியன்பதி சேய்த்தென
வினைவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

(எ, சூ-ன்) பாகற் குரியன வெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தலைமகளை வாயில் வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பாகற் கியல்பா மென்றவாறு. (102)

103] பாங்கிக் குரிய செயல்

பிரிவுழி விலக்கலும் பிரிவுடன் படுத்தலும்
பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி யழுங்கலும்
பிறவு முரிய விறைவனைப் பாங்கிக்கு.

(எ, சூ-ன்) பாங்கிக் குரியன வெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) பிரிவுழி விலக்கன் முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவு மெல்லாம் பாங்கிக் குரியனவா மென்றவாறு. பிறவு மென்றதனால் வாயில் வேண்டன் முதலாயினவுங் கொள்க. (1 3)

104] செவிலிக்கும் அறிவர்க்கு முரிய செயல்

முன்வரு நீதியு முலகியன் முறைமையும்
பின்வரும் பெற்றியும் பிறவு மெல்லாந்

தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கு
முற்ற வறிவர்க்கு முரிய வாகும்.

(எ; சூ-ன்) செவிலிக்கு மறிவர்க்கு முரியன வெல்லாந் தொகுத்துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) முன்வரு நீதி முதலாகச் சொல்லப்பட்டன வும் பிறவுமெல்லாந் தெளியச் சொல்லுதல் செவிலித் தாய்க் கும் பொருந்திய வறிவர்க்கு முரியனவா மென்றவாறு.

பிறவு மென்றதனுன் வாயில் வேண்டன் முதலாயினவுங் கொள்க. (104)

105] காமக் கிழத்தியர்க் குரிய செயல்

குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலு
ளனையவற் கழறலு மனைவிக் கமைந்த
வொழுக்கமுங் காமக் கிழத்தியர்க் குரிய.

(எ, சூ-ன்) காமக் கிழத்தியர்க் குரியன தொகுத் துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) குடிப் பிறந்தோரை வடுப்படுத் துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் காமக் கிழத்தியர்க் குரியனவா மென்றவாறு. (105)

106] பரத்தையர்க் குரிய செயல்

கிழவோன் றன்னையுங் கிழத்தி தன்னையும்
இகழ்தலுந் தம்மைப் புகழ்தலும் நிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

(எ, சூ-ன்) பரத்தையர்க் குரியன வெல்லாந் தொகுத் துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலைமகனையுந் தலைமகளையு மிகழ்தன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பரத்தையர் முறைமை யென்ற வாறு. (106)

107] பரத்தையர்க் குரிய சிறப்பு விதி.

பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலுந்
தம்மை யிகழ்தலுந் தம்முளுங் கூறுப.

(எ. சூ-ன்) பரத்தையர்க் குரியதோர் வேறுபாடுணர்த் துத லுதலிற்று.

(இ-ள்) காதற் பரத்தையைப் புகழ்தலுந் தங்களை இகழ் தலுந் தம்முளேயுங் கூறுவர் பரத்தைய ரென்றவாறு. (107)

103] இளையர் தலைமகற்கு இன்ன வுரிமையர் என்பது.

இளையர் கிழவோற் கிரவும் பகலுங்
களைத லில்லாக் கவசம் போல்வார்.

(எ, சூ-ன்) இளையர துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இளையராவார் தலைமகற்கு நீங்காக் கவசம் போலுந் தன்மைய ரிரவும் பகலுமென்றவாறு. (108)

1(9] இருவகைப் பாங்கர் உரிமை

இருவகைப் பாங்கரு மொருபெருங் குரிசிற்
கின்னுயிர்த் துணையா விருபெருங் குரவருந்
தன்னை யளித்த தகைமை யோரே.

(எ, சூ ன்) பாங்கர துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பார்ப்பனப் பாங்கருஞ் சூத்திரப் பாங்கரு மென்னு மிருவருந் தலைமகற் கினிய வுயிர்த் துணையாக வவன் றாயுந் தந்தையு மவனை யடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையோ ரென்றவாறு. (109)

110] தோழி யுரிமை

தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோ
டுசாத்துணை யாகி யசாத்தணி வித்தற்
குரிய காதன் மருவிய துணையே.

(எ, சூ-ன்) தோழிய துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தோழி யென்பாள் செவிலிக்கு மகளாய் நன்மையுந் தீமையு மாராய்தலுடனே தலைமகட் குசாத்துணை யாயவளது வருத்தந் தீர்த்தற்குரிய வன்பு பொருந்திய துணை யாமென்றவாறு. (110)

111] செவிலி யுரிமை

செவிலி நற்றாய் தோழி யாகி
யவல நீக்கி யறிவுமா சாரமுங்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.

(எ, சூ-ன்) செவிலிய துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) செவிலி யென்பாள் தலைமகளுடைய நற்றாய்க் குத் தோழியாய் தலைமகட்கு வருங் குற்றங்களைக் களைந்து நல்லறிவு மாசாரமுங் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயென்றவாறு. (111)

112] அறிவ ருரிமை

அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கு
முறுதி மொழிந்த வுயர்பெருங் குரவர்.

(எ, சூ-ன்) அறிவர துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) அறிவ ரென்பார் தலைமகற்குந் தலைமகட்கு முறுதியைப் பயக்கு முபதேசங்களைச் சொன்ன மேம்பட்ட குரவ ரென்றவாறு.

113] காமக்கிழத்திய ரிலக்கணம்

ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர் மகளி ராகிக்
காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.

(எ, சூ-ன்) காமக் கிழத்தியர துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) காமக் கிழத்திய ரென்பார் சேரிப் பரத்தையர் போலப் பலர்க்கு முரியாரன்றி யொருவர்க்கே யுரிமை பூண்டு வருங் குலப்பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டா ரென்றவாறு. (113)

114] காதற் பரத்தைய ரிலக்கணம்

யாரையும் நயவா வியல்பிற் சிறந்த
சேரிப் பரத்தையர் மகளி ராகிக்
காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்.

(எ, சூ-ன்) காதற் பரத்தையர துரிமை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) காதற் பரத்தைய ரென்பார் யாவரையும் விரும்பாத வியல்பினன் மிக்கசேரிப் பரத்தையருடைய மகளிராய்த் தம்மன்பினாற் றலைமகனோடு கூடுவாரென்றவாறு. (114)

115] காதற் பரத்தைய ருரிமை

அவருளும் வரைதற் குரியோ ருளரே.

(எ, சூ-ன்) காதற் பரத்தையர்க் குரியதோர் சிறப் புணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) காதற் பரத்தைய ருள்ளு முளர் தலைமகனால் வரைந்து கோடற் குரிய ரென்றவாறு. (115)

116] தலைமகனும் தலைமகளும் துறவறம் மேற்கொள்ளுங் காலம்

மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

(எ. சூ-ன்) தலைவனுந் தலைவியுந் துறவறங் காப்ப (துறவறங் காக்கும் காலம்) துணர்த்துத னுதலிற்று,

(இ-ள்) மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து மிக்க காமத்து வேட்கை தீர்ந்த காலத்துத் தலைமகனுந் தலைமகளுந் தம்மூர் நீங்கி வனத்தின்கட் சென் றெல்லையில்லாச் சுற்றத் தாரோடுந் (சுற்றத்தோடும்) துறவறங் காப்ப ரென்றவாறு. (116)

முதலாவது
அகத்திணை யியல் முற்றும்.

உ

இரண்டாவது

களவியல்.

117] களவின் இலக்கணம்

உளமலி காதற் களவெனப் படுவ
தொருநான்கு வேதத் திருநான்கு மன்றலு
ளியாழோர் கூட்டத் தியல்பின தென்ப.

(என்பது சூத்திரம்) இவ்வோத்தென்ன பெயர்த்தோ? வெனின் களவுணர்த்தலிற் (களவுணர்த்தினமையாற்) களவிய லென்னும் பெயர்த்து. இவ்வோத்தி னுளித்தலைச் (இதனுளித்தலைச்) சூத்திர மென்னுதலிற்றோ வெனின்? களவு கற்பென்னுங் கைகோ ளிரண்ட னுள்ளுங் களவென் னுங் கைகோள (கைகோளின) திலக்கண முணர்த்துத னுத லிற்று.

(இ-ள்) உளமலிதற்குக் காரணமாகிய வன்பினையுடைய களவென்று சொல்லப்படுவது நான்காகிய வேதத்துள்ளே (வேதத்துட்) சொல்லப்பட்ட வெட்டாகிய மணத்துக் கந்திருவ மணத்தோ டொத்த இயல்பினை யுடைத்தென்று சொல் லுவ ரென்றவாறு. (சொல்லுவர் புலவ ரென்றவாறு).

என்னை ?

“இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்ற லெட்டினுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே''

என்றூராகலின்.

வேதம் நான்காவன, இருக்கு முதலாயின. மன்ற லெட்டாவன, பிரமம், பிராசா பத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை.

என்னை ?

''அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வ
மியாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பிதன்
பொருண்மை யென்மனூர் புலமை யோரே''

என்றூராகலின்.

அவற்றுட் பிரமமாவது, பிரமசாரியாய்த் தக்கானுமா யிருப்பானுக்குக் கன்னியை யலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

பிரசாபத்தியமாவது, தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரு மறுதே யுடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

ஆரிடமாவது, ஒன்றுனு மிரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

தெய்வமாவது, வேள்வி யாசிரியர்க்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

காந்தருவமாவது, கொடுப்பாருங் கேட்பாருமின்றித் தலைமகனுந் தலைமகளுந் தனியோரிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது. காந்தருவராவார் யாழ் கொண்டு பாடித் திரிவராகில் தேவர்.

ஆசுரமாவது, தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வது,

இராக்கதமாவது, தலைமக டன்னினுந் தமரினும் பெறுது வலிதிற் கோடல் (கொள்வது).

பைசாசமாவது, துயின்ருேண் மாட்டுங் களித்தோண் மாட்டுஞ் சென்று சார்வது (சேர்வது).

இவற்று, ளசுர முதலாகிய மூன்றுங் கைக்கிளைக் குரியவாம். பிரமம் முதல் தெய்வ மீருகிய நான்கும் பெருந்திணைக் குரியவாம்.

என்னை ?

> "முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
> பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே"

என்ருராகலின். (1)

113] கைக்கிளையின் பாகுபாடு.

காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

(எ, சூ-ன்) மேற் சொல்லப்பட்ட வேழு திணையுள்ளும் முதலாகிய கைக்கிளைத் திணையின் பாகுபா டுணர்த்துனுதலிற்று.

(இ-ள்) கைக்கிளையாவது காட்சி முதலாக குறிப்பறிதலீருகச் சொல்லப்பட்ட நான்கு வகையினை யுடைத்தாமென்றவாறு. (2)

119] காட்சி

புணர்ப்பதும் பிரிப்பது மாகிய பால்களுட்
புணர்க்கும் பாலிற் பொருவிறந் தொத்த
கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப
விறையோ னுயரினுங் குறைவின் றென்மனர்.

(எ. சூ-ன்) நிறுத்த முறையானே காட்சிக்கிலக்கண முணர்த்துத னுதலிற்று.

(இ ள்) முற்பிறப்பினுங் காம நுகர்ந்தாரிருவரையு மறுபிறப்பினுட் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினையுந் தீவினையுமென்று மிரண்டினுள் நல்வினை வயத்தாலே தனி யிடத் தெதிர்ப்படுவர். குலத்தானுஞ் செல்வத்தானுமறி வானும் பிறவாற்றானுந் தம்மோடொத்தாரு மிக்காரு மின் றித் தம்மிற்றாமே யொத்த தலைமகனுந் தலைமகளு மவருட்ட லைமகனவற்று னுயர்ந்தானாயினும் (தலைமகனுயர்ந்தனனாயி னும்) குற்றமின்றென்று சொல்லுவர் புலவ ரென்றவாறு.

எனவே தலைமகளுயர்தல் குற்ற மென்பதாம்.

என்னை ?

"ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே"

என்றாராகலின்.

ஈண்டுக் காளையென்பது பருவங்குறித்து வந்ததோ ராகு பெயரெனக் கொள்க. அதற்குச் செய்யுள்:

'புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தி

னயலே பசும்பொற் கொடிநின்றதால் வெள்ளையன்னஞ் செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே''

எனவும்,

(மருட்பா)

''கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
வரும்பிய மென்முலை தொத் தாகப்—பெரும்பணைத்தோட்
டெண்டைகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலுங் களித்தவெங் கண்ணே''

எனவும் வரும். (3)

120] ஐயம்

மடமா னோக்கி வடிவுங் கண்ட
விடமுஞ் சிறந்துழி யெய்துவ தையம்.

(எ, சூ-ன்) ஐய நிகழுமிட முணர்த்துத லுதலிற்று.

(இ ள்) தலைமகள் வடிவ மவளைத் தான் கண்டவிடமுஞ் சிறப்புடையவாய காலத்துத் தலைமகன் பாலையம் நிகழுமென்றவாறு.

எனவே யவை சிறப்புடைய வல்லாக்காலத்தைய நிகழாதென்பதாம்.

என்னை ?

''சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப
விழிந்துழி யிழிபே சுட்ட லான''

என்றாராகலின்;

அதற்குச் செய்யுள் ,

"பாரணங் கோதிருப் பாற்கட லின்றபங் கேருகத்தி
ஞேரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே"

எனவும்,

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு"

எனவும்,

"தாமரைமேல் வைகிய தையல்கொ ருழ் தளிர்க்
காமரு பூங்கணையான் காதலிகொ—றேமொழி
மையம ருண்கண் மடந்தைக
ணைய மொழியா தாழுமென் னெஞ்சே"

எனவும் வரும். (4)

121] துணிவு

எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலருங் கூடிய வண்டு
நடைபயி லடியும் புடைபெயர் கண்ணு
மச்சமும் பிறவு மவன்பா னிகழுங்
கச்சமி லையங் கடிவன வாகும்.

(எ, சூ-ன்) துணிவு நிகழுதற் கேதுவாவன விவை யென்ப துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) எழுதிய வல்லி முதலாக வச்ச மிறுச் சொல் லப்பட்ட வேழு (அவை)போல்வன பிறவுந் தலைமகன் மாட்டு நிகழாநின்ற வெண்ணிலா வையங்களைப் போக்குவனவாம் என்றவாறு

'பிறவு மென்றதனுல் நிமன் (நிமல் வியர்வு) முதலாயி னவுங் கொள்க.

என்னை ?

"வண்டே யிழையே வள்ளி பூவே
கண்ணே யலம்வர லிமைப்பே யச்சமென்
றன்னவை பிறவு மாங்கணிகழ் கின்ற
வையங் களையுங் கருவி யென்ப"

என்ருராகலின். அதற்குச் செய்யுள்:

"மையயார் குவளை வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போ
னையா தொழிமதி நன்னெஞ்ச மேயினி தம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலவெண்கண்
கையாலலைப்பவர் போலிமையா நிற்குங் காரிகைக்கே"

எனவும்,

"திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகித முண்கணு மிமைக்கு
மாகுமற்றிவ ளகலிடத் தணங்கே" (5)

எனவும் வரும்.

122] குறிப்பறிதல்

அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

(எ, சூ-ன்) குறிப்பறிதற் கேது வுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைமக ளுள்ளத்து நிகழா நின்ற வேட்கை யினைத் தலைமகற்கு விளங்க வறிவிக்கு மவள் கண்ணென்ற வாறு.

என்னை ?

"நாட்ட மிரண்டு மறிவுடன் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்"

என்றுராகலின்.

அதற்குச் செய்யுள்:—

"மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பிற்
பெண்ணிற் சிறந்தவிப் பேதைதன் பார்வை பெருவினையே
னெண்ணிற் சிறந்த விருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்க்
கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாவதுங் காட்டியதே"

எனவும்,

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

எனவும் வரும். (6)

123] களவிற் குரிய கிளவித் தொகை

இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்க
லிடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடன்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே யிரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாத
லொருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றொருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

(எ, சூ-ன்) களவிற் குரியதோர் கிளவித்தொகை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரித லீறாகச் சொல்லப்பட்ட பதி னேழுங் களவென்னுங் கைகோளிற்குரிய கிளவியின் றொகை யாமென்றவாறு. (7)

1. இயற்கைப் புணர்ச்சி.

124] இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்

தெய்வம் புணர்ப்பச் சிந்தைவே றாகி
யெய்துங் கிழத்தியை யிறையோ னென்ப.

(எ, சூ-ன்) இயற்கைப் புணர்ச்சிய திலக்கண முணர்த் துத னுதலிற்று.

(இ-ள்) தெய்வங் கூட்டத் தன்னறிவு திரிந்து தலை மகளைக் கூடுந் தலைமக னென்று சொல்லுவர் புலவர் என்ற வாறு. (8)

125] தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி.

கலந்துழி மகிழ்தலும் நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலு மென்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

(எ, சூ-ன்) இயற்கைப் புணர்ச்சியின் பாகுபாடாகிய விரண்டினுண் முன்னையதாகிய தெய்வப் புணர்ச்சியின் விரியு ணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) கலந்துழி மகிழ்தலும் நலம் பாராட்டலு மேற் புற வணிதலு மென்கின்ற மூன்று கிளவியு மகத்திணை யிய லுட் போற்றப்பட்ட தெய்வப் புணர்ச்சியின் விரியாமென்ற வாறு. (9)

126] தலைவியின் எய்தும் புணர்ச்சியின் வகை.

வேட்கை யுணர்த்தல் மறுத்த லுடன்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்ட நால்வகைத்தே.

(எ, சூ-ன்) தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) வேட்கை யுணர்த்தன் முதலாகக் கூட்டமீறாகச் சொல்லப்பட்ட நான்கு வகையினை யுடைத்துத் தலைமகளாற் புணரும் புணர்ச்சி யென்றவாறு. (10)

127] தலைவியின் எய்தும் புணர்ச்சியின் விரி.

இரந்துபின் னிற்றற் கெண்ண லு மிரந்து
பின்னிலை நிற்றலும் முன்னிலை யாக்கலும்
மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலு
மிடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலு
மிடையூறு கிளத்தலு நீடுநினைந் திரங்கலும்
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும்
முறுவற்குறிப் புணர்த்தலு முயங்குத லுறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவு
முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

(எ, சூ-ன்) தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரி யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இரந்து பின்னிற்றற் கெண்ணன் முதலாகப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பிறவுமேற் சொல்லப்பட்ட தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரியா மென்றவாறு.

அவற்றுள்,

இரந்து பின்னிற்றற் கெண்ணற்குச் செய்யுள்:—

"தங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல்
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விசயக் கொடிமேல்
வாங்கிய சாப முயர்த்தவன் போர்வென்ற வாணன்வையந்
தாங்கிய மாலனை யான்றஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே"

எனவும்,

"மருந்திற் றீராது மணியி னுகா
தருந்தவ முயற்சியி னகற்றலு மரிதே
தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகித்
தேனிமிர் நறவின் றேறல் போல
நீதர வந்த நிறையழி துயர
மாடுகொடி மருங்கி னருளி னல்லது
பிறிதிற் றீரா தென்பது பின்னின்
றறியக் கூறுது மெழுமோ நெஞ்சே
நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித்தன்
னுடுமழைத் தடக்கை யறுத்துமுறை நிறுத்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கையம் பெருந்துறைக் குனிதிரை தொகுத்த
விளங்குமுத் துறைக்கும் வெண்பற்
பன்மாண் சாயற் பரதவர் மகட்கே"

எனவும் வரும்.

இரந்து பின்னிலை நிற்றற்குச் செய்யுள்:

"செறிவேழ வெஞ்சிலை வேடஞ்சை வாணன் றிருந்தலர்மே
லெறிவேலை வென்றகண் ணென்றுயிர்க் கேவி யிருண்டறல்போ
னெறிவே யலங்கன் முடித்தலை சாய்த்திங்க ளிற்பதுதா
னறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை யாரணங்கே"

எனவும்,

"ஓடுந் திமில்கொண் டுயிர்கொல்வர் நின்னையர்
கோடும் புருவத் துயிர்கொல்வை மன்னியும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய்" .

எனவும் வரும்.

முன்னிலை யாக்கற்குச் செய்யுள்:—

"வழுதியர் நாமம் வளர்க்கின்றவாணன்றென் மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மடவீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாயத் தொகுதியோ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போலின்றவாறென் னியம்புமினே"

எனவும்,

"ஒள்ளிழை மகளிரோ டோரையு மாடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்
விரிபூங் கான லொருசிறை நின்றோய்
யாரை யோநிற் றொழுதனம் வினவுதுங்
கண்டோர் தண்டா நலத்துத தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பி னமர்ந்துறை யணங்கோ
விருங்கழி மருங்கி னிலைபெற் றனையோ
சொல்லுநீ மடந்தை யென்றனெ னனதெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் யுண்கணும் பரந்தவாற் பனியே"

எனவும் வரும்.

மெய்தொட்டுப் பயிறற்குச் செய்யுள்:—

"நல்லார் விழிபோ லிருந்து மளியெனு நாமம்பெற்று
மல்லார் குழலி லமர்ந்திருந் தாலம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்கா
ணில்லா திடை யுமக் கேபழி சால நிலைநிற்குமே".

எனவும்,

வெண்பா

"பிறைநுதல் கொங்கைப் பெருக்கத்தாற் றேய்ந்து
குறையு மிடைகண்டுங் கொண்டாற்—பொறையளகத்
தண்டே னசையாற் சனநாதன் றெண்டியின்வாய்
வண்டே மகிழ்ந்தேறல் வந்து"

எனவும் வரும்.

பொய் பாராட்டற்குச் செய்யுள்:—

"பருந்தொன்று சூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென் மாறையன் னீர்செழுந் திங்களுநங்கண்
முருந்தொன்று சோதி முகங்கண்டு நாணி முயல்மறுத்தீர்
மருந்தொன்று நாடியன் றேமக மேரு வலங்கொள்வதே"

குறள்

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி"

எனவும் வரும்.

இடம்பெற்றுத் தழாஅற்குச் செய்யுள்:—

"படம்பட்ட வாளர வல்குலி லேதடைப ட்டநெஞ்சே
விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் டோய்பொழிலுந்
தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநாட்
டிடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே"

என வரும்.

வழிபாடு மறுத்தற்குச் செய்யுள்:—

"தேறாத தெவ்வென்ற வாணன்றென் மாறைச்செந் தேனருவி
யூறாத காலத்து மூறுந்தண் சார லொதுக்கிடந்தந்
தாறாத சோகமு மாற்றுதல் வேண்டு மசோகமெய்தி
மாறாத தண்ணளி சூழ்மலர் வாண்முக மாதவியே"

என வரும்.

இடையூறு கிளத்தற்குச் செய்யுள்:—

"சிறைதயா முளரித் திருமா ளிகையிற் சிறந்தவென்ற
னிறைதயா ரவிந்தத் திலிதிருப் பிரிரு கோட்டொருகை
மறையானை வாணன் வருதஞ்சை சூழ்வையைநாட்டுறைவோர்
புறைதயார் தனமென்ப தோமதர் வேற்கண் புதைத்ததுவே"

எனவும்,

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
றிருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றுங்குத லெளிதோ
கொடுங்கோ ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநா றுவேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதுவ வல்ல கண்ணு
ராண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா லணங்கே"

எனவும் வரும்.

நீடுநினைந்திரங்கற்குச் செய்யுள்:—

"தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் றடஞ்சிலம்பிற்
குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ
டுமிழ்தண் டரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கு
மமிழ்தந் தருவதென் றோபெருவேட்கையென் னாருயிர்க்கே'

எனவும்,

"தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை யினையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த

புன்கண் மடமா னேர்படத் ததைந்த
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்க
ணாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே''

எனவும் வரும்.

மறுத்தெதிர் கோடற்குச் செய்யுள்:—

''கறையா ரிலங்கிலை வேலன்பர் காமக் கடற்கெதிர்ந்த
நிறைபாம் வரம்பினி நிற்பதன் றுலைநிறை நீருலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்றென் மாறையினும்
பொறைபார் தவஞ்செய் திலேநெஞ் சமேயென்
புகல்வதுவே ?''

எனவும்,

''பண்டுநாம்
வேறல்ல வென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு''

எனவும் வரும்.

வறிதுநகை தோற்றற்குச் செய்யுள்:—

''எறிதே னலம்புஞ் சிலம்பினெப் போது மிரந்திவள்பின்
வெறிதே திரிந்து மெலிந்தனம்யா முள்ள மெல்லியற்குப்
பிழிதேகொ லென்றும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய்தாள் தஞ்சைவாணன் வரையணங்கே''

எனவும்,

''அன்னையோ,
மன்றத்துக் கண்டாங்கே சான்றோர் மகளிரை
யின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்''

எனவும் வரும்.

முறுவற் குறிப் புணர்த்தற்குச் செய்யுள்:—

"வின்மலை வேலன்ன நன்னுதல் வாட்கண்ணி
வேட்கையெண்ணு
ளென்மலை வேனென்று மென்னுயிர் தாங்கு
மெதிர்ந்தவொன்னார்
மன்மலை வேழந் திறைகொண்ட சேய்தஞ்சை
வாணன்மஞ்சார்
தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே"

எனவும்,

"முகைமொக்கு ளுள்ளத்து நாற்றம்போற் பேதை
நகையொக்கு ளுள்ளதொன் றுண்டு"

முயங்குதலுறுத்தற்குச் செய்யுள்:—

"வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்தகொக்கு
நானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே"

எனவும்,

"கோட லெதிர் முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே"

எனவும் வரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

"மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன்
வாணனெண்ணெண்

கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக்
கன்னிபொன்னுண்
முலைநா முயன்று முயங்கின மான்முயன் றுலிளியைந்
தலைநாக நன்மணி யும்பெற லாமித் தரணியிலே''

எனவும்,

வெண்பா

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள"

எனவும் வரும்,

புகழ்தற்குச் செய்யுள்:—

திரண்மா மரகதச் செய்குன்று காளென் றுஞ் செவ்வனநீர்
முரண்மா தவங்கண் முயன்று செய்தாலு முளரிமங்கை
சரண்மாறை வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டென்
றனியுயிர்க்கோ
ரரண்மா னனையகண் ணுள்கொங்கை போற லரிதுமக்கே

எனவரும்,

இவற்றுளிரந்து பின்னிற்றற் கெண்ணன் முதலா நீடு நினைந்திரங்கலீறாகச் சொல்லப்பட்ட வொன்பதனுள்ளும் வழிபாடு மறுத்தலொன்று மொழித்தல்லாதன வெட்டும் வேட்கையுணர்த்தற் குரியவாம்.

வழிபாடு மறுத்தலாய வொன்றுந் தலைமகள் மறுத்தற் குரித்தாம்.

மறுத்தெதிற் கோடலும் வறிதுநகை தோற்றலும் மென்னு மிரண்டுந் தலைமகளுடன் பாட்டிற் குரியவாம் முறுவற் குறிப்புணர்தலு, முயங்குதலுறுத்தலு மென்னு மிரண்டும் தலைமகனுடம்பாட்டிற் குரியவாம். புணர்ச்சியின்

மகிழ்தலும் புகழ்தலு மென்னு மிரண்டுந் தலைமகன் கூட்டத்திற் குரியவாம் பிறவு மென்றதனால் எற்புற வணிதலுங் கொள்ளப்படு மிலக்கிய மேலே (காட்டப்படும்) (11)

1. வன்புறை

123] வன்புறையின் வகை

ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

(எ, சூ-ன்) வன்புறையின் வகையுணர்த்துத லுதலிற்று.

(இ-ன்) மேற்சொல்லப்பட்ட வன்புறை யையந் தீர்த்தலும் பிரிவறிவுறுத்தலுமென விரண்டு கூற்றினை யுடைத்தாமென்றவாறு இக்கிளவி "தீராத்தேற்ற மென்பதனாற் கொள்ளப்படும். (12)

129] வன்புறையின் விரி

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலு
மிடமணித் தென்றலு மென்றிவை யாறும்
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

(எ. சூ-ன்) வன்புறை விரியின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தன் முதலாக விடமணித் தென்றலீறுகச் சொல்லப்பட்டவாறுந் தலைமகன் தலைமகதறிவின்மை நீங்க வாராய்ந்து சொன்னவன்புறையின் விரியாமென்றவாறு வன்புறுத்தலாவது வன்புறை யென்று பெயராயிற்று

அவற்றுள் அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தற்குச் செய்யுள்:—

"நாவியங் காரகி லாவியுந் தோய்குழ ஞணியஞ்சேல்
வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன் றென்மாறை
வயற்"
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரு
மாவியும் போலினி யாரணியாக வணிந்தனமே.

எனவரும், (அணிந்துழி) நாணியதுணர்ந்து தெளிவித்தற்கு விதியாதோவெனின்

"முன்புற்றறியா முதற்புணர்ச்சி மொய்குழலை
யின்புற் றணிந்த வியலணியும்—வன்பணியு
நாணேனுந் தொல்லை யணியென்ன நன்னுதலை..........னந்து
என்னும் பரிபாட்டினுட் செய்யுளாமெனக் கொள்க.

பெருநயப் புரைத்தற்குச் செய்யுள்:—

"மன்ற லுலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன் வெற்பி
லென்றுவி யன்ன விவளிடைமேலிணை கொண்டெழுந்த
பொன்று ணணிகொங்கை போலவண் டருங்கள்
பொய்கையுண்டோ
நன்று ளரும் பொரு தாளிரண் டனு நளினங்களே"

எனவும்,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே"

எனவும் வரும்.

தெய்வத்திறம் பேசற்குச் செய்யுள்:—

"மன்னியபார்புகழ்வாணன்றென் மாறையின் மாந்தளிர்போன்
மின்னிய மாமை விளர்ப்பதென்னே விதிகூட்ட நம்மிற்
பின்னிய காதல் பிரிப்பவர் யாரிரினீப் பேரருவி
யின்னிய மாக விளமயி லாடு மிரும்பொழிற்கே"

என வரும்,

பிரியே னென்றதற்குச் செய்யுள்:—

"வண்கொடி யேய்மதின் மாறை வரோதயன் வாணனென்னு
ரென்கொடி யேனெய்த விவ்வெண்ண நீயிரங்கே லிரங்கே
னுண்கொடி யோரிடை வண்டிமிர் பூங்குழ னூபுரத்தாட்
பெண்கொடி யேபிரி யேன்றரி யேனிற் பிரியினுமே"

எனவும்,

"யாயு மியாயு மியாரா கியரோ
வெந்தையும் நுந்தையு மெம்முறைக் கேளி
ரியானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்ந்நீர் போல
வன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

எனவும் வரும்.

பிரிந்து வருகென்றற்குச் செய்யுள்:-

"சென்றே பகைவென்ற திண்படை வாணன்
செழுந்தஞ்சைசூழ்
நன்றே தருவையை நாடனை யாய்நம தாருயிர்போ
லொன்றே யெனதுரை பூங்குயர் சோலையி
னூடொளித்து
நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீசிறிதே"

எனவரும்.

இடமணித் தென்றற்குச் செய்யுள்:-

"மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை
மருவினர்போற்
றணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்
கனிபொன் சொரியுநின் சாரன்மென் காந்தளங்
கையகத்தே"

எனவும்,

"நெடுவே றுடக்கிய நீர்க்குமதி காதல்
வடிவே றுடக்கியநீர் மாதோ—நெடுவேய்க்
கணமா மழைக்குவட்டெங் கார்வரைப்பூஞ் சாரல்
மணநாறுங் குன்றின்மேல் வந்து"

எனவும் வரும். இவற்றுண், முன்னைய மூன்று மையந்தீர்த்தற்குரிய. பின்னைய மூன்றும் பிரிவறி வுறுத்தற்குரிய வெனக் கொள்க. *(13)*

3. தெளிவு.

130] தெளிவு இன்ன தென்பது

தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே.

(எ, சூ-ன்) தெளிவுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைமகன் சொல்லைத் தலைமகள் தெளிதலைத் தெளிதலென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

அதற்குச் செய்யுள்:—

"எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே
வைத்தங் ககன்று மறந்துறை யார்வறி யோர்கவர
முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து
தத்தும் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பரே"

எனவும்,

"நின்ற சொல்லர் நீடுதோன் றினிய
ரென்று மென்றோள் பிரிவறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் கொண்ட தீந்தேன் போலப்
புரையு மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா துலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை யுறுப செய்பறி யலரே"

எனவும் வரும், (14)

4. பிரிவு மகிழ்ச்சி

131] பிரிவுழி மகிழ்ச்சியின் விரி

செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

(எ, சூ-ன்) பிரிவுழி மகிழ்ச்சியின் விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அவ்வாறவ் விடத்து நீங்கித் தலைமகடன்னைக் காணுமற்றான வளைக் காண்ப தோரணிமைக்கணின்ற தலைமகன் புணர்ச்சிக் களத்திலின்றும் போகாநின்ற தலைமகளது செலவு கண்டு தன்னெஞ்சொடு கூறலும் பாகனொடு கூறலு மாகிய இவ்விரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாமெனக் கொள்க வென்றவாறு. இங்குக்கிளவிப் பன்மையின்மையின வகையின் றாயிற்று.

செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லற்குச் செய்யுள்:—

"அகிலேந்து கூந்த லொருகையி னேந்தி யசைந்தொருகை,
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன் முந்
நீர்த்துறைவாய்
நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மானெஞ்சநம்முயிரே"

எனவும்,

"காணுமரபின துயிரென மொழிவோர்
நாணலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமெம் மரும்பெற லுயிரைச்
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக்கா லுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந்தோட்டே"

எனவும் வரும்.

பாகனொடு சொல்லற்குச் செய்யுள்:-

தென்பாற் றிலகமன் னன்றஞ்சை வாணன்றென்
மாறைமுந்நீர்
வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு மேதமஞ்சி
முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து
முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு
பெண்ணணங்கே"

எனவரும். இவை யிரண்டற்கு மிலக்கண விதி யிவையாகக் கொள்க. (15)

5. பிரிவுழிக் கலங்கல்

132] பிரிவுழிக் கலங்கலின் வகை

மருளுற் றுரைத்த றெருளுற் றுரைத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

(எ, சூ-ன்) பிரிவுழிக் கலங்கலின் வகை யுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) மருளுற்றுரைத்தலுந் தெருளுற்றுரைத்தலு மென விரண்டு வகையினை யுடைத்தாம் பிரிவுழிக் கலங்க லென்றவாறு. இக்கிளவி "பிரிந்தவழிக் கலங்க" லென்பத னாற் கொள்ளப்பட்டது. (16)

133] பிரிவுழிக் கலங்கலின் விரி

ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெறாது கங்குலோ தலுமெனு
மைந்தும் பிரிவுழிக் கலங்கல் விரியாகும்.

(எ, சூ-ன்) பிரிவுழிக் கலங்கலின் விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைமகளை யாயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோ வென்றன் முதலாகக் கண்படை பெறாது கங்குலோதலீறாகச் சொல்லப்பட்ட வைந்தும் பிரிந்தவழிக் கலங் கலின் விரியா மென்றவாறு.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென் றற்குச் செய்யுள்:-

"சீயங்கொ லோவெனத் தெவ்வென்ற வாணன்றென்
மாறைவையைத்
தோயங்கொ லோவெனும் நேயநம் பால்வைத்துச்
சோலைமஞ்ஞை
யாயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ் வரிவையென்ன
மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு வந்துற்றதே"

எனவும்,

''மனவே ரல்குல் மடந்தை கூட்டங்
கனவே தெரியினும் யாவது
நனவே தெரியினு நண்ணலோ வரிதே
எனவும் வரும்.

வாயில் பெற்றுய்தற்குச்செய்யுள்:-

''பெருமான் மருந்தொன்று பெற்றனம் யானெஞ்சம் பேதுறல்பார்
மருமான் வரோதயன் வாணன்றென் மாறை மணங்கமழ்பூந்
திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்றுசென்றவ்
வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே
எனவும்,

''நோக்கினும் பிறர்முகம் நோக்காள் சாரினும்
பூக்குழன் மடந்தை தோள்சா ரும்மே
யன்ன தலையளி யுடைமையி
னின்னுயிர்த் தோழி யேந்திழை யிவட்கே''
எனவும் வரும்,

பண்பு பாராட்டற்குச் செய்யுள்:—

மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில் வாய்த்தவர்கண்
கயலா மெனிற்கயல் கள்ளங்கொள் ளாகருந் தாழளகம்
புயலா மெனிற்புயல் போதுகொள் ளாவிப் புனையிழையா
ரியலா மனைத்தையும் வேறென்ன பேரிட் டியம்புவதே
எனவும்,

''குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனை பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சிலோதி யசைநடைக் கொடிச்சி
கண்போன் மலர்த லரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே''
எனவும் வரும்,

பயந்தோர்ப் பழிச்சற்குச் செய்யுள்:—

"அணியுஞ் சுடர்விரி சங்குபங் கேருக மாடகமும்
மணியுந் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன்வெற்பீற்
றணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே
பணியும் பணியெனக் குப்பயந் தாரைப் பயந்தவரே"

எனவும்,

"அல்குபட ருழந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குற்
றிருமணி புரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரியுந ரரிந்து தருவன போற்றுந்
தண்சேறு தாஅய் மதனுடை நோன்றாட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டித்
தன்றிறம் பெறுகவிவ ளீன்ற தாயே"

எனவும் வரும்,

கண்படை பெறாது கங்குனோதற்குச் செய்யுள்:—

"வாமக் கலையல்குல் வானுத லார்தஞ்சை வாணன்வெற்பி
னாமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த
காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூ
யாமக் கடலகத் துந்தனி யாதினி யென்செய்துமே"

எனவும்,

"ஓதமு மொலியோ வின்றே யூதையுந்
தாதுளர் கானற் றவவோ வின்றே
மணமலி மூதா ரகநெடுந் தெருவிற்

கூடைச் சேவல் குராலோ டேறி
யாரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறு
மணங்குகால் கிளரு மயங்கிரு ணடுநாட்
பாவை யன்ன பலராய் வனப்பிற்
றடமென் பணைத்தோண் மணமிகு குறமகள்
சுணங்கணி வனமுலை மயங்குத லுள்ளி
மீன்கண் டுஞ்சும் பொழுதும்
யான்கண் டுஞ்சிலன் யாதுகொ லிலையே"

எனவும் வரும்.

இவற்று ளாய வெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோ வென்றலாகிய வொன்று மருளுற்றுரைத்தற் குரித்து. ஏனைய நான்குந் தெருளுற் றுரைத்தற் குரியன. இவையைந்து கிளவிக்கு மீண்டுக் காட்டிய செய்யுளே யிலக்கணமாகக் கொள்க. (17)

6. இடந்தலைப்பாடு

134] இடந்தலைப்பாட்டின் வகை

தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே

(எ, சூ-ன்) இடந்தலைப் பாட்டினிலக்கண முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இடந்தலைப்பாடென்பது தெய்வந்தெளிதலுங் கூடலும் விடுத்தலுமென மூன்று வகையினை யுடைத்தென்ற வாறு.

ஓர் அசை. இக்கிளவி "பெற்ற வழி மகிழ்ச்சி" யென் பதனாற் கொள்ளப்பட்டது. (18)

135] இடந்தலைப்பாட்டின் இலக்கணவிரி

தந்த தெய்வந் தருமெனச் சேறலு
முந்துறக் காண்டலு முயங்கலும் புகழ்தலு
முடன்புண ராயத் துய்த்தலு மெனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

(எ, சூ-ன்) இடந்தலைப்பாட்டினிலக்கண விரியுணர்த்துத னுதலிற்று

(இ-ள்) தந்த தெய்வந் தருமெனச் சேறன் முதலாக வுடன் புணராயத்துய்த்தலீறுகச் சொல்லப்பட்ட வைந்தும் விடந்தலைப்பாட்டின் இலக்கண விரியா மென்றவாறு.

தந்த தெய்வந் தருமெனச் சேறற்குச் செய்யுள்:-

"மன்றும்பொதியினு மாமயில் சேர்தஞ்சைவாணன்வெற்பில்
துன்றும் புயலிளஞ் சோலையின்வாய்ச்சுற வுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னைமுன் னூட்டந்த தெய்வநமக்
கின்றுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே"

எனவரும்.

முந்துறக் காண்டற்குச் செய்யுள்:—

மருவாய நாப்பண்மயிலுரு வாய்நென்னல் வாணன்றஞ்சைத்
தருவாய்த்தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து
திருவாய்மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றோர் தெய்வதப்பெண்
ணுருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே

எனவும் வரும்.

முயங்கற்குச் செய்யுள்:—

மானு கரன்றஞ்சை வாணன்வ ரோதயன் மாறையன்னு
டானுவி ன்றலர் தாமரை யேயத் தடமலர்வா

யாறு தொழுகுசெந் தேனல்லி மேவு மரசவன்னம்
யாறு கிடைப்பது வேயின்ன பான்மை யிருவர்க்குமே''
எனவும் வரும்,

புகழ்தற்குச் செய்யுள்:—

''அரும்பா மளவிற் றனத்தொடவ் வாயல ராமளவிற்
கரும்பாமொழிவதனத்தொடொவ்வாய்களியானைசெம்பொன்
றரும்பாரி வாணன் றமிழ்தஞ்சை யான்றரி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி பெற்றிலையே''
எனவரும்,

ஆயத்துய்த்தற்குச் செய்யுள்:—

''மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்தென்
றூவிக் கமலத் தமரன்ன மேநின் னயில்விழிபோல்
வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்
கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுகுகவே''

எனவரும், இவற்றுட் டந்த தெய்வந் தருமெனச் சேற லாகிய வொன்றுந் தெய்வந் தெளிதற் குரித்தாம். காண்டலு முயங்கலும் புகழ்தலுமாகிய மூன்றுங் கூடற் குரியவாம். ஆயத்துய்த்தலாகிய வொன்றும் விடுத்தற் குரித்தரமெனக் கொள்க. (19)

7. பாங்கற் கூட்டம்

136] பாங்கற் கூட்டத்தின் வகை

சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றுங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

(எ, சூ-ன்) பாங்கற் கூட்டத்தின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) சார்தல் முதலாகப் பாங்கிற் கூட்டலீறுக வெழு வகைத்தாம் பாங்கற் கூட்டமென்றவாறு.

ஆங்கென்ப தசை (20)

137] பாங்கற் கூட்டத்தின் விரி

தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்றது விளுதலுந் தலைவ
னுற்ற துரைத்தலுங் கற்றறி பாங்கன்
கழறலுங் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலுங்
கிழவோற் பழித்தலுங் கிழவோன் வேட்கைத்
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
றன்மனத் தழுங்கலுந் தலைவனோ டழுங்கலு
மெவ்விடத் தெவ்வியற் றென்றலு மவனஃ
திவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்க
னிறைவனைத் தேற்றலுங் குறிவழிச் சேறலு
மிறைவியைக் காண்டலு மிகழ்ந்ததற் கிரங்கலுந்
தலைவனை வியத்தலுந் தலைவியை வியத்தலுந்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலுந்
தலைவன் சேறலுத் தலைவியைக் காண்டலுங்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலுந் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலு மென்றீங் கீட்டுநா லாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

(எ, சூ-ன்) பாங்கற் கூட்டத்து விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைவன் பாங்கனைச் சார்தல் முதலாகப் பாங்கிற் கூட்ட லீறுக இவ்விடத்துத் தொகுத்த விருபத்து நாலும் மேற்காட்டிய பாங்கற் கூட்டத்து விரியாமென்றவாறு.

அவற்றுள் தலைவன் பாங்கனைச் சார்தற்குச் செய்யுள்:—

"புனையாழி யங்கைப் புயல்வளர் பாற்கடற் பூங்கொடிவாழ்
மனையாகியதஞ்சை வாணனென் னுரென மற்றிங்ஙனே
யினையா தெழுமதி நன்னெஞ்ச மேநமக் கின்னுயிரே
யனையா னருட்புன லாலனங்கானல மாற்றுதற்கே"
என வரும்.

பாங்கன்றலைவனை யுற்றது வினாதற்குச் செய்யுள்:—

"வலம்புரி போற்கொடை வாணன்றென் மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடி யுருகிநின்று
புலம்புவ தென்னைகொல் லோசொல்ல வேண்டும் புரவலனே"
எனவரும்,

தலைவனுற்ற துரைத்தற்குச் செய்யுள்:—

மலைமுழு துங்கொற்றம் வைக்கின்ற வாணன்றென் மாறைநண்பா
சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாநிற்பச் செந்நிறத்தே
கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்பவின்றென்
கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே"
எனவும்,

எலுவ சிறாஅ ரேமுறு நண்ப
புலவ தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்கு
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்று லெம்மே

எனவும் வரும்,

கற்றறி பாங்கன் கழறற்குச் செய்யுள்:—

"தருகற் பகமன்ன சந்திர வாணன் றடஞ்சிலம்பின்
முருகக் கடவு ளனையவெற் பாமுகி லும்பிறையுஞ்
செருகிக் கிளர்வரை வந்தவொர் பேதைக்குன்
சிந்தையெல்லா
முருகக் கலங்கினை நீதகு மோமற் றுனக்கிதுவே"

எனவும்,

"பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே

எனவும் வரும்.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தற்குச் செய்யுள்:-

மாலாய் மதம்பொழி*வாரண வாணன்றென் மாறையன்னார்
சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறியநுண்ணேர்
நூலார் மருங்கும் பெருந்தன பாரமு நும்மையன்றி
மேலா னவருங்கண் டாலுரை யாரிந்த வீரங்களே"

எனவும்,

"அம்ம வாழி கேளிர்முன் னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்டாது பொதிந்த செங்காற் கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரைப்
பேஎய்த் தலைஇய பிணரரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்

* மாதங்க வாணன் (பா பே)

வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்
புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பி
னிவர்திரை தந்த விர்ங்கதிர் முத்தங்
கவர்நடைப் புரவி கால்வடுத் தபுக்கு
நற்றேர் வழுதிக் கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போதுபுறங் கொடுத்த வுண்கண்
மாதர் வாண்முக மதைஇய நோக்கே"

என வரும்.

பாங்கன் கிழவோற் பழித்தற்குச் செய்யுள்:—

"சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்
போரார் களிறு புலம்பினைநந் தாங்கொரு பூவைகொங்கை
வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா
வோராழி சூழுல கத்தெவ ரேநின்னை யொப்பவரே"

எனவும்,

"காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதுசுவற் கலித்த முற்றா விளம்புன்
மூதாத் தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளுணக்கே"

எனவும் வரும்,

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றற்குச் செய்யுள்:—

"பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும்
பொங்கரிசேர்
கறைகொண்ட வாளன்ன கண்களுங் கொண்டொரு
கன்னிதெவ்வைத் .

திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை சூழுஞ்
சிலம்பிலின்றென்
நிறைகொண்ட வாறறி யாதிக மாநிற்றி நீயுநின்றே"

எனவும் வரும்,

பாங்கன் றன்மனத் தழுங்கற்குச் செய்யுள்:—

"சீதள வாரங் கமழ்தஞ்சை வாணன்றென் மாறையன்னுள்
காதள வாவெங் கடுவள வாவொளிர் காவியந்தண்
போதள வாம்விழி யென்னுமென் னுசைப் புறத்தளவாஞ்
சூதள வாமுலை யென்னுமென் னுமினிச் சொல்லுவதே"

எனவரும்,

பாங்கன்றலைவனோ டழுங்கற்குச் செய்யுள்:—

"என்மே லறைவ தியானிங்குநின்செவிக்கென்சொலெல்லாம்
வன்மே லடர்கொங்கை காரண மாத்தஞ்சைவாணன்வெற்பா
கன்மே லறைகின்ற மென்முளை போலுங் கடல்வெதும்பிற்
றன்மே லளாவவுண் டோதரை மேலொரு தண்புனலே"

எனவும்,

எண்ணின வேதுணிவு மெய்வழி யானுமோடு
முண்ணின் றுருக்கு முறைவோ ருரைகோடலின்று
கண்ணின வேயும் நயவாரை நயத்தல் செய்யுங்
கண்ணின்று காம நனிகாமுறு வாரை வீழ்க்கும்

எனவும வரும்,

பாங்க னெவ்விடத் தெவ்வியற்றென்றகுச் செய்யுள்:—

"முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீ
ரகத்திற் பிறந்த வரவிந்த மோவடை யார்தமக்கு

மகத்திற் சனியன்ன சந்திர வாணன்றென் மாறைவெற்போ
நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே

எனவரும்,

அவனஃதிவ்விடத் திவ்வியற் றென்றற்குச் செய்யுள்:—

"கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே
தனமே முகையென் றனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு
வனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்
புனமே யிடமிங்ங னேயென்னை வாட்டிய
பூங்கொடிக்கே"

எனவும்,

"கடற்கோடு செறிந்த வளைவார் முன்கை
கழிப்பூத் தொடர்ந்த விரும்பல் கூந்தல்
கான ஞாழற் கவின்பெறு தழையள்
வரையர மகளிரி னரியளென்
னிறையரு நெஞ்சங் கொண்டொளித் தோளே"

எனவும் வரும்.

பாங்கனிறைவனைத் தேற்றற்குச் செய்யுள்:—

"மழைவளர் மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பின்
இழைவளர் வார்முலை யேரிளந் தோகையே யிக்கணம்போய்த்
தழைவளர் சாரலிற் கண்டனை யான்வந்து காண்பளவுந்
தழைவளர் தாரண்ண லேதணி வாய்நின் றகவின்மையே"

எனவரும்,

பாங்கன் குறிவழிச் சேறற்குச் செய்யுள்:—

"பாரித்த திண்மையெம் மண்ணலுண் ணீரைப் பருகிநின்று
பூரித்த செவ்விள நீர்களுந் தாங்கியப் பூங்கொடிதான்

வாரித் தலம்புகழ் வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
வேரித் தடம்பொழில் வாய்விளை யாடுங்கொன்
மேவிநின்றே''

எனவரும்.

பாங்களிறைவியைக் காண்டற்குச் செய்யுள்:—

"கானே யளகங் கரும்புய லேயியல் கார்மயிலே
மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன் வெற்பிற்
றேனேய் தொடையலச் சேயனை யான்சொன்ன சேயிழையா
டானே யிவளிது வேயிட மாகிய தண்புனமே''

எனவரும்,

பாங்களிகழ்ந்தத்ற் கிரங்கற்கூற்குச் செய்யுள்

கொலைகா லயிற்படை நேரியர் கோனகங் கோடவங்கைச்
சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன்றென்
மாறைவெற்பின்
முலைகால் கொளக்கண் டிளைத்தநுண் ணூலிடை
முற்றிழைகண்
வலைகால் பிணிப்பவந் தார்வருந் தாரல்லர் மாலுழந்தே''

எனவும்,

இரவி னானு மின்றுயி லறியா
தரவுறு துயர மெய்துப தொண்டித்
தண்ணறு நெய்த னாறும்
பின்னிருங் கூந்த லணங்குற் றோரே.

எனவும் வரும்,

பாங்கன்றலைவனை வியத்தற்குச் செய்யுள்:—

தலங்காவலன்றஞ்சைவாணன்முந்நீர்பொருந்தண்பொருந்தத்
திலங்கார வல்வடக் கொங்கைவெற் பாலிணை நீலவுண்கட்

பொலங்காம வல்லி கடைந்தவப் போது புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம்பி ரான்றன் கலைக்கடலே''

எனவும்,

வெண்பா

''தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானல்
மாழை நுளையர் மடமக — ளேழை
யிணைநாடி லில்லா விருந்தடங்கண் கண்டுந்
துணைநாடி னன்றோ மிலன்''

எனவும் வரும்,

பாங்கன் றலைவியை வியத்தற்குச் செய்யுள்:—

வெங்கோன் மழைபொழி வானவர் போர்வென்று மீனவர்தஞ்
செங்கோன் முறைமை செலுத்திய வாணன்றென் மாறைவெற்பி
னங்கோன் மெலிய நலிகின்ற காமவெங் நஞ்சினையிப்
பைங்கோன் மணிவளை யார்தணி யாரல்லர் பார்வைகொண்டே''

எனவும்,

''துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கான
லிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண்
செய்த
வுறைமலி யுய்யாநோ யூர்சுணங்கின் மென்முலையே
தீர்க்கும் போலும்''

எனவும் வரும்.

பாங்கன் றலைவன் றனக்குத் தலைவி நிலை கூறற்குச் செய்யுள்:—

"வளங்கனி மாறை வரோதயன் வாணன் மலயவெற்பா
ளுளங்கனி காத லுடனின்ற தானின் னுடலமெல்லாங்
களங்கனி போலக் கருகவெண் கோட்டுக் களிறுண்டதோர்
விளங்கனி போல்வறி தாநிறை வாங்கிய மென்கொடியே"

எனவரும்.

தலைவன் குறிவழிச் சேறற்குச் செய்யுள்:—

"புறங்கூ ரிருட்கங்குல் போன்றக நண்பகல்
போன்றபொங்கர்
நிறங்கூர் விழியவர் நின்றன ரோநிழ
லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்றென்
மாறையில் வாணுதலாள்
அறங்கூர் மனத்தரு ளானின்ற தாமென
தாருயிரே"

எனவரும்.

தலைவன் றலைவியைக் காண்டற்குச் செய்யுள்:—

"பாகையுந் தேனையும் போன்மொழி யார்தமிழ்ப்
பைந்தொடையும்
வாகையுஞ் சூடிய வாணன்றென் மாறை
வளமுமவ
ளீகையும் போலு மெழிலியை நோக்கி
யிரங்குபுள்ளுந்
தோகையும் போலின்ற வாதனி யேயிந்தச்
சோலையிலே"

என வரும்.

தலைவன் கலவியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

''யாரும்பர் தம்பத மென்போல வெய்தின ரிம்பரம்பொன்
வாருந் துறைவையை சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பிற்
றேருந் தொறுமினி தாந்தமிழ் போலிவள் செங்கனிவா
யாருந் தொறுமினி தாயமிழ் தாமென தாருயிர்க்கே''

எனவரும்,

புகழ்தற்குச் செய்யுள்:—

''தழல்கண்ட தன்ன கலிவெம்மை யாறத்தன் றண்ணளியால்
நிழல்கண்ட சந்திர வாணன்றென் மாறை நிலவுமிழுங்
கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலிகைக் காரிகைநின்
குழல்கண்ட பின்னல்ல வோவற லிருட் குளித்ததுவே''

எனவும் வரும்,

தலைவன் றலைவியைப் பாங்கியொடு வருகெனப்
பகர்தற்குச் செய்யுள்:—

''என்கா தலிஞென் றியம்புகின் றேனிங் கினிவருங்கா
லின்கா தலியொடு நீவரல் வேண்டு நிலமடந்தை
தன்கா தலன்றஞ்சை வாணன்றென் மாறையந்தாமரைவாழ்
பொன்கா தல் கொண்டு தொழுஞ்சிலம் பாரடிப் *பூங்கொடியே''

எனவும்,

''எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
ளொண்ணுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே''

எனவும் வரும்,

* பூங்குயிலே (பா. பே)

தலைவன் றலைவியைப் பாங்கிற் கூட்டற்குச் செய்யுள்:—

''என்னோடு நின்ற விளங்கொடி யேசங்க மேய்ந்துகுழாந்
தன்னோடு செல்லுஞ் சலஞ்சலம் போற்றஞ்சை
வாணன்வெற்பிற்
பொன்னோடு செல்லும் புகழ்மணி போனின் புடையகலா
மின்னோடு நுண்ணிடை யாருட னீசென்று மேவுகவே''

எனவரும்,

இவற்றுள், முன்னைய மூன்றுஞ் சார்தல் கேட்டல் சாற்ற லென்னு மூன்றற்கு முரியவாம். பாங்கன் கழறன் முதலாகக் கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றலீறு கச் சொல்லப்பட்ட நான்கு மெதிர்மறைக் குரியவாம் (மெதிர் மறுத்தற் குரியவாம்.) பாங்கன் றன்மனத் தழுங்கன் முத லாகத் தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலீறாகச் சொல்லப் பட்ட பதினொன்றும் நேர்தற் குரியவாம்.

தலைவன் சேறன் முதலாகத் தலைவியைப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்ட நான்குங் கூடற் குரியவாம்.

தலைவன் றலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்த லும் பாங்கிற் கூட்டலுமாகிய விரண்டும், பாங்கிற் கூட்டற் குரியவாம்.

இதனுட் பாங்கனொடு தலைவன் கூறினவெல்லாம் ''நிற் பவை நினைஇ நிகழ்பவை யுரைப்பினு மென்பதனாற் கொள்ளப்பட்டன. பாங்கன் கூற்றாயின வெல்லாம் ''குற் றங்காட்டிய வாயில்பெட்பினு'' மென்பதனாற் கொள்ளப் பட்டன. (21)

8. பாங்கிமதியுடன்பாடு

138] பாங்கிமதியுடன் பாட்டின் வகை

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த்த
லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றொருமூன் று வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு.

(எ, சூ-ன்) பாங்கி மதியுடன்பா டுணர்த்.துத லுதலிற்று.

(இ-ள்) முன்னுற வுணர்தலுங் குறையுற வுணர்தலு மிருவரு முள்வழி யவன்வர வுணர்தலு மென மூன்று வகையினை யுடைத்தாம் பாங்கிமதி யுடன்பாடென்றவாறு.

அவற்றுள்,

முன்னுற வுணர்தலாவது பாங்கிதலைமகளது வடிவு வேறுபாடு கண்டதனானே கூட்ட முண்மை யறிதல். குறையுற வுணர்தலாவது, தலைவன் றழையுங் கண்ணியுங் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்கக்கண்டதனானே கூட்ட முண்மை யறிதல். இருவரு முள்வழி யவன்வரவுணர்தலாவது, தலைமகளுந் தானுமொருங்கிருந்துழித் தலைமகனவ்வாறு வரக்கண்டதனானே கூட்ட முண்மை யறிதல். (22)

139] முன்னுற வுணர்தலின் றிறம்

நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலு
மவ்வகை தன்னலையந் தீர்தலும்
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது.
பல்வேறு கவர்பொருட் சொல்லினு டலுமென
முன்னுற வுணர்தன் மூன்று கும்மே.

(எ, சூ ன்) மூன்றாற வுணர்தலின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நாற்ற முதலாகப் பயில்வீருகச் சொல்லப்பட்ட வவ்வகையுடைய வேழினும் பாங்கி யையமுற் ருராய் தலு மவற்ருனே யையந்தீர் தலு, மெய்யினாறும் பொய்யினு னுங் குற்றேவல் தப்பாமல் பலவாய் வேறுபட்ட விரு பொருட்பட்ட சொற்களா ருராய்தலுமென மூன்றாற வுணர் தன் மூன்ரு மென்றவாறு.

என்னை?

“நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉ
முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானும்”

என்ருராகலின்.

அவற்று, ணாற்றமாவது, தான் பண்டு பயின்றறியாத தோர்நாற்றம். தோற்றமாவது கூட்டத்தா பிறந்ததோரழகு. ஒழுக்கமாவது தெய்வந் தொழாமை முதலாயின. உண்டியா வது பண்டையிற் குறைந்த வுண்டி. செய்வினை மறைத்தலா வது, தலைமகடான் செய்யுந் தொழிலைப் பாங்கிக்கு மறைத் தல் செலவாவது ஆயத்தை நீங்கித் தனியே போதல். பயில் லாவது எப்போது மோரிடத்தே நிற்றல்.

பாங்கி யவற்ருனைய முற்ரேர்தற்குச் செய்யுள்:—

“வண்டலை யாயத் துடனயர்ந் தோவன்றி வண்டிமிர்பூந்
தண்டலையாரத்தழைகள் கொய்தோ தஞ்சைவாணன்வெற்பிற்
புண்டலை வேலினுங் கண்சிவப் பாரப் பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந்தோவிவண் மேனி குழைந்ததுவே”

எனவும்,

கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்சமை மென்றோண் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே

எனவும் வரும்,

ஐயந்தீர்தற்குச் செய்யுள்:—

"திளைக்குந் திரைமே லுனக்குமுன் றோன்றலிற்
செம்பொன்வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுத லாற்றஞ்சை
வாணன்மண்மேல்
விளைக்கும் புகழ்போல் விளங்குதலாற் செக்கர்
வெண்பிறைகார்
தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகுந் தன்மையதே"

எனவும், பிறவுமன்ன,

"முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகார்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை"

எனவும் வரும். பிறவுமன்ன

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருட் சொல்லி நாடலுட்,

சுனைநயப் புரைத்தற்குச் செய்யுள்:—

"பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன் றென் மாறையன் னீரிதழ்ச்
செம்மையும்மை

பூட்டிய வாளின் கருமையுந் தான்கொண் டுமக்கிங்ஙனே
சூட்டிய வொறுநன் ருன்முல்லை மாலைச் சுனைப்புனலே''

எனவரும்,

சுனைவியந்துரைத்தற்குச் செய்யுள்:—

''மறலா யெதிர்ந்த மறமன்னர் வேழ மலையெறிவேற்
றிறலார் முருகன் செழுந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
யறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின்போற்
பெறலா மெனிற்குடை வேனடி யேனும் பெருஞ்சுனையே''

எனவும்,

''பையுண் மாலைப் பழுமரம் படரிய
நொவ்வுப்பறை வாவ லுேண்சிற கேய்க்கு
மடிசெவிக் குழவி தழீஇப் பெயர்தந்
திடுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கே
ழுருவ வெண்கோ டுயக்கொண்டு கழியுங்
கடுங்கண் யானைக் காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறுந் தாழ்நீர் பனிச்சுனை
தோளா ரெல்வளை தளிர்ப்ப நின் போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த நிழறிகழ் நெடுவேற்
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் களித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே''

எனவும் வரும்,

தகையணங் குறுத்தற்குச் செய்யுள்:—

''குவளை சிவத்து குமுதம் வெளுத்த குறையல்லையே
லவளை மறைத்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் த' -ம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பி
லிவளை வரக்கண்டு நீயணங் கேபின் னெழுந்தருளே''

எனவும்,

''அம்ம வாழி வெம்முலை யணங்கே
நிலனோ விசும்போ நீரோ வரையோ
அலமருந் தளிக்கோ லஞ்சிறைச் சேவ
லுளிவாய்ப் புட்கொடி யினியன் றொண்டித்
தண்கயத் தலர்ந்த செந்தா மரையோ
யாவ தாக நின்பதி தானே
மாயிருஞ் சிலம்பின் மடமகண் மாவின்
றண்டளிர் புரையு மேனி வண்டுகொளச்
சொரிமது விழிந்த பின்னிருங் கூழை
சொரிமது விழிந்த பின்னிருங் கூழை
நின்னே போலு மின்னிசைத் தேமொழி
யென்னிணைக் குறுமகட் பிரிந்தவென்
நன்னர் நெஞ்சத் தொன்றுதெரி விலனே''

என வரும்,

நடுங்க நாட்டத்திற்குச் செய்யுள்:—

"பால்போன் மொழிவஞ்சி யஞ்சிநின் றேனிந்தப் பார்முழுது
மால்போற் புரந்தவன் மாறைவ ரோதயன் வாணன்வென்றி
வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய
கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடுகண்டே''

எனவும்

பண்டிப் புனத்திற் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற்—றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு”

எனவும் வரும்,

இவற்றுள், முன்னைய மூன்று மெய்யினாற் சொல்லிப் பின்னைய மூன்றும் பொய்யினாற் சொல்லிய பிறவு மன்ன. இவற்று ணடுங்க நாட்டத்திற்குச் சான்றோர் செய்யுளில்லை யாகலி னஃதிலக்கண மன்று (23)

140] குறையுற வுணர்தலின் றிறம்

பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி
யூர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் வினவுழி
யாரே யிவர்மனத் தெண்ணம் யாதெனத்
தேர்தலு மெண்ணந் தெளிதலு மெனவாங்
கோரிரண் டாகுங் குறையுற வுணர்தல்

(எ, சூ-ன்) குறையுற வுணர்தலின் பாகுபா டுணர்த்துத லுதலிற்று,

(இ-ன்) இயற்கைப் புணர்ச்சிப் பின்னே தலைமகளாற் பேணப்பட்ட வாயிலைப் பெற்றுப் பின் னிரந்து குறையுறுதலை வலியுறுத்த தலைமகன் கண்ணியுந் தழையுமேந்திச் சார்ந்து நின் றாரும் பெயருங் கெடுதியு மொழிந்தவும் வினைய விடத்தி வர் யாரெனவும் மனத்தின் கண்ணுளதாகிய வெண்ணம் யாதெனவும் பாங்கி யாராய்தலு மவனகத் தெண்ணத்தினைத் தெளிதலு மென விரண்டாங் குறையுற வுணர்தலென்றவாறு.

அவற்றுள் பாங்கியை யிரவுவலி யுறுத்தற்குச் செய்யுள்:—

“பொருமணிவெண்டிரைப்பைங்கடல்வங்கம்பொருந்திமுன்பு
தருமணி பின்பெற்றணிபவர் போற்சென்று சார்ந்திரந்து

பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநா
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே''

எனவரும்.

ஊர் வினுதற்குச் செய்யுள்:—

''புதியேன் மிகவிப் புனத்திற் கியான்றனி போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லு விர்படி மேற்படிந்த
மதியேய்சுதைமதில்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நதியேய் சுழிநிகர்க் கும்பழி தீருந்தி நல்லவரே''

எனவும் வரும்.

பேர் வினுதற்குச் செய்யுள்

''கரைத்தாவி யுந்திய காவிரி வைகிய காலத்திறுந்
தரைத்தாருவன்னசெந்தண்ணளி வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ் சிலம்பினும் வாழ்பதி யீதென்று வஞ்சியன்னீ
ருரைத்தலா லழிவதுண் டேற்பெய ரேனு முரைமின்களே''

எனவரும்

கெடுதி வினுதற்குச் செய்யுள்:—

''தண்பட்ட மேவும் வயற்றஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்
பண்பட்ட தேமொழிப் பாவையன் னிர்பனை பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு போர்க்களிறே''

எனவும்,

''சீத விரைக்கனகச் செந்தா மரைப்பொகுட்டு
மாதனையீ ரம்பொடு வந்ததோ—சோதிப்
பொருதாரை வேற்கண்டன் பூபால தீபன்
கருதாரி லிங்கோர் களிறு''

எனவும் வரும்.

ஒழிந்தது வினாதற்குச் செய்யுள்:—

"வனமார் குடிஞைப் பகைக்குர லாமென வாணன்றஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யாற்கிள்ளை போயினமீண்
டினமா மெனவந்திவ்வேனலெல் லாம்வவ்வு மென்பதற்கோ
கனமா நறுங்குழ லீர்மொழி யாதொழி காரணமே,

எனவும் வரும்.

யாரேயிவர் மனத்தெண்ண மியாதெனத் தேர்தற்குச் செய்யுள்:—

"தரையார வண்புகழ் தேக்கிய வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
வரையாது நும்பதி யாதுநும் பேரென்பர் வார்துளிக்கார்
புரையானை யம்பொடுபோந்ததுண் டோவென்பார் பூங்கொடியீ
ருரையாத தென்னென்ப ராலென்கொலோவிவ
ருட்கொண்டதே"

எனவும்

கையது செயலையந் தழையே வினைய
தைய புண்வாய் மாவே கைவிட்
டகலா னம்மவிவ் வகன்புனந்
தகையோ னுள்ளிய தறிதலு மரிதே"

எனவும் வரும்.

எண்ணந் தெளிதற்குச் செய்யுள்:—

"யாரே யிவரென் றறிகின்றி லேமெதிர்ந் தாரைவென்று
வாரேய் கழற்புனை வாணன்றென் மாறை வரையுறைவீ
ரூரே தெனமுன் வினவிப்பின் வேறொன் றுரைப்பதெல்லாம்
நேரே யிவள்பொருட் டாலென்று தோன்றுமென்
னெஞ்சினுக்கே"

எனவும்,

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

எனவும் வரும்.

இவையெல்லாம்,

"பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினு
மூரும் பெயருங் கெடுதியும் பிறவு
நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியுந் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்"

என்பதனால் வந்தன. (24)

141] இருவரு முள்வழி யவன்வர வுணர்தலின் றிறம்.

**கையுறை யேந்திவந் தவ்வகை வினவுழி
யெதிர்மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலும்
மதியி னவரவர் மனக்கருத் துணர்வுமென்
றிருவரு முள்வழி யவன்வர வுணர்த
லொருமூன் றாகுந் தெரியுங் காலே.**

(எ, சூ-ன்) இருவரு முள்வழி யவன்வர வுணர்தலின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இருவரு முள்வழி யவன் வரவுணர்தல் என்பது, தலைமகன் தழையுங் கண்ணியு மேந்தி முன்பு போல வூர் பெயர் முதலாயின வினவின விடத்துத் தோழி யதற்கெதிர் மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலும் மதியினி னவரவர் மனக் கருத்துணர்தலு மென வொரு மூன்றாகு மாராயுங் காலத்தென்றவாறு.

கையுறை யேந்தி வருதற்குச் செய்யுள்:—

தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை
தன்னையும்போல்
வண்டார் குழன்மட வார்மணந் தார்சென்று வாணன்றஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழந் நுடங்கிடையார்க்
கண்டாதர வையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே

எனவரும்.

தலைவனவ்வகை வினுதற்குச் செய்யுள்:—

வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்தஞ்சை வாணனைக்கண்
டொல்லார் களத்தி னுடைந்தது போல வொருகலைபோர்
வில்லார் கணைதைப்ப மெய்சோர்ந் தினம்விட்டு
வெய்துயிர்த்துப்
புல்லார் வதுமின்றி யேவந்த தோநும் புனத்தயலே

எனவும்

"அம்பு முகங்கிழித்த வெம்புண் வாய
கலைமான் போந்தன வுளவோ
வரிமா னேக்கி வரிப்புனம் படர்ந்தே"

எனவும் வரும் பிறவுமன்ன

பாங்கி தலைமகற் கெதிர்மொழி கொடுத்தற்குச் செய்யுள்:—

"வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன்மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
கோக்குஞ் சரமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரேங்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே"

எனவும்,

"வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேஞ்
சோர்ந்து குருதி யொழுகமற் றிப்புனத்தே
போந்தில வைய களிறு"

எனவும் வரும், பிறவுமன்ன.

பாங்கி யிறைவனை நகுதற்குச் செய்யுள்:—

"மைவா ளிலங்குகண் மங்கைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பி
லிவ்வாளி மொய்ம்பரின்றெய்தமெய்ம்மானிள மாந்தளிரின்
செவ்வாளி யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று
சீதைகொண்கன்
கைவாளியுங்கொண்டுபோனபொய்ம்மானிறுங்கள்ளத்ததே'

எனவும் வரும்.

பாங்கி மதியி னவரவர் மனக்கருத் துணர்தற்குச் செய்யுள்:—

"புனங்கா வலன்றிவள் பூண்டது மாண்டகை போந்ததுமா
னினங்காவ லின்கலை யெய்யவன் றுலிக லாழிவிந்தை
தனங்கா வலன்றஞ்சை வாணனன் னாட்டிவர் தங்களிற்ரு
மனங்காவல் கொண்டதெல் லாங்கண்க ளேசொல்லும்
வாய்திறந்தே

எனவும்,

ஏனல் காவ லிவளு மல்லள்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனோ டிவளிடை
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் னுணினர் போலத் தம்முண்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே

எனவும் வரும்,

இவை யெல்லாந் தோழி கூற்றுள்

''வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறித்த காரணங் குறித்த காலையும்''

என்பதனுற் கொள்ளப்பட்டன. (25)

142] பாங்கி மதியுடன்பாட்டின் விரி

**ஈங்ஙன மியம்பிய விருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடன் பாட்டது விரியே.**

(எ, சூ-ன்) பாங்கிமதி யுடன்பாட்டின் விரியிவையென வுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) ஐயமுற்றோர்தன் முதலாக மதியினி னவரவர் மனக்கருத் துணர்த லீருகச் சொல்லப்பட்ட வெட்டுக்கிளவி யும் பாங்கிமதி யுடன்பாட்டது விரியாமென்றவாறு. (26)

9. பாங்கியிற் கூட்டம்.

143] பாங்கியிற் கூட்டத்தின் வகை

**இரந்துபின் னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படன் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்தல் நயத்தல் கூட்டல்
கூட லாயங் கூட்டல் வேட்டலென்
றீராறு வகைத்தே யிகுளையிற் கூட்டம்.**

(எ, சூ-ன், பாங்கியிற் கூட்ட முணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இரந்து பின்னிற்றல் முதலாக வேட்ட லீருகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு வகையினை யுடைத்துப் பாங்கி யிற் கூட்ட மென்றவாறு.

144] *இரந்துபின் நிற்றலுஞ் சேட்படையும்*

தலைவ னுட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலுந் தலைவன் றலைவி
தன்னை யுயர்த்தலும் நன்னுதற் பாங்கி
யறியாள் போன்று வினாதலு மிறையோ
னிறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலுந் தலைவ
னின்றியமை யாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை யூட்டலுங் காதலன் றலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலுந்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
யுலகிய லுரைத்தலுந் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலு மாங்கவன்
கையுறை புகழ்தலுந் தையன் மறுத்தலு
மாற்று நெஞ்சினோ டவன்புலத் தலுமவ
ளாற்றுவித் தகற்றலு மாகுநா லைந்து
மிரந்துபின் னிற்றற்குஞ் சேட்படுத் தற்கும்
பொருந்துவ வென்மனார் தெரிந்திசி னோரே.

(எ, சூ-ன்) *பாங்கியிற் கூட்டத்தின் விரியுணர்த்துத லுதலிற்று*

(இ-ள்) *தலைவனுட் கோள் சாற்றன் முதலாகப் பாங்கி யாற்றுவித் தகற்றலீறுகச் சொல்லப்பட்ட விருபது மிரந்து பின்னிற்றற்குஞ் சேட்படுத்தற்கும் பொருந்துங் கிளவி யென்று சொல்லுவ ராய்ந்தோ ரென்றவாறு.*

அவற்றுட் டலைமகனுட்கோள் சாற்றற்குச் செய்யுள்:—

"வாவுங் கலைவிந்தை காவலன் வாணன்றென் மாறையன்னீ
ரேவுந் தொழிலெனக் கேதிய லாததிங் கேநுமக்கோர்
மேவுஞ்செய் குன்றமுஞ் சோலையு மாகப்பொன்
வெற்பும்விண்ணோர்
காவுந் தரவும்வல் லேனெனை யாளுங் கடைக்கண்வைத்தே"

எனவரும்.

பாங்கி குலமுறை கிளத்தற்குச் செய்யுள்:—

"நீவே றுரைக்கின்ற தென்குற மாதெங்க ணேரிழைபோர்
மாவேழ வன்படை வாணன்றென் மாறை மணியையன்றித்
தாவேது மில்லாத் தமரியமீது தலம்புரக்குங்
கோவே யழுத்துவ ரோவறி யோருங் குருவிந்தமே"

எனவும்,

"இவளே,
கான னண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்கவுள் புக்கு
மீனெறி பரதவர் மகளே
நீயே,
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதன் மகனே
நிணச்சுறு வறுத்த வுணங்கல் வேண்டி
யினப்புள் ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே" (நற்றிணை)

எனவும் வரும்,

தலைவன் றலைவியை யுயர்த்திக் கூறற்குச் செய்யுள்:—

"மிக்கா ருளரல்லர் மெல்லியன் மாதரின் மேதினிமேற்
றக்கார் புகழ்தஞ்சை வாணர்பி ரான்றமிழ் நாடனையாய்
மைக்கார் நிகர்குழல் வள்ளிசெவ் வேளுக்கு வல்லவையா
மிக்கா ரணமுண ராதென்கொ லோநின் றியம்புவதே"

(வெண்பா)

எனவும்,

"திங்களுள் வில்லெழுதித் தேராது வேல்விளக்கித்
தங்களுளா ளென்னுந் தகவினு—லிங்கட்
புனங்காக்க வைத்தார்போற் பூங்குழலைப் போங்தென்
மனங்காக்க வைத்தார் மருண்டு" (திணைமாலை—நூ)

எனவும் வரும்,

பாங்கி யறியாள் போன்று வினுதற்குச் செய்யுள்:—

"பொன்னிய லூசலும் பொய்தலு மாடியெப் போதுநன்னீர்
மன்னிய நீலமு நித்தில முங்குற்று வாணன்றஞ்சை
யின்னிய லாரு மிளமரக் காவி லிடம்பிரியாக்
கன்னியர் தாம்பலர் யார்நின்னை வாட்டிய காரிகையே"

எனவும்,

"வாங்கிருங் கானலுள் வண்ட லயருந்
தேங்கமழ் கூந்தன் மகளிருள்
யாங்கா கியதோ பாங்குநின் னருளே"

இறை யோனிறைவி தன்மை யியம்பற்குச் செய்யுள்:—

"தாளிணை மாந்தளி ரல்குல்பொற் றேரிடை சங்கைகொங்கை
கோளிணை கோலக் குரும்பைகைக் காந்தள் கொடிக்கரும்பார்

தோளிணை வேய்முகந் திங்கள்செவ் வாயிதழ்
தொண்டையுண்கண்
வாளிணை வார்குழ லாய்வாணன் மாறையெம்
மன்னுயிர்க்கே''

எனவும்,

''முலையே முகிழ்முகிழ்த் தனவே தலைஇய
கிளையே மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்ற னறிவலே தானறியலளே
யாங்கா குவள்கொ றானே
பெருமுது செல்வ னொருமட மகளே''

எனவும் வரும், குறுந்தொகை

பாங்கி தலைவி யருமை சாற்றற்குச் செய்யுள்:—

''புகழார் வரையெம் புரவலன் காதற் புதல்வியைநீ
ரிகழா வெளியளென் றெண்ணப்பெ றீரெமக் கென்றும்
வண்மை
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பினுள்ளீ
ரகழார் கலியுல கிற்புல னான வணங்கிவளே'' (தஞ்—86)

எனவும்,

''நெருநலு முன்னா ளெல்லையு மொருசிறைப்
புதுவீ ராதலிற் கிளத்த லானி
நேரிழை வளைத்தோ ணின்றோழி செய்த
வாருயிர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி

துஞ்சபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே''

என்வும் வரும்,

தலைமகன் இன்றி யமையாமை யியம்பற்குச் செய்யுள்:—

''வனைந்தா லனகொங்கை மாதுரு வாய்த்தஞ்சை வாணன் வெற்பிற்
புனைந்தா லனைய புனத்தயல் வாய்வண்டு போதகத்தே
னனைந்தா லனையவென் னல்வினை தான்வந்து நண்ணிற்றென்று
நினைந்தா லணங்கனை யாய்தமி யேனுயிர் நிற்கின்றதே''

எனவரும்,

பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றற்குச் செய்யுள்:—

மருப்பா வியதொங்கல் வாணன்றென் மாறை வனசமலர்த்
திருப்பாவை யன்னவென் சேயிழை யாட்குன் றிருவுளத்து
விருப்பா கியகுறை யுள்ளதெல் லாஞ்சொல்ல வேண்டுகநீ
பொருப்பா மொழியப்பெறுரெம்ம ரேரிவைபோல்வனவே''

எனவும்,

(வெண்பா)

தன்னையுந் தானுஞ் சாயலாட் கீதுரைப்பி
னென்னையும் நாணப் படுங்கண்டாய்—மன்னிய
வேயேய்மென் றோளிக்கு வேறு விளியொருநா
ணீயே யுரைத்து நிறு''

எனவும் வரும்,

பாங்கியைத் தலைவன் பழித்தற்குச் செய்யுள்:—

''வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல
வல்லாரிலை சொல்ல வல்லையென் றியான்றஞ்சை வாணன்றெவ்வி

ஞெல்லா திதுநுமக் கென்றுண ரேலின் றுணங்கி யிந்நாள்
எல்லா மிரந்தது நின்குறை யேயல்ல வென்குறையே''
எனவும்,

(வெண்பா)

''மாதர் குறைமுடிக்க வல்லாயை வல்லையெனக்
காதல் சிறப்பக் கருதியது—மேதகைய
பாம்படுதே ரல்குல் பயம்படுநீர் மானமான்
றேம்படுவெண் டேர்மேற் செலல்''

எனவும் வரும்.

பாங்கி பேதைமை யூட்டற்குச் செய்யுள்:—

''தேனுஞ் சுரும்புஞ் செறிதொங்கல் வாணன்றென் மாறைவெற்பா
மானுங் கலையும் வடிக்கணை யாலெய்து மன்னுயிரு
மூனுங் கவர்கின்ற தன்னையர் போலயி லொத்தகண்ணு
டானும் பிறருள்ள நோயறி யாத தகைமையளே''

எனவும்,

(வெண்பா)

''நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வெட்டி—யெறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்ளோ நோக்கு''

எனவும் வரும்,

காதலன்றலைவி மூதறிவுடைமை மொழிதற்குச் செய்யுள்:-

''வருநீர் வனமுலை மங்கைநல் லாய்செங்கை வாணன்வையை
தருநீர் மலிவயற் றஞ்சையன் ஞளன்று தஞ்சமிலே
னருநீர் நவையுறக் கண்மலர் நீர்தெளித் தாற்றினளா
லிருநீர் நிலங்கொள்ளு மோவறி யாளென்னு மிவ்வுரையே''
எனவும்,

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கின ளுணங்கிடைப்
பொங்கரி பரந்த வுண்க
ணங்கலுழ் மேனி யசைஇய லெமக்கே

எனவும் வரும்,

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறற்குச் செய்யுள்:-

"செறிவளர் காவி வயற்றஞ்சை வாணன் றெனமலைமே
னெறிவளர் வார்குழ னேரிழை யாளன்ன நீர்மையளேற்
குறிவளர் காவின்முன் கூடிய வாறின்றுங் கூடுகநீ
கறிவளர் சாரல்வெற் பாபிற ராலென்ன காரியமே"

எனவரும்,

தன்னிலை தலைவன் சாற்றற்குச் செய்யுள்:—

உரைத்தென் பிறவந்தப் பைந்தொடி யாக-முருவிடின்வெண்
டிரைத்தென் கடன்முத்துந் தென்மலைச் சந்துஞ் செழும்பனிநீ
ரரைத்தென் புருகமெய் யப்பினும் வெப்ப மருதிரிகின்
வரைத்தென் கருமமெல் லாந்தஞ்சை வாணன்
வரையணங்கே"

எனவும்,

"தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ வண்கோற் குட்டுவன்
றொண்டி யன்ன வேற்கண்
கண்டு நயந்துநீ நல்காக் காலே"

எனவும் வரும்,

பாங்கி யுலகிய லுரைத்தற்குச் செய்யுள்:—

"விரையக நாண்மலர் மெல்லியன் மாதை விரும்பினையேல்
வரையக நாட வரைந்துகொ ணீதஞ்சை வாணன் முந்நீர்த்
திரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்
முரையக நாடிமுன் னிட்டன வாகு முலகியலே"

எனவும்,

"கோடீ ரெல்வளைக் கொழுமடற் கூந்த
லாய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறாப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ

எனவும் வரும்,

தலைமகன் மறுத்தற்குச் செய்யுள்:—
"வெண்டா மரைமங்கை காதல னாகிய வேதியன்பா
லுண்டா கியதொல் லுலகிய லாலுங்க ளாரணங்கை
வண்டார் குழலி வரைந்துகொள் வேன்றஞ்சை
வாணன்வண்மை
கண்டா லருளுள்ள நீயென தாருயிர் காத்தபின்னே"

பாங்கியஞ்சி யச்சுறுத்தற்குச் செய்யுள்:—

"மல்லார் புயன்றஞ்சை வாணன்வெற் பாவெமர் வந்திரியிக்
கல்லார் வியன்புனங் காவல் விடாரவர் காணின்மிகப்
பொல்லா ரிருண்டது போதுமற் றியாங்களும் போதுமிங்கு
நில்லா தெழுந்தரு ணீயுமிப் போது நெடுந்தகையே"
எனவும்,

(வெண்பா)

"விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்
வரையிடை வாரன்மி னையா—வுரைகடியர்
வில்லினர் வேலர் விரைசெலு மம்பினர்
கல்லிலிடை வாழ்ந ரெமர்"

எனவும் வரும்,

தலைமகன் கையுறை புகழ்தற்குச் செய்யுள்:—

"சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்
உமையா ளிறைவன் பயில்கயி லாயத்து ழும்பர்தங்கும்
இமையா சலத்துமல் லாலில்லை யாளிக ரித்தழைக்கே"

எனவும்,

"கண்ணி தகைசிறந் தனவே தண்ணென்
பூந்தழை செவ்விய போலும் வாங்கிருங்
கூந்தலு மல்குலும் பொலிய
வேந்திழை கொள்கயாம் விழைகுவம் பெரிதே"

எனவும் வரும்,

பாங்கி கையுறை மறுத்தற்குச் செய்யுள்:—

மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பா
நல்குற் றவையிந்த நாட்டுள வன்மையி னன்னுதலாள்
அல்குற் றடத்தெமர் கண்டா லயிர்ப்ப ரதுவுமன்றிப்
பல்குற் றமும்வரு மால்பாங்கள் வாங்கேம் பசுந்தழையே

எனவும்,

"ஞாதும லாளர் கொள்ளா ரிவையே
யெம்மொடு வந்து கடலாடு மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்
உடலகங் கொள்வோ ரின்மையிற்
றொடலைக் குற்ற சிலபூ வினரே"

எனவும்வரும். பிறவு மன்ன

தலைமக னாற்றா நெஞ்சினோ டவன்புலத்தற்குச் செய்யுள்:—

"உழையும்வெங் காளமும் போலுங்கண் ணாளொரு காளமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக் கோடைமண்மேன்
மழையுமந் தாரமும் வந்தன்ன வாணன்றென் மாறையின்மாந்
தழையுநம் போலிங்ங னேகவின் வாடத் தவஞ்செய்ததே"

எனவரும்,

பாங்கி யாற்றுவித் தகற்றற்குச் செய்யுள்:—

"சோலையில் வாழிளந் தோகையன் னாளைத் தொழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்றஞ்சை வாணன் வெற்பா
வேலையில் வார்துகி ரன்னவெய் யோன்வெயில் வெற்பின்மல்குங்
காலையில் வாபின்னை யென்கைய தாகுநின் கையுறையே"

எனவும்,

"நாள்வேங்கை பொன்சொரியும் நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடிய ரெம்மையர்-கோள்வேங்கை
யன்னையா லியு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது"

எனவும் வரும்,

இவற்றுள் தலைவன் கூற்றாயின வெல்லா மிரந்து பின்னிற்றற்கும் பாங்கி கூற்றாயின வெல்லாஞ் சேட்படுத்தற்கு முரியவெனக்கொள்க. (23)

145] மடற்கூற்றும், மடல்விலக்கும்

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்

குலகின் மேல்வைத் துரைத்தலு மதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலுந்
தலைமகன் றன்னைத் தானே புகழ்தலும்
அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தலுங்
கொண்டுநிலை கூறலு மென்றிவை யேழும்
மடற்கூற் றிற்கு மடல்விலக் கிற்குங்
கடவ வென்மனுர்*கற்றுணர்ந் தோரே.

இதுவுமது,

(இ-ள்) இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தன் முதலாகப் பாங்கி கொண்டு நிலைகூற லீறாகச் சொல்லப்பட்ட வேழுந் தலைமகன் மடற்கூற் றிற்குந் தோழி மடல் விலக்கிற்கு முரிய கிளவியென்று சொல் லுவர் கற்றுணர்ந்தோ ரென்றவாறு.

பாங்கியை யிரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தற்குச் செய்யுள்:—

"திருந்தார் தொழுங்கழற் சேயன்ன வாணன்றென் மாறைவெற்பி
லருந்தா வமுதன்ன வஞ்சொனல் லாரமு கார்குழைதோய்
பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே"

எனவும்,

திருக்குறள்

"காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி"

எனவும் வரும்,

(* 'கற்றறிந் தோரே' என்பதும் பாடம்)

பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை யுலகின்மேல் வைத்துரைத்தற்குச் செய்யுள்:—

"விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிறைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பனை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னை
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன்
மாறையில் வாணுதலே"

எனவும்,

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே"
(குறுந்தொகை—17)

எனவும் வரும்,

அம் மடலேற்றினைத் தலைமகன்றன்மேல்வைத்துச் சாற்றற்குச் செய்யுள்:—

வன்பணி போனிலந்தாங்கிய வாணன்றென் மாறைவெற்பின்
மின்பணி பூண்முலை மெல்லிய லீர்குறை வேண்டியுங்கண்
முன்பணி வேனின்று நாளைவெண் பூளை முகிழெருக்கோ
டென்பணி வேன்மடன் மேல்வரு வேனிவை யென்பணியே
எனவும்.

திருக்குறள்

"தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்"

எனவும் வரும்,

பாங்கி தலைமக ளவயவத்தருமை சாற்றற்குச் செய்யுள்:-

"தொடையே*யெருக்கணி நீயணிந் தாலென்னை சூல்வளையின்
மடையேய் வயற்றஞ்சை வாணன்வெற் பாமல
ரோன்வருத்த
படையே நயனம் படைத்தபொற் பாவைப் படியெடுக்க
விடையே தெனத்தெரி யாதுரை யாணி யிடவரிதே"

எனவும்,

(வெண்பா)

கம்பமத யானைக் கண்டன் கடற்றெண் டிக்
கொம்பர் விழிக்குவமைக் கூறுவதெ னம்பு
கருநீலஞ் செங்குவளை காலன்வே லாலம்
பெருநீர்மை தோற்றழிந்த பின்

எனவும் வரும்,

தலைமகன் றன்னைத்தானே புகழ்தற்குச் செய்யுள்:—

"நறையல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்து
மறைமல ராவந்த மான்மகன் யான்றஞ்சை வாணன்வையைத்
துறையல ராவியங் காவியங் கண்ணி துணிந்துசொல்லுங்
குறையல ரார்குழ லாட்கிலித் தீரக் குறையில்லையே"
எனவரும்,

பாங்கியரருளியல் கிளத்தற்குச் செய்யுள்:—

"செயலார் குடம்பையிற் செந்தலை யன்றிற் சினையுளபைங்
கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள கைக்கடங்கா
மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறைவை
யைத்துறைவா

எனவும்,
வியலா தரவுடை யார்க்கென்று மாமட லேறுவதே"

---

* யெருக்கென்பு (பா. பே.)

''வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
யவையினும் பலவே சிறுகருங் காக்கை
யவையினும் பலவே குவிமட லோங்கிரும்
பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூக்கணாங் குரீஇக் கூட்டுள சினையே(ஐங்குறுநூறு)

எனவும் வரும்,

பாங்கி கொண்டு நிலைகூறற்குச் செய்யுள்:—

"வெண்டோ டணிமுகப் பைங்குரும் பைக்கொங்கை வெய்யவுண்கட்
கண்டோர் *விரும்புங் கரும்பனை யாரைக் கடற்றுறைவா
கொண்டோர் குறைமுடி கொம்பனை யார்நின் குறைமறுத்தால்
வண்டோ லிடுந்தொங்க லான்வாணன் மாறை வளநகர்க்கே

எனவும்,

"முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு மின்நிலை யறியச்
சொல்லினெ னிரக்கு மளவை
வெள்வேல் விடலை விரையா தீமே"

எனவும் வரும்,

இது தலைமகனிலையைத் தாங்கிக்கொண்டு நிற்றலாற் கொண்டு நிலையாயிற்று. இச் சூத்திரத்துட் டலைமகன் கூற்றாயின வெல்லா மடற்கூற்றிற்கும் பாங்கி கூற்றாயின வெல்லா மடல்விலக்கிற்கு முரிய வெனக்கொள்க. இவ்விரண்டு சூத்திரத்துள்ளு மெடுத்தோதப்பட்ட கிளவிகளிவ்வியலுட் பாங்கி கூற்றுள்

---

* மகிழும் (பா. பே.)

"குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினு முலகுரைத் தொழிப்பினு
மருமையி னகற்சியு மவளறி வுறுத்துப்
பின்வர வென்றலும் பேதைமை யூட்டலு
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
மஞ்சியச் சுறுத்தலு முரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த விருநான்கு கிளவியும்"

என்பதனானும்

தலைமகன் கூற்றுள்

"தண்டா திரப்பினு மற்றைய வழியுஞ்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினு
மறிந்தோ ளயர்ப்பி னவ்வழி மருங்கிற்
கேடும் பீடுங் கூறலுந் தோழி
நீக்கலி னாகிய நிலையு நோக்கி
மடன்மா கூறு மிடனுமா ருண்டே"

என்பதனானும்

பொருளியலுள்

இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நால்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே"

என்பதனானுங் கொள்ளப்பட்டன. (29)

146] குறைநேர்தலும், மடற்கூற் றொழிதலும்

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலுந் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலுந் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
யென்னை மறைப்பி னெளிதென நகுதலு

மந்நகை பொருஅ தவன்புலம் பலுமவ
டேற்றலுங் கையுறை யேற்றலுங் கிழவோ
ளுற்றலு மென்னு மவ்வொன் பானுங்
குறைநேர் தற்கு மடற்கூற் றொழிதற்கும்
முறைமையி னுரிய முன்னுங் காலே.

இதுவுமது,

(இ-ள்) தலைவி யிளமைத் தன்மை பாங்கி தலைவற் குணர்த்தன் முதலாகக் கிழவோளுற்ற லீறாகச் சொல்லப் பட்ட வொன்பதும் பாங்கி குறை நேர்தற்குந் தலைமகன் மடற் கூற்றொழிதற்கும் முறையானே யுரியவாங் கருதுங் காலத் தென்றவாறு.

தலைவியிளமைத்தன்மை பாங்கிதலைவற் குணர்த்தற்குச் செய்யுள்:—

களவரும் பாகரு நீலங்கள் காமக் கடவுளுமால்
கொளவரும் பாபைங் குரும்பைக் குலஞ்செங் குமுதத்துவெண்
டளவரும் பாநண்ப னேதஞ்சை வாணன் றமிழ்வையைநாட்
டிளவரும் பாமிவண் மாட்டென்கொ லோநின் றிரக்கின்றதே

எனவும்,

"நெறிமருப் பெருமை நீல விரும்போத்து
வெறிமலர்க் குவளையோ டாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே. (ஐங்குறுநூறு)

எனவும் வரும்,

தலைவன் றலைவி வருத்திய வண்ண முரைத்தற்குச் செய்யுள்:

"சிலைபயில் வாணுதல் மின்னே பிறந்தவச் செவ்வியிலே
கொலைபயி லுகக் குருளையைப் போற்குறி யோனிருந்த
மலைபயில் வார்தமிழ் வாணன்றென் மாறை மயிலனையா
ளலைபயி லால்விழி யாலென தாவி யணங்கினளே

எனவும்,

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்றின
ளிளைய ளாயினு மாரணங் கினளே" (ஐங்—நூறு)

எனவும் வரும்,

பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பற்குச் செய்யுள்:—

"ஏடா ரலங்க லிலங்கிலை வேல்வெற்ப வேழுலகும்
வாடாமல் வந்தருள்வாணன்றென் மாறையில் வல்லியன்னாள்
சூடாள் குவளையும் முல்லையுஞ் சூட்டுஞ் சுனையுட்பந்து
மாடா டனக்கென்கொ லோவடி யேன்சென் றறிவிப்பதே"

எனவும்,

"நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ *னாடலு மாடாள்
சிறுநுதல் வேர்வரும்பச் சிந்தியா நின்றாட்
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ"

எனவும் வரும்,

தலைவன் றலைவி செவ்வியெளிமை செப்பற்குச் செய்யுள்:-

"தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர் யாவரென்னாள்
தான்வந் தவாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொளுமே"

எனவும்,

"நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள்கா
லுருரித் தன்ன மதலின் மாமைக்

*னாட்டலு மாட்டாள் (பா. பே.)

குவளை யன்ன வேங்தெழின் மழைக்கட்
டிதலை யல்குற் பெருந்தோட் குறுமகட்
கெய்தச் சென்று செப்புநர்ப் பெறினே
யவர்யா ரென்குவ ளல்லண் முறைஅ
தத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
யெறிமட மாற்கு வல்சி யாகும்
வல்வி லோரி கான நாறு
மிரும்பல் லொலிவருங் கூந்தற்
பெரும்பே துறுவளியாம் வந்தன மெனவே (நற்றிணை)

எனவும் வரும்,

பாங்கியென்னை மறைப்பி னெளிதென நகுதற்குச் செய்யுள்:

மண்ணும் பயில்வித்து மொன்றினுஞ்சந்திரவாணன்வெற்பா
நண்ணும் புனலின்றி யங்குரி யாதுங்க ணல்வினையாற்
கண்ணுங் கருத்துங் கலந்தன வாயினுங் கண்ணரினும்மு
ளெண்ணுங் குறையென்னை நீமறைத் தாலிங் கியல்வதன்றே

எனவரும்,

அங்கை பொருஅதவன் புலம்பற்குச் செய்யுள்:—

வெவ்வேலெறிந்தவிழுப்புண்ணரின் மீட்டும் வெதும்பியதோர்
செவ்வேல் செறிப்பவர் சீலமன் றேருதிரு வேமருவார்
வைவே லமர்வென்றவாணன்றென் மாறை மயில்பொருட்டா
னைவேனை யஞ்சலென் றுதின்ன வாறு நகைக்கின்றதே
(தட்-113)

எனவும்,

"நயனின் மையிற் பயனிது வென்றுது
பூம்பொறி பொலிந்த வழலுமி ழுகன்பைப்
பாம்புயி ரணங்கி யாங்குத் தீங்கிது
தகாது வாழியோ குறுமக ணகாஅ

துரைமதி யுடையுமென் னுள்ளஞ் சாரற்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த மாயிரு மழைக்க
ணுருஅ நோக்க முற்றவென்
னையு ணெஞ்ச முய்யு மாறே" (நற்றிணை-75)

எனவும் வரும்

பாங்கி தலைமகனைத் தேற்றற்குச் செய்யுள்:—

"தன்கண் ணனையதன் பாங்கிய ருள்ளுந் தனக்குயிரா
மென்கண் ணருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகன்மலைந்தார்
வன்கண் ணமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்தவளாற்
புன்கண் ணடையலை நீயினி வாடல் புரவலனே"
(தஞ்சை—14)

எனவரும்,

பாங்கி கையுறை யேற்றற்குச் செய்யுள்:—

"ஒலிதெண் கடல்புடை சூழுல கேழினு மூழினுந்தான்
வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா
கலிதெங்கு மாவுங் கமுகும்ப லாவுங் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேற்சந்த னடவிப் பூந்தழையே"

(தஞ்-115) எனவரும்.

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர் (திருக்குறள்)

எனவும் வரும்,

கிழவோ ளுற்றற்குச் செய்யுள்:—

மைப்போ தணிதொங்கல் வாணனென் ருெரனவல்வினையேற்
கப்போ தடைந்த வருந்துயர் நீங்கி யரும்பியபொற்
செப்போ திளமுலை யாணகை வாண்முகத் திங்களைக்கண்
டிப்போ திளகிய தாலிந்து காந்தங்கொ லென்னெஞ்சமே''
(தஞ்-116)

எனவும்,

"உருஅ தவர்போற் சொலினுஞ் செருஅர்சொ
லொல்லை யுணரப் படும்" (திருக்குறள்)

இதனுட் பாங்கி கூற்ருயின வெல்லாங் குறைநேர்தற்குந் தலைவன் கூற்ருயின வெல்லா மடற்கூற்றெழிதற்கு முரிய வெனக் கொள்க. இதனுளெடுத் தோதப்பட்ட கிளவிகள்,

"பண்பிற் பெயர்ப்பினும் பிரிவுற்று மெலியினு
மன்புற்று நகினு மவட்பெற்று மலியினு
மாற்றிடை யுறுதலு மவ்வினைக் கியல்பே"

என்பதனுற் கொள்ளப்பட்டன. இவற்றுட் சான்ருேர் செய்யுளில்லாதனவற்றிற்குச் சூத்திரந்தன்னையே யிலக்கிய மாகக் கொள்க. (30)

147] குறைநயப்பித்தலும் மறுத்தலும்

இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
யிறைவிக் கவன்குறை யுணர்த்தலு மிறைவி
யறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி யிறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
யென்னை மறைப்ப தென்னெனத் தழாஅலுங்
கையுறை புகழ்வுமென் றிவ்விரு மூன்று

மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
வலிதாகச் சொல்லி மறுத்தற்கு முரிய.

இதுவுமது,

(இ-ள்) இறைவன்றனக்குக் குறைநேர் பாங்கி யிறைவிக் கவன் குறையுணர்த்தன் முதலாகப் பாங்கி கையுறை புகழ்த லீறுகச் சொல்லப்பட்ட வாறும் பாங்கி மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும் தலைமகள் வலிதாகச் சொல்லி மறுத் தற்கு முரிய கிளவியா மென்றவாறு.

இறைவன் றனக்கு குறைநேர் பாங்கி யிறைவிக்கவன் குறையுணர்த்தற்குச் செய்யுள்:—

''இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே
வருவர்வந் தாலுந்தம் வாய்திற வார்தஞ்சை வாணன்வெற்பி
னொருவர்நஞ் சார லுழையக லார்தழை யுள்ளதெல்லாந்
தருவர்வம் பார்முலை யாயென்கொ லேசெய்யத் தக்கதுவே''

(தஞ்சை—117)

எனவும்,

(வெண்பா)

''தன்குறையி தென்னுன் றழைகொணருந் தார்மார்ப
னின்குறை யென்று நினைப்பினனுய்ப்—பொன்குறையு
நாள்வேங்கை நீழலு ணண்ணு னெவன்கொலோ
கோள்வேங்கை யன்னுன் குறிப்பு''

(திணைமாலை நூற்றைம்பது)

எனவும் வரும்,

இறைவி யறியாள் போன்று குறியாள் கூறற்குச் செய்யுள்:-

''கலைதொடக் கீண்டு கருவியந் தேன்பல கால்கொடுமா
மலைதொடுத் தார்ந்து வருகின்ற தாற்றஞ்சை வாணன்வென்றிச்
சிலைதொடுத் தாங்கெழில் சேர்நுத லாய்பயில் செம்பழுக்காய்க்
குலைதொடுத் தோங்குபைங் கேழ்ப்பூகநாகக்குழாங்கவர்ந்தே''

(தஞ்சை—118)

எனவும்,

"தூய்மை சான்ற தொல்குடித் தோன்றி
வாய்மை நாவின் மதியான் போல
வுயர்தவ முனிவர் சார்வாப்
பெயரா நிலையது பிறங்குதிரு மலையே"

எனவும் வரும்,

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தற்குச் செய்யுள்:—

"திவாகர னேயன்ன பேரொளி வாணன்றென் மாறைநன்னாட்
டுவாமதி போலு மொளிர்முகத் தாயென் னெளிப்பதுன்மே
லவாவின னாகியொர் மானவி னாவிவந் தானையின்றிக்
கவானுயர் சோலையின் வாய்வண்ட லாருழைக் கண்டனமே"
(தஞ்—119)

எனவும்,

"வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
யிளைய ராடுந் தழையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே"

எனவும் வரும்,

பாங்கியைத் தலைவி மறைத்தற்குச் செய்யுள்:—

"செவ்வண்ண வேல்விழி யாய்தஞ்சை வாணன்றென்
மாறைநன்னாட்
டிவ்வண்ண நீசொல்வ தேற்பதன் றேநின்
னிடையெனத்தாம்
மெய்வண்ணம் வாடி வெறிதே வருந்தி
விருந்தினராய்க்
கைவண்ண வார்தழை கொண்டுசென் றார்தமைக்
கண்டுகொண்டே"

எனவும்,

"தெருவின்கட்
காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்" (கலித்தொகை)

பாங்கி யென்னை மறைப்பதென்னெனத் தழாற்குச் செய்யுள்:-

[தழாஅல்—தழுவிக் கூறல்]

"பரக்கின்ற செவ்விதழ்ப் பங்கயப் பாதம் பணிந்துநின்னை
இரக்கின்ற தொன்றையு மெண்ணிலை யாலெழு பார்முழுதும்
புரக்கின்ற கோன்றஞ்சை வாணன் பொதியிலிற்
பொய்த்தென்னைநீ
கரக்கின்ற தென்னைகொ லென்றுயி ராகிய காரிகையே"

எனவும்,

"வாள்போழ் வானத்து வயங்குகதிர் சிதறிக்
கோள்சேர்ந்து கிடந்த குழவிப் பிறையேய்ப்பப்
பொறியணி திலக நறுநுதல் வியர்ப்பப்
பொற்பப் புனைந்து நற்போ தவிழ்ந்து
நறிய நாறுநின் கூந்தலு மன்றி
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
விசும்புதொட நிவந்த வியன்பெருங் கோயில்
பசும்பொ னன்கலம் பரிசி லாக
வடையார்த் துறந்த வருந்திற லயிலவன்
படைத்தலை பெயர்த்த கறையெஃகம் போலக்
கடைசிவந் தனவே கருங்கயன் மழைக்கண்
ணென்னொடு சூழா யாகி னின்னோ
டாட லஞ்சுவ றேழீ நீடுறை
நிறைகட லுமிழ்ந்த நீணீர்ப் பறைவா
யோதத்துப் பனித்திரை பொருத கால்சாய்
புன்னைக் காமர் புதுப்பூ வுதிர
நூல்கான் முத்தி னுண்ணுதி னுறைய

நெடும்பணைப் பள்ளி வீழ
மிடுமண லெக்கர்க் கானல் யானே”

எனவும் வரும்.

பாங்கி கையுறை புகழ்தற்குச் செய்யுள்:—

“சூடத் தகுவன வல்லவெல் லாம்படி சொல்லினுந்தாம்
வாடத் தகுவன வல்லநல் லாய்தஞ்சை வாணன்வெற்பர்
தேடத் தகுவன வல்லதல் லாத சிலம்பினுள்ளார்
நாடத் தகுவன வல்லகல் லார நறுந்தழையே”

எனவும்,

ஐங்குறு நூறு

“நெய்யொடு மயக்கிய வுழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் றலையது
செயலையம் பகைத்தழை வாடு மன்னும்”

எனவும் வரும்.

இதனுட் பாங்கி கூற்றாயின வெல்லாம், குறை நயப்பித்தற்கும், தலைமகள் கூற்றாயின வெல்லாம் குறை மறுத்தற்கு முரிய வெனக் கொள்க. (31)

148] குறை நயப்பித்தலும் நயத்தலும்

**தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தலும்
மறுத்தற் கருமை மாட்டலுந் தலைவன்
குறிப்புவே றாக நெறிப்படக் கூறலுந்
தலைவியை முனிதலுந் தலைவி பாங்கி
தன்னை முனிதலுந் தன்கைக் கையுறை
யேற்றலு மெனமுறை சாற்றிய வாறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய.**

இதுவுமது.

(இ-ள்) தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தன் முத லாகக் கையுறை யேற்ற லீறாக முறையே சொல்லப்பட்ட வாறும் வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தற்கும் மெலி தாகச் சொல்லி மேவற்கு முரிய கிளவிகளா மென்றவாறு.

தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தற்குச் செய்யுள்:—

"வனையுங் குழல்வஞ்சி வாணன்றென் மாறை வரைக்களிறு
தினையுந் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தவின்னீர்ச்
சுனையுண் டசோக நிழற்சோக நீங்கித் துயில்வதுகண்
டனையுங் கடைக்கணி யாவினை யாகிற்ப ரேதிலரே"

எனவும்,

"பருவர னெஞ்சே மேவ றவிராது
செருவே லுதியன் சேண்விளங்கு முறிக்
கருங்கழிக் காவி யொடுகலாங் கருதிய
பெருங்கண்மா யோளே நாங்கடி கொண்ட
செந்தினை கவர்ந்த பைங்கண் வேழங்
கருவரைப் பிரசங் கையின் வாங்கி
யீயின மிரிய வீசி
வயவுப் பிடியின் வாயுறக் கொடுத்த
செவ்வி நோக்கி
யுருகு நெஞ்சமொடு நீடுநினைந்
தருகுசென் ஞமலியு மென்னையு நோக்கிக்
கழலொலி கரப்ப வொதுங்கி
நிழலென நிற்ப ஞெருநினை நினைந்தே"

எனவும் வரும்,

தோழி தலைமகனை மறுத்தற்கருமை மாட்டற்குச் செய்யுள்:-

"கையுந் தழையுமுன் காண்டொறுங் காண்டொறுங்
கட்டுரைத்த

பொய்யுந் தொலைந்தன பூந்தழை போலரி
போர்த்துநஞ்சு
மையுங் கலந்துண்ட வாள்விழி யாய்தஞ்சை
வாணன்வெற்பர்
மெய்யுந் துவண்டதென் ஞன்முடி யாது
வெளிநிற்கவே''

எனவும்,

''தேர்சே ணீக்கித் தமியனில் வந்து
நும்மூர் யாதென் றுன்னிநனி யொதுங்கி
முன்னுட் போகிய துறைவ னென்ன
லகலிலை நாவ லுண்டுறை யுதிர்ந்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
குழை வேரளை விழ்துணைக் கிடூஉ
மலவற் காண்டிக நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே
யுதுக்காண் டோன்றுந் தேரே யின்று
நாமெதிர் கொள்ளே மாகிற் றுனது
துணிகுவன் போலா நாணுமிக வுடையன்
வெண்மணா னெடுங்கோட்டு மறைகோ
வம்ம வாழி கூறுமதி யெமக்கே''

எனவும் வரும்,

தோழி தலைமகன் குறிப்பு வேறாக நெறிபடக் கூறற்குச் செய்யுள்:—

''விடையான் மிசைவரு மேருவில் லானொடு மேழிவென்றிப்
படையா னொடும்வெம் பகைகொள்வ தோபகல்
போலுமெய்ம்மை
யுடையா னுயர்தஞ்சை வாணனொன் னேரென
வொல்கியநுண்
ணிடையாய் பிறிதுகொ லோவறி யேன்வெற்ப
ரெண்ணுவதே''

எனவும்,

"மறவல் வாழி தோழி துறைவர்
கடல்புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனை தேறிஙிற் பாடும் பொழுதே"

எனவும் வரும்,

தோழிதலைவியை முனிதற்குச் செய்யுள்:—

"தூற்று தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்ற
மேற்று தொழியெனை யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு
மாற்று தருள்புரி வாணன்றென் மாறையில் வந்துநெஞ்சம்
போற்றுது நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத்தருளே"

எனவும்,

"மயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னென்ன வயங்குவெள் ளருவி
யம்மலைக் கிழவோ னின்னயந் தென்றும்
வருந்தின னென்னும் வாய்ச்சொற் றேறாய்
நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு மறுத்தற்
கரியர் வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டுநா டார்த மொட்டியோர் திறத்தே"

எனவும் வரும்,

தலைவி பாங்கியை முனிதற்குச் செய்யுள்:—

"மற்றே தவர்நினை வார்தஞ்சை வாணன் வரையின்முன்னாட்
பொற்றேரின் வந்து புணர்ந்துசென் றார்தம்
பொருட்டுநம்மைக்
குற்றேவன் மங்கை குறையிரந் தாளெனுங் குற்றமிந்நா
ளெற்றே தவறுநம் பாலில்லை யாகவு மெய்தியதே"

எனவும்,

"விட்ட குதிரை வியப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனிலா னேறு போலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே"

எனவும் வரும்,

தலைவி பாங்கிதன்கைக் கையுறை யேற்றற்குச் செய்யுள்:-

"ஆற்றுந் தலைவ ரருந்துய ராற்றினு மாற்றலனாண்
மாற்றும் புனையின் மயிலையன் றைய்தஞ்சை வாணன்றெவ்விற்
போற்றுங் கொடுவினை யேம்புனை யாவிடிற் போந்தலரே
தூற்றுந் தழையென்றி தொன்றெங்ஙனே வந்து
எனவும், தோன்றியதே"

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
வலங்குகுலைக் காந்த டண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாட
னுடுக்குந் தழைதந் தனனே யவையா
முடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்
கேளிடை படுத்தலு மஞ்சுது மாயிடை
வாடுவ கொல்லோ தாமே யவர்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே"

எனவும் வரும்

இவற்றுட் பாங்கி கூற்றாயின வெல்லாங் குறைநயப்பித்தற்குந் தலைவி கூற்றாயின வெல்லாங் குறைநேர்தற்கு முரிய கிளவி யெனக் கொள்க.

நயத்தல் மேவல் விரும்பல் என்பன ஒரு பொருட் கிளவிகள். (32)

149] கூட்டல் கூடல் ஆங்கூட்டல் வேட்டல்

இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தலுங் குறியிடங் கூறலுங்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலுங்
குறியிடத் துய்த்து நீங்கலு மிறையோ
னிடத்தெதிர்ப்படுதலு மியைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து
கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலு மூலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலு மென்னத் தெரிந்தபன் மூன்றுங்
கூட்டன் முதலா வேட்ட லீருப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கு முரிய.

இதுவுமது,

(இ-ள்) இறைவி கையுறை யேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தன் முதலாகத் தலைமகன் விருந்திறை விரும்பலீறுக வாராய்ந்த பதின்மூன்றுங் கூட்டலுங் கூடலும் பாங்கிற் கூட்டலும் வேட்டலுமென நான்கிற்கு முரியவா மென்றவாறு.

இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தற்குச் செய்யுள்:—

போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றியன்பால்
சாயாத கொங்கையின் மேலணைத் தாடஞ்சைவாணன்வெற்ப
காயா மலரன்ன மேனிமெய் யாகநின் கையுறையை
நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே''

எனவும்,

"தந்துநீ யளித்த தண்டமிழ் காண்டலும்
வந்தன ளெதிர்ந்த மடந்தைதன் னெஞ்ச
மண்மிசை விளங்கிய வழுத்தீர் மதியா
னுண்ணியற் பனுவ லுழைபொரு ளுளித்த
வாய்மொழி யமுத மடுக்குவண் மன்னே
யானிறை பெற்றது மிலனே"

எனவும் வரும்.

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறற்குச் செய்யுள்:—

"அணிமா மலர்மயி லைப்புயத் தூணங்கொ ளாகமெனு
மணிமா ளிகைவைத்த வாணன்வண்காவலன் மாறைவெற்பா
துணிமா மரகதப் பாசடை வேலைச் சுடரவன்போற்
பணிமா மணிதிக ழும்பகல் யாங்கள் பயிலிடமே"

எனவும்,

வெண்பா.

"கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க—தடம்புலாந்
தாழைமா ஞாழற் றகைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா ணேக்கி யிடம்"

எனவும் வரும்.

பாங்கி குறியிடத் தின்றவிளைக் கொண்டு சேறற்குச் செய்யுள்.—

"நாமாவி ழூழ்கி நறுமலர் குற்றுங் காவனத்துத்
தேமா விளந்தளிர்ச் செவ்வண்ணங் கொய்து
சிலம்பெதிர்கூய்
வாமா னெடுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை
வாணன்வெற்பிற்
பூமா தவிப்பந்தர் வாய்விளை யாடுதும் போதுகவே"

என வரும்.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கற்குச் செய்யுள்:-

"கண்சாயல் கையுருக் கொண்டுதன் வேன்மயில்
காந்தள்வள்ளி
யெண்சாய வென்றனை யென்றுசெவ் வேளிவ
ரும்பவளம்
வண்சா யொசிக்கும் வயற்றஞ்சை வாணன்
மலையமராத்
தண்சாயை நின்றணங் குந்தைய லீநிற்கச்
சாரலிலே"

எனவும்,

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைகாந் தட்டே"

எனவும் வரும்.

இறைவி யிறையோனிடத் தெதிர்ப்படுதற்குச் செய்யுள்:-

"முயங்கிய நூபுரப் பங்கயத் தாளு முலைசுமந்து
தயங்கிய நூலிடை தானுமென் போலத் தளர்வுறவிங்
கியங்கிய வாறென் மனத்திரு ணீக்கவென் றேதுணிந்தோ
வயங்கிய சீருடை யான்வாணன் மாறை மணிவிளக்கே"

என வரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

"தருந்தாரு வஞ்சுங் கொடையுடை யான்றஞ்சை
வாணன்செஞ்சொற்
செருந்தார் பசுந்தமிழ்த் தென்வரை மேற்செம்பொன்
மேருவெற்பாற்

கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண்
கடல்கடைந்து
வருந்தா வமுதளித் தாள்வல்ல ளாமிம்
மடக்கொடியே''

என வரும்.

நலம் பாராட்டற்குச் (புகழ்தற்குச்)செய்யுள்:—

மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சைவாணன் வெற்பிற்
பயனார் பயோதரப் பாவையன் னீர்பசும் பொற்கழைதோய்
நயனார விந்தத்து நஞ்சுநும் வாயித மாலமுத
மயனார் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே''

எனவரும்,

தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செய்யுள்:—

''நேயம் புகலிட மின்றிநின் பால்வந்து நின்றதுபோ
லாயம் புகல வடைந்தரு ணீயடை யாதமன்னர்
வாயம் புகவில் வணக்கிய வாணன்றென் மாறைநன்னீர்த்
தோயம் புகரிணை வேல்விழி யாய்நின் றுணையுடனே''

எனவரும்,

பாங்கிதலைவியைச் சார்ந்து கையுறை காட்டற்குச்
செய்யுள்: —

''பொய்போ லிடைநின் விழிபோற் குவளையம் போதிவைநின்
மெய்போ லசோக மிளிர்பூந் தழையிவை மெல்லியநின்
கைபோற் கவின்கொள்செங் காந்தளம் போதிவை
கண்டருள்யான்
மைபோற் குழலிதந் தேன்றஞ்சை வாணன்
வரையினின்றே''

எனவும்,

"நறும்பூங் கண்ணியும் பெருந்தண் கோதையு
நறைவாய்ப் பிணையலு முகைவாய்ச் சூட்டும்
புனைந்தனை யருளல் வேண்டுஞ்
சினங்கொ டானைச் செழுமட மானே"

எனவும் வரும்,

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டற்குச் செய்யுள்:—

"குனிநாண் மதிநுதற் கோகில மேநின் குழலிலெல்லாப்
பனிநாண் மலரும் பறித்தணிந் தேனிந்தப் பார்மடந்தை
தனிநா யகன்றஞ்சை வாணன்றன் சாரற் றனித்துநில்லா
தினிநா மகன்றிளை யார்விளை யாடிட மெய்துகவே"

என வரும்.

பாங்கி தலைவியை நீங்கித்தலைவற் கோம்புடைசாற்றற்குச் செய்யுள்:—

"சின்னாண் மலர்க்குழல் காரண மாச்செவ்வி பார்த்துமுன்று
பன்னா ளுரைத்த பணிமொழி நோக்கிப் பழிநமக்கே
யென்னா திடைப்பட்ட வென்னிலை நீமற வேலிறைவா
தன்னாக மெய்ப்புக ழான்றஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே"

எனவும்,

"அவரை பொருந்திய பைங்குர லேனல்
கவரி மடமாக் கதூஉம் படர்சாரற்
கானக நாட மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை"

எனவும் வரும்,

பாங்கி தலைமகனை யுலகியன் மேம்பட விருந்து விலக்கற்குச் செய்யுள்:—

"வலைப்பெய்த மான்றசை தேன்றோய்த் தருந்தி மரைமுலைப்பா
லுலைப்பெய்த வார்தினை மூரலு முண்டுளங் கூருவனக

தலைப்பெய்த நாளனை யான்றஞ்சை வாணன் சயிலத்தெம்மு
ரிலைப்பெய்த வார்குரம் பைதங்கி ஞலுமக் கென்வருமே"

(*தஞ்சை-140*)

என்வும்.

"பன்ஞ ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பி னின்னிழ றழீஇப்
மாலை மான்கொள நோக்கிப்பண் ணுய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செலவிருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யனவிவ
ணல்லெழி லின்னலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோர் மன்ற மாறின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவட்
சேப்பி னெவ்வனோ பூக்கேழ் புலம்ப
பசுமீ னொடுத்த வெண்ணென் மாஅத்
தயிர்மிதி மாவார்குவ நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்டிமி
லெல்லுத்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்புடன்
கோட்சுருக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றாழை தூங்குந்
தெண்கடற் பரப்பினெம் முறைவி னூர்க்கே"

எனவும் வரும்.

தலைமகன் விருந்திறை விரும்பற்குச் செய்யுள்:—

"மஞ்சூட்டி யன்ன சுதைமதில் சூழ்தஞ்சை
வாணன்வெற்பிற்
பஞ்சூட் டியமென் பதயுகத் தீருங்கள் பாடியின்மான்
வெஞ்சூட் டிழுதன்ன வூனும்பைந் தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சூட் டிளகுபொன் போற்றினை மூரலுந் தெள்ளமுதே
(தஞ்சை—141)

எனவும்,

வெண்பா

"நாள்வாய்ப் பெறினுந்தம் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்—கேளாய்!
அபரானப் போழ்தி னடகிடுவ ரேனும்
தமராயார் மாட்டே யினிது" (நாலடி)

எனவும் வரும்,

இதனுட் பாங்கி கூற்றுயின வெல்லாங் கூட்டற்கும் வேட்டற்கு முரியவெனக் கொள்க தலைமகன் கூற்றுயின வெல்லாங் கூடற்குங் கூட்டற்கும் வேட்டற்கு முரியவை யெனக்கொள்க. இம் மூன்று சூத்திரத்துள்ளு மெடுத்தோ தப்பட்ட கிளவிகள் பாங்கி கூற்றுள் நன்னயம்பெற்றுழி நயம் புரி யென்பதனானும் தலைமகன் கூற்றுள் வேளாணெதிரும் விருந்தின் என்பதனுனுங் கொள்ளப்பட்டன. (33)

150] பாங்கியிற் கூட்டத்து விரி இவை எனல்

அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே

(எ, சூ-ன்) பாங்கியிற் கூட்டத்து விரியெல்லாந் தொகுத் துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) தலைமக னுட்கோள் சாற்றன் முதலாகத் தலைவன் விருந்திறை விரும்ப லீருகச் சொல்லப்பட்ட விவ்வறு பத்தொரு கிளவியும் பாங்கியிற் கூட்டத்து விரியா மென்றவாறு. (34)

10. பகற்குறி.

151] பகற்குறியின் வகை

கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்டலென் றொருநால் வகைத்தே பகற்குறி.

(எ, சூ-ன்) பகற் குறியின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) கூட்டன் முதலாக வேட்ட லீருக நான்கு வகையினை யுடைத்துப் பகற்குறி யென்றவாறு. (35)

152] பகற்குறியின் விரி

குறியிடங் கூறன் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்ப லீருப் பொருந்தப்
பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே.

(எ, சூ-ன்) பகற்குறியின் விரியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) குறியிடங் கூறன் முதலாக விருந்திறை விரும்ப லீருக மேற்பாங்கியிற் கூட்டத்து ளெடுத் தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறி விரியா மென்றவாறு.

உதாரண மேற்காட்டின வெனக் கொள்க, (36)

153] ஒருசார் பகற்குறியின் வகை

இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கிய மூவகைத் தொருசார் பகற்குறி.

(எ, சூ-ன்) ஒருசார் பகற்குறியின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இரங்கலும் வன்புறையு மிற்செறிப் புணர்த்தலு மென மூன்று வகையினையுடைத்தொரு கூற்றுப் பகற்குறி யென்றவாறு. (37)

154] ஒருசார் பகற்குறியின் விரி

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலுந்
தலைவ னிடத் தலைவி வருந்தலுந்
தலைவியைப் பாங்கிக் கழறலுந் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலு மின்னுயிர்ப்
பாங்கியொடு புகர்தலும் பாங்கியச் சுறுத்தலும்
நீங்கற் கருமை தலைவிநினைந் திரங்கலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுஞ்
சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலும்
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலும்
முன்னின் றுணர்த்தலும் முன்னின் றுணர்த்தி
யோம்படை சாற்றலு மேம்படு கிழவோன்
றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலு
மென்றவீ ரேழு மெல்லுக்குறி விரியே.

(எ, சூ-ன்) ஒருசார் பகற்குறிவிரி யுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுதுகண் டிரங்கன் முதலாகக் கிழவோன் றஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்த லீறுகச் சொல்லப்பட்ட பதினான்கு மொருசார் பகற்குறி விரியாமென்றவாறு.

ஒருசாரென்றததிகாரத்தால் விரித்துரைக்கப்பட்டது.

அவற்றுள்,

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கற்குச் செய்யுள்:—

"ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போலிவ் வளவிலன்பு
சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்சொற் பொருள்படைத்து
வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர் மானவெய்யோன்
விழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே"

எனவும்,

"நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக்
கல்சேர் மண்டிலஞ் சிவந்துசினந் தணியப்
பல்பூங்கானலு மல்கிற் றன்றே
யினமணி யொலிப்ப வேர்படப் பூட்டி
மெய்ம்மலி காமத்தி யாந்தொழு தொழியத்
தேரோ செல்புற மறையு மூரோ
டியாங்கா வதுகொ றுனே தேம்பட
வூதுவண் டிமிருங் கோதை மார்பின்
மின்லிவிர் கொடும்பூட் கொண்கனோ
டின்னகை யேவநா மாடிய பொழிலே"

எனவும் வரும்,

பாங்கி புலம்பற்குச் செய்யுள்:—

"காலையம் போருக வாண்முகத் தாளன்பர் கையகல
மாலையம் போது வருவித்து நீர்தஞ்சை வாணன்றெவ்வ
ராலையம் போலுங்க ளாதவன் கோயி லழல்கொளுந்த
வேலையம் போடுழல் வீர்பரி காளென்றும் வெய்துயிர்த்தே"

எனவும்,

"பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தொழுதிய குரீஇப் போலக்
கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ
வீரை வேண்மான் வெளியன் றித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோ டியம்ப நுண்பனி யரும்பக்
கையற வந்த பொழுதின் மெய்சோர்ந்
தவல நெஞ்சினேம் பெயர வுயர்திரை
நீடுநீர் பனித்துறை சேர்ப்ப
னேடுதேர் நுண்ணுக நுழைந்த மாவே"

எனவும் வரும்,

தலைவனீடத் தலைவி வருந்தற்குச் செய்யுள்:—

"ஆராத வின்ப மிடந்தொறு நீங்கிய வாயமென்பால்
வாராத முன்னம் வருகில ராற்றஞ்சை வாணன்வெற்பிற்
கூரா தரநல்கி வல்வினை யேனலங் கொள்ளைகொண்டு
தேரா தவனுட னேநென்னன் மாலையிற் சென்றவரே"

எனவும்,

"இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
வின்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே"

எனவும் வரும்,

தலைவியைப் பாங்கி கழறற்குச் செய்யுள்:—

"சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்றென் மாறைவெற்பர்
துறந்தா ரெனையென்று சோருவ தேனீந்தத் தொல்லுலகிற்

பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்துமால்வெய்ய பேரமர்க்கட்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே''

எனவும்,

''மகிணன் மார்பே வெய்யை யலர்நீ
யழியல் வாழி தோ ழிநன்ன
னறுமா கொன்ற ஞாட்பிற் போகிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே''

எனவும் வரும்,

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதற்குச் செய்யுள்:—

''பூவலர் வாவியி லீரற்ற போதுற்ற புன்மை யல்லாற்
காவலர்காமந் துறக்கிலென் னுங்கடம் பாய்மதுகை
மாவல வாணன் வயற்றஞ்சை வேந்தனை
வாழ்த்தல் செய்யா
மேவலர் போலுங் கழற்றுரை யாளர் வியனறிவே''

எனவும்,

''யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட்கி
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே''

எனவும் வரும்,

பாங்கியொடு பகர்தற்குச் செய்யுள்:—

(தலைவி தோழிக்குத் தலைவன் பிரிவால் தானுறுகின்ற துன்பத்தினைக் கூறல்)

''முலையார் முயங்கினு மல்லா விடத்தினு முரிமுந்நீ
ரலையா ரமுதமு நஞ்சமும் போல வணங்கனையாய்

தொலையாத வின்பமுந் துன்பமுங் காட்டுவர் தூங்கருவி
மலையா சலத்தமிழ் தேர்வாணன் மாறைநம் மன்னவரே''
எனவும்,

''நோமெ னெஞ்சே நோமெ னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சி
கட்கின் புதுமலர் முற்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதல
ரின்னா செய்த னோமெ னெஞ்சே''
(குறுந்தொகை—220)

எனவும்,

''என்கை கொண்டு தன்க ணொற்றியுந்
தன்கை கொண்டென் னன்னுத லீவியு
மன்னை போல வினிய கூறியுங்
கள்வர் போலக் கொடியன் மாதோ
மணியோ டிழிதரு மருவிப் பொன்னென
வேங்கை தாவு மோங்குமலை யடுக்கத்
தாடுகழை நிவந்த பைங்கண் மூங்கி
லோடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கன் மலைகிழ வோனே''
எனவும், (நற்றிணை—28)

''அசுணங் கொல்பவர் கையே போன்று
மின்பமுந் துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே''
எனவும் வரும், (நற்றிணை—304)

தலைவியைப் பாங்கி யச்சுறுத்தற்குச் செய்யுள்:—

''பேணற் கரியநின் பெண்மையு நாணமும் பேணியவர்
காணத் தகுமென்று காண்பதல் லாற்கழி காதனெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல வாகுதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடை யான்வாணன் மாறையி லின்னமுதே''

எனவும்,

"மனங்கா வலருமை வைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்புள்
இனங்காவல் மாற்றிய வேனல்கண் டாலன்னை யெப்படியுங்
கனங்காவல் கொண்ட கழையிருஞ் சாரற் கனங்குழைநின்
புனங்காவன் மாற்று மதன்பின்னர்க் காவலும்
பூணும்வந்தே"
(இலக்கண விளக்கம்-உரை)

எனவும்,

"மெய்யிற் றீரா மேவரு காமமோ
டெய்யா யாயினு முரைப்ப றேழி
கொய்யா முன்னுகுங் குரல்வார் புதினையே
யருவி (யார்ந்த) பைங்காற்றேறு
மிருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரிய நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவப் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடித றேற்றா ளிவளெனப்
பிறர்தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகு மவன்மணந்த மார்பே"

எனவும் வரும்.

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கற்குச் செய்யுள்:—

(நீங்கற்கருமை—தலைவனைவிட்டுப் பிரிதற்கருமை)

"குன்றா இயபொன்னும் வேழக் குழாமுங்
கொடைபுகழ்ந்து
சென்றார் முகக்குந் செழுந்தஞ்சை வாணன்றென்
மாறைவெற்பி

னன்று மிறைவற்கு நன்றியி லேற்முன்
றுன்முகத்தோ
ஞென்றுய் வகுத்தில னேயுயிர் போல
வுடம்பையுமே'' (தஞ்சை—149)

எனவும்,

''பூவுடைப் படினும் யாண்டு கிழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக்
காம மொடுடனுயிர்பொருத் திலனே
கடனறிந் திருவே மாகிய வில்வுலகத்
தோரு மோகிய புன்மைநா முயற்கே''

எனவும் வரும்,

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றற்குச் செய்யுள்:—

''நெஞ்சுக வாய்மல ரன்னகண் ணீர்மல்க நின்றவஞ்சொற்
கிஞ்சுக வாய்வஞ்சி கேட்டரு ணீயுங் கிளைத்தமிழோர்த்
தஞ்சுக வாய்மொழி நெஞ்சுடை யான்றஞ்சை
வாணன்வெற்பின்
மஞ்சுக வார்த்தன வாலவர் தேரின் மணிக்குரலே''

எனவும்,

''கவர்பரி நெடுந்தேர் மணியு மிசைக்கும்
பெயர்பட விளங்கிய விளைஞரு மொலிப்பர்
கடலொடு வியலிடைப் பேரணிப் பொலிந்த
திதலை யல்கு னலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்ப
னிழல்பட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாட்
பூவிரி கானற் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணு
வல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே

எனவும் வரும், (நற்றிணை—307)

தோழி சிறைப்புறமாகத் தலைமகற்குச் செறிப்பறிவுறுத் தற்குச் செய்யுள்:—

(தலைவன் வேலிப்புறத்து வரத் தோழி இற்செறிக்கப்படுதலை உணர்த்துதல்)

"தொடைக்கணி யார்தடந் தோளவர் கேளலர்
தோகையன்ன
றுடைக்கணி யாந்தழை கொய்யா ருழவ
றுடைத்ததெண்ணீர்
மடைக்கணி யார மிடுந்தஞ்சை வாணன்
வரையின்முன்போற்
கடைக்கணி யார்கணி யார்நம்மை நாளைக்
கருங்கணியே" (தஞ்சை—151)

எனவும்

(வெண்பா)

"வினைவிளையச் செல்வம் விளைவதுபோ லீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்" —(திணைமாலை)

எனவும் வரும்.

தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந் திற்செறிப்புணர்த்தற்குச் செய்யுள்:—

(முன்னிலையாய் நிற்கின்ற தலைவனுக்கு நேரே கூறுது பிறரைக் கூறுமாறு போலத் தோழி தாம் இற்செறிக்கப்படு தலை உணர்த்துதல்)

"பயில்காள பந்திப் புயலென்ன வோதியைப்
பைங்கிள்ளைகாண்
மயில்காள் சிறிது மறக்கப் பெறீர்தஞ்சை
வாணன்வெற்பிற்

குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற்
கூடியின்ப
மயில்காள வெங்கதிர் வேலன்பர் சால
வயர்ப்பினுமே''

எனவும், (தஞ்சை—152)

" முறஞ்செவி யானைத் தடக்கையிற் றடைஇ
யிறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை
வரையோன் வன்மை பாடினர் போலக்
கிளையோ டுண்ணும் வளைவாய்ப் பாசிளங்
குல்லை குளவி கூதளங் குவளை
யில்லமொடு மிடைந்த வீர்ந்தண் கண்ணியன்
சுற்றமை வில்லன் சோலைத் தோன்று
நற்றூர் மார்பற் காண்குறிற் சிறிய
மற்றவற் கறிய வுரைமின் பிற்றை
யணங்கு மணங்கும் போல வணங்கிய
வறும்புனங் காவல் விடாமை
யறிந்தனி ரல்லிரோ வறனில் யாயே'' (நற்றிணை 376)

எனவும் வரும்.

பாங்கி தலைமகன் முன்னின்று இற்செறிப்பறிவுறுத் தற்குச் செய்யுள்:—

(தோழி தாம் இற்செறிக்கப் படுதலைத் தலைமகனுக்கு நேரே யுணர்த்துதல்)

''கானலங் கான்மலர் கள்வாய்க் கருங்கண்ணி
கட்டுரையாற்
கூனலஞ் சாய்பொற் குரலுங்கொய் தாரெமர்
கொற்றவையாம்

வேனலங் காவலும் மின்றே யொழிந்தன
மேழ்புவிக்குந்
தானலங் காரமன் ஞன்றஞ்சை வாணன்
றமிழ்வெற்பிலே

எனவும்.

(வெண்பா)

"மால்வரை வெற்ப வணங்குர லேனல்
காவ லியற்கை யொழிந்தேம்யாம்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்ருய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம். (ஐந்திணை ஐம்பது)

எனவும் வரும்,

பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி
யோம்படை சாற்றற்குச் செய்யுள்:—

"கனஞ்சாய நல்கிய கையுடை யானெதிங் கன்றினர்தம்
மனஞ்சாய வென்றருள் வாணன்வரோதயன் மாறைவெற்பிற்
சினஞ்சாலும் வேலண்ண லேமற வேலெம்மைச் செவ்வியிரு
தனஞ்சா யினுமின நின்னையல் லாதில்லைத் தாழ்குழற்கே"
(தஞ்சை—154)

எனவும்,

"எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு"

எனவும் வரும்,

தலைமகன் றஞ்சம் பெறுது நெஞ்சொடு கிளத்தற்குச் செய்யுள்:—

(இற்செறி வறிவுறுக்கப்பட்ட தலைமகன் றனக்கொரு பற்றுக்கோடும் காணுது நெஞ்சொடு சொல்லுதல்)

"ஏவல ரேய்விழி மாந்தளிர் மேனிய ரேனலினிக்
காவல ரேமனங் காத்தனம் யாங்களி யானைசெம்பொ
னூவல ரேபெற நல்குங்கை மேக நறுங்குவளை
மாவல ரேய்தொடை யான்றஞ்சை வாணன்
வரையில்வந்தே"

எனவும்.

"பெறுவ தியையா தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழி நெஞ்சே திண்டேர்
கைவள் ளோரி கானந் தீண்டி
யெறிவளி கமழு நெறிபடு கூந்தன்
மையீ ரோதி மாஅ யோள்வயி
னின்றை யன்ன நட்பி னின்றோ
யிறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே"

எனவும் வரும்.

1. இவற்றுள் கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங் கலும்
2: பாங்கி புலம்பலும்
3. தலைவனீடத் தலைவி வருந்தலும்
4. முன்னிலைப் புறமொழி மொழிதலும்
5. பாங்கியோடுபகர்தலும்
6. நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலும்

7. கிழவோன் றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலு மாகிய வேழு மிரங்கற் குரியவாம். இவற்றுட் கிழவோன் றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்த லொன்று மொழித்து வேனையவாறும் வரைதல் வேட்கைக் குரியவாம். தலைவி யைப் பாங்கி கழறலுந் தலைவியைப் பாங்கியஞ்சி யச்சுறுத் தலுந் தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்குரிய, சிறைப் புறமாகச் செறிப்பறிவுறுத்தலும் முன்னிலைப் புறமொழிமொழிந் தறிவுறுத்தலும், முன்னின்

றுரைத்தலும், முன்னின்றுணர்த்தி யோம்படை சாற்றலு மாகிய நான்கு மிற்செறிப் புணர்த்தற் குரியனவெனக் கொள்க. இந்நான்கும் வரைவு கடாதற் குரியவாம். (38)

155] **11 பகற்குறி யிடையீடு**

பகற்குறி யிடையீட்டின் வகை

விலக்கல் சேறல் கலக்க மென்றாங்
கிசைப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு.

(எ, சூ-ன்) பகற்குறி யிடையீடு தொகுத்துணர்த்துத லுதலிற்று)

(இ-ள்) விலக்கலுஞ் சேறலுங் கலக்கமு மென மூன்று வகையினை யுடைத்தாம் பகற்குறி யிடையீடென்றவாறு (39)

156] பகற்குறி யிடையீட்டின் விரி

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலு
மிறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமக
ளாடிட நோக்கி யழிதலும் பாங்கி
யாடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்னாள்
நெடுந்தகை குறிவயி னீடுசென் றிரங்கலும்
வறுங்கள நாடி மறுகலுங் குறுந்தொடி
வாழூர் நோக்கி மதிமயங் கலுமெனும்
எழும் பகற்குறி யிடையீட்டு விரியே.

(எ, சூ-ன்) பகற்குறி யிடையீட்டு விரித்தொகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கன் முதலாகக் குறுந்தொடி வாழூர்நோக்கி மதிமயங்கலீறாகச் சொல்லப்பட்ட வேழும் பகற்குறி யிடையீடா மென்றவாறு.

(பகற்குறி யிடையீட்டின் விரியாமென்றவாறு)

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கற்குச் செய்யுள்:—

"புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும் புகன்றுகிள்ளை
யினமுங் குழீஇவந் திறைகொள்ளு மாலிறை யார்வனையு
மனமுங் கவர்வெற்ப வாணன்றென் மாறை மடப்பிடியு
மனமுந் தொழுநடை யாற்பல கால்வரு மன்னையுமே"

பாங்கி யிறைவியைக் குறிவரல் விலக்கற்குச் செய்யுள்:-

"நந்துசுற் றுங்கடன் ஞாலமெல்லாம்புகழ் நாமன்வளர்
சந்துசுற் றுங்கொங்கை மங்கையர் வேள்சஞ்ச ரீகநறை
வந்துசுற் றுந்தொங்கல்வாணன்றென் மாறைவரையின்மலர்க்
கொந்துசுற் றுங்குழ லாய்செல்ல லியக் குளிர்பொழிற்கே

எனவும்.

" யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்னபால் வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோற் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோ
ரெஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே

எனவும் வரும்.

இறைமகளாடிடம் நோக்கி யழிதற்குச் செய்யுள்:—

"அருவித் தடமு மணிமுத்த யாறு மவனியெங்குந்
திருவித் தியதஞ்சை வாணன் சிலம்புமிச் சிற்றிலும்பே
ரிருவிப் புனமுமின் றேரினைக் கின்றன வென்னையின்னே
மருவிப் பிரிபவர் போலில்லை யேமண்ணில் வன்கண்ணரே
எனவும் (தஞ்சை 158)

அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரித றேற்றாப் பேரன் பினவே (ஐங்குறுநூறு)

எனவும் வரும்,

பாங்கி யாடிடம் விடுத்துக்கொண்டகறற்குச் செய்யுள்:-

"உன்னையராவல்கு னல்லவரே யென்றுசாவி னெங்கண்
மன்னயராமல் வகுத்துரைநீ தஞ்சைவாணன் வெற்பி
னென்னைய ராணைகொண் டேகுகின் றேனிவை யித்தனையும்
பின்னையரா தொழிவாயிதனையி து பெற்றனமே"
(தஞ்சை— 159)

எனவும்,

"வரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
றெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தார
னஞ்சிலை யிடவ தாக வெஞ்செலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந்துள்ளி
வருதல் வாய்வது வான்றோய் வெற்பன்
வந்தன னாயி னந்தளிர்ச் செயலைத்
தாழ்வி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் பாய்புட
னாடா மையிற் கலுழ்பில தேறி
நீடிதழ்த் தலைஇய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாத் தடக்குரற்
குலவுப் பொறை யிறுத்த கோற்றலை யருவி
கொய்தொழி புனமு நோக்கிநெடிது நினைந்து
பைதலன் போகுவன் கொல்லோ வைதேய்
கயவெள் ளருவி சூடிய வுயர்வரைக்
கூஉங்கண்ணஃதெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின் யானே

எனவும் வரும்,

பின்னுநெடுந்தகை குறிவயி னீடுசென் றிரங்கற்குச் செய்யுள்:—

"மான்கா ணிகரின் மடமயில் காடஞ்சை வாணன்வெற்பிற்
றேன்கா ணிரைமென் சிறைக்கிளி காளென் றெருமரனேய்
தான்கா ணியகொலிச் சந்தனச் சோலையைத் தன்னையின்றி
யான்கா ணியகொ லெழுந்தரு ளாததின் றென்னுயிரே"

எனவும்,

"உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமுத மூறுஞ் செவ்வாய்க் கமழகி
லார நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் மடந்தை
யூரன் முறுவலொடு மதைஇய நோக்கே"

(குறுந்தொகை)

எனவும் வரும்,

தலைமகன் வறுங் களநாடி மறுகற்குச் செய்யுள்:—

(தலைவி நீங்கிய தினைப்புனத்திலே தலைவன் அவளைத் தேடி வருவதல்)

"செங்கேழ் விழிக்கு மொழிக்கும் பகைதிருப் பாற்கடலும்
பங்கே ருகமும் பயந்தன வாயினும் பைங்கிள்ளைகாள்
சங்கேய் தடந்துறை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போ
லெங்கே யினித்தங்கு வாரேனல் காத்திங் கிருந்தவரே

(தஞ்சை—161)

எனவும்.

வெண்பா

"கள்ளாவி நாறுங் கமழ்கூந்தற் காரிகையென்
னுள்ளாவி சென்ற வுழியறியேன்—றள்ளாத
மல்ல லருவி மலைநாடி வாய்திறந்து
சொல்லல் புரியாய் துணிந்து"

எனவும் வரும்.

தலைமகன் றலைமகள் வாழூமூர் நோக்கி மதிமயங்கற்குச் செய்யுள் :—

"பெறவரி தாலவர் பின்சென்ற நெஞ்சமும் பேணலர்க்கு
மறவரி தானன்ன வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
நறவரி தாமுல்லை நாண்மல ரோதி நகருமெனக்
குறவரி தாமென்செய் வேனென்று சோருமென் னுருயிரே"
(தஞ்சை—162)

எனவும்,

"ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே
யீரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்று னோகோ யானே
(குறுந்தொகை—131)

எனவும் வரும்,

இவற்றுண் முன்னைய விரண்டும் விலக்கற்குரிய பாங்கி யாடிடம் விடுத்துக் கொண்டகறலாகிய வொன்றுஞ் (சேறற் குரித்து) ஏனைய நான்குங் கலக்கத்துக்குரிய (40)

157] **12-இரவுக்குறி**

வேண்டன் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கிற் கூட்ட
லுயங்க னீங்கலென் றொன்பது வகைத்தே
யியம்பிப் போந்த விரவுக்குறி தானே (குறியே.)

(எ, சூ-ன்) இரவுக்குறியின் வகையுணர்த்துத னுதலிற்று

(இ-ள்) வேண்டன் முதலாக நீங்கலீறுக வொன்பது வகைத்து மேற்சொல்லிப் போந்த விரவுக்குறியென்றவாறு

158] *இரவுக்குறி விரி*

இறையோ னிருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியின தருமை கூறலு மிறையோ
னெறியின தெளிமை கூறலும் பாங்கி
யவனாட் டணியியல் வினாதலுங் கிழவோ
னவ்வனாட் டணியியல் வினாதலு மவற்குத்
தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலு
மிறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தலும்
நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தலு
நேரிழை பாங்கி யொடுநேர்ந் துரைத்தலு
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலுங்
குறியிட நிறீஇத் தாய்துயி லறிதலு
மிறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலு
மவட்கொண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதலும்
பெருமக ளாற்றின தருமைநினைந் திரங்கலும்
புரவலன் றேற்றலும் புணர்தலும புகழ்தலு
மிறைமக னிறைவனைக் குறிவிலக் கலுமவ
னிறைவியை யில்வயின் விடுத்தலு மிறைவியை
யெய்திப் பாங்கி கையுறை காட்டலு
மிற்கொண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலுந்
தோழி தலைமக டுயர்கிளந்து விடுத்தலுந்
திருமகட் புணர்ந்தவன் சேறலுமென்றாங்
கிருபத் தேழு மிரவுக்குறி விரியே.

(எ, சூன்) இரவுக்குறியின் விரியுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) இறையோ னிருட்குறி வேண்டன் முதலாகத் திருமகள் புணர்ந்தவன் சேறலீறுகச் சொல்லப்பட் டிருபத் தேழு மிரவுக் குறியின் விரியா மென்றவாறு

இவற்றுள் இறையோனிருட்குறி வேண்டற்குச் செய்யுள்:—

கருவிருந் தெண்டிசை யுக்கன மாமழை கான்றதுள்ளம்
வெருவிருந் தெம்பதிக் கெகவொண் ணுது விதம்விதமாய்
வருவிருந் தென்றும் புரந்தருள் வாணறென் மாறையன்னீ
ரொருவிருந் தெங்களைப் போலெய்து மோகங்கு
ளுங்களுக்கே''

எனவும் வரும்,

பாங்கி நெறியின தருமை கூறற்குச் செய்யுள்:—

''மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பிற்
சிலைமா லுருமெங்குந் தீயுமி ழாநிற்குஞ் சிங்கமெங்குங்
கொலைமா கரியிரை தேர்ந்துழ லாநிற்குங் கொற்றவபொற்
கலைமா றுறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே

எனவும்.

''ஒருவரைபோ லெங்கும் பலவரையுஞ் சூழ்ந்த
வருவரை யுள்ளதாஞ் சீறு—ரருவரையு
ளைவாய நாகம் புறமெல்லா மாயுங்காற்
கைவாய நாகஞ்சேர் காடு''

எனவும் வரும்,

தலைமகன் நெறியின தெளிமை கூறற்குச் செய்யுள்:—

''வடுவரி நீள்கண்ணி யஞ்சலம்யாந்தஞ்சை வாணன்வெற்பிற்
கொடுவரி கேழற் குழாம்பொரு கொல்லையுங் குஞ்சரந்தேர்ந்
தடுவரி தாவு மடுக்கலுஞ் சூர்வழங் காறுமைவாய்க்
கடுவரி நாகக் குழாமல்கு கலலைக் கானமுமே''

எனவரும்,

பாங்கியவனுட் டணியியல் வினுதற்குச் செய்யுள்:—

"பூந்தழை யாது மலைமலர் யாது புனையிழையுஞ்
சாந்தமும் யாது தடம்பொழில் யாது தரணியின்மேல்
மாந்தரின் வேளன்ன வாணன்றென் மாறை வளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பாவுங்க ளுட்டுறை செல்வியர்க்கே

எனவும் வரும்,

தலைமகனவனுட் டணியியல் வினுதற்குச் செய்யுள்:—

"எங்நாட் டவரணி கூறியென் பேறிங் கிகல்வடிவேன்
மைங்நாட் வெண்முத்த வாணகை யாய்தஞ்சை வாணன் மண்மே
லுங்நாட் டரிவைய ராடிடஞ் சாந்த மொளியிழைபூ
மொய்ங்நாட் டழையொடெல் லாமொழி யாமன் மொழியெமக்கே"

எனவரும்,

தலைமகற்குப் பாங்கி தன்னுட்டணியல் சாற்றற்குச் செய்யுள்:—

"வகைகொண்ட மாந்தழை காந்தளம் போது மருப்பின்முத்தந்
தகைகொண்ட சந்தனச் சாந்தணிந் தாடுவர் தஞ்சையர்கோன்
மிகைகொண்ட தெவ்வரை வெங்கண்ட வாணன்வெற் பாவெமதூர்
நகைகொண்ட வல்லியன் னுரெல்லி நாக நறுநிழற்கே"

எனவும்,

"ஆம்ப லணித்தழை யாரந் துயல்வருந்
தீம்புன லூரன் மகளிவள் ஆய்ந்தநறுந்

தேமலர் நீலம் பிணையல் சிறந்த மலர்
தாமரைத் தன்னையர் பூ''

எனவும் வரும்,

பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தற்குச் செய்யுள்:—

''புயலே றதிர்தோறும் பொங்குளை மீதெழப் போதகந்தேர்ந்
தியலே றதிரு மிருங்கங்குல் வாய்முத்த மீன்றுசங்கம்
வயலே றணிவள ருந்தஞ்சை வாணன் வரையிலுண்கண்
கயலே றனையநின் பால்வர வேண்டினர் காதலரே''

எனவும்

''ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே''

எனவும் வரும்

தலைமகனேராது நெஞ்சொடு கிளத்தற்குச் செய்யுள்:—

''விடவார் கணைவிழி மெல்லியன் மாதரை மேதினியோர்
மடவா ரெனுமுரை வாய்மைநெஞ் சேதஞ்சை வாணன்றெவ்விற்
கடவா ரணந்திரி கங்குனங் கண்ணன்ன காதலர்முட்
பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினள் பெண்ணணங்கே''

எனவும் வரும்.

தலைமகனேர்ந்து பாங்கியோடுரைத்தற்குச் செய்யிள்:—

''வெங்குல வாரண மேற்றவர்க்கே நல்கி வேற்றரசர்
தங்குல வாழ்வு தருந்தஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்

கங்குல வாவினர் காதல ராயிற் களிபயந்த
கொங்குல வாவலர் சூழ்குழ லாயென் கொல் கூறுவதே''
(தஞ்சை—171

எனவும்

''சேஞேன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயி னிமைக்கு
மோங்குமலை நாடன் சாந்துபுல ரகல
முள்ளி னுண்ணேய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்''
(குறுந்தொகை—150)

எனவும் வரும்.

தலைமகனேர்ந்தமை பாங்கி தலைமகற் குரைத்தற்குச் செய்யுள்:—

''பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்துநெஞ்சங்
கரவாத பொன்னைநின் காரணமாகக் கயிலையென்றே
வரவா தவனஞ்சும் வெண்யா ளிகைதஞ்சை வாணன்வெற்பர்
இரவாத வண்ணமெல் லாமிரந் தேனிவ் விரவிடையே''
(தஞ்சை—172

எனவரும்.

பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்தி வந்து தாய் துயிலறிதற்குச் செய்யுள்:—

''மாகந் தரியலர்க் கீந்தருள் வாணன்றென் மாறைவெற்பின்
மேகந் தருமின் னிடையன்ன மேவிரை நாண்மலர்வேய்
நாகந் தழுவுங் குடம்பையின் மேனடு நாளிரவிற்
சோகந் தவிர்வில வாய்த்துயி லாததென் ரேகைகளே''
(தஞ்சை—173)

எனவரும்,

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவித்தற்குச் செய்யுள்:—

"கந்தார நானுங் கனிந்தசொல் லாய்நங் கடிமணக்கே
வந்தா ரவாவின் பெருமையி னுற்றஞ்சை வாணன்வெற்பிற்
கொந்தா ரசோகந் தருஞ்செழும் போதுங் கொழுந்தழையுந்
தந்தா ரகலந் தழீஇயக லாது தணந்தவரே"
(தஞ்சை—174)

எனவும்,

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயத் தமன்ற கூதளங் குழைய
வின்னிசை யருவிப்பாடு மென்ன தூங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை
யோங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென
முழுமத றுமியவுறு மெறிந் தன்றே
யின்னுங் கேட்டியோ வெனவுமஃ தறியா
வன்னையுங் கனைதுயின் மடிந்தன வதன்றலை
மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுதே காதலர்
வருவ ராயிற் பருவ மிதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயிறிற்
படர்ந்த வுள்ளம் பழுதின் றாக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
திமிழ்பெய றலைஇய வினப்பல கொண்மூ
தவிர்வில் வெள்ளந் தலைத்தலைச் சிறப்பக்
கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடி பூசல் பலவுடன்
வெண்கோட்டி யானை விளிபடத் துழவு
மகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலு மஞ்சும் பனிக்கடுஞ் சுரனே"
(அகம்—63)

எனவும் வரும்,

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக்குத் கொண்டு சேறற்குச் செய்யுள்:—

“மின்னே யயிலொடு மின்விளக்காவந்த வெற்பரைநாம்
பொன்னே யெதிர்கொளப் போதுக நீபுவி யேழிறுக்குந்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் றமிழ்ச்சிலம்பின்
நின்னே ரியன்மயில் கண்டுயி ஞுக நிழலகத்தே”

(தஞ்சை—175)

எனவரும்,

பாங்கி தலைமகளைக் குறியிடத் துய்த்து நீங்கற்குச் செய்யுள்:—

“மந்தாரா மன்னகை வாணன்றென் மாறை மயிலனையாய்
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்குழ ஞுங்கங்குற்
கொந்தார் தெரியலின் செங்கனி லாயொடுங் கொங்கையொடும்
பைந்தா மரையையுஞ் சேதாம் பலையும் பகைப்பித்ததே”

எனவரும்.

தன்மகன் றலைமகளைக் குறியிடத் தெதிர்ப் படுதற்குச் செய்யுள்:—

“முதிரா மூலையிப் பனியந்த கார முனியவல்ல
கதிரா யிரமில்லை யேழ்பரித் தேரில்லை காவல்வெய்யோற்
கெதிராதற் சோமற் கியைவதன் றேநும்மில் யார்திறந்தார்
மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்தில்வந்தே”

எனவரும்.

தலைமகளாற்றின தருமை நினைந்திரங்கற்குச் செய்யுள்:-

“செழியன் கயலைத் திசைவைத்த வாணன்றென் மாறையென்மேற்
கழியன் புடையநின் கால்கண்க ளாகக் கராம் பயிலுங்

குழியன்றி யும்வெஞ் சுழியொன்றும் யாறுங் குழீஇக்
கொடிதாம்
வழியன்ப நீயெங்ங னேவந்த வாறிம் மழையிருளே''

எனவும்,

"பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே
எல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே''

எனவும் வரும்,

தலைமகன் றலைவியைத் தேற்றற்குச் செய்யுள்.—

"வெயிலுந் தரவிந்த மென்மல ரன்னமும் விந்தை வெற்றி
மயிலும் பயில்புயன் வாணன்றென் மாறைநின்
வாள்விழிபோ
லயிலுங் குயின்மொழி நின்னிடை போன்மின்னு
மாடளிபண்
பயிலுந் தொடைநின் குழல்போ லிருளைப் பருகினவே''

எனவும்

"குருதி வேட்கை யுருகெழு வயமான்
வலிகெழு முன்பின் மழகளிறு பார்க்கு
மரம்பயில் சோலை மலியப் பூழிய
ருருவத் துருவினுண் மேயலாரு

மாரி யெண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருத லெவனெனப் பலபுலந்
தழுதனை யுறையு மம்மா வரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்
மாணல முள்ளி வரினெமக்
கேம மாகு மலைமுத லாறே"

(நற்றிணை—192)

எனவும் வரும்.

புணர்தற்குச் செய்யுள்:—

"சுழிநீ ரலைகடற் றெல்லுல கேழினுந் தோற்றும்வண்மைக்
கழிநீடு மாடக மேருவின் மீதினுங் காவல்கொண்டு
வழிநீள் புகழ்கொண்ட வாணன்றென் மாறை வரையின்மலர்ப்
பொழினீழ லும்ப ரமுதனை யாரைப் புணர்ந்தனமே"

எனவும்,

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு" (திருக்குறள்)

எனவும் வரும்,

புகழ்தற்குச் செய்யுள்:—

"மண்ணார் பெரும்புகழ் மாறன்றென் மாறைவரையகிலுந்
தண்ணா ரமுங்கமழ் சார்வருஞ் சாரலிற் சார்ந்துறையும்
பெண்ணா ரணங்கன்ன நின்முகந் தான்கண்ட பின்னுமுண்டோ
கண்ணார் தடங்களின் வாயொடுங் காத கமலங்களே"
எனவரும்,

தலைமகனைத் தலைமகள் குறிவிலக்கற்குச் செய்யுள்:—

"மூரற் கதிர்முத்த வார்முலை யாவியின் மூழ்கத்தளி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பாவய மாவழங்கும்
வேரற் கடிய கவலையி னூடு வெயிலவ ற்குஞ்
சாரற் கருமைய தாவிருள் கூருமெஞ் சாரலிலே"

எனவும்,

"அருள்பெறு வாரலர் கோட்டுமா வழங்கும்
இருள்பே ருலகின் வார லான்ற
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே

எனவும் வரும்,

தலைமகன் றலைமகளை யில்வயின் விடுத்தற்குச் செய்யுள்:-

"மல்லையம் போர்வென்ற வாணன்றென் மாறைநின் மாளிகையாங்
தொல்லையம் போருகந் தேடவுங் கூடுந் தொடித்தளிரான்
முல்லையம் போது முகையுங்கொய் யாது முகைமுலையாய்
செல்லையம் பொற்பளிங் கிற்றலம் பாதஞ் சிவப்பிக்கவே"

எனவரும்.

பாங்கி தலைமகளை யெய்திக்கையுறை காட்டற்குச் செய்யுள்:-

"முகையா யலராய் முலைக்குநின் வாய்க்கு முறைமுறையே
பகையா முளரியுஞ் சேதாம் பலுமிவை பைங்கழுநீர்
வகையார் தொடைபுனை வாணன்றென் மாறையின் மௌவலன்ன
நகையா யவையிவை நின்குழற் காமுல்லை நாண்மலரே"

எனவரும்.

பாங்கி தலைமகளை யிற்கொண் டேகற்குச் செய்யுள்:—

"ஒல்கா விருண்மணந் தொல்கரும் போழ்தி
னுணர்ந்துநம்மை
நல்கா வியல்பன்னை நாடினு காடு நடந்தருணீ
மல்காவி சூழ்தஞ்சை வாணன்றென் மாறையின்
வள்ளையின்மேற்
செல்காவி யன்ன விழித்திரு வேநின் றிருமனைக்கே"

எனவரும்,

பிற்சென்று தலைமகனைப் பாங்கி வரவு விலக்கற்குச் செய்யுள்:—

"வெம்போர் முருகென்ன வேல்வல னேந்தி வெறிதிங்ஙனே
வம்போர் நகரெல்லி வாரல்வெற் பாமரு வாவரசர்
தம்போர் கடந்த தடம்புய வாணன் றமிழ்த்தஞ்சை நாட்
டம்போ ருகமல்ல வோதிருக் கோயி லணங்கினுக்கே"

எனவும்,

"தாமரைக் கண்ணியைத் தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே;
ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரி
னொளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல்கா வலரே"

எனவும் வரும்,

தலைமகன் மயங்கற்குச் செய்யுள்:—

"வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்றென் மாறைவெற்பிற்
றஞ்சங் கலந்தசொற் றையலும் யானுந் தனித்தனியே
நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதி
னஞ்சங் கலந்தனை யேநனை வார்குழ னன்னுதலே"

எனவரும்,

தோழி தலைமகடுயர்நிலை கிளந்து விடுத்தற்குச் செய்யுள்:—

"முன்னா ரரவுந் தெரியா விருணெறி முன்னிநையு
மின்னார் புனையிழை மின்னனை யாளுய்ய வேலின்வெம்போர்
மன்னார் களிறு திறைகொண்ட வாணன்றென் [மாறையன்ன
நின்னா ரகம்புகுந் தாற்குறி காட்டு நெடுந்தகையே"

எனவும்.

"கான மானத ரியானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுநனி யுரறு
மரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவுவழங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டொடு பிரச
முழவுசேர் நரம்பி னிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட!
மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றோ
வின்றுதலை யாக வாரல் வரினே
யேமுறு துயரமோ டியாமிவ ணொழிய
வெற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை

யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தநி
னுய்பயில் குறிநிலைக் கொண்ட கோடே"

எனவும் வரும்,

திருமகட் புணர்ந்தவன் சேறற்குச் செய்யுள்:—

"இருங்குன் றனமதி லெம்பதிக் கேக லெளிதுசெம்மை
தருங்குங் குமமுலைத் தையனல் லாய்தஞ்சை வாணன்வெற்பிற்
கருங்குஞ் சரவினம் வெஞ்சிங்க வேறஞ்சுங் கங்குலினெம்
மருங்குஞ் சுடர்விளக் காமட வார்குழை மாணிக்கமே"

எனவும்,

"நெஞ்சுநடுங் கரும்படர் தீர வந்து
குன்றுழை நண்ணிய சீறா ராங்கட்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி யைம்பா
லுண்கோ லகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளிய
விரங்குநீர்ப் பரப்பிற் கானலம் பெருந்துறைக்
கனந்தலு நன்கலன் சிதையத் தாக்குஞ்
சிறுவெள் ளிறவின் குப்பை யன்ன
வுறுபகை தரூஉ மொய்ம்மூசு பிண்டன்
முனைமுர ணுடையக் கடந்த வென்வே
லிசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ னார நன்ன
னேழி னெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயிற் கலவத் தன்ன தோளே
வல்வில் லிளையர் பெருமக னள்ளி

சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்த ளுள்ளும் பலவுட
னிறும்பூது கஞலிய வாய்மலர் நாறி
வல்லினும் வல்லா ராயினுஞ் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசு
மாஅல் யானை யாஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேயமைக் கண்ணிடை கடுப்பச்
சேய வாயினு நடுங்குதுயர் தருமே"

எனவும்வரும்.

இவற்றுள், இறையோ னிருட்குறி வேண்டலும், நெறியின தெளிமைகூறலு மவளுட் டணியியல் வினுதலும் பாங்கி யிறைவிக்கிறையோன் குறையறிவுறுத்தலு மாகிய நான்கும் வேண்டற் குரிய. பாங்கிநெறியின தருமை கூறலு மிறைமக ளிறைவனைக் குறிவிலக்கலும் பாங்கியிறைவனை வரவு விலக்க லுமாகிய மூன்று மறுத்தற்குரிய. பாங்கி யவளுட் டணியியல் வினுதலும், அவர்க்குத்தன் னுட்டணியியல் சாற்றலும் தலை மகனோர்ந்து பாங்கியொடு சாற்றலுமாகிய மூன்று முடன் படற் குரிய. தலைமகனோர்ந்தும் பாங்கி தலைமகற் குணர்த் தலுங் குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதலு மிறைவிக் கிறைவன் வரவறிவுறுத்தலு மவட்கொண்டு சேறலுமாகிய நான்குங் கூட்டற்குரிய. தலைமகனை யெதிர்ப் படுதலுந் தேற் றலும், புணர்தலு மாகிய மூன்றுங் கூடற்குரிய, தலைமகள் நலம் பாராட்டலும், கையுறை காட்டலுமாகிய விரண்டும், பாராட்டற்குரிய. தலைமகன், இறைவியை இல்வயின் விடுத் தலும், பாங்கி தலைமகளைக் கொண்டேகலுமாகிய இரண்டும்,

பாங்கி கூட்டற்குரிய. நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தலுந் தலைமகளாற்றின தருமை நினைந்திரங்கலும், பெருமகன் மயங்லும், தோழி தலைமகடுயர் நிலைகிளந்து விடுத்தலுமாகிய நான்கு முயங்கற்குரிய, பாங்கி குறியுய்த்தகறலுந் திருமகட் புணர்ந்தவன் சேறலுமாகிய விரண்டும், நீங்கற் குரியவா மெனக் கொள்க. இவற்றுள் நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தலும், பெருமக ளாற்றின தருமை நினைந்திரங்கலு, மிறைமக ளிறைவனை குறிவிலக்கலுமாகிய மூன்றும், வரைதல் வேட்கைக்குரிய. பாங்கி நெறியின தருமை கூறலுமிறைவனை வரவுவிலக்கலுந், தலைமகடுயர்நிலை கிளந்து விடுத்தலுமாகிய, மூன்றும் வரைவு கடாதற் குரியவாம். (42)

13. இரவுக்குறி இடையீடு

159] இரவுக்குறி இடையீட்டின் வகை.

அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்

(எ, கு-ன்) அல்ல குறியும் வருந்தொழிற் கருமையுமென இரண்டுவகையினை யுடைத்திரவுக்குறியிடையீடென்றவாறு.

(இ-ள்) அல்லகுறி யென்பது குறியல்லவென்றவாறு அதனை முன்றிலென்பதுபோலக் கொள்க. அல்ல குறியாவது தலைமகனு னிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்பன் முதலாகியன பிறிதொன்றினு னிகழ்தல் வருந்தொழிற் கருமையாவது தலைமகன் வருகின்ற தொழிற் கருமையாம். என்றென்பதெண்ணிடைச் சொல், ஆங்கென்பதசை. (43)

160] **அல்லகுறி**

இறைவிக் கிருளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்
புலந்தவன் போதலும் புலந்தபின் வறுங்களந்
தலைவிகண் டிரங்கலுந் தன்றுணைக் குரைத்தலுந்
தலைமக ளவலம் பாங்கி தணித்தலு
மிறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலு
இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றலும்
மவள்குறி மருண்டமை யவளவற் கியம்பலு
மவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பலு
மென்பிழைப் பன்றென் றிறைவிநோ தலுமென
வொன்றுபன் னொன்று மல்லகுறிக் குரிய.

(எ, சூன்) இறைவிக்கிருளை யிறைவர வுணர்த்துழித் தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தன் முதலாக வென்பிழைப்பன் றென்றிறைவி நோதலீறுகச் சொல்லப் பட்ட பதினொன்று மல்லகுறிக் குரியவாகு மென்றவாறு.

இறைவிக்கிருளை யிறைவர வுணர்த்தற்குச் செய்யுள்:—

"கயல்வென்ற வுண்கண்ணி காரண மேதுகொல்
கைதையங்கா
னயனின்ற புன்னையி னன்னமெல் லாமட லாழியங்கைச்
சயமங்கை தன்பெரு மான்றஞ்சை வாணன்
றரியலர்போற்
றுயரம் பெருகி யிராவொரு போதுந்
துயின்றிலவே"

எனவும்.

அம்ம வாழியோ வன்னைநம் படப்பைப்
பொம்ம லோதி யம்மென் சாயன்
மின்னென நுடங்கிடைக் கின்னிழ லாகிய
புன்னை மென்காய் போகு சினையிரிய
வாடுவளி தூக்கிய வசையிற் கொல்லோ
தெண்ணீர்ப் பொய்கையில் வீழ்ந்தன
வெண்ணினை வுரைமோ வுணர்குவல் யானே''

எனவும் வரும்,

இது தோழி தாய்க்குரைப்பாள்போற் றலைமகட்குணர்த்திய வாறும்.

தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக் குணர்த்தற்குச் செய்யுள்:—

''பேசத் தகுவதொன் றன்றுகண் டாய்பிறி தோர்குறியை
நேசத் தவர்குறி யென்றுசென் றியான்குறி நின்றுவந்தேன்
வாசத் தமிழ்புனை தோளுடை யான்றஞ்சை வாணனென்னார்
தேசத் தவருமெய் தாவெய்ய நோயெய்திச் சேயிழையே''

எனவும்,

வெண்பா

''அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன் கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுடை நெஞ்சினே னாய்''

எனவும் வரும்,

பாங்கி தலைமகன் நீங்கெடுத் தியம்பற்குச் செய்யுள்:—

"வடியோ வெறுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை
வாணனைவந்
தடியோ மெனச்சென் றடையலர் போலயர் கின்ற நின்கைத்
தொடியோட மென்பணைத் தோளிணை வாடுந்
தொழில்புரிந்த
கொடியோர் துணிந்துசெய் தார்குறி யாத
குறிநமக்கே"

எனவும்

வெண்பா

"கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையுளிழுதொப்பத் தோன்றிப் — புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி"

எனவும் வரும்.

தலைமகன் புலந்து போதற்குச் செய்யுள்:—

"தேனுற்ற வாகையந் தார்த்தஞ்சை வாணனைச்
சேரலர்போன்
மானுற்ற பார்வை மயில்பொருட் டாக
வழிதெரியா
கானுற்ற கானற் கனையிருள் வாய்வரக்
கற்பித்தநீ
யானுற்ற நோய்களெல் லாம்படு வாயினி
யென்னெஞ்சமே

எனவும்.

குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாங்குச்

சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே

எனவும் வரும்

புலந்தபின் வறுங்களந் தலைவி கண்டிரங்கற்குச் செய்யுள்:-

"தாதகை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றடந்துறைவாய்
நீதகை கொண்டென்முன் னின்றனை யேசெங்
நிறக்கனிவாய்
மேதகு முள்ளெயிற் றொண்முகை கொங்கைவெண்
டோட்டுமென்பூங்
கேதகை யென்னுநல் லாய்கொண்கர் மாலை
கிடைத்ததென்றே"

எனவரும்.

தலைமகள் பாங்கி யோடுரைத்தற்குச் செய்யுள்:—

"தேனே லரங்கற் புனைபுகழ் வாணன்
செழுந்தஞ்சைசூழ்
கானேர் குறியிற் கனையிருள் வாய்வந்து
கா லுழத்தி
யானே கியபின்பு தாம்வந்து போன
தியம்புதற்கோ
மானே யிறைவர்வைத் தார்பங்க சாதம்
வலம்புரிக்கே"

எனவும்,

"நெய்தற் படுவி னிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலிற் கண்டநாட் போலானுற்
செய்த குறியும்பொய் யாயினவாற் சேயிழா
யையகொ லான்றூர் தொடர்பு"
(திணைமொழியைம்பது)

எனவும் வரும்.

தலைமகளவலம் பாங்கி தணித்தற்குச் செய்யுள்:—

"பொய்யா ரவர்தங் குறிபிழையாரவர் பூண்டவன்பு
மெய்யாதல் தேறி யழுங்கன்மின் னேபுய வெற்பிரண்டான்
மையாழிவைய நிலையிட்ட வாணன்றென் மாறைவெற்பி
னுய்யான மென்கழு நீர்நறு மாலை யுடைத்தல்லவே"

எனவரும்,

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றற்குச் செய்யுள்:-

"விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள் ளேயெம்மை
வீழ்வித்துநீ
ரெம்மூ ரகத்து வரவொழிந் தீரெதி ரேற்றதெவ்வர்
தம்மூரை முப்புர மாக்கிய வாணன் றமிழ்தஞ்சைபோ
லும்மூர் வரத்துணிந் தோமன்னர் கூறுமவ் வூரெமக்கே"

எனவும்,

"காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயி
னோங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ"

எனவும் வரும்,

இறைவிமேலிறைவன் குறிபிழைப் பேற்றற்குச் செய்யுள்:—

"துறந்தன ளாகியம் போருகந் தன்னையித் தொல்வரைமேற்
பிறந்தன ளாகும் பெருந்திரு மாதெனப் பேதையரிற்
சிறந்தன ளாதலிற் செந்தமிழ் வாணன்றென்
மாறையன்னுண்
மறந்தன ளாயினு யாமொரு போது மறவலமே"

எனவும்

"மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
யாந்தன் னுள்ளுபு மறந்தறி யேமே"

எனவும் வரும்,

தலைமகள் குறிமருண்டமை தோழிதலைவற் குரைத்தற்குச் செய்யுள்:—

"தனையா வரும்புக ழுத்தரும் வாணன் றமிழ்த்தஞ்சைமா
னனையா ளவள்குறி யாமிதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வருங்கங்கு லின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேயன்ப மீண்டனளே"
எனவரும்,

தலைமகன் சொல்லிய கொடுமையைத் தலைமகட்குத் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:—

"பல்லியம் போலுரு மேறெங்கு மார்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து வாணன்றஞ்சை
யல்லியம் போருகை யன்னநின் கேளரு ளாசையினீன்
றெல்லியம் போதுசென் றேனென்று கேள்வ ரியம்பினரே"

எனவரும்

என்பிழைப் பன்றென்றிறைவி நோதற்குச் செய்யுள்:—

வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடும் வைகினன் யான்றஞ்சை வாணன்வெற்பர்
புயலூ ரிருட்கங்குல் வந்தவ மேயின்று போயினரென்
றயலூர் நகைக்குமென் னேயென்ன பாவங்கொ லாக்கினவே

எனவும்

"கொன்னூர்த் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுஙனி கேட்டே"
(குறுந்தொகை—138)

எனவும் வரும்

முன்னைய ஞான்று நிகழ்ந்தவை யறிந்திருந்தும் மற்றை ஞான்று தலைமகளிவ்வாறு சொல்லியாற்றுதல் காரணமாக வும் பாங்கி சொல்லி யாற்றுவித்தல் காரணமாகவும் வந்தன. (44)

161] வருந்தொழிற்கருமை

தாயும் நாயு மூருந் துஞ் சாமை
காவலர்க் கடுகுதல் நிலவுவெளிப் படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுத
லாகிய வேழு மல்லுக்குறித் தலைவன்
வருந் தொழிற் *கருமைக்குப் பொருந்துத லுரிய

(எ, சூன்) தாய்துஞ்சாமை முதலாகக் கோழிகுரற் காட்டுதலீருகச் சொல்லப்பட்ட வேழு மிரவுக்குறிக்கட் டலை மகன் வருந்தொழி லருமைக்குப் பொருந்துத லுரியவா மென்றவாறு

தாய் துஞ்சாமைக்குச் செய்யுள்:—

"ஆழி யகன்புவி யுள்ளவை யாவு மடங்கிநள்ளென்
றாழி முடிந்தன்ன வோங்கிருள் யாமத்து மோடையினுந்
தாழி யினும்போ தலர்தஞ்சை வாணன் றரியலர்போற்
றேழிநம் மன்னைகண் ணேதுயில் கோட றுறந்தனவே"

எனவும்

*வருந்தொழிற் கருமை (பா. பே)

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றோ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்,
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோவன்னை
யொருநா ணகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே"

எனவும் வரும்.

நாய் துஞ்சாமைக்குச் செய்யுள்:—

"தண்ணென் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போற்
பெண்ணென் பிறவியும் பேருடைத் தன்றிப் பெரும்பதிநங்
கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்
துண்ணென் கடுங்குரல் வாயன்ன துஞ்சினுந் துஞ்சிலவே"

எனவரும்,

ஊர் துஞ்சாமைக்குச் செய்யுள்:—

"ஓங்கண்ணல் வெம்பக டுந்திவந் தோரை யுடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்றென் மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப்பிரிந் தோநந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் கார்கண் ணகரவரே"

எனவும்

"குறுங்கை யிரும்புலிக் கோள்வல் லேற்றைப்
பூநுத லிரும்பிடி புலம்பத் தாக்கித்

தாழ்நீர் நனந்தலைப் பெருங்களி றடூஉங்
கல்லக வெற்பன் சொல்லிற் றேறி
யாமெம் நலனிழந் தனமே யாமத்
தலர்வாய்ப் பெண்டி ரம்பலோ டொன்றிப்
புரைய நீமொழி பயிற்றிய யுரையெடுத்
தானுக் கவ்வைத் தாகத்
தானென் னிழந்த திவ் வழுங்க லூரே''

எனவும் வரும்.

காவலர் கடுகுதற்குச் செய்யுள்:-

''புயற்கண் ணரியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்க ணிறைதஞ்சை வாணன்றென் மாறையில் வஞ்சி யன்னாள்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்ல வோபடு கின்றன திண்கடிப்பே''

என வரும்.

நிலவு வெளிப்படுதற்குச் செய்யுள்:-

''தெண்பாற் கதிர்முத்த வெண்ணகை யாய்திகி ரிக்கிரிசூழ்
மண்பாற் புகழ்வைத்த வாணன்றென் மாறை நம் மன்னர்பொற்றேர்
பண்பாற் பரிக்கும் பரிவரு மாறென் பரந்தநிலா
வெண்பாற் கடலில்வை யம்பதி னாலு மிதக்கின்றவே''

எனவும்,

''கருங்கால் வேங்கை வீயுகு துறுக
விரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை

யெல்லிவருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே''

எனவும் வரும்,

கூகை குழறுதற்குச் செய்யுள்:—

''நம்பே றுடைமை யிருக்கின்ற வாகடன் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திர வாணன் றரியலர்போல்
வம்பேறு கொங்கை மயலிய ளுமஞ்சமன் றமராங்
கொம்பேறி நள்ளிருள் வாய்க்குழ றுநின்ற கூகைகளே''

எனவும்,

எம்மூர் வாயி லுண்டுறைத் தடைஇய
கடவுண் முதுமரத் துடனுறைவு பழகிய
தேயா வளைவாய்த் தெண்கட் கூருகிர்
வாய்ப்பறை யசாஅம் வலிமுந்து கூகை
''மையூன் றெரிந்த நெய்வெண் புழுக்க
லெல்லிவான் கூட்டொடு மலியப பேறுதலே
லெலிவான் சூட்டொடு மலியப் பேறுது
மெஞ்சாக் கொள்கையெங் காதலர் வரனசைஇத்
துஞ்சா தலமரும் பொழுதி
லஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா திமே''

(நற்றிணை—83)

எனவும் வரும்,

கோழி குரற் காட்டுதற்குச் செய்யுள்:—

''மன்பதை தாமுய்ய வந்தருள் வாணன்றென்
மாறைவெற்பர்
கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தாற்றங்கள்
கோனடந்தா
னென்பது தேறி யிடையிரு ளூரை யெழுப்பும்வெம்முட்
பொன்பதி தாள்வளை வாய்செய்ய சூட்டுவன் புள்ளினமே''

எனவும்,

"கள்வ ரைக்கட் காட்டுவர் போலக்
கொள்ளுங் குரல்கூவுங் கோழி

எனவும் வரும்,

இவை யேழும் வரைவுகடாதற்கு முரியவாம். (45)

62] இரவுக்குறி இடையீட்டின் விரி இவை எனல்

திரட்டியிவ் வாறு செப்பிய வொன்பதிற்
றிரட்டியு மிரவுக்குறி யிடையீட்டு விரியே.

(எ, சூ-ன்) கூட்டி யிப்படியாற் சொல்லப்பட்ட பதி னெட்டு மிரவுக்குறி யிடையீட்டு விரியா மென்றவாறு. (46)

14. வரைதல் வேட்கை

163] வரைதல் வேட்கையின் வகை

அச்ச முவர்த்த லாற்ரு மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

(எ, சூ-ன்) அச்சமு முவர்த்தலும் ஆற்ருமையுமென மூன்று வகையினை யுடைத்தாம் விதிக்கப்பட்ட வரைதல் வேட்கை யென்றவாறு [47]

164] வரைதல் வேட்கையின் விரி

பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
யருமறை செவிலி யறிந்தமை கூறலுந்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலுந்
தலைமக ளூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
யிறையோன் றன்னைநேர்ந் தியற்பட மொழிதலும்

கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைமகற் குரைத்தல் வேண்டலுந்
துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலு
மலர்பார்த் துற்ற வச்சக் கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
நெறிவிலக்கு வித்தலும் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமென
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

(எ, சூ-ன்) பருவரல் வினவிய பாங்கிக்கிறைவி யருமறை செவியறிந்தமை கூறன் முதலாகக் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்த லீருகச் சொற்பெற வகுத்த பதினெட்டும் வரைதல் வேட்கை விரியாமென்றவாறு.

அவற்றுள்

தலைமகளைப் பாங்கி பருவரல் வினவுதற்குச்செய்யுள்:—

"விண்டார் பதிகொண்ட வேற்படை வாணன்
விரைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின்
றுயர்தம்மோ
டுண்டா கியமுனி வோவன்றி யாயத்தொ
டுற்றதொன்றோ
வண்டார் குழலிசொல் லாய்செல்லலேது
மனத்திடையே"

எனவரும்,

தலைமக ளருமறை செவிலி யறிந்தமை கூறற்குச் செய்யுள்:-

"மாணிக்க மென்கொம்ப ரென்சொல்லு கேன்றஞ்சை
வாணன்வெற்பர்
பேணிப் புணர்ந்து பிரிந்துபின் ருேன்றலும்
பேதைமுகம்
பாணித்த லின்றி மதிகண்டு நாணிய
பங்கயம்போ
ணாணிக் கவிழ்ந்தத னாலறிந் தாளன்னை
நங்களவே.

எனவும்.

"யாங்கா குவமோ வணிநுதற் குறுமகட்
டேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்
றெவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி
யன்னை யானுள் கழற முன்னின்
றருவி யார்க்கும் பயமலை நாடனை
யறியலு மறியேன் காண்டலு மிலனே
வெதிர்புனை தட்டையென் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்று மிலனென நினைவிலை
பொய்யவ னுரைத்த தெனது கேட்டுத்
பொய்ய லந்தோ வாய்த்தனை யதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே யன்னை
செலவொழிந் தனையா லளியைநீ புனத்தே"

எனவும்.

தலைமக டலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றற்குச் செய்யுள்: —

"ஓவலில் வாயன்னை ஞாளியிவ் வூர்கண் ணுறங்கினுமூர்க்
காவலர் காய்வர் நிலாமதி காலுங் கடுங்குடிஞைச்

சேவலும் வாரண முந்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாயடை யாவென் மெலிவறிந்தே"

எனவும்.

"இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றுயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளைஞர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகைய ஞமலி மகிழு
மரவவாய் ஞமலிக் குரையாது மடியிற்
பகலுறழ் நிலவுக் கான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள்கல் சேர்பு கனையிருள் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலை யொருநா
ளில்லா நெஞ்சத் தவர்வா ரலரே—அதனால்
யரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
ஞெச்சி வேலித் தித்த னுறந்தைக்
கனமுதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே"

எனவும் வரும்.

தலைமகனூர்க்குச் செலவொருப்படுதற்குச் செய்யுள்:-

"நம்பா னலனுண்ட நம்பா தகர்தந்
நகர் வினவித்

தம்பா லுடன்சென்று சார்குவமோதரி
யாரைவென்று
வம்பார் கழல்புனை வாணன்றென் மாறை
வளரும்வஞ்சிக்
கொம்பா கியமருங் குற்கரும் பார்மொழிக்
கோயளமே''

எனவும்.

படுதிரைக் கொழீஇய பானிற வெக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே
முடிவலை முகந்த முடங்கிறுப் படப்பைப் பாவை
படுபுள் ளோப்பலிற் பாக்கமும் வறிதே
கோட்டுமீ னெறிந்த வுவகையர் வேட்டமடிந்
தெமரு மல்கின ரேமார்ந் தனமெனச்
சென்றுமா மறியி னெவனோ தோழி
மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றிற் றாழையொடு கமழுந்
தெண்கடற் சேர்ப்பன்வாழ் சிறுநல் லூர்க்கே''

எனவும் வரும்,

பாங்கி யிறைவனைப் பழித்தற்குச் செய்யுள்:—

''வறியார் புகழ்தஞ்சை வாணன்றென் மாறை
மடந்தையன்று
எறியா டுயர்முன் னறிந்தவர் தாமத
னுலமுலின்
பொறியா ருயிர்வெம் பணி மாய்மணியு
புதையிருள்கூர்
நெறியா நரருள்பெற நாநடு நாளிடை
நீந்துதுமே

எனவும்,

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை யேற்றைத்
தூங்குதோற் றுதிய வள்ளுகிர்க் கதுவலிற்
பாம்புமத னழியும் பானாட் கங்குலு
மரிய வல்லம னிகுளை பெரிய
கேழ லட்ட பேழ்வா யேற்றை
பலாவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநரல் சிலம்பி னுங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலிய
பிடியடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயி ரிச்சுர
மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே

எனவும் வரும்.

தலைமகளியற்பட மொழிதற்குச் செய்யுள்:—

"புணரா விரகமும் போகா விரவும்
புணர்முலைமே
லிணரார் பசப்பும் பிறவுமெல் லாமிருள்
கூர்ந்தறல்போல்
வணரார் குழற்பிறை வாணுத லாய் தஞ்சை
வாணன்வெற்ப
ருணரா திருப்பது வேறொன்று மில்லைநம்
மூழ்வினையே"

எனவும்.

"இப்பியின் றுகுத்த நித்தில
மிருளற விமைக்கு மல்கிருந் துறைவ
னருளா துறைவா ளுகவு
மிறையிறந் தனவாற் றோழியென் வளையே"

எனவும் வரும்,

தலைமகள் கனவு நலிபுரைத்தற்குச் செய்யுள்:-

"சினவாகை சூடிச் செருவென்ற வாணன்றென் மாறையினம்
மனவாழ் மனையவர் வந்துநல் லியாம மணந்த தெல்லாம்
நனவா மெனவே மகிழ்ந்தே விழித்தொன்று நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னையென் னேயென்ன கைதவமே"

எனவும்.

"கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇ
வாய்த்தரு பொய்க்கனு மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே"

எனவும் வரும்.

தலைமகள் கவினழி புரைத்தற்குச் செய்யுள்:—

"வாளினும் நீள்விழி வாணுத லாய்தஞ்சை வாணன்றெவ்வி
னுளினு நாளு நலந்தொலை வேனகை யாரயில்வேல்

வேளினு மோர்நல்லவெற்பினும் நீயுமென் மேனியினுந்
தோளினு நோயறி யீர றி யாததென் றொல்வினையே''

எனவும்.

"முடக்கா லிறலின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி மிகுதிரை தருஉந் துறைவன்
புணரி யவிந்த ஞான்று
மின்னது மன்னோ நன்னுதற் கவினே''

எனவும் வரும்.

தலைமகள் தன்றுயர் தலைமகற் குரைத்தல் வேண்டற்குச் செய்யுள்:—

"வரைப்பான் மதுரத் தமிழ்தெரி
வாணன்றென் மாறைவையை
நுரைப்பான் முகந்தன்ன நுண்டுகி
லாயிந்த நோயவர்க்கின்
றுரைப்பா ருளரே லுயிரெய்த
லாநமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழெய்த
லாமவர் தங்களுக்கே

எனவும்,

"புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலர்புநனி யுடைத்தே வானமும்
நம்மே போலு மம்மர்த் தாகி
யெல்லை கழிய புல்லென் றன்றே
யின்னு முளெனே தோழி யிந்நிலை
தண்ணிய கமழும் ஞாழற்
றண்ணந் துறைவர்க் குரைக்குநர்ப் பெறினே''

எனவும் வரும்,

பாங்கி நின்குறை நீயே சொல்லெனத் தலைமகட்குச் சொல்லற்குச் செய்யுள்:—

"ஒல்லென வேயென் னுறுதுயர் தாமு முணரும்வண்ணஞ்
சொல்லென நீயிது சொல்லியென் பேறுன் றுயரமெல்லாம்
வல்லென வேகொண்ட கொங்கையர் வேடஞ்சை
வாணன்வெற்பி
லல்லனெ வார்குழ லாயறி யாரல்ல ரன்பருமே

எனவும்,

"ஊருறு கோழிச் சிறுமாப் பேடை
சேவற் செய்குறி நீடி
னூடலு முணர்தலுங் கூடுமாற் பெரிதே"

எனவும் வரும்,

தலைமக ளலர் பார்த்துற்ற வச்சக்கிளவிக்குச் செய்யுள்:—

"மலருந் தொடைவஞ்சி வஞ்சக மாதரும் மாரனும்வா
யலருந் தடங்கை யலருந் தொடாநிற்ப வஞ்சிநெஞ்சம்
பலரும் புகழ்தஞ்சை வாணர்பி ரானைப் பணியலர்போற்
புலரும் பெரியகண் ணீர்புல ராது புலரினுமே

எனவும்

"அலரியாங் கொல்லதோ"

எனவும் வரும்,

தலைமக ளாறு பார்த்துற்ற வச்சக்கிளவிக்குச் செய்யுள்:-

"அரியுங் கரியும் பொருநெறிக் கோர்துணை
யாயவர்மேற்
சொரியுந் திவலை துடைக்கவென் றேருகுழை
தோய்ந்துநஞ்சும்

வரியும் பயில்கண்ணி வாணன்றென் மாறைநம்
மன்னர்வந்து
பிரியும் பொழுதெல்லி வாய்வினை யேன்மனம்
பின்செல்வதே"

எனவும்.

குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினு
மஞ்சும னளித்தெ னெஞ்ச மினியே
யாரிருட் கங்கு லவர்வரிற்
சார லீளிடைச் செலவா னுதே"

எனவும் வரும்.

காமமிக்க கழிபடர் கிளவிக்குச் செய்யுள்:

"ஓதக் கயலையுண் டண்ணுந்து விக்கி யுடல்குலுக்கிப்
பாதத் துணைமிர்க் குங்குரு கிர்வெண் பணிலபங்க
சாதத் திருநிதி யன்னுன் குலோத்துங்கன் றஞ்சையிலென்
காதற் சிறையுங் குறையுங்கண் டாரில்லைக் கன்னெஞ்சரே"

எனவும்,

"புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தாலீயெய்துங் கனவினுள்
வன்கண்ணர் கானல் வரக்கண் டறிதியோ"

எனவும்,

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காள்எழிற் புள்ளினங்கா
ளேதுற் றழுதியென் னீர்மன்னு மீர்ந்துறை வற்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வேநன்மை செப்புமினே

எனவும் வரும். (திருக்கோவையார்)

தன்னுட் கையா றெய்திடு கிளவிக்குச் செய்யுள்:-

''விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல்
லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக்
கலந்தகள்வர்க்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல்
வாய்விளங்கும்
மண்டில மேபணி யாய்தமி யேற்கொரு
வாசகமே''

எனவரும்.

தலைமக ணெறி விலக்குவித்தற்குச் செய்யுள்:-

''ஈன்ற ளினுமெனக் கன்புடை யாய்சென் றிரந்துகொண்டு
சான்றாண்மை யன்பர் தமக்குரை நீதஞ்சைக் காவலனைத்
தேன்றாழ் வரைத்தமிழ் சேர்த்திய வாணனைச் சேரலர்க்குந்
தோன்றா விருங்கங்கு லிவரு மாறொழி தோன்றலென்றே''

எனவும்,

''குறையொன் றுடையேன்மற் றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு மின்னே
அராவழங்கு நீள்சோலை நாடனை நம்மி
லிராவார லென்ப துரை

எனவும் வரும்.

தலைமகள் குறி விலக்கு வித்தற்குச் செய்யுள்:—

''வெற்றி யவாவிய வாணர்பி ரான்றஞ்சை வெற்பகத்திற்
பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரன்மின் பேதையினுங்
முற்றிய வேனற் படுகிள்ளை யோப்பு முறைமையளென்
றெற்றிய காதலி னுலிசைத் தாயன்னை யென்றுரையே''

எனவும்,

"வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடீஇயர்
செல்கென் றோளே யன்னை யெனநீ
சொல்லி னெவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
பைங்கட் செந்நாய்ப் படுபதம் பார்க்கு
மாரிரு ணடுநாள் வருதி
சார னாடன் வாரலோ வெனவே"

எனவும் வரும்.

வெறி விலக்குவித்தற்குச் செய்யுள்:—

"மின்னு திடித்தென்ன வன்னைகொண் டாள்வெறி
விந்தைமங்கை
மன்னுண்மை மன்னரிய வாணன்றென் மாறை
வரையில்வண்டியா
மென்று வசுண மிறைகொள்ளு நாட
ரெனக்கருளான்
முன்னு ளருளிய நோய்தணிப் பாலின்று
மொய்குழலே"

எனவும்

"வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண் மற்றன்னோ வணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூஉய் வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்"

எனவும் வரும்.

பிற விலக்குவித்தற்குச் செய்யுள்:—

"பொருபான் மதியினை போன்மருப் பியானையிற்
பொன்னெடின்பங்

தருபான் மொழிவஞ்சி சாரவந் தார்தஞ்சை
வாணன்வெற்பி
லொருபா னுறுமல ரென்னவெந் தீயுலை
யுற்றசெவ்வே
லிருபான் மருங்கினுங் கொண்டெறிந் தாலொத்த
தென்செவிக்கே''

எனவும்,

''காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனோ நொதுமலர் தலையே.''

எனவும் வரும்.

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தற்குச் செய்யுள்:—

''தற்பழி யாமலுஞ் சந்திர வாணன் றமிழ்த்தஞ்சைநங்
கற்பழி யாமலுங் காரண மாகக் கயல்விழிநின்
சொற்பழி யார்நமர் சொல்லுவல் லேசென்று சொல்லலையே
லிற்பழி யாம்வழி யாநம தாருயிர்க் கேதமுமே.''

எனவும்,

''..............எந்தையும்,
யாயு மறிய வுரைத்தியின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்.''

எனவும் வரும்.

''பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி, யருமறை செவிலி யறிந்தமை கூறலும், தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும் ஆக விரண்டும், அலர்பார்த் துற்றவச்சக் கிளவியு மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியு ஆக விரண்டும்' நெறி

விலக்கு வித்தன் முதலிய நான்கு மாகிய வெட்டு மச்சத்திற் குரியன; பாங்கி யிறைவனைப் பழித்தலும், துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலு மாகிய விரண்டு முவர்த்தற்குரியன; தலைமகனூர்க்குச் செலவொருப் படுதலும், பூங்கொடி யிறையோன்றன்னை நொந்தியற்பட மொழிதலும், கனவுநலி புரைத்தலும், கவினழி புரைத்தலும், தன்றுயர் தலைவர்க்குணர்த்தல் வேண்டலும் காமமிக்க கழிபடர் கிளவியும் தன்னுட் கையாறெய்திடு கிளவியும் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலு மாகிய வெட்டு மாற்றாமைக் குரியன." (48)

15. வரைவு கடாதல்

165] வரைவு கடாதலின் வகை

பொய்த்தன் மறுத்தல் கழறல் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவு கடாதல்

(எ, சூன்) பொய்த்தன் முதலாக மெய்த்தலீறாக நான்கு வகையினை யுடைத்து வரைவு கடாத லென்றவாறு (49)

166] வரைவு கடாதலின் விரி

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலு
மலரறி வுறுத்தலுந் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலு
மறிவறி வுறுத்தலுங் குறிபெயர்த் திடுதலும்
பகல்வரு வானை யிரவுவரு கென்றலு
மிரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினு மிரவினு மகலிவ ணென்றலு
முரவோ னுடு மூருங் குலனும்
மரபும் புகழும் வாய்மையுங் கூறலு

மாறுபார்த் துற்ற வச்சங் கூறலு
மாற்றுத் தன்மை யாற்றக் கூறலுங்
காவன்மிக வுரைத்தலுங் காமமிக வுரைத்தலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலு
மெனமுறை நாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

(எ, சூ-ன்) வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகக் கவினழி புரைத்தலீறாகச் சொல்லப்பட்ட விருபதும் வரைவு கடாதல் விரியெனப்படு மென்றவாறு.

அவற்றுள்,

வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவர்க்குத் தோழி விளம்பற்குச் செய்யுள்:—

''தளரா விளமுலை தாங்ககில் லாது தளரிடைகண்
வளராத தென்கங்குல் வாரா யெனத்தஞ்சை
வாணன்வெற்பா
விளரார் திருநுத லன்னைக்கொர் மாற்றம் விளம்பியுய்ந்தே
னுளரா மவர்வலை யுட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே''

எனவரும்,

அலர் அறிவுறுத்தற்குச் செய்யுள்:—

"மணிவரை மாளிகை மாறைவ ரோதயன் வாணன்வெற்பா
பணிமொழி யாளென்னுங் கொள்கொம்பு மூடிப்
படர்ந்தயலார்
அணிமனை தோறுங் கொழுந்துவிட் டம்ப லரும்பிமண்மேற்
றணிவில தாகவிப் போதலர் பூத்ததுன் றண்ணளியே"

எனவும்,

"அறிந்தோ ரறிவில ரென்றலர் சிறந்த
வின்னுயிர் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
பின்னீ ரோதியென் றோழிக் கன்றே
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கௌவையா கின்ற தையநின் னருளே" (நற்றிணை)

எனவும் வரும்.

தாயறி வுணர்த்தற்குச் செய்யுள்:—

"திரையிற் பவளம் வடவா முகத்தெழுந் தீக்கொழுந்தின்
கரையிற் படருங் கடற்றுறை நாட கயற்கொடிபொன்
வரையிற் றிகழ்வித்த வாணன்றென் மாறை மலர்ந்தமௌவல்
விரையிற் களவையெல் லாமறிந் தாளன்னை மெய்யுறவே"

எனவும்,
"நாரை நல்லினங் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்த லுளரும் துறைவ
பொங்குகழி நெய்த லுறைப்ப வித்துறைப்
பல்கால் வரூஉந் தேரெனச்
செல்லா தீமோ வென்றனள் யாயே"
(ஐங்குறுநூறு)

எனவும் வரும்.

வெறி யச்சுறுத்தற்குச் செய்யுள்:—

"மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பி
னெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே

யையுற் றயர்வுற்றெம் மன்னையும் யாயுமென் ஞரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே''

எனவரும்,

பிறர் வரைவுணர்த்தற்குச் செய்யுள்:—

"வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை
வெம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களிற் றோன்றுந் துறைவசெஞ்
சொற்புலவோர்
வடிக்கின்ற முத்தமிழ் வாணன்றென் மாறையெம்
மான் மருங்கை
யொடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு
காதவரே"

எனவும்,

''சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு
குறுக்கை யிரும்புலி பொரூஉ நாட
நனிநா ணுடைமையு மன்ற
பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே''

(ஐங்குறுநூறு)

எனவும் வரும்,

வரைவெதிர் வுணர்த்தற்குச் செய்யுள்:—

''குருதிகண் டாலன்ன காந்தளஞ் சாரற்
குறிவெறிதே
வருதிகண் டாய்தஞ்சை வாணன்வெற் பாவெங்கண்
மாநகர்நீ
சுருதிகண் டாரொடுந் தோன்றிலெங் கேளிர்நின்
சொல்லிகவார்
பருதிகண் டான்மல ராதொழி யாகயப்
பங்கயமே

எனவும்

'மாத்தொலம்பி'

எனவும் வரும்.

வரையுநா ளுணர்த்தற்குச் செய்யுள் —

"அலகம் பணகண் ணிவள்கொங்கை மென்சுணங் காகிவண்டு
பலகம் பலசெய்யப் பூத்தன வேங்கைப் பனிவரைமேற்
றிலகம் பதித்தெனச் சேல்வைத்த வாணன்றென்
மாறைமன்ன
னுலகம் பயில்புகழ் போற்சிலம் பாமதி யூர்கொண்டதே"

எனவும்,

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடூழ் படுபு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேற
லறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறித்த வின்ப மெளிதி னீன்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்ப நினக்கெவ னரிய
வெறுத்த வேஎர் வேய்மருள் பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளு மினைய ளாயிற் றந்தை
யருங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே"

எனவும் வரும்,

தலைமகளறிவு தலைமகற் கறிவுறுத்தற்குச் செய்யுள்:—

"வனநாண் முளரி முகைவென்று வாணன்றென்
மாறைவெற்பிற்
கனநா ணணிந்துபொற் கச்சற வீசிக்
கதிர்த்தெழுந்த

தனநா ணு நுண்ணிடைத் தையனல் லாள்பழிச்
சாற்றுவல்யா
னெனநாணி நின்பழி தான்மறைத் தாளன்ப
வென்னையுமே''

எனவும்,

''தன்னெவ்வங் கூறினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றுஞணி''

எனவும் வரும்,

குறிபெயர்த்திடுதற்குச் செய்யுள்:—

''ஊரோர் பலரிங் குலாவவுங் கூடும்வந்
தொண்சிலம்பா
வேறோர் பொதும்பரிற் போய்விளை யாடுக
வேற்படையான்
மாறோர் பகைவென்ற வாணன்றென் மாறையெம்
மன்னுதவப்
பேறோர் வடிவுகொண் டாலன்ன நீயுமென்
பேதையுமே

எனவும்,

''விளையாட் டாயமொடு வெண்மணல் லழுத்தி
மறந்தனெந் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நம்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே'' (நற்றிணை)

எனவும் வரும்.

குறிபெயர்த்திடுதற்கு மேற்காட்டிய செய்யுள் பகற் குறிக்கும், இரவுக்குறிக்கு மேற்குமாறறிந்து கொள்க.

பகல்வருவானை யிரவு வருகென்றற்குச் செய்யுள்:—

"முத்தணி நீல மணித்தக டூடெங்கு
மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை
வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப்
பாசிலைவெண்
டொத்தணி பூந்துறை வாவரு வாயிரு
டூங்கிரவே"

எனவும்,

"பனைத்திர ளன்ன பரேரெறுழ்த் தடக்கைக்
கொலைச்சினந் தவிரா மதனுடை முன்பின்
வண்டுபடு கடாஅத் துயர்மருப் பியானை
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி
யுறுபுலி யுரறக் குத்தி விறல்கடிந்து
சிறுதினைப் பெரும்புனம் வெளவு நாட
கடும்பரிக் குதிரை யாஅ யெயின
னெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங் கிடும்பை
பெரிதா லம்ம விவட்கே யதனான்
மாலை வருதல் வேண்டுஞ் சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கும்
மலைமுத லடுக்கத்த சிறுகல் லாறே" (அகம்)

எனவும் வரும்.

இரவுவருவானைப பகல்வருகென்றற்குச் செய்யுள்:—

"இழைவிளை யாடு மிளமுலை சாயற் கிடைந்தமஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா

துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டான்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே''

எனவும்,

''நெடுமலை யடுக்கங் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குற்
குஞ்சர நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்க ணிரும்புலி குழுமுஞ் சாரல்
வாரல் வாழி யரைய நேரிழை
நெடுமென் பணைத்தோ ளிவளும் யானுங்
காவல் கண்ணினந் தினையே நாளை
மந்தியு மறியா மரம்பயி லிறும்பி
ஞெண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கட்
டண்ப லருவித் தாழ்நீ ரொருசிறை
யுருமுச் சிவந்தெறிந்த மதனழி பாம்பின்
றிருமணி விளக்கிற் பெறுவையிவ
ளிருண்மென் கூந்த லேமுறு துயிலே'' (அகம்)

எனவும் வரும்.

பகலினு மிரவினும் பயின்று வருகென் றற்குச் செய்யுள்:

''குரவுங் கணியும் விரவுவெற் பாவெய்ய குஞ்சரமேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்றென் மாறைமின்னு
மரவும் பணியு நுடங்கிடை யாற்றல ளாற்பகலு
மிரவுங் குறிவயி னீவரல் வேண்டு மிவள்பொருட்டே''

எனவரும்.

பகலினு மிரவினு மகலிவ ணென்றற்குச் செய்யுள்:—

''தாவாத செல்வந் தருந்தஞ்சை வாணன் றடஞ்சிலம்பா
நீவாரல் சாரல் நிலவல ராம்பக லீடிருளார்

மாவா னிலவு நிலமங்கை வார்குழன் மல்லிகைபோ
லோவா திரவெறிக் குஞ்சோலை நீழலி னூடுவந்தே''

எனவரும்.

தலைமகனுடு மூருங் குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறற்குச் செய்யுள்:—

''தலத்திற்கு மாறைக்கு மன்னவன் வாணன்
றமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்கு மாமணி யாகுநின் னூட்டிற்கு
நின்பதிக்குங்
குலத்திற்கு மாசில் குடிமைக்குஞ் சீர்மைக்குங்
கோதின்மெய்ம்மை
நலத்திற்கு மாவதன் றுல்வரை யாது
நடப்பதுவே''

எனவும்,

''பிரசங் கொளவீழ்ந்த தீந்தே னிறூஅன்
மரையான் குழவி குளம்பீற் றுகைக்கும்
வரையக நாட வரையா வரினெந்
நிரைதொடி வாழ்த லிலள்''

எனவும்,

''பழனக் கம்புள் பயிற்பெடை யகவுங்
கழனி யூரநின் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தை வேலே''

எனவும்,

''தாமரைக் கண்ணியைத் தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறாஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே''

எனவும்,

''கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றுளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கீழ்ப் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ''

எனவும், .

''ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றுளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்குப் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ''

எனவும்

''திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றுளை
யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்குப் பெரியதோர் புகராகிக் கிடவாதோ''

எனவும் வரும்.

இவை நாடு முதலியனவற்றிற்குரிய சான்றோர் செய்யுளாம்.

ஆறுபார்த்துற்ற வச்சங் கூறற்குச் செய்யுள்:—

''புராந்தகர் செஞ்சடை வெண்பிறை போனுதற்
புள்ளிமிழ்பூங்
குராந்தொடை மென்குழற் கொம்பினை வேண்டிக்
கொடிமுல்லைநீண்
மராந்தமு வுந்தஞ்சை வாணன்வெற் பாவல்சி
தேர்ந்திலஞ்சிக்
கராந்திரி கல்லதர் வாயெல்லி நீவரல்
கற்பலவே''

எனவும்,

''கரைபொரு கானியாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக

"வரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ"

எனவும் வரும்.

ஆற்ருத் தன்மை யாற்றக் கூறற்குச் செய்யுள்:—

"கலங்குந் தெளியுங் கனலெழ மூச்செறி யுங்கண்கணீர்
மலங்கும் பொலந்தொடி சோரமெய் சோரு
மறஞ்செய்கொலை
விலங்கும் படிறுசெய் யாக்குன்ற நாட விரைந்தளிப்பா
யலங்குங் கடும்பரித் தேர்வாணன் மாறை யணங்கினையே"

எனவரும்

காவன் மிக வுரைத்தற்குச் செய்யுள்:—

"நஞ்சா ரரவந் திரிதரு கானடு நாளிரவி
லஞ்சாது செங்கை யயில்விளக் காவணங் கின்பொருட்டான்
மஞ்சார் மதிற்றஞ்சை வாணன்வெற் பாவரல்
வன்சொலன்னை
துஞ்சாள் கடுந்துடிக் கைநகர் காவலர் துஞ்சிறுமே"

எனவரும்.

காமமிக வுரைத்தற்குச் செய்யுள்:

"தென்னுக வண்டமிழ் வாணன்றென் மாறைச் செருந்தியுடன்
புன்னுக முங்கமழ் பூந்துறை வாசுரர் போற்றமிர்தம்
பின்னுக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னுக மன்றியுண் டோபுணை யாவது நீந்துதற்கே"

எனவும்,

'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார றுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'' (குறுந்தொகை)

எனவும் வரும்

கனவு நலிபுரைத்தற்குச் செய்யுள்:—

மாளுத தெவ்வென்ற வாணன்றென் மாறை வளநகர்போற்
பூணுக மெல்லியற் புல்லினை யாகவப் பொய்யைமெய்யாப்
பேணு மகிழ்ந்து பெருந்துயி லேற்றவள் பின்னைநின்னைக்
காணுள் கலங்கின ளாற்கலங் காமனக் காவலனே'

எனவும்.

''மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்தல் யாவது துன்னிக்
கனவிற் காணு மிவளே
நனவிற் காணுணின் மார்பே தெய்யோ''

என்வும் வரும்.

கவினழி புரைத்தற்குச் செய்யுள்:—

''ஏரேற்ற கொங்கை யிளங்கொடி மாந்தளி ரேய்ந்தவண்ணங்
காரேற்ற கங்குலிற் பீரலர் போன்றது காவியுண்கண்
வாரேற்ற பைங்கழல் வாணன்றென் மாறையில்
வாவியின்கண்
ணீரேற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே''

எனவும்,

தொடிபழி மறைத்தலிற் றோளுய்ந் தனவே
வடிக்கொள் கூழை யாயமொ டாடலி
னிடிப்பு மெய்யதொன் றுடைத்தே கடிக்கொள
வன்னை காக்குந் தொன்னலஞ் சிதையக்
காண்டொறுங் கலுழ்த லன்றியு மீண்டுநீர்
முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறைச்

சிறுபா சடைய செப்பூர் நெய்தற்
றெண்ணீர் மலரிற் றுலைந்த
கண்ணே காமங் கரப்பரி யவ்வே.

எனவும் வரும்.

இவற்றுள், வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பன் முதலாகப் பிறர்வரை வுணர்த்த லீறுகச்சொல்லப் பட்ட வைந்தும் பொய்த்தற்குரிய; குறிபெயர்த்திடுதன் முதலாகப் பகலினு மிரவினு மகலிவ ணென்ற லீறுகச்சொல் லப்பட்ட வைந்தும் மறுத்தற்குரிய: உரவோனுடு மூருங் குலனு மரபும் புகழும் வாய்மையுங் கூறலாகிய வொன்றுங் கழறற் குரியது; வரைவெதிர் வுணர்த்தலும். வரையுநாளு ணர்த்தலும்; அறிவறிவுறுத்தலு; மாறுபார்த்துற்ற வச்சங் கூறலும்; ஆற்ருத் தன்மை யாற்றக்கூறலும், காவன் மிக வுரைத்தலும், காமமிகவுரைத்தலும், கனவினலி புரைத் தலும், கவினழி புரைத்தலுமாகிய வொன்பதும் மெய்த் தற்குரிய. (50)

16. ஒருவழித் தணத்தல்.

167] ஒருவழித் தணத்தலின் வகை.

செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற் றுவித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.

(எ. குன்.) செலவறிவுறுத்தல் முதலாக வந்துழி நோதலீறுக வெழுவகையினை யுடைத்து மேற்சொல்லிய வொருவழித் தணத்தலென்றவாறு. (51)

ஒருவழித் தணத்தலின் விரி.

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலு
மென்சொற் பாங்கி விலக்கலுந் தலைவ

னீங்கலு வேண்டலும் பாங்கி விடுத்தலுந்
தலைவிக் கவன்செல வுணர்த்தலுந் தலைவி
நெஞ்சொடு புலத்தலுஞ் சென்றோ னீடலிற்
காமம் மிக்க கழிபடர் கிளவியுங்
கோற்றொடிப் பாங்கி யாற்றுவித் தலுமவன்
வந்தமை யுணர்த்தலும் வந்தோன் றன்னொடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி
யிறைவியை யாற்றுவித் திருந்த வருமை
கூறலு மென்னு மாறிரு கிளவியு
மொருவழித் தணத்தலின் விரியெனப் படுமே

(எ-ஹன்.,) ஒருவழித் தணத்தலின் விரியுணர்த்து தனுதலிற்று,

(இ-ள்) தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றன் முதலாகத் தலைவியைப் பாங்கி யாற்றுவித் திருந்த வருமை கூற லீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு கிளவியு மொருவழித் தணத் தலின் விரியென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

அவற்றுள்,

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றற்குச் செய்யுள்:—

"திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற்
சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துணை வல்லியை நீதஞ்சை
வாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப்
பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுகை
நின்கடனே"

என வரும்.

பாங்கி விலக்கற்குச் செய்யுள்:—

“பறந்தாங் கிவர்பரித் தேர்கட வேலுன்
பதியடைந்தான்
மறந்தாங் கமையவும் வல்லையன் பாதஞ்சை
வாணனென்னூர்
நிறந்தாங் கிவர்கணை போலுண்கண் மாமுகி
லீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாணகைப்
பொன்னிளையே”

எனவும்,

“வருவை யல்லை வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி னைய்மணி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்ல றைய்யோ” (ஐங்குறு நூறு)

எனவும் வரும்.

தலைமகன் நீங்கல் வேண்டற்குச் செய்யுள்:—

“அறையும் பொறையு மணந்தவெங் கானத்
தணங்கையில்லைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேனெண்ண
லார்வரைமேல்
மறையும் படிவென்ற சந்திர வாணன்றென்
மாறையில்வண்
டுறையுங் குழலிசென் றேவரல் வேண்டுமெம்
மூரகத்தே”

எனவரும்.

தலைமகனைப் பாங்கி விடுத்தற்குச் செய்யுள்:—

“இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக்
கியானுமொன்று

சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர்
தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்றென் மாறையில்
வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந்
திருநகர்க்கே''

எனவரும்.

பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தற்குச் செய்யுள்:—

''நிலவேய் தரள நிரைத்தன்ன வாணகை
நீலநிறக்
குலவேய் நிகர்பொற் றொடிநெடுந் தோளி
குறுகிவரச்
செலவே கருதினர் செந்தமிழ் வாணன்
செழுங்கமலத்
தலவே தியன்பெறு நாள்பெற்று வாழ்பவன்
றஞ்சையிலே

எனவும்,

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே னிறூஉம் கூறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்.''

எனவும் வரும்.

தலைவி நெஞ்சொடு புலத்தற்குச் செய்யுள்:—

''குளித்தா ரிளங்கொங்கை யாவியி லாவி
குளிர்ப்பநம்மை
யளித்தா ரகலத் தணைத்தகன் றூரன்
றணங்கின்முன்னே

தெளித்தார் செழுந்தஞ்சை வஞ்சாணனென் னரின
சிந்தனைய
வொளித்தா ரவரிங்ங னேநன் று நன் றிவ்
வுலகியலே.''

எனவும்,

''அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு,' (குறள்)

எனவும் வரும்.

சென்றோ னீடலிற் காமமிக்க கழிபடர் கிளவிக்குச் செய்யுள்:-

''மயிலாடு தண்டலை மாறைவ ரோதயன்
வாணனென்னார்க்
கெயிலா கியகடற் கானலஞ் சேர்ப்பற்
கிடையிருள்யான்
றுயிலா நிலையொன் றுஞ் சொல்லாய் துணையுடன்
சூழ்திரைத்தேன்
பயிலா மலரணை மேற்றுயி லாநிற்றி
பாலன்னமே''

எனவும்,

சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் மொண்டுறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
வாங்கட் டீம்புன லீங்கட் பரக்குங்
கழனி நல்லூர் மகிணர்க்கென்
னிழைநெகிழ் பருவரல் செப்பா தோயே''
(நற்றிணை)

எனவும் வரும்.

தலைவியைப் பாங்கியாற்று வித்தற்குச் செய்யுள்:—

"ஆடுகம் வாநம் மகன்றவ ளூரக லாப்புதுநீர்
பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம் பாங்கினெல்லாந்
தேடுகம் வாதஞ்சை வாணனன் னூட்டன்பர் தேர்வழிநாஞ்
சூடுகம் வாகவ லாதவர் கானற் றுறைமலரே"

எனவும்

"கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் நெடுமண லேறி யானாது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட னாடே"

எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமை யுணர்த்தற்குச் செய்யுள்:—

"பண்ணுங் குயிலும் பழித்தசொற் பாவை
பரியலெல்லாம்
மண்ணும் புகழ்த்தஞ்சை வாணனென் னூரென
மைக்குவளைக்
கண்ணுங் கனையிருட் கங்கலின் மாரன்
கணைகள்பட்ட
புண்ணும் புலரவந் தார்தம தூர்வயிற்
போனவரே"

எனவும்,

"அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பி னறுகுலைக் காந்தட்
கொங்குண் வண்டிற் பெயர்ந்துபுற மாறிநின்

வன்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தன னினியே''

எனவும் வரும்.

வந்தோன் றன்னொடு பாங்கி நொந்து வினாதற்குச் செய்யுள்:—

ஒருதலைக் கெய்திய கல்லதர்க் குச்செல்ல
வோருயிர்த்தா
யிருதலைப் புள்ளி னியைந்தநுங் கேண்மைக்கு
மெண்ணியெம்மூர்
வருதலைக் கொண்க நினைந்திலை வாணன்றென்
மாறைவண்டு
பொருதலைக் குங்குழ லாளழ நீகண்டு
போனபின்னே''

எனவும்,

''யாங்கு வல்லுநையோ வோங்கல் வெற்ப
விரும்பல் கூந்தற் றிருந்திழை யரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ''

எனவும் வரும்.

தலைவன் பாங்கியொடு நொந்து வினாதற்குச் செய்யுள்:

''ஐவா யரவுற்ற தன்னவின் னுவிட ராற்றியென்போ
லெவ்வா றிருந்திர் நீ ரெல்வளை யீரெதிர்ந் தாரைவென்று
மைவா ரணங்கொண்ட வாணன்றென் மாறை மருவலர்போ
னொவ்வா வலரையுங் கேட்டிரு வீரு மொருதனியே''

எனவரும்.

பாங்கி தலைவியை யாற்றுவித்திருந்த வருமை தலைமகற்குச் சொல்லற்குச் செய்யுள்:-

''இவளா ருயிர்புரந் தியானிருந் தேன்செக்க
ரிந்துவென்னப்
பவளா டவியிற் பயினீத் திலம்பங்க
யங்குவியத்
தவளா தவஞ்சொரி தண்டுறை வாதஞ்சை
வாணன்றெவ்விற்
றுவளாம லாற்றுவி யென்றன்று நீசொன்ன
சொன்னினைந்தே.

எனவும்,

''போதார் கூந்த லியலணி யழுங்க
வேதி லாட்டியை நீபிரிந் ததற்கே
யழலவிர் மணிப்பூ ணனையப்
பெயலா னுவென் கண்ணே தெய்யோ''

எனவும் வரும்

இவற்றுள், தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலும், பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தலுமாகிய விரண்டுஞ் செலவறி வுறுத்தற்குரிய; தலைமகனைப் பாங்கி விலக்கலாகிய வொன்றுஞ் செலவுடன் படாமைக் குரித்து. தலைவன் நீங்கல் வேண்டலாகிய வொன்றுஞ் செலவுடன் படுத்தற் குரித்து. தலைமக னெஞ்சொடு புலத்தலுங் காமமிக்க கழிபடர் கிளவியு மாகிய விரண்டுஞ் சென்றுழிக் கலங்கற் குரிய. தலைமகளைப் பாங்கி யாற்றுவித்தலுந் தலைமகன் வந்தமை தலைமகட் குணர்த்தலுமாகிய விரண்டுந் தேற்றி யாற்றுவித்தற்குரிய; பாங்கி வந்தோன் றன்னொடு நொந்து வினாதன் முதலாகிய மூன்றும் வந்துழி நொந்துரைத்தற்குரிய.

17. வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிவு

169 வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதலின் வகை

பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவுழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

(எ. சூன்) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவா மாறுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) பிரிவறிவுறுத்தன் முதலாக வந்துழி மகிழ்ச்சியீறாக வொன்பது வகையினை யுடைத்தாம் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலென்றவாறு

170 வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரி

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலும்
நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலும்
நீடே னென்றவ னிங்கலும் பாங்கி
யோடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலுந் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்
வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலு
மிருளைவம் பென்றலு மிறைமகண் மறுத்தலு
மவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதெனத்
துணைவி சாற்றலும் பிணைவிழி யாற்றலு

மவனவட் புலம்பலு மவன்வருங் காலைப்
பாகன் றன்னொடும் மேகந் தன்னொடுஞ்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரிக் கிழத்தி வாழ்த்தலும் வந்துழி
நினைத்தமை வினுதலும் நினைந்தமை செப்பலும்
அனைத்தகை யவளை யாற்றுவித் திருந்தமை
பாங்கிகூ றலுமென வாங்கெழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிமொழிப் புலவர்

(எ. ஞன்.) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின் விரியாமா றுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றன் முதலாகத் தலைமகளை யாற்றுவித்திருந்தமை பாங்கி கூற லீறுகச் சொல்லப்பட்ட விருபத்தொன்றும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின் விரியென மொழிந்தனர், ஆராய்ந்தஅறிவுடையோ ரென்றவாறு.

அவற்றுள்.

என்பொருட் பிரிவுணர்த்தேந்திழைக் கென்றற்குச் செய்யுள்:—

"கழைபோல் வளர்நெற் கவின்பெற வாரி
கவர்ந்துவரும்
மழைபோல் வருகுவன் வன்சுரம் போய்த்தஞ்சை
வாணன்வெற்பி
லிழைபோ லிடையாண் முலைவிலைக் காவன
யாவையுங்கொண்
டுழைபோ லரிநெடுங் கண்மயி லேசென்
றுணர்த்திதுவே"

எனவரும்,

பாங்கிநின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றற்குச் செய்யுள்:-

"வசையும் புகழுமின் மேலன வாந்தஞ்சை
வாணன்வெற்பா!
மிசையுங் கரும்பினில் வேம்புவைத் தாலென்ன
வேட்கையெல்லாத்
திசையும் பரவுந் திருவனை யாடன்
றிருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேற்சொல்லி நீபின்
னெழுந்தருளே"

எனவும்,

இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பி னன்ன வரும்புமுதிர்பு
நன்மா ணுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழு முரவுநீர்ச் சேர்ப்ப
வினமணி நெடுந்தேர்ப் பாக னியக்கச்
செலீஇய சேறி யாயி னிவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதனற் கறிந்தனை சென்மே" (நற்றிணை)

எனவும் வரும்.

நீடே னென்றவ னீங்கற்குச் செய்யுள்:—

"காலைப்பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருகுவல் யான்றஞ்சை வாணனன்னாட்
டாலைப் பழன மணிந்தவெம் மூர்நும் மகங்குளிரச்
சோலைப் பயில்குயில் போன்மொழி யாயென்
றுணிவிதுவே"

எனவும்,

"இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக
விளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் குவமே" (குறுந்தொகை)

எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தற்குச் செய்யுள்:—

"வில்லேய் குறும்பு மிறும்புமெவ் வாயும் விராயவெவ்வாய்க்
கல்லேய் கவலைக் கடங்கடந் தார்நமர் காய்ந்தெதிர்ந்தார்
*செல்லேய் களிற்றுச் செருவென்ற வாணன்றென் மாறையினின்
மல்லேய் முலைவிலை தாந்தந்து நாளை மணம்பெறவே"

என வரும்.

தலைமக ளிரங்கற்குச் செய்யுள்: —

"இப்பே ருவகை யினிநீற்பிரி †யேனென் றெனக்குச்சொன்ன
வெப்பே ருரைபழு தாமென்ன லேவர வஞ்சுமந்த
மைப்பே ரலைகடல் வையகந் தாங்கிய வாணன்றஞ்சைச்
செப்பே ரிளங்கொங்கை மங்கைசெப்பா தன்பர் சென்றதுவே"

எனவும்,

---

* செல்லேய் முரசச் (பா. பே.)

† என்முன் சொன்ன (பா. பே.)

"செல்லா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
*விடுவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
யாயிடை
யிருபே ராண்மை செய்த பூச
லல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே"

எனவும் வரும்.

பாங்கி கொடுஞ்சொற் சொல்லற்குச் செய்யுள்:-

"ஆரணத் தானருள் பாரளித் தானடங்
காதவரை
வாரணத் தால்வென்ற வாணன்றென் மாறை
வயங்கொளிசேர்
பூரணத் தார்மதி போன்முகத் தாயென்
புலம்புதிரின்
காரணத் தாலல்ல வோபிரிந் தாரின்று
காதலரே"

எனவரும்.

தலைவி கொடுஞ் சொற் சொல்லற்குச் செய்யுள்:—

"மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு
வன்புலியுஞ்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர்
சென்றுழிமுள்
ளிண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல்
கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற்
கழறனன்றே"

எனவும்

* ஒவ்வாளல்லன் (பா. பே.)

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தவர்தேர் சென்ற வாறே
ய்துமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கழறுமிவ் வழுங்க லூரே"
குறுந்தொகை—12

எனவும் வரும்

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தற்குச் செய்யுள்:-

"தேர்த்தானை வாணன்றென் மாறைமின் னேயஞ்சல்
செம்புருக்கி
வார்த்தா லனைய வழிநெடும் பாலை
மடப்பெடைநோய்
பார்த்தா தவந்தணி பாதவ மின்மையிற்
டைஞ்சிறகாற்
போர்த்தாலு மஞ்ஞைகண் டும்போவ ரோநம்
புரவலரே"

எனவும்,

"நசைபெரி துடையர் நல்கினும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கு
மன்பின தோழி யவர்சென்ற வாறே"
(குறுந்தொகை 268)

எனவும் வரும்.

பருவங்கண்டு பெருமகள் புலம்பற்குச் செய்யுள்:-

"மிகவும் பரந்த கரியகண் ணீர்செங்கை
வெள்வளைபோ

லுகவுந் துறந்தவ ருன்னல ராலுறை
கார்பொழிய
மகவுந் துணையுங் கலைதவ ழுந்தஞ்சை
வாணன்வெற்பின்
அகவும் பெடைமயி லுந்தமி யேனெங்ங
ஞற்றுவலே''

எனவும்

வெண்பா

அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து — பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்''

எனவும் வரும்

இருளி வம்பென் றற்குச் செய்யுள்:—

''தனஞ்சேர்ந்த வஞ்சிநின் சாயல்கண் டஞ்சித்
தனித்தனிபோய்
வனஞ்சேர்ந் தயர்ந்த மயில்களெல் லாந்தஞ்சை
வாணன்வெற்பிற்
கனஞ்சேர்ந் தலர்துளி காலுமுன் னேவம்பு
காலுமென்று
வினஞ்சேர்ந் தகவின நாந்தனி வாடி
யிருத்தல்கண்டே''

எனவும்.

மடவ வாழி மஞ்ஞை மாயினங்
கால மாரி பெய்தென வதனெதி
ராலு மாலின பிடவும் பூத்தன
காரன் றிகுளி களைநின் படரே

கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்க்
புதுநீர் கொளீஇய வுகுத்தரு
நொதுமல் வானத்து முழங்குரற் கேட்டே''

எனவும் வரும்.

இறைமகள் மறுத்தற்குச் செய்யுள்:—

''வாவித் தகையன்ன மேதஞ்சை வாணன்
வரையகத்தென்
பாவித் தனிநெஞ்சு பார்த்தஞ்சு மேகண்
பயின்றகண்ணார்
தூவித் தழைமயில் கோபங்கொள் ளாவரத்
தோன்றியைச்சேர்ந்
தாவித் தகந்தள ரும்மணி காலு
மராவென்னவே''

எனவும்

''செல்வச் சிறாஅர் சீறடி பொலிந்த
தவளை வாய பொலன்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலையுங்
காரன் றென்றி யாயிற்
கனவோ மற்றிது வினவுவல் யானே''

எனவும் வரும்.

அவர் தூதாகி வந்தடைந்ததிப்பொழுதெனத் துணைவி சாற்றற்குச் செய்யுள்:—

''இன்னே வருவர்நின் காதல ரேதில
ரேங்கவினிக்
கொன்னே யிரங்கி வருந்தல்கண் டாய்கொற்ற
நேமிவிந்தை

மன்னே யெனவந்த வாணன்றென் மாறை
வரவுணர்த்த
முன்னே நடந்தன காண்கடுங் கால
முகிலினமே''

எனவும்.

வெண்பா

கடுங்கதிர் நல்சூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக் — கொடுங்குழா
யின்னே வருவர் நமரென் றெழில்வான
மின்னு மவர்தூ துரைத்து

எனவும் வரும்.

தலைமகளாற்றற்குச் செய்யுள்:—

''இன்புற்ற காலத் திருவர்க்கு மொன்றுயி
ரென்றுசொன்னு
ரன்புற்ற காதல ராதலி னுலகன்
ருரெனநாங்
துன்புற்ற காலத் தவரு முருரல்லர்
தோழிசொல்லும்
வன்புற்ற காரளிக் குந்தஞ்சை வாணன்றென்
மாறையிலே''

எனவரும்.

அவனவண் புலம்பற்குச் செய்யுள்:—

''விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தெனை
வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து
குடங்கையின்மே

லொழுகிய வஞ்சன வெள்ளத் துணங்கு
மணங்கைமுன்சென்
றெழுகென நெஞ்சமென் னேயவ ரோவெனி
லென்சொலுமே''

எனவும்.

வளைபடு முத்தம் பரதவர் பகருங்
கடல்கெழு கொண்கண் காதன் மடமகள்
கெடலருந் துயர நல்கிப்
படலின் பாயல் வௌவி யோளே''

எனவும் வரும்.

மீண்டு வருகின்ற காலத்துத் தலைமகன் பாகனொடு சொல்லற்குச் செய்யுள்:—

''வன்மா முடுக வலவதிண் டேரினி
வாணன்றஞ்சைக்
கென்மா லுறுநெஞ்சின் முன்செல்ல நாகிள
வேறுபுல்லிப
பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும்
புலம்பமன்றிற்
சென்மாலை யந்திகண் டாற்றரி யாளென்
றிருந்திழையே''

எனவும்

பெரும்புன் மாலை யானது நினைஇ
யரும்பட ருழத்தல் யாவ தென்றும்
புல்லி யாற்றுப் புரையோட் காண
வள்புதெரிந் தூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்டதேரே''

எனவும் வரும்.

தலைமகன் மேகத்தொடு சொல்லற்குச் செய்யுள்:—

"வேண்டும் பொருளைத் தரும்பொருட் போய்முற்றி
மீண்டடவென்றேர்த்
தூண்டும் பரிமுன் றுணைமுகில் காள்சென்று
சொல்லுமிந்து
தீண்டுங் கொடிமதில் சூழ்தஞ்சை வாணனைச்
சேரலர்போ
லீண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக்
கென்வரவே

எனவரும்.

பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தற்குச் செய்யுள்:—

"பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்பண்டு
போயநின்கைக்
குருகின் றணிந்திறை கொள்வது காண்கஙுங்
கொண்கர்பொற்றேர்
தருகின்ற சங்கந் தருவன்ன வாணன்
றமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேயோகை கூறும்
வலம்புரியே"

எனவும்

ஈயலின் மூதாய் பரப்ப வினமரீஇக்
கோவல ரூதுங் குழலிரங்கக் கோபந்
தவழக்கார் செய்தன்று தையலாய் வந்தார்
இமிழ்ப்ப டுஞ்சங் கொலி

எனவும் வரும்.

வலம்புரி கிழத்தி வாழ்த்தற்குச் செய்யுள்:—

“மால்வண் டெனமன்னரி வானன்றென் மாறைமன்
னன்புகழே
போல்வண் டமிழ்மன்னர் போற்ற விளங்குக
பொன்கொழிக்குங்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக்
கான்முகையின்
மேல்வண் டிருந்தது போற்கரு மாமுக
வெண்சங்கமே”

எனவும்

“புரிவளை வான்கொடே புத்தேளொ டொத்தி
திருவமர் மார்பனு மேந்திஞன் றம்முன்
உருவம் புரையுநின் கேழ்”

எனவும் வரும்.

தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினுதற்குச் செய்யுள்:—

“நினையீர் பொருட்குப் பிரிந்தவந் நாட்டுழி
நின் றுழிவேள்
அனையீர் நினைந்து மறிதிர்கொல் லோவஞ்சொ
லாலறிவோர்
வனையி ரிதழ்க்கண்ணி வாணன்றென் மாறையை
வாழ்த்தலர்போ
னனையி ரிதழ்க்கண்வை காவெவ்வ நோயுற்ற
நவ்வியையே”

எனவும் வரும்.

தலைமகனினைத்தமை செப்பற்குச் செய்யுள்:—

“காநெடுங் குன்றங் கடந்துசென் றேருரு
காலுமைதோய்

மானெடுங் கண்ணி மறந்தறி யேன்வண்கை
வாணன்றஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பையுஞ் சூது
நெருங்குகொங்கைத்
தேனெடுங் கண்ணிமென் பூங்குழன் மாதர்
திருமுகமே''

எனவரும்.

தலைமகளை யாற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறற்குச் செய்யுள்:—

''உயரா மலகத் தருங்கனி நீர்நசைக்
குண்சுரம்போய்
வியராம வில்லின் விடுத்தகன் றூளைமென்
பூஞ்சிலம்பா
வயாரம லஞ்சலென் றுற்றுவித் தேனிவ்
வவனியெல்லா
மயராமல் வந்த பிரான்றஞ்சை வாணன்றென்
மாறையிலே''

எனவரும்.

இவற்றுள்,

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலும், பாங்கி தலைவிக் கவன் செலவுணர்த்தலுமாகிய விரண்டும் பிரிவறி வுறுத்தற்குரிய; பாங்கி நின்பொருட் பிரிவுரை நீய வட்கென்றலாகிய வொன்றும், பிரிவுடன் படாமைக்குரித்து; தலைமகனீடேனென்ற வனீங்கலாகிய வொன்றும் பிரிவுடன் படுத்தற்கும்பிரிவுடன் படுதற்கு முரித்து; தலைமகளிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற் சொல்லலும், பருவங்கண்டு பெருமகள் புலம்பலும், இறைமகள், மறுத்தலும் அவனவட்புலம்பலு மாகிய வைந்தும் பிரிவுழிக்கலங்கற்குரிய; தலைவிகொடுஞ்

சொற்சொல்லலும் வருகுவர் மீண்டெனப்பாங்கி வலித்தலும் இகுளை வம்பென்றலும் அவர் தூதாகி வந்தடைந்த திப் பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்குரிய; தலைமக ளாற்றலாகிய வொன்றும் வன்பொறைக் குரித்து; தலைமகன் மீண்டு வருங்காலைப் பாகன்றன்னொடு சொல்லலும் மேகந் தன்னொடு சோகங்கொண்டவன் சொல்லலுமாகிய விரண்டும் வரும்வழிக் கலங்கற்குரிய; பாங்கி வலம்புரி கேட்டவன் வர வறிவுறுத்தன் முதலாகிய வைந்தும் வந்துழி மகிழ்ச்சிக்குரிய வெனக் கொள்க.

இரண்டாவது களவியன் முற்றும்.

உ

மூன்றாவது வரைவியல்.

171] வரைவின் இலக்கணம்

வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவோர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

(எ. சூன்.) இவ்வோத் தென்ன பெயர்த்தோ வெனின் வரைவியலென்னும் பெயர்த்து.

(இ-ள்) வரைவென்று சொல்லப்படுவது தலைமகன் றலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங் கொடா தொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கோடலென்றவாறு. (1)

172] வரைவிற்குரிய கிளவித்தொகை.

வரைவு மலிவே யறத்தொடு *நிலையென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.

(எ. சூன்.) வரைவிற் குரிய கிளவித்தொகை யுணர்த் துத லுதலிற்று.

(இ-ள்) வரைவு மலிவு மறத்தொடு நிலையுமென்கின்ற விரண்டும் வரைவிற்குரிய கிளவியின்றொகை யென்று கூறினா ரறிவோ ரென்றவாறு. (2)

---

* நிற்றலென்று (பா. பே.)

1. வரைவு மலிதல்

173] வரைவு மலிதலின் வகை

வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

(எ. சூன்) வரைவு மலிதலின் வகையுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) வரைவுமுயல் வுணர்த்தன் முதலாகப் பராவல் கண்டுவத்தலீறுகநான்குவகையினையுடைத்தாம் வரைவுமலித லென்றவாறு. *(3)*

174] வரைவு மலிதலின் விரி.

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலுங் காதலி நற்று
யுள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை காதலிக் குணர்த்தலு
மவளுவகை யாற்று துளத்தொடு கிளத்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவி
மணப்பொருட் டாக வணங்கைப் பராநிலை
காட்டலுங் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
விருமூன்று மொன்றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

(எ. சூன்,) வரைவு மலிதலின் விரியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தன் முதலாகக் கண்டோன் மகிழ்தலீறுகச்

சொல்லப்பட்ட வேழும் வரைவு மலிதலின் விரியென விளம்பினர் மெய்யுணர்ந்தோ ரென்றவாறு.

அவற்றுள்,

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்துதற்குக் காட்டிய செய்யுள்:—

"தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர்
சூதமர்நின்
முலைவிலை யாக முகந்தளித் தார்முனை
வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன்
றமிழ்த்தஞ்சைநீ
யுலைவிலை யாகுக பொன்வண்ண மாறுக
வொண்ணுதலே'!

எனவும்,

"எக்கர் ஞாழன் மலரின் மகடூஉ (மகளிர்)
வொண்டழை யயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கினன் நாடே"

எனவும் வரும்.

காதலி நற்று யுள்ள மகிழ்ச்சி யுள்ளற்குச் செய்யுள்:—

"கயமா மலரெனுங் கன்னியை வண்டெனுங்
காளைபல்புள்
ளியமா மணம்புண ரீர்ந்துறை நாட
ரெதிர்ந்தவர்மேல்
வயமா நடாத்திய வாணன்றென் மாறை
வருகுவரே
னயமா மணவணி கண்டியாயு மின்புறு
நம்மினுமே"

எனவும்,

"குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழும்
கானக நாடன் வரையின்
மன்றலு முடையள்கொல் தோழி யாயே"

எனவும் வரும்.

பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட் குணர்த்தற்குச் செய்யுள்:—

"மணிப்பா லிகைமுத்தம் வைத்தாங் கடம்பலர்
வார்திரை தூஉ
யணிப்பாய் துவலை யரும்புந் துறைவர்க்
கணியெதிர்ந்து
பணிப்பா சிழையல்குல் வெண்ணகை யாய்நமர்
பாரநின்றோய்
தணிப்பான் முரசறைந் தார்தஞ்சை வாணன்
றமிழ்நிலத்தே"

எனவும்

"அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் தொலைத்த
குன்ற நாடற் கயர்வர்நன் மணனே"

எனவும் வரும்.

தலைமகளுவகை யாற்று துளத்தொடு கிளத்தற்குச் செய்யுள்:—

"சோகா குலமெய்தல் காண்டுநெஞ் சேநந் துறைவரென்று
நீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி நிலம்புரக்கு
மாகா விரியன்ன வாணன்றென் மாறைமன் னன்பகையு
மேகா விருட்கங்கு லாங்கடற் காலை யெனுங்கரையே"

எனவும்,

"இலையடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
மலையக நாடனும் வந்தான் மற்றன்னை
யலையு மலைபோயிற் றின்று"

என்வும் வரும்.

தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள்:—

"மாரியஞ் சுங்கொடை வாணன்றென் மாறையில்
வாழிவெண்டார்
வேரியந் தொங்கல் விரைகமழ் மார்ப
விடாதவம்பல்
சேரியும் பொய்கைத் துறையலர் வாடினுஞ்
செவ்விமணந்
தூரியஞ் சங்கதி ரக்காட்டு நீயன்று
சூட்டலரே"

எனவும்,

"எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட
வினிதுசெய் தனையா னுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே"

எனவும் வரும்.

தலைவி மணம்பொருட்டாக வணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டுதற்குச் செய்யுள்:—

"உரவிப் பேருங்கலித் துன்பங்கள் போய்முத
லூழியின்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்றென்
மாறையன்னாள்

புரிவிப் புனைநெடுந் தேரண்ணலேஙின்
பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல்
பார்த்தருளே''

என வரும்.

தலைமகனணங்கைப் பராநிலை கண்ட தலைமகள் மகிழ்தற்குச் செய்யுள்:—

"இவ்வித் தகமிவட் கெவ்வண்ண மெய்திய
தெவ்வுலகும்
வல்வித் திகழ்புகழ் வாணன்றன் மாறை
மணப்பொருட்டால்
நவ்வித் தொகையின நாணுமென் னோக்கி
நறைபுனைகையாச்
செவ்வித் தகைமலர் தூய்தெய்வம் வாழ்த்துந்
திருத்தகவே''

எனவும்,

குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுட் குலமுதல் வாழ்த்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையண்
மலர்ந்த காந்த ளூறிக்
கலுழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே

எனவும் வரும்.

இவற்றுள், காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தலும், தலைவி மணப்பொருட்டாக வணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டலுமாகிய விரண்டும் வரைவு முயல் வுணர்த்தற் குரிய.

பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைகட் குணர்த்தலா கிய வொன்றும் வரைவெதிர் வுணர்த்தற் குரித்து. தலைவி நற்றா யுள்ள மகிழ்ச்சி யுள்ளலு மவள் உவகையாற்றா துளத் தொடு கிளத்தலுந், தலைமகனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவறிந்து மகிழ்தற்குரிய தலைமக ளணங்கைப் பராநிலை கண்டோன் மகிழ்தலாகிய வொன்றும் பராவல் கண்டுவத்தற் குரித்து. (4)

2. அறத்தொடு நிற்றல்.

173] அறத்தொடு நிலையின் வகை

முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.

(எ, சூ-ன்) அறத்தொடு நிலையின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) முன்னிலை மொழியு முன்னிலைப் புறமொழியு மென விருவகையினை யுடைத்தா மறத்தொடு நிலையென்றவாறு மொழியென்பதனை முன்னும் பின்னுங் கூட்டுக, (5)

176] தலைவி அறத்தொடு நிற்றல்

கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
யெய்தக் கூறலு மிகந்தமை யியம்பலு
மியற்பழித் துரைத்துழி யியற்பட மொழிதலுந்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலு
மில்வயிற் செறித்தமை சொல்லலுஞ் செவிலி
கனையிரு ளவன்வரக் கண்டமை கூறலு
மெனமுறை யியம்பிய வேழும் புனையிழைத்
தலைவி யறத்தொடு நிலைதனக் குரிய.

(எ. சூன்.) தலைவி யறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற் காரணங் கூறன் முதலாகச் செவிலி கனையிருளவன் வரக்கண்டமை கூறலீருகச் சொல்லப்பட்ட வேழும் தலைமகளறத்தொடு நிலைக்குரிய கிளவியாமென்றவாறு.

அவற்றுள்,

கையறு தோழி கண்ணீர் துடைத்தற்குச் செயயுள்:—

''அயிரார் திரைவந்துன் வண்டலம் பாவை
யழித்தனவோ
செயிரா'த வன்னை செயிர்த்தன ளோசெறி
நாரைதிண்போர்
வயிரா நர லும் வயற்றஞ்சை வாணன்றென்
மாறையிலென்
னுயிரா கியதைய னீகலுழ் வானென்
னுளங்குழைந்தே''

எனவும்,

"எழாஅ யாகலி னெழினலந் தொலைய
வழாஅ தீமோ நொதுமலர்த் தலையே
யேனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிதிர்விற் சிலபல தாஅய்
வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
மயிலறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே''

எனவும் வரும்.

தலைமகள் கலுழ்தற் காரணங் கூறற்குச் செய்யுள்:—

"தாரணி கொண்ட விருதோ ளொருவர்
தனித்துழியென்
வாரணி கொங்கை மணந்துசென் றூர்தஞ்சை
வாணனென்னூர்
தேரணி வென்ற செழும்புகர் வேல்விழித்
தேனினஞ்சூழ்
காரணி மென்குழ லாயது வேகலுழ்
காரணமே"

எனவும்,

"யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையி னழுதன தோழி
கன்றுற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
யேறா திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே"

எனவும் வரும்.

தலைமகன் றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை யெய்தக் கூறற்குச் செய்யுள்:—

"துதித்தே னணங்கொடு சூளுமுற் றேனென்ற
சொல்லைமெய்யா
மதித்தே னயர்ந்து மதியிலி யேன்றஞ்சை
வாணன்வையை
நதித்தே னினம்புணர் மாதர்கண் போல
நகைக்குநெய்தற்
பொதித்தே னுகர்ந்தக லுங்கழிக் கானற்
புலம்பர்வந்தே"

எனவும்,

"கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கொ ணுவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டே னெனத்தெளிந்தே
னின்ற வுணர்விலா தேன்"

எனவும் வரும்.

தலைமக னிகந்தமை தலைமகள் பாங்கிக்கு இயம்பற்குச் செய்யுள்:—

"வரியோல வண்டலை தண்டலை சூழ்தஞ்சை
வாணன்வண்மைக்
குரியோ னுயர்வையை யொண்டுறை வாயுர
வோர்தெளித்துங்
கரியோர் பிறரில்லை யென்றகன் றானிக்
காரிகையாய்
பெரியோர் மொழிபிற மாரேன்று தேறுதல்
பேதைமையே"

எனவும்,

"யாரு மில்லைத் தானே கள்வன்
றானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே"

எனவும் வரும்.

இது தெளிவிடை விலக்கல்

அது கேட்ட பாங்கி யியற்பழித்துரைத்தற்குச் செய்யுள்:-

"மழவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை
வாணன்வென்றி

முழவேய முந்நீர் முழங்கிருங் கானின்
முழுதுலகுந்
தொழவே தருந்தெய்வ நோக்கிச்செல் லேனென்று
சொல்லியுநீ
யழவே துறந்தன ரானல்லர் நல்லரவ்
வாடவரே''

எனவரும்,

தலைமகளியற்பட மொழிதற்குச் செய்யுள்:—

''மாகப் புயன்மண்ணில் வந்தன்ன வாணன்றென்
மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கான்ஞெண்டு
நாகிளந்தண்
பூகக் குளிர்நிழற் பேடையோ டாடும்
புலம்பரின்று
ராகக் கருதினல் லாயிலரி யாரிலரி
யாருளரே''

எனவும்,

அடம்பமர் நெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னுயினு மாக
வவனே தோழியென் னுயிர்க் காவலனே''

எனவும் வரும்,

தெய்வம் பொறை கொளச் செல்குவ மென்றற்குச் செய்யுள்:—

''மாதங்க நல்குங்கை வாணன்றென் மாறைவை
யைத்துறைவ
ரேதம் பயந்தில ரெங்கட்கு நீயெம்
மிகந்ததனுற்

கோதம் படர்தி கொடுந்தெய்வ மேயென்று
கூர்பலி தூஉய்ப்
பாதம் பரவநல் லாயிரு வேழும்
படர்குவமே''

எனவும்,

"பெருந்தோ ணெகிழ வல்வரி வாடச்
சிறுமெல் லாக முறுபசப் பூர
வின்னே மாக வெற்கண்டு நாணி
நின்னொடு தெளித்தன ராயினு மென்ன தூஉ
மணங்க லோம்புமதி வாழிய நீயெனக்
கணங்கெழு கடவுட் குயர்பலி தூஉய்ப்
பரவினம் வருகஞ் சென்மோ தோழி!
பெருஞ்சே யிறவின் றுய்த்தலை முடங்கல்
சிறுவெண் காக்கை நாளிரை பெறூஉம்
பசும்பூண் வழுதி மருங்கை யன்னவெ
னரும்பெற லாய்கவின் றொலையப்
பிரிந்தாண் டுறைதல் வல்லி யோரே

எனவும் வரும்.

இல்வயிற் செறித்தமை சொல்லற்குச் செய்யுள்:—

"தன்போ லுலகம் புரக்கின்ற வாணன்
றமிழ்த்தஞ்சையார்
மன்போ லெவர்க்கும் வழங்கியுண் ணுதவர்
வைத்திழக்கும்
பொன்போ லிறுகப் பொதிந்துகொண் டாளன்னை
பூவையென்மேல்
வன்போ இயமட வாரலர் தூற்றிய
வாறுகண்டே''

எனவும்,

பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்
கொண்ட விடுமணற் குரவை முனையின்
வெண்டலைப் புணரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கௌவை நல்லணங் குற்ற விவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னாது கல்லென
வலவ னாய்ந்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே"

எனவும் வரும்.

செவிலி கனையிருளவன் வரக் கண்டமை கூறற்குச் செய்யுள்:—

"வெங்கார் முகமெம் புருவமின் னேயன்னை
மேலொருநா
ளெங்கா தலர்குறி யெய்தல்கண் டாளிந்த
வேழுலகு
மங்கா வகைதந்த வாணன்றென் மாறைவண்
டானமஞ்சச்
சங்காழி கொண்டெறி யுங்கண்டல் வேலியந்
தண்டுறைக்கே

எனவும்

"நுழையு மடமகள் யார்கொலென் றென்னை
புழையு மடைத்தாள் கதவு

எனவும் வரும்.

இவற்றுள், கலுழ்தற் காரணங் கூறலாகிய வொன்று மொழித் தேனைய வெல்லாம் பாங்கி வினவா தொழியவுந் தலைமகளறத்தொடு நிற்றற்குரிய வாமாறறிந்து கொள்க.

177] பாங்கி யறத்தொடு நிற்றல்

எறிவளை வேற்றுமைக் கேதுவி னுவினும்
வெறிவிலக் கியவழி வினுவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்.

(எ. சூன்,) பாங்கியறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்பினுந்தான் வெறிவிலக்கிய விடத்துக் காரணங் கேட்பினும் பாங்கி பூவும் புனலுங் களிறுமாகிய விவைகாரணமாகப் புணர்ச்சியினை யறிவிக்கு மவட் கென்றவாறு.
அவற்றுள்,

செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு, பாங்கியைவினுதற்குச் செய்யுள்'—

"பொன்னுற்ற கொங்கையு முத்துற்ற கண்ணுமிப்
 போதுகண்டேன்
பன்னுற்ற சொல்லுமின் பாலுங்கொள் ளாள்பதி
 னுலுலகு
மன்னுற்ற வண்புகழ் வாணன்றென் மாறையென்
 மானனையாட்

கென்னுற்ற தென்றறி யேன்புனங் காவ
 லிருந்தபின்னே"

எனவரும்.

வெறி விலக்கற்குச் செய்யுள்:—

"அறியா மையினென்று கேட்கலுற் றேனும்மை
 யாவதொன்றுங்
குறியா மறியுயிர் கொள்கவென் றேகுரு
 திப்பலிகூர்
வெறியா லிவளுயிர் மீட்கவென் றேவென்றி
 வேல்வலத்தீர்
சிறியார் மனையில்வந் தீர்தஞ்சை வாணன்
 சிலம்பினின்றே''

எனவும்

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மண்ணுந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே"

எனவும் வரும்

செவிலி தொழியை வினாதற்குச் செய்யுள்:—

மண்குன்ற வந்த கலியினை மாற்றிய
 வாணன்றஞ்சை

யொண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை
யாண்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந்
தாரயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளையிவ் வாறென்
விளம்பியதே''

எனவரும்.

வெறி விலக்கியதற்குக் காரணங் கேட்ட செவிலிக்கு நின்மகளும், நானும், சோலையில் விளையாடிய காலையில் ஒரு தோன்றல், நின்மகளுக்கு நீலப்பூக் கொடுத்துப் போயினான். இஃது அறியாக்காலத்து நிகழ்ந்தது, அதனை இன்று நின்மகள் நெஞ்சிற் கொண்டு மெலியா நின்றாள் இஃது யானறிந்தது. என்று தோறியறத்தொடு நிற்றல். மேல்வரும் இரண்டு துறைக்கும் இவ்வாறியைய உரைத்துக்கொள்க.

தோழி பூத்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:—

''போருறை தீக்கணை போலுநின் கண்கண்டு
போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று
நின்மகட்கோர்
தாருறை தோளவர் தந்தனர் வாணன்
றமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய
காலையிலே''

எனவும்.

''தந்தார்க்கே யாமாற் றடமென்றே ளின்னநாள்
வந்தார்க்கே யாயென்பார் வாய்காண்பாம்-வந்தார்க்கே

காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்
பூவா விளஞாழற் போது.

எனவும் வரும்.

இது, பொதுமலர் வரைவின்கண் அறத்தொடு நின்றதாம்.

புனறரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:-

ஒழிதோற் றியசொல்ல லுன்மக ளோதிக்
குடைந்தகொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெங் நீருந்திப்
பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு
தோன்றலுமவ்
வழிதோற்றி வந்தெடுத் தான்றஞ்சை வாணன்றன்
வையையிலே''

எனவும்

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலாண்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலைப் புணர்ந்தன ளென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே''

எனவும் வரும்

களிறுதரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:—

''மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென்
மாறைவெற்பி
லண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின
மஞ்சனந்தோய்

கண்ணலே நீரிடப் பாகமு மேல்வந்த
        கைக்களிற் றின்
புண்ணலே நீர்வலப் பாகமுந் தோயப்
        பொருதவன்றே''

எனவும்,

வெண்பா

''சுள்ளி சுனேநீலஞ் சோபா லிகைசெயலே
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து — தெள்ளி
யிதணுற் கடியொடுங்கா வீர்ங்கடா யானே
யுதணுற் கடிந்தா னுளன்''

சோபாலிகை—வெண்ணுச்சி

எனவும் வரும். இம்மூன்றனு ளொன்ரு னறத்தொடு நிற்றறலமையு மெனக்கொள்க. (7)

178] செவிலி யறத்தொடு நிற்றல்

மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலே மொழியான் மொழியுஞ் செவிலி.

(எ. சூன்.) செவிலி யறத்தொடு நிற்றற்குரிய கிளவி களே யுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) தலேமகள் வேறுபாடுகண்டு நற்ருயுன்னே (செவிலியை) வினவியவிடத்து முன்னிலே மொழியானே சொல்லுஞ் செவிலி யென்றவாறு. மின்னிடை—தலேவி, அன்மொழித்தொகை, வேற்றுமை—வேறுபாடு, வேற்றுமை கண்டு தாய் வினுதலும் அநுவாதத்தாற் கொள்ளப்படும்.

அவற்றுள்

தலேமகள் வேற்றுமைகண்டு நற்ருய் செவிலியை வினுதற்குச் செய்யுள்:—

"தண்டார் தழுவிய வேலண்ணல் வாணன்றென்
றஞ்சைவெற்பில்
வண்டார் குழலிதன் வண்ணமுங் கண்ணும்
வடிவுமுன்னுட்
கண்டா ரறியும் படியன வேயல்ல
காரணமொன்
றுண்டா லுயிரனை யாயயி ராம
லுரையெனக்கே.

எனவும்

" கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வெயர் பொடித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோண் மடந்தை
யாங்கா யின்ள்கொ லென்னுமென் னெஞ்சே "

எனவும் வரும்.

செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியா னறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:—

" மலைவந்த தோவெனும் வாரண வாணன்றென்
மாறைமதிச்
சிலைவந்த தோவெனும் நன்னுத லாயொரு
செல்வரிங்கோர்
கலைவந்த தோவென வந்து விணவிநங்
காரிகைக்கு
முலைவந்த தோவில்லை யோவென்னு நாளின்
முயங்கினரே

எனவரும்.

நற்றாய் குறிப்பினன்றி யறத்தொடுநிற்கப் பெறுளென்றமையாற் செய்யுளில்லை. (8)

179] அறத்தொடு நிற்வலின் விரி இவையெனல்

என்றுட னியம்பிய வெல்லாங் களவியல்
நின்றுழி யறத்தொடு நிற்றலின் விரியே.

(எ. சூன்) அறத்தொடு நிற்றலின் விரியிவை யென்ப துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) கையறு தோழி கண்ணீர் துடைத்துழித் தலைமகள், கலுழ்தற் காரணங்கூறன் முதலாகத் தலைமகள் வேறுபாடு கண்டு நற்றாய் வினவியவழிச் செவிலி முன்னிலை மொழியான் மொழிதலீறாகச் சொல்லப் பட்டன வெல்லாங் களவொழுக்கம் வெளிப்படாது. நின்றவிடத்தறத் தொடுநிற்றலின் விரியா மென்றவாறு. (9)

180] களவு வெளிப்பாட்டிற் குரிய கிளவித்தொகை.

போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சி யென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் *கிளவி வெளிப்படும் தொகையே.

(எ. சூன்.) களவு வெளிப்பாட்டிற் குரிய கிளவித் தொகைபுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) போக்கு முதலாக மீட்சி யீறாகச் சொல்லப்பட்ட மூன்றுங் களவு வெளிப்பாட்டிற் குரிய கிளவித் தொகையா மென்றவாறு. (10)

3. உடன் போக்கு

181] உடன் போக்கின் வகை.

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்

* கிளவியின் வழிப்படு தொகையே (பா. பே.)

போக்கல் விலக்கல் புகழ்த றேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே

(எ. சூன்.) நிறுத்த முறையானே உடன் போக்கின் வகை யுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்) போக்கறி வுறுத்தன் முதலாகத்தேற்ற லீறாக வெட்டு வகையினை யுடைத்தா மன்பமைந்தவுடன் போக் கென்றவாறு. (11)

132] உடன்போக்கின் விரி

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி பிரங்கலுங் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
யொருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்திய லுரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலும்
அவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங்
கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலுந்
*தன்பதி யணிமை சாற்றலுந் தலைவன்
றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யொன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே.

(எ; சூ-ன்) உடன் போக்கின் விரியுணர்த்துத னுதலிற்று.

---

* தம்பதி யெனவும் (பா. பே.)

(இ-ள்) பாங்கி தலைவற் குடன் போக் குணர்த்தன் முதலாகத் தலைவன் றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்த லீறாகச் சொல்லப்பட்ட பதினெட்டு வகையினையுடைய கிளவியும் பொருந்திய வன்பினையுடைய வுடன்போக்கு விரியா மென்றவாறு.

அவற்றுள்,

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தற்குச் செய்யுள்:-

"மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்றஞ்சை
வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேசென்று
சேர்ந்தருண்மற்
றிந்நீர்மை யல்லதோ ராறுமின் றூலிங்கெம்
மையரென்றான்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக
முலையினுக்கே"

எனவும்,

"மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
யிளையோ ராடும் வரிமனை சிதைக்குந்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சிலர்செவித் தாக்கிய புணர்ச்சி யலரெழ
வில்வயிற் செறித்தமை யறியாய் பன்னாள்
வருமுலை வருத்தா வம்பகட்டு மார்பிற்
றெருமர லுள்ளமொடு வருந்து நின்வயின்
நீங்கு கென்றியான் யாங்கென மொழிகோ
வருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கட் கோசர் நியம மாயினு

முறுமெனக் கொள்ளுந ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே''

எனவும் வரும்.

தலைவ னுடன்போக்கு மறுத்தற்குச் செய்யுள்.—

''பாரோ முலைவிலை யென்பர்நுங் கேளிரெம்
பல்கிளைஞ
ரூரோ வணியதன் றெண்டொடி யாய்விந்தை
யுண்கண்களோ
தாரோ வளரும் புயன்றஞ்சை வாணன்
றரியலர்போல்
யாரோ தனிநடப் பாரருங் கான
மிவளுடனே''

எனவும்,

''இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉ
மாநிலைப் பள்ளி யல்க நம்மொடு
மானுண் கண்ணியும் வருமெனின்
வாரார் யாரோ? பெருகல் யாறே

எனவும் வரும்.

பாங்கி தலைமகனை யுடன்படுத்தற்குச் செய்யுள்:—

'' சுருளேய் குழலுஞ் சுணங்கேய் முலையுஞ்
சுமந்துகற்புப்
பொருளே யெனச்சுரம் போதுமப் போதும்
புகழ்வெயிலான்
மருளேய் கலியிருண் மாற்றிய வாணன்றென்
மாறையினி
னருளே யொழியவுண் டோநிழ லாவ
தணங்கினுக்கே ''

எனவும்

" நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யெற்றினும் வாடா தாகுங்
கவணை யன்ன பூட்டுப்பொரு தசாஅ
வுமணொருத் தொழுகைக் கோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடித் துயவுங்
கானமு மினியவா நும்மொடு வரினே "

எனவும் வரும்.

தலைவன் போக்குடன் படுதற்குச் செய்யுள்:—

" நஞ்சோ வழலோ வெனுஞ்சுர மோசெல்ல
நாடியவென்
னெஞ்சோ கொடியது நேரிழை யாய்நிழன்
மாமதியோ
மஞ்சோ தவழ்மதில் சூழ்தஞ்சை வாணன்
வரையிலவம்
பஞ்சோ வனிச்சங் கொலோவெனுஞ் சீறடிப்
பைந்தொடிக்கே"

எனவும்,

"ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவும்
தான்வர றுணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயி லழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே"

எனவும் வரும்.

பாங்கி தலைவிக் குடன்போக்கு ணர்த்தற்குச் செய்யுள்:-

"பாலன்ன பாயற் பகையென்னுஞ் சீறடி
பட்டுருவும்

வேலன்ன கூர்ங்கன் மிதிக்குங்கொ லென்றனர்
மேதினிக்கு
மாலன்ன வாணன்றென் மாறைநன் ஞட்டு
வயலுகளுஞ்
சேலன்ன நீள்விழி யாய்தெரி யாதன்பர்
சிந்தனையே"

எனவும்,

"குன்றக் குறவ ஞரை மறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்த ளூறும்
வண்டிமிர் சுடர்நுதற் குறுமகட்
கொண்டனர் செல்வர்தங் குன்றுகெழு நாட்டே"

எனவும் வரும்.

தலைவி நாணழி பிரங்கற்குச் செய்யுள்:—

மறவாகை வேலங்கை வாணனை மாறையர்
மன்னனைத்தம்
முறவாக வெண்ணி யுருதவர் போலுயி
ரோம்பியென்றுந்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற்
றொல்லுலகிற்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும்
பெண்பிறப்பே"

எனவும்,

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே"

எனவும் வரும்.

கற்பு மேம்பாடு பூண்முலைப் பாங்கி புகறற்குச் செய்யுள்:—

“செங்நாண் மலரிற் றிருவன்ன கோலத்
தெரிவையர்க்கு
மெய்ந்நா ணுயிரினு மிக்கதன் றுல்விர
வாவரசர்
தந்நாண் முறைமை தவிர்த்தருள் வாணன்
றமிழ்த்தஞ்சைநாட்
டந்நா ணமுமட வாய்கற்பு நோக்க
வழகிதன்றே”.

எனவும்,

உயிரினுஞ் சிறந்தன்று நாணே
நாணி   திர் காட்சிக்
கற்புச் சிறந்த தன்றே

எனவும் வரும்.

தலைவி யொருப்பட் டெழுதற்குச் செய்யுள்:—

“பலரே சுமந்த வுரைகளுந் தாயர்தம்
பார்வைகளுஞ்
சிலரே சுமந்து திரியவல் லார்செய்ய
செண்பகநாண்
மலரே சுமந்த வயற்றஞ்சை வாணனை
வாழ்த்தலர்போ
லலரே சுமந்து சுமந்திந்த வூர்நின்
றழுங்குகவே

எனவும்

“சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலத்தன ளன்னை யலைப்ப

வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர்த் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமான் பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே'' (நற்றிணை)

எனவும் வரும்.

பாங்கி சுரத்திய லுரைத்துழித் தலைமகன் சொல்லற்குச் செய்யுள்:—

''செல்லிற் கொடிய களிற்றியல் வாணன்றென்
மாறைமன்னன்
வில்லிற் கொடிய புருவமின் னேயென்
விளம்புதிநீ
சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர்
சூழ்ந்திருக்கும்
இல்லிற் கொடியகொல் லோசெல்லு நாட்டவ்
விருஞ்சுரமே''

எனவும்

வெண்பா

''கடக்கருங் கானத்துக் காளை பின்னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி — சுடர்த்தொடீஇ
பெற்றா ளொருவன் பெருங்குதிரை யங்கிலையே
கற்றா ளஃதூரு மாறு''

எனவும் வரும்.

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தற்குச் செய்யுள்:—

'' பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும்
புரங்கரப்பச்

சிறந்தெரி யாடிதென் றில்லையன் னாடி-றத்
துச்சிலம்பா
வறந்திருந் துன்னரு ளும்பிறி தாயி
னருமறையின்
றிறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச்
சேணிலத்தே '' (திருக்கோவையார்)

எனவும்

'' நீற்கட லுண்ட புயல்போற் கருகி நிறைந்ததிருப்
பாற்கட லுண்ட புயல்போலு நாளும் பரிந்தருள்வாய்
சேற்கட னஞ்சுண்ட வாரூர்த் தியாகர் செழுங்கயிலை
போற்கட நாகமன் றுவெங்கள் மாதின் புரிகுழலே ''

எனவும், (திருவாரூர்க்கோவை)

'' நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்தல் போல
வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
வின்னா செயினு மினிதுதலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே ''

எனவும், (குறுந்தொகை

'' இவளே நின்னல திலளே யாயுங்
குவளை யுண்க ணிவளல திலளே
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே ''

எனவும் வரும்.

பாங்கி வைகிருள் விடுத்தற்குச் செய்யுள்:—

"பொழிநான மன்றலம் பூங்குழ லீங்கள்
புணர்ந்துசெல்லும்

வழிநாடி நும்பின் வருகுவல் யான்றஞ்சை
வாணன்வையைச்
சுழிநாணு முந்திநின் றெல்கிளைக் கேற்பன
சொல்லியின்று
மொழிநா வடங்க மொழிந்தய லாரை
முகங்கவிழ்த்தே''

எனவும்,

வேலும் விளங்கின வினையரு மியன்றனர்
தாருந் தைஇத் தழையுந் தொடுத்தன
நிலனீ ரற்ற வெம்மை நீங்கப்
பெயனீர் தலைஇ யுலவையிலை நீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
றேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் றாகிய பனிநீங்கு வழிநாட்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போது வந்தன்று றாதே நீயுங்
கலங்கா மனத்தை யாகி யென்சொ
னயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி யுலறினும் வயலை வாடினும்
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினு மடவ ணனிநின் னயந்த
வன்னை யல்ல றாங்கிநின் னையர்
புலிமருள் செம்ம லேநாக்கி
வலிமா வின்னுந் தோய்கநின் முலையே

எனவும் வரும்.

தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தற்குச் செய்யுள்:—

''தளிபோற் கொடையயில் சந்திர வாணன்
றமிழ்த்தஞ்சையா

னளிபோற் குளிர்ந்த விளமரக் காவு
மவன்புகழி
ஞெளிபோல் விளங்கிய வெண்மணல் யாறு
முவந்துகண்டு
நளிபோ தவிழ்குழ லாய்மெல்ல மெல்ல
நடந்தருளே''
எனவும்,

''அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகப்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிது வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே'' (நற்றிணை)

எனவும் வரும்

தலைமகன் றலைமகளசைவறிந் திருத்தற்குச் செய்யுள்:—

''வரமாமை வேற்படை வாணன்றென் மாறை
வணங்கலர்கள்
புரமான வல்லழல் பொங்குவெங் கானிற்
பொருந்தியகூ
ரரமான கல்லுன் னடிமல ராற்றல
வாதலினுஞ்
சுரமாறு மெல்லிநல் லாயிருப் பாமிந்தச்
சோலையிலே''
எனவரும்.

தலைமகன் றலைமகளை யுவந்தலர் சூட்டியுண் மகிழ்ந் துரைத்தற்குச் செய்யுள்:—

"அடிமலர் போற்றவும் போற்றியன் பாலிவ
ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர்
காய்ந்தெறியுந்
துடிமலர் சீர்க்கெதிர் கூகையி ரட்டுஞ்
சுரத்திடையோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென்
மாதவமே"

எனவும்,

"வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி யோங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை யீன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை யுணீய மன்னர்
முனைகவர் முதுபா ழுகுநெற் பெறாஉ
மாணில் சேய்நாட் டதரிடை மலர்ந்த
நன்னாள் வேங்கைப் பொன்மருள் புதுப்பூட்
பரந்தன நடக்கயாங் கண்டன மாதோ
காணினி வாழியென் னெஞ்சே நாண்விட்
டருந்துய ருழந்த காலை
மருந்தெனப் படூஉமடவோ ளையே"

எனவும் வரும்.

கண்டோ ரயிர்த்தற்குச் செய்யுள்:—

"சையத் திரள்புயன் சந்திர வாணன்
றனிபுரக்கும்
வையத் துறைகின்ற மானிட ரோவன்றி
வானவரோ

நையப் படுமழல் வெஞ்சுரத் தூடு
நடந்தவரென்
றையப் படுவதல் லாலுண்மை சால
வறிவரிதே"
எனவும்,

" வில்லோன் காலன கழலே தொடியோன்
மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே (குறுந்தொகை)

எனவும் வரும்.

கண்டோர் காதலின் விலக்கற்குச் செய்யுள்:—

" மாலுந் திருவு மெனவரு வீர்தஞ்சை
வாணன்றெவ்வூர்
போலுஞ் சுரமினிப் போகவொண் ணாது
பொருப்படைந்தா
றாலும் புரவி யருக்கனிக் கங்கு
லடற்கடமான்
பாலுந் தசையுமுண் டேதங்கு வீரெங்கள்
பாடியிலே "

எனவும்,

" எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
விளையண் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்க லாறே "
எனவும் வரும்.

கண்டோர் தன்பதி அணிமை சாற்றற்குச் செய்யுள்:—

" தொடங்கும் பிறைநுதற் றோகையு நீயுமுன்
 றோன்றுகின்ற
கடங்குன் றிரண்டுங் கடந்துசென் றூற்கம
 லத்தடமுங்
கிடங்கும் புரிசையுஞ் சூழ்ந்தெதிர் தோன்றுங்
 கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையுந்
 தஞ்சையுமே "

எனவரும்.

தலைமகன் றன்பதி யடைந்தமை தலைவிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

" சந்தனந் தோய்ந்து தயங்குமுத் தாரந்
 தரித்துவிம்மு
நந்தனந் தாங்கி நடுங்கிடை போல
 நடந்திங்ஙனே
நொந்தனங் காலென்று நோவல்பொன் னேயொரு
 நோயுமின்றி
வந்தனங் காணிது காண்வாணன் மாறை
 வளநகரே "

எனவரும்.

இவற்றுள், பாங்கி தலைமகற்குடன் போக்குணர்த்தலுந் தலைவிக்குடன் போக் குணர்த்தலுமாகிய விரண்டும் போக் கறிவுறுத்தற்குரிய; தலைமகன் மறுத்தலும், தலைவி நாணழி பிரங்கலுமாகிய விரண்டும் போக்குடன் படாமைக்குரிய; பாங்கி தலைவனையுடன் படுத்தலுந், தலைவிக்குக் கற்பு மேம்பாடு கூறலுமாகிய விரண்டும் போக்குடன் படுத்தற்குரிய; தலைவன் போக்குடன் படுதலும், தலைவி யொருப்பட்டெழு

தலும், பாங்கி சுரத்திய லுரைத்துழிச் சொல்லலுமாகிய, மூன்றும் போக்குடன் படுதற்குரிய; பாங்கி கையடை கொடுத் தலும், வைகிருள் விடுத்தலுந், தலைமகன் றலைமகளைச் சுரத் துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்குரிய; தலைவன் றலைவியை யசைவறிந் திருத்தலுங், கண்டோர் காதலின் விலக்கலுமாகிய விரண்டும் விலக்கற்குரிய; தலைவன் தலைவியை யுவந் தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங் கண்டோ ரயிர்த்தலுமாகிய விரண்டும் புகழ்தற்குரிய; கண்டோர் தன்பதி யணிமை சாற்றலுந் தலைவன் றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த் தலுமாகிய விரண்டுந் தேற்றற் குரிய. (12)

4. கற்பொடுபுணர்ந்தகவ்வை

183] கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை

செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கஞ்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த *கௌவையின் வகையே

(எ-சூன்) கற்பொடு புணர்ந்த கௌவையின் வகை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) செவிலி புலம்பன் முதலாகச் செவிலி பின் றேடிச் சேறலீறாக வைந்துவகையினை யுடைத்தாங் கற்பொடு புணர்ந்த கௌவை யென்றவாறு. 13

134] செவிலி புலம்பல்

வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலுந்

* கௌவயை வகைத்தே (பா. பே.)

தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்று
மிலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

(எ-சூன்) செவிலி புலம்பலின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) வினவிய பாங்கியி னுணர்ந்த காலை யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதன் முதலாகத் தெய்வம் வாழ்த்த லீருகச் சொல்லப்பட்ட விவ்வொரு மூன்று மிலங் கிழைச் செவிலி புலம்பற் குரிய வென்றவாறு.

அவற்றுள்,

செவிலி பாங்கியை வினவற்குச் செய்யுள்:—

"நலம்புனை யாயமு நீயுநற் றூயொடு
நானுநன்பொற்
சிலம்புயர் சோலையுஞ் சிற்றிலும் பேரிலுந்
தெண்டிரைமேல்
வலம்புரி யூர்வயல் சூழ்தஞ்சை வாணனை
வாழ்த்தலர்போற்
புலம்புற மாதரெங் கேமக ளேதனிப்
போயினளே

என வரும்.

பாங்கி செவிலிக் குணர்த்தற்குச் செய்யுள்:—

வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர்
விழைதலின்றி
மறுத்தா ரவற்கு மணமத னாற்றஞ்சை
வாணர்பிரான்
கறுத்தார் புரத்து நடந்தனள் காளைபின்
காமர்கற்பாற்

பொறுத்தா ளமுற்சுரந் தன்னையுன் ஞய்ங்ின்
பொலங்கொடியே''

எனவும்,

வெண்பா

" செவ்வாய்க் கரியகட் சீரிறுற் கேளா துங்
கவ்வையாற் காறுது மாற்ருது—மவ்வாயந்
தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமு
மோர்த்தொழிந்தா ளென்பேதை யூர்ந்து "

எனவும் வரும்,

பாங்கியினுணர்ந்த செவிலி தேற்றுவார்க் கெதிரழிந்து மொழிதற்குச் செய்யுள்:—

" மாரு வளவயல் சூழ்தஞ்சை வாணன்றென்
மாறையென்க
ஞரு வருந்துய ராற்றுகின் றீரறி
வேகொளுத்தி
யூரு வனகடிந் தென்முலே யூறமிழ்
தூட்டியின்சொற்
கூரு வளர்த்ததற் கோவென்னை நீத்ததென்
கோல்வளேயே "

எனவும்,

" அத்த நீளிடை யவளெடு போகிய
முத்தேர் வெண்பன் முகிணகை மடவர
ருய ரென்னும் பெயரே வல்லா
றெடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவ ளாயத் தோரே "

எனவும் வரும்.

செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தற்குச் செய்யுள்:—

" வழியா வரும்பெரு நீர்த்தஞ்சை வாணனை
வாழ்த்தலர்போற்
கழியாத வன்புடைக் காளைபின் ஞளைக்
கலந்துகொண்டல்
பொழியாத வெஞ்சுரம் போகுவல் யானென்று
போங்குறிப்பா
லொழியாதென் முன்புசொன் ஞள்பேதை யேனென்றை
யோர்ந்திலனே "

எனவும்,

வெண்பா

" முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி "

எனவும் வரும்.

செவிலி தெய்வம் வாழ்த்தற்குச் செய்யுள்:—

" இணங்கிப் புவனத் தெவருமில் லாவென்
னிளங்கொடியா
ளுணங்கிக் கழித லொழியவென் பால்வர
வுன்னையன்பால்
வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்றஞ்சை
வாணன்றெவ்வை
யணங்கித் திரள்புயத் தான்மல யாசலத்
தாரணங்கே "

எனவும்,

" ஞாயிறு காணுத மரநிழற் பட்இய
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் ருகத் தண்ணளிச்

சுடர்படு நெடுவேற் காளையொடு
மடவர லரிவை போகிய சுரனே" (14)

எனவும் வரும்.

185] நற்றாய் புலம்பல்

செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தன்னொடுந்
தாங்கல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற் குரிய.

(எ-துன்) நற்றாய் புலம்பலின் விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற் பாங்கி தன்னொடு புலம்பன் முதலாகப் பயிலிடம் தன்னொடும் புலம்பலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் தலைமகணற்றாய் புலம்பற்குரியவாமென்றவாறு.

அவற்றுள்,

செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:—

''சகநல்க வந்தருள் சந்திர வாணன்றென்
றஞ்சைநல்லாய்
முகநல்கி நல்க முலைகொடுத் தாரின்முத்
தங்கொடுத்தார்
மிகநல்ல ரென்பது மன்பதை தேற
விடலைபின்னே
மகநல்கு மந்தியங் கானடந் தாளுன்
மடந்தையின்றே''

எனவும்,

"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே"

எனவும் வரும்

நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பற்குச் செய்யுள்:—

"முன்னே யிதனை மொழிந்தனை யேனுந்தை
*முந்தைமணம்
பின்னேய் குழலி பெருளல்ல ளேபிற
மாதெவர்க்குந்
தன்னேயம் வைத்தரு ளுந்தஞ்சை வாணன்
றமிழ்ச்சிலம்பிற்
பொன்னே யனையநல் லாயவ மேசுரம்
போக்கினையே"

எனவும்,

" தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியி
னினிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
யினக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே "

எனவும் வரும்.

அது கேட்ட தோழி யழுங்கல் கண்டு நற்றாய் புலம்பற்குச் செய்யுள்:—

" இல்லுங் கழங்கா டிடங்களு நோக்கி
யிரங்கல்வம்பும்
வல்லும் பொருங்கொங்கை மங்கைநல் லாய்தஞ்சை
வாணனென்னர்

* மூந்தை மணம் (பா. பே.)

புல்லுந் துணைவியர் போல்வினை யேன்பெற்ற
பூவையன்னாள்
செல்லுஞ் சுரத்தழ லன்றுன்க ணீரெற்
றெறுகின்றதே ''
எனவும்,

" செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவ லுகக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலுழு நெஞ்சி
னிணையே ருண்க ணிவட்குநோ வதுவே''

எனவும் வரும்.

நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:—

" நேயம் புணை துணை யாகவெங் கானக
நீந்தலெண்ணி
யாயம் புலம்ப வகன்றன ளோகல்
லகங்குழைய
மாயம் புகலொரு காளைபின் வாணன்றென்
மாறையன்னீர்
சேயம் புயமலர் போலடி நோவவென்
சில்வளையே "
எனவும்

" இதுவென் பாவைக் கினியநற் பாவை
யிதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று
அலமரு நோக்கி னலமருஞ் சுடர்நுதற்
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே

எனவும் வரும்.

நற்றா யயலார் தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:—

" மேனாள் வரங்கிடந் தென்போல் வருந்தி
மிகவுமெய்ந்நொந்
தீனா தவர்துன்ப மெய்துவ ரோவிமை
யோருலகந்
தானாண நீடு மதிற்றஞ்சை வாணன்
றடஞ்சிலம்பின்
மானார் விழியணை யாள்விளை யாடிய
வண்டல்கண்டே"

எனவும்,

" ஒருமக ளுடையேன் மன்னே யவளுஞ்
செருமிகு முன்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர நெருநற் சென்றன
ளினியே
தாங்குநின் னவல மென்றீ ரதுமற்
றியாங்கன மொல்லுமோ வறிவுடை யீரே
புள்ளி னுள்ளம் வேமே யுண்கணின்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
னணியியற் குறுமக ளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே "

எனவும் வரும்.

நற்றாய் தலைமகள் பயிலிடந் தன்னொடு புலம்பற்குச் செய்யுள்:—

" செயலைத் தருவின் றிருநிழ லேபெருஞ்
சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை
வாணனென்னா

ரியலைத் தளித்தளித் தந்தன ளேநமக்
கின்றிதன்றே
கயலைப் பொருதகண் ணுண்மேலும் வாழ்விக்குங்
கட்டளையே ”

எனவும்,

வெண்பா

“ கொன்றாய்! குருந்தே! கொடிமுல்லாய். வாடினீர்
நின்றே னறிந்தே னெடுங்கண்ணாள்—சென்றாளுக்
கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தாட்
கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தான்
மின்னிரைத்த *பூண்முலையாள் விட்டு ” (15)

எனவும் வரும்.

186] அனைமருட்சி

நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகண் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு
மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மெனவிவை யைந்து மனைமருட்சிக் குரிய.

(எ-சூன்) அனைமருட்சியின் விரியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நிமித்தம் போற்றன் முதலாக வச்சத்தன்மைக் கச்சமுற் றிரங்க லீறாகச் சொல்லப்பட்ட வைந்து மனைமருட்சிக் குரியவாமென்றவாறு. அனை யெ னி னு ம் நற்றாயெனினு மொக்கும். அனை இடைக்குறை, அன்னை—நற்றாய்.

அவற்றுள்,

நிமித்தம் போற்றற்குச் செய்யுள்:—

“ வடியேய் புகர்முக வாள்வல வாணன்றென்
மாறையுள்யா

---

* பூண்மிளிர (பா. பே)

னடியே தொழுந்தெய்வ மாகநிற் பேணி
யரும்பலியிப்
படியே தருகுவ லென்றுமின் னேயிப்
பதியுவகைக்
கொடியே வரக்கரை *நீயடி யேன்பெற்ற
கொம்பினையே ''

எனவும்,

" மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைங்கிணை வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
†வென்றி விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே ''

எனவும் வரும்.

நற்றாய் சுரந்தணி வித்தற்குச் செய்யுள்:—

'' வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும்
வெங்கடுங்கா
னஞ்சுர தாரு வனங்களு மாக
வகிற்புகைபோன்
மஞ்சுர வாடக மாமதில் சூழ்தஞ்சை
வாணன்வெற்பிற்
பஞ்சுர மாகு மொழிச்சுரு ளோதியென்
பைந்தொடிக்கே ''

எனவும்,

" மன்னர் கொட்டின் மஞ்ஞை யாலு
முயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல

* நீகொடியேன் (பா. பே.)

† வெஞ்சினவிறல்வேல் (பா. பே.)

வறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய நாடே "

எனவும் வரும்.

நற்றாய் தன்மகண் மென்மைத்தன்மைக் கிரங்கற்குச்செய்யுள்:-

" தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத்
தண்ணனிச்சப்
பூமென் மிதிக்கிற் பதைத்தடி பொங்குநங்
காயெரியுந்
தீமே லயில்போற் செறிபரற் கானிற்
சிலம்படிபா
யாமே நடக்க வருவினை யேன்பெற்ற
வம்மனைக்கே "

எனவும்,

" உவக்கின்ற வல்லி மலர்த்தாளென் கண்களி
லொற்றிக்கண்கள்
சிவக்கின்ற தற்குமுன் னேசிவந் தேறுஞ்
செயலதன்றோ
பவக்குன் றிடிப்பவ ராரூர்த் தியாகர்
பனிவரைமே
லிவக்கின்ற வெஞ்சுரத் தேசென்ற வாறென்
னினைப்பதுவே "

எனவும்,

வெண்பா

" அரக்காம்ப லாறும்வா யம்மருங்கிற் கன்றோ
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி "

எனவும் வரும்.

நற்றாய் தன்மகளிளமைத் தன்மைக் குளமெலிந்திரங்கற்குச் செய்யுள்:—

" இரும்பா மனங்கொண்ட வாறென்னை நீதன்னை
யேத்தியென்றும்
வரும்பா வலர்க்கருள் வாணன்றென் மாறை
வளவயலின்
கரும்பார் மொழியா யழலென்று கண்ணீர்
துடைத்தணைத்துன்
னரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக்
களிக்குமின்னே "

எனவும்,

" பல்லூழ் நினைப்பினு நல்லென் றூழ
மிளி முன்பிற் கானே காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே "

எனவும் வரும்.

நற்றாய் தன்மகளச்சத் தன்மைக்கச்ச முற்றிரங்கற்குச் செய்யுள்:—

" நாண்மா தவிமலர் நாறிருங் கூந்த
னடந்தவழிக்
கோண்மா குமிறுங்கொடுங்குரல் கேட்டொறுங்
கூர்ங்கணையால்
வாண்மா முனைவென்ற வாணன்றென் மாறை
மணிவளைசூழ்
தோண்மா வெருவுங்கொல் லோவென்றென் னுருயிர்
சோர்கின்றதே "

எனவும்,

" கேளாய் வாழியோ மகளைநின் றோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப வவனொடு
பெருமலை யிறந்தது நோவே னோவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதா ளுகைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயி லெறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையு மாங்க
ணழற்சுவரத் தகுந கான நீந்திக்
கன்றுகா ணாதபுன் கண்ணசெவி சாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கண் மறவர்
கல்லென் சீறூ ரெல்வி னசைஇ
முதுவாய்ப் பெண்டிர் செதுகாற் குரம்பை
மடமயி லன்னவென் னடைமலி பேதை
தோட்டுணை யாகத் துயிற்றத் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கட்
சேக்கோ ளறையுந் தண்ணுமை
கேட்குவள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே (16)

எனவும் வரும்.

137] கண்டோர் இரங்கல்

ஆயமுந் தாயு மழுங்கக் கண்டோர்
காதலி னிரங்கல் கண்டோ ரிரக்கம்.

(எ-ஞன்) கண்டோரிரக்க முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தலைமகளாயத்தாரு நற்றாயு மிரங்குமாறு கண்டன்பினு லிரங்குதல் கண்டோரிரக்கமென்றவாறு.

அதற்குச் செய்யுள்:—

" நொந்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர்
நோக்கொடின்சொற்

றந்துங் கவையுந் தணந்துசென் ருளெனத்
தாள்பணியார்
மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்றென்
மாறையன்னாள்
பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாடும்
பயந்தவளே ''

எனவும்,

" கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
பொய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மறுகின் மூதா ராங்கண்
எருமை நல்லான் பெருமுலை மாந்து
நாடுபல விறந்த நன்ன ராட்டி
காயமு மணியிழுந் தழுங்கின்று தாயு
மீன்றேட் டாரா யிறீயரென் னுயிரெனக்
கண்ணு நுதலு நீவித் தண்ணெனத்
தடவுநிலை நொச்சி வரிநிழ லசைஇத்
தாழிக் குவளை வாடுமலர் சூடித்
தருமணற் கிடந்த பாவையென்
னருமக ளேயென முயங்கின ளழுமே '' (17)

எனவும் வரும்.

188] செவிலி பின்தேடிச் செல்லல்

ஆற்றுத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை வினுதலு மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியொடு புலம்பலுங்
குரவொடு புலம்பலுஞ் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்ப றேற்றலும் புதல்வியைக் காணாது

கவலைகூர் தலுமெண விவையொன் பானுஞ்
செவிலிபின் றேடிச் சேறற் குரிய.

(எ-சூன்) செவிலி பின்றேடலின் விரி யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) ஆற்ருத் தாயைத் தேற்றன் முதலாகப் புதல்வியைக் காணுது கவலைகூர்த லீருகக் சொல்லப்பட்ட வொன்பதுஞ் செவிலி பின்றேடிச் சேறற்குரியவா மென்ற வாறு.

அவற்றுள்,

செவிலியாற்ருத் தாயைத் தேற்றற்குச் செய்யுள்:—

" நன்றே யிதென்று முகமுக நோக்கி
நகைநகையா
மன்றே யலர்சொல் லு மாதர்முன் னேதஞ்சை
வாணன்றெல்சீர்
சென்றே பரந்த திசைகளெல் லாஞ்சென்று
தேர்ந்தணங்கை
யின்றே தருவலன் னேவருந் தாதிங்
கிருந்தருளே "

எனவரும்.

ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதற்குச் செய்யுள்:—

" ஒருவெண் குடையிரு நீழன்முக் கோல்கொண்
டொழுக்கத்திறு
விருவெங் களரியைந் தாறுசெல் வீரரு
வீரெழுபார்

மருவெண் டிசைபுகழ் வாணன்றென் மாறையென்
வஞ்சியன்னுள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின்
போயினளே ''

எனவும்,

'' சேயின் வரூஉ மதவலி யாவுயர்ந்
தோமை நீடிய கானிடை யத்த
முன்னு ளும்பர்க் கழிந்த வென்மகட்
கண்டன ராயிற் றெழுவே னுண்பற்
கோடேந் தல்கு லரும்பிய திதலை
வாஅர்ந் திலங்கு வாலெயிற்றுப் பொலிந்ததார்ச்
சில்வளைப் பல்கூந் தலளே யவளே
மையண லெருத்தின் முன்பிற் றடக்கை
வல்வி லம்பி னெய்யா வண்மகிழ்த்
தந்தை தன்னூ ரிதுவே
யீன்றேன் யானே பொலிகநும் பெயரே ''

எனவும் வரும்.

மிக்கோ ரேதுக்காட்டற்குச் செய்யுள்:—

'' இயங்கா வனமென் மகளொரு காளைபின்
னேகினளென்
றுயங்கா தொழியஃ துலகியல் பானுல
வும்புயறேய்
வயங்கா டகமதில் சூழ்தஞ்சை வாணன்
மணங்கமழ்தார்ப்
புயங்காதல் கொண்டணங் காளய னூர்தந்த
பூமகளே ''

எனவும்,

" சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே "

எனவும் வரும்.

செவிலி யெயிற்றியொடு புலம்பற்குச் செய்யுள்:—

" செருமக ளேயும் புயத்தய லான்பின்
செலவிடுத்தென்
னொருமக ளேயென் றுனையயிர்த் தேன்புனை
யோவியம்போல்
வருமக ளேதஞ்சை வாணனொன் னார்துன்னும்
வன்சுரத்தோ
ரருமக ளேயுரை யாயவள் போன
வதரெனக்கே "

எனவும்.

" முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்புப் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
வொண்சுடர் நல்லி னருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சிலை
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை
யத்தக் கள்வ ராதொழூ வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி

மெய்த்தலைப் படுதல் செய்யே னீத்தலை
நின்னொடு வினவுவற் கேளாய் பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்
ஆய்சுனைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே"

எனவும் வரும்.

செவிலி குரவொடு புலம்பற்குச் செய்யுள் :—

"இரவேய் குழலியிவ் வேதிலன் பின்செல்ல
லென்றுசொல்லாக்
குரவே யறவுங் கொடியைகண் டாய்கொடிக்
கோகனகந்
தரவே யெனவந்த சந்திர வாணன்
றரியலர்போஞ்
சுரவே யழல்வழி யேதனி போனவென்
றோகையையே"

எனவும்.

வெண்பா

"தான்றுயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிளங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து"

எனவும் வரும்.

செவிலி சுவடுகண் டிரங்கற்குச் செய்யுள்:—

"தொடுசிலைக் கானவ ரோடிய வேற்றுச்
சுவடுவையே
யடுசிலைக் காளை யடியவை யேயறிந்
தோரறிய

விடுசிலைப் பார்புரக் குந்தஞ்சை வாண
ளிசைக்குருகப்
படுசிலைப் பாவை பதயிவை யேவண்டு
பாடுகவே''

எனவரும்.

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டற்குச் செய்யுள்:—

'' யானகம் போத வருந்தநும் போல்வனப்
பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டலீ ரோகற்ப
காடவிசூழ்,
வானகம் போர்பயில் வானவர்க் கீந்தருள்
வாணன்றஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமொர்
செல்வனுமே''

எனவரும்.

கலந்துடன் வருவோர் புலம்ப றேற்றற்குச் செய்யுள்:—

'' யான்கண்ட வண்ணலு மெண்ணருங் *காத
லெனக்களித்த
மான்கண் டனகண் மயில்கண்ட மாதரு
மாதருமங்
தான்கண்ட தண்ணளிச் சந்திர வாணன்
றரியலர்போங்
கான்கண்ட மெய்குளி ரப்பொய்கை சூழ்தஞ்சை
காண்பர்களே''

எனவும்,

வெண்பா

'' நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே
லெண்ணிய வெண்ண மெளிதரோ—வெண்ணிய

* காதலி னேகிய வென் (பா. பே.)

வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான் ''

எனவும் வரும்

செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தற்குச் செய்யுள்;—

'' நாணினுந் தாரணி கற்புநன் றென்ன
நயந்துமுத்தம்
பூணினும் பாரமி தென்னுமென் பொன்னையிப்
போதெனக்குச்
சேணினுஞ் சார்புகழ் வாணன்றென் மாறைமன்
சேரலரைக்
காணினுங் காணவந் தோவரி தாலிந்தக்
கானிடையே ''

எனவும்,

'' காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே ''

எனவும் வரும் (18)

189] கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியிவையெனல்

முற்பட மொழிந்த முறையெழு மூன்றுங்
கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியே

(எ. சூன்.) கற்பொடு புணர்ந்த கௌவையின் விரி யுணர்த்துதனுதலிற்று

(இ-ள்) செவிலி தேற்றுவோர்க்கெதிரழிந்து மொழி தன் முதலாகச் செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்த

லீருகச் சொன்ன விருபத்தொன்றுங் கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியாமென்றவாறு. (19)

5 மீட்சி

190] மீட்சியின் வகை

தெளித்தன் மகிழ்ச்சி வினுதல் செப்பலெனவெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே

(எ. சூன்.) நிறுத்த முறையானே மீட்சியின் வகை யுணர்த்துதனுதலிற்று

(இ-ள்) தெளித்தன் முதலாகச் செப்பலீருக நான்கு வகையினை யுடைத்தா மீட்சி யென்றவாறு. (20)

191] மீட்சியின் விரி

தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தான்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் ஆங்கவர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலு நற்றாய்க் கேட்டவ
னுளங்கொள் வேலனை வினுதலு மெனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே.

(எ-சூன்) மீட்சியின் விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைவி சேணகன்றமை செவிலி தாய்க் குணர்த்தன் முதலாக நற்றாய் கேட்டு அவனுளங்கொள் வேலனை வினுதலீருகச் சொல்லப்பட்ட வாறும் மீட்சியின் விரியா மென்றவாறு.

அவற்றுள்,

தலைவி சேணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தற்குச் செய்யுள்:—

ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித்
 தீவினையே
ஞடா விடமில்லை ஞாலத் தகல்வயி
 னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு
 கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் ருனொரு
 வள்ளலின்றே

எனவும்,

" தெறுவ தம்ம நின்மகள் விருப்பே
யுறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய வைப்பிற்
காடிறந் தனணங் காத லோளே "

எனவும் வரும்

தலைவன் றம்மூர் சார்ந்தமை விளம்பற்குச் (சாற்றற்குச்) செய்யுள்:—

" நினையா மெதிர்ப்பட்ட நீடிருங் குன்றிது
 நீகுடைந்த
சுனையா மதுமலர்ச் சோலைக ளாமுவை
 தூயவண்டன்
மனையா மிவையினி வாணன்றென் மாறையை
 வாழ்த்தலர்போ
லினையா தெழுந்தருண் மானனை யாய்நம்
 மெழினகர்க்கே "

எனவும்,

" முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கு
மின்னு வருஞ்சுரந் தீர்ந்தன மென்மெல
வேகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை யருவி வீழும்
பிறங்கிருஞ் சோலைநம் மலைகெழு நாடே "

எனவும் வரும்.

தலைவி முன் செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

" புனையல ரேதிலர் காதலர் தாயர்
பொருமையிற்போ
யினைதுயர் யாதொன்று மின்றிவெங் கானிகந்
தியானுமம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாஞ்சென்று
வாணன்றஞ்சைத்
துனைவுட னேகுகின் றீர்சொல்லு வீரென்
றுணைவியர்க்கே "

எனவும்,

" கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றைக்
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தநீ ருரைமி
னின்னகை முறுவலென் னுயத் தோர்க்கே "

(ஐங்குறுநூறு)

எனவும் வரும்.

முன்சென்றோர் பாங்கியர்க் குணர்த்தற்குச் செய்யுள்:—

" போதலர்ந் தல்லை முளரியுமெல் லோதிப்
புனையிழைதன்

காதலன் பின்வரக் கண்டனம் யாங்கண்டல்
வேலிமுங்நீர்
மாதலங் தன்னிரு தோள்வைத்த வாணன்றென்
மாறைவண்ணச்
சூதலங் தொல்கவிம் மித்திரண் மாமுலைத்
தோகையரே''

எனவரும்.

பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தற்குச் செய்யுள்:—

" வாளேய் விழிநின் மயிலனை யாடஞ்சை
வாணன்வெற்பில்
வேளே யனைய விடலைபின் னேசுர
மீண்டினிநங்
கேளேய் பதிவரு மென்னநல் லோர்சொல்லக்
கேட்டனமிந்
நாளே யனையநன் ளுளவோசென்ற
நாள்களிலே

எனவும்,

மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரு மென்ப தடமென் றோளி
யஞ்சின ளொதுங்கி யவனொடு
பஞ்சின் மெல்லடிப் பரல்வடுக் கொளவே.

எனவும் வரும்,

நற்றாய் தலைமக னுளங்கோள் வேலனை வினுதற்குச் செய்யுள்:—

" தென்மாறை நன்னகர் மன்னவன்
வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலனுணர்
வீர்சுரம் போய்வருவோ

னென்மானை யென்மனை யிற்றரு
    மோதன்னை யீன்றநற்றாய்
தன்மா மனையுய்க்கு மோசொல்லு
    வீரொன்று தானெனக்கே ''

எனவும்,

(வெண்பா)

'' வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறாயோ கூறுங் குணத்தினளாய்—வேறாக
வென்மனைக் கேறக் கொணருமோ வெல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்

எனவும் வரும்.

இவற்றுட் டலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலுந் தலைவன்றம்மூர் சார்ந்தமை சாற்றலுமாகிய விரண்டுந் தெளித்தற்குரிய; தலைவி முன்செல்வோர் தம்மொடு தான் வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலும் பாங்கியர் நற்றாய்க் குணர்த்தலுமாகிய விரண்டு மகிட்சிக்குரிய; நற்றாய் தலைமக ளுளங்கோள் வேலனை வினாதலாகிய வொன்றும் வினாதற் குரித்து முன்செல்வோர் பாங்கியர்க் குணர்த்தலாகிய வொன்றுஞ் செப்பற் குரித்து. (21)

192] உடன்போய் வரைந்து மீடற்கும் வரையாமல் மீண்டு அவள் மனையின் கண்ணுதல் தன்மனையின் கண்ணுதல் வரைதற்குமுரிய கிளவிகள்.

மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கு
மவண்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கு
மியைதலு முரிய செவிலிகூற் றொழித்தே

(எ. சூன்,) செவிலியின் கூற்றொழித்து ஏனையவைந்து கூற்றின் பகுதி யுணர்த்துதனுதலிற்று.

---

* இவையைந்து முரிய (பா. பே.)

(இ-ள்) மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கும் வரையாமல் மீண்டவளது மனையின் கண்ணேயாதல் தன் மனையின் கண்ணேயாதல் வரைந்து கோடற்கு மிலக்கணத்தி னுரியவாஞ் செவிலி கூற்றுய வொன்றையு மொழித்தல்லாத வைந்து மென்றவாறு. (22)

6. தன்மனை வரைதல்

(193) தன்மனை வரைதலின் வகை

வினுதல் செப்பல் மேவலென் றிறைவன்
றனுதில் வரைத ருன்மூ வகைத்தே.

(எ சூ-ன்) தலைமகன் மீண்டுவந்து தன் மனையின் கண்ணே வரைத லுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) வினுதலுஞ் செப்பலு மேவுதலுமென மூன்று வகையினை யுடைத்தாந் தலைமகன் மீண்டுவந்து தன்மனையின் கண்ணே வரைத லென்றவாறு. (23)

194. தன்மனை வரைதலின் விரி

பணிமொழி நற்ருய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினுதலுஞ் செவிலிக் கிருளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்ருய்க் குணர்த்தலு முற்ருங் கிருவருந்
தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்
கியான்வரைந் தமை நுமர்க்கியம்புசென் றென்றலுந்
தானது முன்னே சாற்றிய துரைத்தலு
மென் னுமிவ் வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

(எ, சூ-ன்) மீண்ட தலைமகன் தலைமகளைத் தன்மனையின் கண்ணே வரைந்து கோடலின் விரியுணர்த்துத லுதலிற்று.

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதன் முதலாகப் பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்த லீறாகச் சொல்லப்பட்ட வைந்தும் மீண்ட தலைமகன் றலைமகளைத் தன்மனையின் கண்ணே வரைந்து கோடல் விரியா மென்றவாறு.

அவற்றுள்,

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதற்குச் செய்யுள்:—

உடன்போய் மீண்ட தலைமகன் தலைவியைத் தன்மனைக்குக் கொண்டு சென்றானாக, நற்றாய் தன்மகளுக்குத் தம்மகத்தே வதுவை செய்ய வேண்டுமென்னும் விருப்பினால், அவ்வாறு செய்யும்படி யவன்றாயைக் கேட்போமெனச் செவிலியை வினவா நிற்றல்

"தாமாக மேவினு நம்மனைக் கேவந்து
    தண்சிலம்பர்
மாமா தினைமணஞ் செய்வதற் கேமரு
    வார்கமலப்
பூமாது கேள்வன் புகழ்த்தஞ்சை வாணன்
    பொருப்பிலினி
யாமா றுயிரனை யாய்சொல்வ மோவவ
    ரன்னையர்க்கே"

எனவும்,

"நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே" (ஐங்குறுநூறு)

எனவும் வரும்.

செவிலிக் கிுளை வரைந்தமை யுணர்த்தற்குச் செய்யுள்:-

தலைவன் றன்மனையிலே தலைவியை வதுவை செய்தமை யைத் தோழி செவிலிக் குரையா நிற்றல்.

என்னு மியம்புவ தியாய்க்கினி
நாமன்னை யின்றுதம்மிற்
கொன்னரு நித்திலக் கோதைநம்
மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னுடர் மண்கொண்ட வாணன்றென்
மாறைநங் காதலர்தாம்
நன்னாண் மணம்புணர்ந் தாரென்று
தூதர் நவின்றனரே.

எனவரும்,

வரைந்தமை செவிலிநற்றாய்க் குணர்த்தற்குச் செய்யுள்:-

எனைக்கே ளிருநின் றியற்றவங்
கேமண வின்பமெய்தி
யனைக்கேண்மை நண்ணிய வண்ணல்பின்
னுகநம் மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன்
னூர்தஞ்சை வாணன்வெற்பிற்
சுனைக்கேழ் நனைக்கழு நீர்க்குழ
லாய்சில தூதரின்னே.

எனவும்,

மள்ள ரன்ன மரவந் தழீஇ
மகளி ரன்ன வாடுகொடி நுடங்கு
மரும்பதங் கொண்ட பெரும்பத வேனிற்
காதற் புணர்ந்தன ளாகி யாய்கழல்
வெஞ்சின விறல்வேற் காளையொ
டின்றுபுகு தருமென வந்தன்று தூதே.

எனவும் வரும்,

உற்ருங் கிருவருந் தலைவி யில் வந்துழித் தலைவன் பாங்கிக்கியான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றென்றற்குச் செய்யுள்:—

''கோபுரஞ் சோலைக் கொடிமதில் மாடங்
குலாவிமையோர்
மாபுரம் போலுந்தென் மாறைவ ரோதயன்
வாணன்வெற்பி
னீபுரந் தேதந்த மாதையங் கியான்வரை
நீதிப்பொன்செய்
நூபுரஞ் சூழடி யாய்சென்று கூறு
நுமர்தமக்கே''

எனவரும்.

பாங்கி தானது முன்னே சாற்றினே னென்றற்குச் செய்யுள்:-

''அன்னைக் கியம்பின ளுண்டகை யான்முன்
னறிந்துதென்னன்
றன்னைப் பணிந்துகுற் றேவல்செய் யாது
சமர்க் கெழுந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்றென் மாறை
வரையிலெங்கள்
பொன்னைப் புணர்ந்துநுங் கேளிர்முன் னீபொன்
புனைந்ததுவே''

எனவும்,

''கருவிரன் மந்தி கல்லா வன்பார்ப்
பிருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோன்
மதிபடைப் பதுபோற் றோன்று நாட
வரைந்தனை நீயெனக் கேட்டியா
னுரைத்தனெ னல்லெனோ வஃதென் யாய்க்கே''
(ஐங்குறுநூறு)

எனவும் வரும்.

இவற்றுள், நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதலாகிய வொன்றும் வினுதற்கு முரித்து. வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்தலும் வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தலும், பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத் தலுமாகிய மூன்றுஞ் செப்பற்குரிய; தலைமகன் யான்வரைந் தமை நுமர்க்கியம்பு சென்றெனன்றலாகிய வொன்றும் மேவற் குரித்து (24)

195] உடன்போய் வரைந்து மீளுதலின் விரி

ஆதி யொன்றொழித் தல்லன நான்கும்
மாதினை யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய நினையுங் காலை

(எ. சூன்.) தலைமகன் புணர்ந்துடன் போய்த் தலை மகளைத் தன்னூரின் கண்ணே வரைந்து கோடலுணர்த்துத லீதலிற்று.

(இ-ள்) நற்றாய் மணனயர் வேட்கை யொன்று மொழித்தல்லாத நான்குந் தலைமகன் புணர்ந்துடன் போய்த் தலைமகளைத் தன்னூரின் கண் வரைந்து மீடற்குரியவா மாராயுங் காலத் தென்றவாறு. (25)

196] ஒருவகை மீண்டு வரைதலின் விரி

இருவரில் லிற்கு மியைந்தபன் னொன்று
மொருவகை மீண்டு வரைதலின் விரியே.

(எ. சூன்,) ஒருவகை மீண்டுவரைதலின் விரியுணர்த் துதனுதலிற்று.

(இ-ள்) தலைமகன் றம்மூர் சார்ந்தமை யுணர்த்தன் முதலாகப் பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்த லீறாகச் சொல்லப்பட்ட வவன்மனை வரைதற்குந் தன்மனை

வரைதற்கு முரிய கிளவி பதினொன்று முடன்போய் மீண்டு வரைந்து கோடலின் விரியாமொரு படியாக வென்றவாறு.

ஒருபடி யென்றது மேற் சூத்திரங்களுட் கவர்ச்சி நீக்குதற்கெனக் கொள்க. (26)

7. உடன் போக்கிடையீடு.

197] உடன்போக்கிடை யீட்டின்வகை

போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்தல்
நீக்க மிரக்கமொடு மீட்சி யென்றாங்
குடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.

(எ, சூ-ன்) உடன்போக்கிடையீட்டின் வகையுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) போக்கறி வுறுத்தன் முதலாக விரக்கமொடு மீட்சி யீறாக நான்கு வகையினை யுடைத்தா முடன்போக்கிடையீ டென்றவாறு. (27)

198] உடன்போக்கிடையீட்டின் விரி

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தலுந் தலைமக
டன்செல வீன்றாட் குணர்த்தி விடுத்தலு
மீன்றாட் கந்தணர் மொழிதலு மீன்றா
ளறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தலுந்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலுந்
தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக்
கவன்றாற் றலுமென னுவன்றவை யாறு
முடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

(எ, சூ-ன்) உடன்போக் கிடையீட்டு விரியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) நீங்குங் கிழத்திப் பாங்கியர் தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தன் முதலாகத் தமருடன் செல்பவ ளவன் புறநோக்கிக் கவன்றுற்ற லீறாகச் சொல்லப்பட்டவாறு

முடன்போக் கிடையீட்டு விரியா மென்றவாறு.

அவற்றுள்,

நீக்குங் கிழத்திப் பாங்கியர் தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

''வளவேய் மிடைந்த வழிப்படர் வீர்செங்கை
வாணன்றஞ்சைத்
தளவேய் நகையென் றுணைவியர் பாற்சென்று
சாற்றுமின்போர்க்
களவே யனையவோர் காளைபின் போயினள்
கான்பனிநீத்
திளவேனில் வல்லிபெற் றுங்கெவ்வ நீத்தெழு
லெய்தியென்றே''

எனவும்,

''சேட்புல முன்னிய வசைநடை யந்தணீர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
யாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின
வாரிடை யிறந்தன ளென்மின்
நேரிறை முன்கையென் னுயத் தோர்க்கே''

எனவும் வரும்.

தலைமக டன்செல வீன்றுட் குணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

"வாயார நுங்களை வாழ்த்துகின் றேன்தஞ்சை
வாணன்வெற்பிற்
சாயாத மாதவத் தாழ்சடை யீரன்பர்
தம்மொடின்றியான்
சேயாறு தேர்மிசைச் செல்வதெல் லாமெங்கள்
சேரியிற்சென்
றியாயா கியகோடி யாட்கினி தாக
வியம்புமினே"

எனவும்,

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்க
ணற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே"

எனவும் வரும்.

நற்றாய்க் கந்தணர் மொழிதற்குச் செய்யுள்:—
மருள்கொண்ட சிந்தை மலைகிழ
வோன்தஞ்சை வாணன்வெற்பில்
வெருள்கொண்ட மென்பிணை வென்றகண்
ணாள்வென்றி வேல்வலங்கை
யருள்கொண்ட நெஞ்சிளை ரண்ணல்பின்
னேயகன் றாளகல்வா
னிருள்கொண்ட கொண்டல்செல் லாவரை
சூழ மிருஞ்சுரத்தே

எனவும்,

" புன்கண் யானையொடு புலிவழங் கத்த
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே

நெடுஞ்சுவர் நல்லின் மருண்ட
விடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே "

எனவும் வரும்,

நற்றாயறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத் தலைவி கண்டு தலைமகற் குரைத்தற்குச் செய்யுள்:—

" உவலைப் பதுக்கை முரம்புசெல் லாம லுலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் றரியலர்போங்
கவலைக் கடத்துச் சிலைத்திரைக் கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கட ரேன்றல்பொற் றேர்வங்கஞ்
சூழ்கின்றதே "

எனவவிம்,

தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செய்யுள்:—

" ஆறலை வெஞ்சிலைக் கானவ
ரேலென்கை யம்பொன்றினு
னாறலை யஞ்சலெ னுண்ணிடை
யாய்நும ரேலவர்முன்
சேறலை யஞ்சுவல் செல்லலல்பைம்
பூகச் செழும்பழுக்காய்த்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை
வாணன் றமிழ்வெற்பிலே

எனவும்,

"வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
றலைநாட் கெதிரிய தன்பெய லெழிலி
யணிமிகு கானத் தன்புறப் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி

யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவ
னுமர்வரின் மறைகுவன் மாஅ யோளே"

(நற்றிணை)

எனவும் வரும்.

தமருடன் செல்வோ ளவன்புற நோக்கிக் கவன்றுரைத் தற்குச் செய்யுள்:—

"ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ்
விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகப்பன் னுட்டஞ்சை
வாணனென்னுர்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப்
புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட
குரகதமே"

எனவும்,

அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே"

(ஐங்குறுநூறு)

எனவும் வரும்,

இவற்றுள், முன்னைய மூன்றும் போக்கறிவுறுத்தற் குரிய. பின்னைய மூன்றும், வரைவறிவுறுத்தன் முதலாகிய மூன்றற்குந் தனித்தனி யுரியவெனக் கொள்க. மேற்கூறப் பட்ட கிளவிகளிதற்கு மேற்பன வறிந்து கொள்க. (28)

8. வரைதல்

199] அந்தணர் சான்றோர் முன்னிட்டு அருங்கலங் கொடுத்து வரைதல்.

தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைத றகுதி யென்ப

(எ. சூன்.) வரைத லுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) உடன்போய்த் தன்னூரின் கணணே வரைதலு மீண்டு வந்து தன்மனைக்கண்ணே வரைதலுமாகிய விரண்டு மொழித்தல்லாத எல்லா வரைவின் கண்ணுந் தலைமகனந் தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டருங்கலங் கொடுத்து வரைதலுலகத் தியற்கை யெனச் சொல்லுவர் புலவரென்ற வாறு.

அவற்றுள்,

அவ்வாறு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியதற்குச் செய்யுள்:—

“ சேலார் புனல்வையை சூழ்தஞ்சை
வாணன்றென் மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவர்
யார்மணம் வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட
லானது பங்கயக்கண்
மாலா யினனிவ னுந்திரு
வாயினன் மாதுமின்றே ”

எனவும்,

“ கயற்க ணளையுங் காமனன் னனையு
மியற்றி னர்மண மேத்தருந் தன்மையார்

மயற்கை யில்லவர் மன்றலின் மன்னிய
வியற்கை யன்புடை யாரியைந் தார்களே "

(சீவகசிந்தாமணி)

எனவும் வரும், *(29)*

மூன்றாவது
வரைவியன் முற்றும்

நான்காவது கற்பியல்.

200] கற்பின் இலக்கணம்

பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவு மருவிய தாகும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் கற்புணர்த்தினமையிற் கற்பியலென்னும் பெயர்த்து.

(எ, சூ-ன்) கற்பென்னுங் கைகோள திலக்கண முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பொலி வமைந்த சிறப்புனையுடைய கற்பென்று சொல்லப்படுவ துள்ள மகிட்சியு மூடலு மூடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதா மென்றவாறு.

பிறவென்றதனாற் பிரிந்துழி வரும் விகற்ப மெல்லாங் கொள்ளப்படும். (1)

201] கற்பிற்குரிய கிளவித் தொகை.

இல்வாழ்க் கையே பரந்தையிற் பிரிவே
யோதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பிற் கிளவித் தொகையே.

(எ, சூ ன்) கற்பினது கிளவித்தொகை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இல்வாழ்க்கை முதலாகப் பொருள்வயின் பிரிதலீருகச் சொல்லப்பட்ட வேழுங் கற்பிற் கிளவித் தொகை யென்றவாறு. (2)

1. இல்வாழ்க்கை

202] இல்வாழ்க்கையின் வகை

கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

(எ, சூ-ன்) இல்வாழ்க்கையின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்)கிழவோன் மகிழ்ச்சி முதலாகச் செவிலி மகிழ்ச்சியீருகச் சொல்லப்பட்ட நாலு வகையினை புடைத்தா மில்வாழ்க்கை யென்றவாறு. (3)

203] இல்வாழ்க்கையின் விரி

தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை
யுரையா யென்றலும் பெருமக ளுரைத்தலுந்
தலைவனைப் பாங்கி வரையுநா ளளவும்
நிலைபெற வாற்றிய நிலைமை வினுதலும்
மன்றன் மனைவரு செவிலிக் கிகுளை
யன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலு
மணமனைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பிய னற்ருய்க் குணர்த்தலு
நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலு
மன்னவர்க் காத லறிவித் தலுமெனு
மின்னவை பத்துமில் வாழ்கை விரியே.

(எ. சூ - ன்) இல்வாழ்க்கையின் விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தன் முதலாக வன்னவர் காதலறிவித்த லீருகச் சொல்லப்பட்ட பத்துமில் வாழ்க்கை விரியாமென்றவாறு.

அவற்றுள்,

தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தற்குச் செய்யுள்:

“ நின்மே லடுத்த பசலையின் காரண நின்றுணைவி
யென்மே லடுத்த வியல்பினன் றேபெற்ற வேழுலகுந்
தன்மே லடுத்த புகழ்த்தஞ்சை வாணன் றடங்கிரிநுண்
பொன்மே லடுத்தன போற்சுணங் கின்ற புணர்முலையே ”

எனவும்,

அதிரிசை யருவிப் பெருவரை தொடுத்த
பஃறே னிறாஅ லல்குநர்க் குதவும்
நுந்தைநன் னாட்டு வெந்திறன் முருகென
நின்னோய்க் கியற்றிய வெறிநின் றோழி
யென்வயி னோக்கலிற் போலும் பன்னாள்
வருந்திய வருத்தந் தீரநின்
றிருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே”

எனவும் வரும்.

தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள்:

“தெரியா டகவிதழ்ப் பூங்கொன்றை வேணியும்
தேவியும்போற்
பிரியா துறையப் பெறுகுதி ராற்பிறை
மானுநெற்றிப்

புரியாழ் நிகர்மொழிப் பூவையு நீயும்
புணர்ந்தபல்கேழ்
வரியார் சிலையண்ண லேதஞ்சை வாணன்றென்
மாறையிலே"

எனவும்,

"எக்கர் ஞாழற் பூவி னன்ன
சுணங்குவள ரிளமுலை மடந்தைக்
கணங்குவளர்த் தகறல் வல்லா தீமே" (ஐங்குறுநூறு)

எனவும் வரும்.

வரையு நாளளவும் வருந்தா திருந்தமை பாங்கி தலைவியை வினுதற்குச் செய்யுள்:—

"கோங்கநன் மாமுகைக் கொங்கைநல் லாய்மணங்
கூடுமெல்லை
யாங்கன மாற்றி யிருந்தனை நீயிப
மாசயிலந்
தாங்கன மாறத் தலம்புனை வாணன்
றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கன மார்குழ லாரலர் மாலைப்
பொறைசுமந்தே"

எனவரும்.

தலைமகள் வருந்தா திருந்ததற்குக் காரணங் கூறற்குச் செய்யுள்:—

"மைதோய்ந் தலர்ந்த மலர்த்தடஞ் சூழ்தஞ்சை
வாணனென்னுர்
மெய்தோய்ந்த செந்நிற வேல்விழி யாய்துயர்
வெள்ளம்வெற்பர்
கைதோய்ந் தளிப்ப வசோகத்த வாய்நிறங்
கால்வனவாய்

நெய்தோய்ந் தனதழை யேபுணை யாக்கொண்டு
நீந்தினனே ''

எனவும்

'' மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
விட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
றொல்லைத் திங்க ணெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெந் தோளே
யின்று முல்லை முகைநா றும்மே ''(குறுந்தொகை)

எனவும் வரும்.

பாங்கி, தலைவனை வரையுநாளளவும் நிலைபெற வாற்றிய நிலைமை வினுதற்குச் செய்யுள்:—

'' அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர்ந்த தூம்புடைத் திரள்கா
லர்ம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவ
ளிளமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே ''

எனவரும்,

மன்றல் மனைவரு செவிலிக் கிகுளை யன்புறவுணர்த்தற் குச் செய்யுள்:—

'' வளங்கொண்ட தஞ்சை வரோதயன்
வாணன்றென் மாறையன்ன
விளங்கொங்கை கொண்டுமு தீரங்கொண்
மார்பின்முத் தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தந்து
போகம் விளைத்தன்புசே

ருளங்கொண் டருத்துத லானன்னை
யூர னுவப்புறுமே ''

எனவரும்,

பாங்கி இல்வாழ்க்கை நன்று என்று செவிலிக் குணர்த்தற்குச் செய்யுள்:—

'' சினவேய் சுளியுங் களிற்றண்ணல்
வாணன்றென் மாறையினம்
மனவே யகலல்குல் வல்லியன்
ளுன்மறை யோர்முதலாஞ்
சனவே தனைகெடத் தானங்
களிதலிற் சாலவுநன்
றெனவே கிடக்கின்ற தாலன்னை
நாடொறு மில்லறமே ''

எனவரும்,

மணமனைச் சென்றுவந்த செவிலி தலைமகள் கற்பு நற்றாய்க் குரைத்தற்குச் செய்யுள்:—

'' ஒன்றோ நமக்குவந் தெய்திய நன்மை
யுடன்றெதிர்ந்தார்
வன்றோ லமர்வென்ற வாட்படை வாணன்றென்
மாறையில்வாழ்
நின்றோகை கற்பு நிலைமையெண் ணுதெதிர்
நின்றுவெந்நிட்
டன்றோ வடக்கிருந் தாள்மடப் பாவை
யருந்ததியே ''

எனவரும்.

செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனைவாழ்க்கைத் தன்மை யுணர்த்தற்குச் செய்யுள்:—

“ விண்மே லமரர் விருப்பம ராவதி
வெள்ளமுந்நீர்
மண்மே லடைந்தன்ன வாட்கைய தானது
வாணன்றஞ்சைப்
பண்மே லளிமுரல் குங்குமத் தாரவர்
பங்கயம்போற்
கண்மே லருள்பெற்று வாழ்மட மாதர்
கடிமனையே ”

எனவும்

“முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாக
ரினிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே

எனவும் வரும்

செவிலி நற்றாய்க் கிருவர் காதலு மறிவித்தற்குச் செய்யுள்:—

“ நனையகத் தல்கிய நாண்மல ரோதி
நயந்துறையு
மனையகத் தல்லிடை வைகுத லாற்றஞ்சை
வாணனென்னார்
வினையகத் தல்குதல் செல்குவ ரேனுமவ்
வேந்தர்போற்றேர்
முனையகத் தல்கல்செல் லாவொரு நாளு
முகிணகையே

எனவும்,

“ கானங் கோழிக் கவர்குரற் சேவ
லொண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்

புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினுஞ்
சேர்ந்துவர லறியாது செம்ம லோரே

எனவும் வரும்

இவற்றுட் தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய வொன்றுங் கிழவோன் மகிட்சிக் குரித்து. தலைவனைப் பாங்கி வாழ்த்தன் முதலாகச் செவிலிக்கு வாழ்க்கை நன்றென்றறைதலீறாகச் சொல்லப்பட்ட வாறனுள், பெருமகளுரைத்தலாகிய வொன்றுங் கிழத்தி மகிழ்ச்சிக் குரித்து. அல்லாதவைந்தும் பாங்கி மகிட்சிக்குரிய; செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பிய லுணர்த்தன் முதலாகிய மூன்றுஞ் செவிலி மகிட்சிக்குரியவெனக் கொள்க.

2-வது பரத்தையிற் பிரிவு.

204\. பரத்தையிற் பிரிவின் வகை

வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்
வாயினேர் வித்தல் வாயில் நேர்தலென்
றூய பரத்தையி னகற்சிநால் வகைத்தே.

(எ, சூ-ன்) பரத்தையிற் பிரிவின் வகையுணர்த்துதனுதலிற்று.

இ-ள்) வாயில் வேண்டன் முதலாக வாயினேர்த லீறாக நான்கு வகையினை யுடைத்தாம் பரத்தையிற்பிரி வென்றவாறு. (4)

205\. உணர்த்த உணரும் ஊட ற்குரிய கிளவிகள்

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்
கேதுவீ தாமிவ் விறைவிக் கென்றலுந்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலு
மீங்கிது வென்னெனப் பாங்கி வினுதலு
மிறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலுந்

தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பாத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்
உலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கண் மொழிதலும்
வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலு
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுணர்த்துபன் னொன்று
முணர்த்த வுணரு மூடற் குரிய.

(எ. குன்) பரத்தையிற் பிரிவி லுணர்த்த வுணரு மூடற் குரிய விரியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேது வீதாமிவ்விறைவிக் கென்றன் முதலாகப் புணர்ச்சியின் மகிழ்தலீறுகச் சொல்லப்பட்ட பதினொன்று முணர்த்தவுணரு மூடற்குரியவா மென்றவாறு.

அவற்றுள்,

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேதுவீதா மிவ் விறைவிக் கென்றற்குச் செய்யுள்:

"மாறையர் காவலன் வாணன்றென் றஞ்சையில்
வாணுதற்கிவ்
வாறயர் காரண மாகுமன் றேகொங்கை
யானையுடன்
சாறயர் வீதி யரிப்பறை யார்ப்பத்
தயங்குகுரற்
சூறையர் சூறைகொள் வான்வய லூரனைச்
சூழ்ந்தனரே"

என்வரும்.

தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கற்குச் செய்யுள்:-

" வன்போ தணிதொங்கல் வாணன்றென் மாறை
மகிழ்நர்நம்மே
லன்போடு நன்னெஞ் சறிவறை போக
வழலுள்வெந்த
பொன்போ னிறங்கொண் டிரவுங்கண் ணீரும்
புலர்வதுபார்த்
தென்போ லிவரிங்ங னேயிமை யாம
லிருப்பவரே "

ஏனவும்,

" சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலை கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொ லுரைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தானுளம் புலம்புதோ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே "

எனவும் வரும்,

ஈங்கிது வென்னெனப் பாங்கி வினுதற்குச் செய்யுள்:—

" எம்மா திரமும் புரவலர்த் தேடி
யிரந்துழல்வோர்
தம்மா துயரந் தணித்தருள் வாணன்
றமிழ்த்தஞ்சைவாழ்
கம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு
நல்கவுநீ
விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின்
விளங்கிழையே "

எனவரும்,

இறைமகன் புறத்தொழுக் கிறைமகளுணர்த்தற்குச் செய்யுள்:—

தாராக நல்கினர் காரிகை யாய்தஞ்சை
வாணன்றன்னைச்
சேரா தவரெனத் தீவினை யேனையச்
செங்கண்வன்கட்
காரா கழனிக் கரும்பினஞ் சாயக்
கதழ்ந்துசெந்நெல்
லாரா தயலிற்பஞ் சாயாரு மூர
ரயலவர்க்கே

எனவும்,

(வெண்பா)

" என்கேட்டி யேழா யிருநிலத்தும் வானத்து
முன்கேட்டுங் கண்டு முடிவறியேன்—பின்கேட்
டணியிகவா நிற்க வவனணங்கு மாதர்
பணியிகவான் சாலப் பணிந்து "

எனவும் வரும்,

தலைவியைப் பாங்கி கழறற்குச் செய்யுள்:

புனையலங் காரநங் கற்பியல் போற்றியும்
போற்றருஞ்சீர்
மனையறம் பாலித்தும் வாழ்வதல் லாற்றஞ்சை
வாணனன்று
டனையவண் டார்குழ லாரணங் கேநமக்
கன்பரிந்நாள்
இனையரென் றூர்வமில் லாவுரை யாட
லியல்பல்லவே

எனவும்,

இதுமற் றெவனோ தோழி துனியிடை
யின்ன ரென்னு மின்னாக் கிளவி

யிருமருப் பெருமை யீன்றணிக் காரா
னுழவன் யாத்த குழவியி னகலாது
பாஅற் பைம்பயி ராரு மூரன்
றிருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே"

எனவும் வரும்.

தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி யவ்வணி யுழையர் கண்டழுங்கிக் கூறற்குச் செய்யுள்:—

"வேளாண் மரபு விளக்கிய வாணன்மின்
னார்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந்
தந்தான்னீர்த்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற்
றோன்றியபூ
வாளா வலர்தொடுப் பார்க்கெங்ங னேவந்து
வாய்த்ததுவே."

எனவும்.

வெண்பா

அர்த்த முடீஇ யணிபழுப்புப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடிப்—பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும்.

எனவும் வரும்.

பரத்தையர் கண்டு பழித்தற்குச் செய்யுள்:—

"படியொன்று சாலி யனையவர் சேரிப்
படர்பவளக்
கொடியொன்று நீல மலர்ந்தது காட்டக்
கொடியவெம்போர்

வடியொன்று கூரிலை வேல்வல்ல வாணன்றென்
மாறையிற்பொற்
றொடியொன்று தோண்மட வார்சேரி வாய்வந்து
தோன்றியதே

எனவரும்,

பரத்தை யுலகியல் நோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கண் மொழிதற்குச் செய்யுள்:—

“ வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன்
வாணன்றஞ்சை
யாருந் தொழத்தகு மெம்பெரு மாட்டிதன்
னேவலினாற்
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற
சேடியைக்கண்
டூருந் திரைப்புன லூரன்வந் தானின்
றுலகியற்கே

எனவரும்,

தலைமகன் வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தற்குச் செய்யுள்:—

“ தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன்
றரியலர்போ
லுள்ளா துனைப்பண் டகன்றன ராயினு
முள்ளியிப்போ
தெள்ளாது வந்துன் கடையினின் றூர்நம்
மிறைவர்குற்றங்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது
கோமளமே ”

எனவரும்,

தலைவனைத் தலைவியெதிர் கொண்டு பணிதற்குச் செய்யுள்:—

மருவிற் பெருநல மன்னுவ தாந்தஞ்சை
வாணன்வெற்ப
ரொருவிற் பசலை யுருக்குவ தாநமக்
கூடலெவ்வா
றிருவிற் புருவ விளங்கொடி யேயெய்து
மெய்தலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரை மார்பர்
திருமுனின்றே"

எனவும்,

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தேன் புலர்ந்து

எனவும் வரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

"மன்னவர் காம நெடுங்கடல் வாணன்றென்
மாறையன்னாள்
தொன்னலம் வார்முலை மத்தந் தழீஇத்தடந்
தோளிணையாம்
பன்னகநாணிற் கடைந்திதழ் வார்திரைப்
பட்டநன்னீ
ரின்னமிழ் தார்ந்திமை யோரமை யாவின்ப
மெய்தினரே" (6)

என வரும்.

206] உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள்.

வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவே லண்ணல் வாயில் வேண்டலுந்
தலைவிநெய் யாடிய திகுளை சாற்றலுந்
தலைவன் றன்மனத் துவகை கூறலுந்

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுந்
தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தலும்
*பாணன் முதலாப் *பாங்க னீறுப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலு மிறைமகன் விருந்துகண்
†டொளித்த வூடல் †வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சேவடி தொழலு மஃது
எங்கையர் காணி னன்றன் றென்றலு
மங்கவர் யாரையு மறியே னென்றலுங்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலுந்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலுந்
தணியா ளாகத் தலைமக னூடலு
மணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்
றிணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவு
முணர்த்த வுணரா வூடற் குரிய.

(எ, சூ-ன்.) உணர்த்த வுணரா வூடற் குரிய கிளவிகளை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) வெள்ளணி யணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டன் முதலாகப் பாங்கி தலைவனை அன்பிலை கொடியை யென்றிகழ்த லீறாகச் சொல்லப் பட்டனவும், பிறவு முணர்த்த வுணராவூடற் குரியவா மென்றவாறு.

அவற்றுள்,

வெள்ளணி யணிந்து விடுப்புழிப் புள்ளணி மலைவேல் தலைவன் வாயில் வேண்டற்குச் செய்யுள்:—

---

* பாங்கியீறு (பா. பே.)

† வெளிப்படல் நோக்கி (பா. பே.)

" என்பாற் குறையை நினைந்து மருதெதிர்
கொண்டுவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை
வாணன்வைய
மன்பாற் பரவும் புகழுடை யானரு
ளேயனையா
யுன்பாற் புலவி யுருள்வண்ண வார்குழ
லொண்ணுதலே "

எனவரும்.

தலைவிநெய்யாடிய திருவை சாற்றற்குச் செய்யுள்:—

" மலர்புரை யேர்கொண்ட வாட்கணெங் கோமங்கை
வாணன்றஞ்சை
பலர்புகழ் பாலற் பயந்துநெய் யாடினள்
பாங்கெவர்க்கு
மலர்புரை நீடொளி யாடியுட் பாவையன்
னாட்குளநீர்
புலர்புன லூரவென் றோதிரு வுள்ளமிப்
போதுனக்கே "

எனவும்,

" குவளை மேய்ந்த குறுந்தா ளெருமை
குடநிறை தீம்பால் படுஉ மூர
புதல்வனை யீன்றிவ ளெய்யா டினளே "

எனவும் வரும்

தலைவன் றன்மனத்துவகை கூர்தற்குச் செய்யுள்:—

மையணி வேல்விழி வாணுதல் கூர்ந்தது
வாணன்றஞ்சைக்
கொய்யணி காண்மலர்க் கொம்பரன் னாள்குழ
லிப்பயந்து

நெய்யணி மேனியி லையவி பூண்ட
நிலையறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினுங்
காதன்மையே

எனவரும்,

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றற்குச் செய்யுள்:—

" ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய
வென்றுமுன்னே
வாரார் வளமனை வந்துநின் றூர்கங்குல்
வாணன் றஞ்சை
நீராவி நீல நெடுங்கண்மின் னேநின்னை
நீப்பதல்லாற்
றேரா தொழிகுவ ரோபெரி யோர்தஞ்
சிறுவனையே "

எனவும்,

" நெடுநா வொண்மணி கடிமனை யிரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெரும்பரண் காவல் பூண்டென வொருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த வறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் றுஞ்ச
வையவி யணிந்த நெய்யாட் டீரணிப்
பசிநோய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளெனக் கங்குற் கள்வன் போல
வகன்றுறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே "

எனவும் வரும். (இப்பாட்டு முன்னிலைப்புறமொழி)

தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தற்குச் செய்யுள்:—

" வயங்கே முலகும் வளர்க்கின்ற வாணன்றென்
மாறையன்ன
நயங்கேழ் பெருவள நல்குநல் லூர
நயந்துநண்ணி
முயங்கேல் சிறுவற் பயந்தவென் மேனிநின்
முத்தவடந்
தயங்கே ரகமுழு தும்பழு தாமது
தாலினக்கே "

எனவும்

" கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவென் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப்பதுவே

எனவும் வரும்.

பாணன்முதலாகப் *பாங்கனீறுப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் பாணனை மறுத்தற்குச் செய்யுள்:—

" தலையா கியதன்மை யூரற்கு வாணன்
றமிழ்த்தஞ்சைசூழ்
மலையா கியமதில் வையநன் னாட்டெங்கை
மான்படுக்குங்
கலையாகு நின்னிசைக் கண்ணிகொண் டேதிரி
கன்றுதின்னிப்
புலையா கடக்கவெம் மிற்போக போக
புறங்கடையே "

எனவும்,

---

* பாங்கியீறு (பா. பே.)

† போகப் புறமனைக்கே. (பா. பே.)

" புலைமக னாதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்
பகலெஞ் சேரி காணி
னகல்வய லூர னணவும் பெறுமே "

எனவும் வரும்,

வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறற்குச் செய்யுள்:—

" நினக்கே தகுநின்னெடும்புன லூர னு
நீயுமவன்
றனக்கே தகுவை தமிழ்த்தஞ்சை வாணன்
றடங்கிரிசூழ்
புனக்கே கயமன்ன நின்னடி போற்றிப்
புகன்றகன் று
மெனக்கே தகுமிகை யாலெம்பி ராட்டி
யெறிந்தகல்லே.

எனவரும்.

தலைமகள் விறலிவாயில் மறுத்தற்குச் செய்யுள்:—

வண்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை
வாழ்த்தலர்போற்
கண்புன லூருமென் காதல்கண் டேநின்
கடைத்தலைக்கே
தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை
தானமுறப்
பண்புன லூர்களெல் லாம்பாடி *யேற்கின்ற
பாண்மகளே

எனவும்,

" விளக்கி னன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச் செவியன்ன பாசடை தயங்க
வுண்டுறை மகளி ரிரியக் குண்டுநீர்

* யேற்றுண் ணும் பார்மகளே (பா. பே.)

*வாளை பிறழு மூரற்கு நாளை
மகட்கொடை யெதிர்ந்த மடங்கெழு பெண்டே!
தொலைந்த நாவி னுலைந்த குறுமொழி
யுடம்பட் டோராய்த் தாயரோ டழிவுடன்
சொல்லலை கொல்லோ நீயே வல்லைக்
களிறுபெறு வல்சிப் பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல
வுள்யாது மில்லதோர் போர்வையஞ் சொல்லே"

எனவும் வரும். பிறவுமன்ன

விருந்தொடு வந்துழித் தலைமகள் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள்:—

"புரவே யெதிர்ந்த நமக்கு விருந்தின்று
போலவென்றும்
வரவே புணர்ந்தநம் மாதவம் வாழிய
வாணன்றஞ்சைக்
குரவேய் கருமுகிற் கொந்தள பாரங்
குரும்பைகொங்கை
யரவேய் நுடங்கிடை யான்விழி யூர்சிவப்
பாற்றுதற்கே

எனவும்

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேழைச்
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்ந்த கண்ண டகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்

---

* வாளையுகளும் (பா. பே.)

ரந்துகிற் றலையிற் றுடையின ணப்புலந்
தட்டி லோளே யம்மா வரிவை
யெமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
சிறியமுள் ளெயி று தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே"

எனவும் வரும்.

தலைமகள் விருந்தை கண்டொளித்த வூடல் பள்ளி யிடத்து வெளிப்படத் தலைமகன் சீறேலென்றவள் சீறடி தொழற்குச் செய்யுள்:—

"தெரியோர் பொருட்டன்று தேர்வின்றி யூடல்
செயிர்த்தவர்க்குக்
கரியோர் தெளித்தென்ன காரணங் காட்டினர்
கா ணுண்டுதேன்
வரியோர் தொடைப்புயன் வாணன்றென் மாறை
மலர்த்திருவே
பெரியோர் பொறுப்பரன் றேசிறி யோர்கள்
பிழைத்தனவே"

எனவரும்.

இஃது எங்கையர் காணினன் றன் றென்றற்குச் செய்யுள்:—

எண்போன நெஞ்சமு நீருமென் பாத
ம்றைஞ்சுதனுங்
கண்போலு மெங்கையர் காணினன் றேகயல்
மா திரத்துத்
திண்போ தகந்தோறுந் தீட்டிய வாணன்
செழுந்தஞ்சைசூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை
மன்னவரே"

எனவரும்.

அங்கவர் யாரையு மறியே னென்றற்குச் செய்யுள்:—

"பாவைநீ புலவியி னீடல் பாவியேற்
காவியொன் றிரண்டுடம் பல்ல தூற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழைந்த வன்னமே"
(சீவகசிந்தாமணி)

எனவரும்,

தலைமகள் காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தற்குச் செய்யுள்:—

" போயே தெருவிற் றனிவிளை யாடும்
புதல்வர்ப்புல்ல
நீயே திலையல்லை நின்மக னேயிவ
னீயுமவன்
றுயே வருகெனச் சேயன்ன வாணன்
றமிழ்த்தஞ்சைமா
னேயே யெனநிற்ற லான றிங் தேலிவ
ளெங்கையென்றே "

எனவும்,

" நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதி னல்லி யவிரிதழ் புரையு
மாசி லங்கை மணிமரு ளவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலங்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகி யாருங்
கா ணுந ரின்மையிற் சேர்த்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன ளின்றேட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே துற்றனை

நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனள் கவைஇக்
களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினே னல்லனோ மகிண வானத்
தணங்கருங் கடவு ளன்னோணின்
மகன்று யாதல் *புரைவா தாங் கெனவே"

எனவும் வரும்.

தலைமகளைப் பாங்கி புலவி தணித்தற்குச் செய்யுள்:—

"மாவா ரணமன்ன வாணன்றென் மாறைநம்
மன்னர்நின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலை நீயிடப்
பாகமங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை
தழீஇயிதழிப்
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும்
பொறுத்தனளே

எனவும்,

"உப்பமைந் தற்றாற் புலவிய யதுசிறிது
மிக்கற்று லீள விடல்" திருக்குறள் (2302)

எனவும் வரும்

தலைமகள், புலவி தணியாளாகத் தலைமகனூடற்குச் செய்யுள்:—

"தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்
றனதருள்போற்
பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள்
பண்டுபைம்பொற்

---

* புரைவதா லெனவே (பா. பே.)

கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங்
கடந்துபுள் ளும்
வழங்கா வழி நமக் கோர்துணை யாய்வந்த
மானல்லளே

எனவும்,

எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மவ்வ னுறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே

எனவும் வரும்,

பாங்கி யன்பிலை கொடியை யென்றிணர்த்தார் மார்பனை யிகழ்தற்குச் செய்யுள்:—

" மைந்நாண் மலத்தொடை வாணன்றென் மாறையெம் மன்னருவந்
தந்நாண் முயங்கி யயிழ் தெனவ்வார்ந்தவி ரார்வமுற்றும்
முந்நாண் மதிவட்ட மென்முலை மாதை முனிந்துநஞ்சென்
றிந்நாண் மிகவுவர்த் தீர்புல வாகிற்றி ரெங்களையே "

எனவும்,

" வேம்பின் பைங்கா யென்றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்

அதுவே,

அதுவே,

" வெய்ய வுவர்க்கு மென்றனீ
ரைய வற்று லன்பின் பாலே

எனவும் வரும். (7)

207] இதுவுமது

ஆயிழை மைந்தனு மாற்று மையும்
வாயி லாக வரவெதிர் கோடலு
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனை யினிதினிற் புகழ்தலும்
தலைவனைப் புகழ்தலுஞ் சிலை நுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலு மினையவும் பிறவு
மனைவகை மொழிந்த வதன்பாற் படுமே.

(எ. சூன்.) இதுவுமது

(இ-ள்) ஆயிழைமைந்தனு மாற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகளெதிர் கோடல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்டனவும் பிறவுமத்தன்மைத்தாகிய வுணர்த்தவுணரா வூடற்குரியவா மென்றவாறு

இவை வேறு கூறிய தவைபோல வூடற் சிறப்பின்மை நோக்கி என்க.

அவற்றுள்,

மகனு மாற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகளெதிர் கோடற்குச் செய்யுள்:—

" வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றுலு
மிகப்பெரியோர்

---

* இனையவை பிறவும் (பா. பே.)

உள்ளஞ் சிறியவர் மேற்செல்வ ரோவொளிர்
கோமளஞ்செய்
வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்றென்
மாறையன்ன
புள்ளம் புனல்வய லூரபுன் காமம்
புனைவதன்றே"

எனவும்

"*வெண்டலைக் கம்பு ளதிர்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலு
மறுவில் யாணர் மலிகே ழூரநீ
சிறுவரி னீனைய செய்தி
நகாரோ பெருமநிற் கண்டிசி னோரே"

எனவும் வரும்.

தலைமகனைப் புணர்ந்துநீங்கியபின் வந்தபாங்கியொடு தன் மகனைப் புகழ்தற்குச் செய்யுள்:—

"இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை
யீன்றநமக்
கொருமையி லேவந் துறத்தகைந் தான்மைந்த
ஞெண்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன
வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன லூரனைத்
தேருடனே"

எனவும்

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப

* வெண்ணுதற் கம்புளரிக்குரல் (பா. பே.)

செருநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சி
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறும் பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி
நிரைதார் மார்ப னெருந லொருத்தியொடு
வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதி
னியன்ற வணிய னித்தெரு விறப்போன்
*மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவவென் றிழிந்தன னாங்காது
மணிபுரை யவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி யகத்தென
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலிற் றடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென் மகனொடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனெ னாகுத னாணி யிடித்திவற்
கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவி னின்சீ ரவர்மனைப்
பயில்வன போலவந் திசைப்பவுந் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணோட்டமும் நலிய
வழுங்கின னல்லனோ வயர்ந்தனன் மணனே

எனவும் வரும்,

தலைவி தலைவனைப் புகழ்தற்குச் செய்யுள்:—

" கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லை
குறிப்பினென் றுந்

---

* மாண்டேர் மாமணி (பா. பே.)

தண்டா தவன்சொன்ன சால்பு கண்டேன்தல
மேழ்புரக்கும்
வண்டார் மணிப்புயன் வாணன்றென் மாறை
மகிணர்முன்னு
ஞுண்டா கியபழங் கேண்மையிங் நாளு
மொழிந்திலரே ''
எனவரும்,

பாங்கி தலைவியை புகழ்தற்குச் செய்யுள்:—

'' சிறந்தார் புகழ்தருந் தீம்புன லூரன்செய்
தீமையெல்லா
மறந்தார்வ மெய்தி வணங்குத லாலிவள்
வாணன்றஞ்சை
நிறந்தா ரகையன்ன நித்திலம் போலு
நெடுங்குலத்திற்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற
பெற்றியளே ''
எனவும்,

' யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே

எனவும் வரும், பிறவுமன்ன. (8)

208] பரத்தையிற் பிரிவின்விரி இவையெனல்

மூன்றுகூத் திரத்து மொழிந்தவை யெல்லா
மான்ற பரத்தையி னகற்சியின் விரியே

(எ, சூ-ன்) பரத்தையிற் பிரிவின் விரியுணர்த் துத லுதலிற்று.

(இ-ள்) காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேது வீதாமவ் விறைவிக் கென்றன் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தலீருகச் சொல்லப்பட்டன வெல்லாம் பரத்தையிற் பிரிவாமென்றவாறு (பிரிவின் விரியாமென்றவாறு.)

இவை வாயின் வேண்டன் முதலாக நான்கு வகைக்கு மேற்கு மாறறிந்து கொள்க (8)

ஓதற்பிரிவு முதலிய மற்றைப் பிரிவுகளுக்கு

209] உரிய கிளவிகள்.

பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிட்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்

(எ-சூன்) நிறுத்தமுறையானே யோதற்பிரிவு முதலிய வைவகைப் பிரிவுகளின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) பிரிவறிவுறுத்தல் முதலாக வந்துழி மகிட்சி யீருகச் சொல்லப்பட்ட வொன்பதுவகையினையுடையவாங் கல்வி முதலாகிய ஐவகைப்பிரிவு என்றவாறு.

அவற்றுட்:—

3. ஓதற்பிரிவு

கல்விக்குப் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தற்குச் செய்யுள்:—

" மல்வித் தகங்கொண்ட தோளுடை யான்றஞ்சை
வாணன்றெல்சீர்
நல்வித் தகன்புவி நாவில்வைத் தான்வையை
நாடனையாய்
கல்வித் தடங்கட லீந்திய காதலர்
கற்றவர்முன்
சொல்வித் தவென்றழ லார்சுரம் போகத்
துணிந்தனரே "

எனவரும்.

தலைமகன் கல்விக்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள் (புலம்பற்குச் செய்யுள்:—

" யாணர்க் குழன்மொழி யென்செய்கு வேன்கல்வி
யெல்லையெல்லாம்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன்
மேய்ந்து தஞ்சை
வாணர்க் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென்
வல்லுயிரி
னூணற்ப மென்னவென் னுவரு மேக
முருமுடனே "

எனவரும்,

ஓதற்குப் பிரிந்துழிக் கார்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

" காதற் கயம்படிந் துன்னோடு காமக்
கனிநுகரா
ரோதற் ககன்ற வுணர்வுடை யோருடை
நீருலகம்
மாதர்க் கமைந்தருள் வாணன் றென்மாறை
வரக்கடவா

ராதற் கணங்கனே யாய்புய லேது
வறிந்தருளே

எனவரும், பிறவு மன்ன.

4. காவற் பிரிவு.

காவற் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தியதற்குச் செய்யுள்:—

" விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதன்
மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகை காவலர்
கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தின ராயினர்
வாணன்றஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச்செய்ய வாயெங்கள்
பைங்கிளியே

எனவரும்,

தலைமகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

" மன்னுயிர் காவலன் வாணன்றென் மாறையில்
வந்தளியா
ரென்னுயிர்க் காவல ரேந்திழை யாயித
யம்புலர்த்திக்
கொன்னுயிர் வாடை கொடும்பனி நீரிற்
குளிர்குழைத்துப்
பின்னுயி ராமலென் மேற்பூசு நாளுமென்
பேசுவதே "

எனவரும்,

காவற்குப் பிரிந்துழிக் கூதிர்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்று வித்தற்குச் செய்யுள்:—

" வரற்கால மென்றென் றெனப்பல கூடல்
வளைத்துதிரம்
விரற்கால சென்று மெலியன்மின் னேசென்று
மேதினிகாத்
துரற்கால குஞ்சர மஞ்சமஞ் சூர்ந்துறை
வீசுகின்ற
சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன்
றமிழ்வெற்பரே.

எனவரும்,

5. தூதிற் பிரிவு

தூதிற்குப் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தியதற்குச் செய்யுள்:—

" தூதாக வன்பர் செலத்துணிந் தாரென்றுஞ்
சொற்புலவோர்
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்றென்
மாறையிந்து
மீதாக வம்பு கிடந்தன போலுண்கண்
மெல்லியலிப்
போதாக வம்புகல் வோரிக லாறிப்
புலம்புகவே "

எனவரும்.

தலைமகன் றூதிற்குப் பிரிந்துழித் தலைமகண் முன்பனிப் பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

" மலிகின்ற வண்புகழ் வாணன்றென் மாறையை
வாழ்த்தலர்போன்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு
விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப்
புரந்தருளார்

நலிகின்ற முன்பனி நாளினண் ணார்முனை
நண்ணினரோ ''

எனவரும்.

தலைமகன் றூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப் பருவங்கண்டு வருந்தியதலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

'' சுற்றுங் குழலின் பிணிவிடுப் பான்வந்து
தோன்றினர்பார்
முற்றும் பொழிகின்ற முன்பனி நாண்முகி
லுங்கடலும்
வற்றும் பருவத்து மண்புரப் பான்றஞ்சை
வாணனொன்னார்ச்
செற்றும் படையின்வெம் போர்தணிப்பா
னன்றுசென்றவரே ''

எனவரும். —பிறவு மன்ன.

6 தூணைவயிற் பிரிவு

வேந்தர்க் குற்றுழி யுதவியிற்பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள்:—

'' நண்பான மன்னர்க் கிடர்வந்த வாறெண்ணி
நல்லுதவிப்
பண்பானம் மன்னர் படாதலுற் றூர்பனி
நீர்பொழியுந்
தண்பா னலங்தொடை யம்புய வாணன்
றமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பா னலங்கொள்செவ் வாயன்ன மேயன்ன
மென்னடையே ''

எனவரும்.

தலைமகன் வேந்தர்க் குற்றுழி உதவியிற் பிரிந்துழித் தலைமகள் பின்பனிப் பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

“ இன்னற் படுகின்ற வென்னையெண் ணார்தமக்
கின்றுணையாம்
மன்னற் குதவிப் பிரிந்தநங் காதலர்
வாணன்றஞ்சைக்
கன்னற் கடிகை யறிவதல் லாற்பகல்
*காணவொண்ணு
பின்னற் கனையிருள் கூர்துன்ப மேவிய
பின்பனியே”

எனவரும்,

வேந்தற் குற்றுழி யுதவியிற் பிரிந்துழிப் பின்பனிப் பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி யாற்றுவித்தற் குச் செய்யுள்:—

“ வடுந்தகண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை
வாணன்வெற்பி
னடுக்கங் குளிர வசைகின்ற வாடை
யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர்
நண்பனுற்ற
விடுக்கண் களையவென் றேயகன் கான
மிகந்தவரே.

எனவரும்,

7-வது பொருள்வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தியதற்குச் செய்யுள்:—

---

* காண்பரிதாம் (பா. பே.)

" மஞ்சைப் புனைமதின் மாறைவ ரோதயன்
வாணர்பிரான்
றஞ்சைப் பதியண்ண லெண்ணலர் போற்றலி
நாமிருக்க
நெஞ்சைப் பொருள்வயின் வைத்தநங் கேள்வர்நன்
னீண்மதியின்
பிஞ்சைப் புரைநு தலாய்பிரி வானின்று
பேசினரே.

எனவரும்,

தலைமகன் பொருள்வயிற் பிரிந்துழித் தலைமகளிள வேனிற் பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

" நங்க ணிரங்க வரும்பொருள் தேட
நடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர்
செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென்
றஞ்சைவஞ்சித்
திங்க ணிவந்தது போற்கவி ணூர்முகத்
தேமொழியே "

எனவரும்.

பொருள்வயிற் பிரிந்துழி யிளவேனிற் பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி யாற்றுவித்தற்குச் செய்யுள்:-

" வார்த்தன பார மடமயி லேகுயில்
மாருதமான்
றேர்த்தனி வீரன் றிருநா ளும்வந்தது
சேர்மின்சென்றூர்
தார்த்தட மேரு வெனும்புய வாணன்றஞ்
சாபுரிநின்

ருர்த்தது கேட்டுவந் தார்பொரு டேட
வகன்றவரே

எனவரும். பிறவுமன்ன.

சிலபிரிவுகளின் பொதுக்கிளவிகள்.

கல்வியிற் பிரிவு முதலாகிய வைந்தினுள்ளுந் தூது (முதலியுங் காரணமாகிய பிரிவின்க ணவ்வினை யோர் யாண் டின் முடியாது நீட்டித்து முடிந்துழித் தலைமகளுருவு வெளிப்பாடு கண்டு சொல்லியதற்குச் செய்யுள்:—

"மைக்குஞ் சரநிரை யாற்றஞ்சைவாணன்
மருவலரைக்
கைக்குங் களங்கெழு பாசறையூடு
கயலும்வில்லும்
மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு
முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசு நளோலைத்
திருமுகமே"

எனவும்

"முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காதனன் ஞுட்டுப் போதரும் பொழுதே"

எனவும் வரும்.

பாசறை முற்றிமீண் டூர்வயின் வந்த தலைமகன் பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

"மால்கொண்ட வாரண வாணன்றென் மாறை
வலவநண்ணூர்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக்
கைவயின்முட்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியாளிக்
கொடிநெடுந்தேர்

மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும்
வியப்பெனக்கே''

எனவரும்.

தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டுவந்து சொல்லியதற்குச் செய்யுள்:—

" கொத்தல ரோதியங் கொம்பரன் னாள்பொங்கு
கொங்கைவிம்ம
முத்தல ராக முயங்கினம் யாமுழு
நீர்விழிபோன்
மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை
வாணன்வண்மைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய
கார்ப்புயலே''

எனவும்,

" தாழிரு ளுமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிடு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாண்மலர் நாறு
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே.

எனவும் வரும் (10)

நான்காவது கற்பியன் முற்றும்.

உ

ஐந்தாவது ஒழிபியல்.

210] ஒழிபாவது இன்னதென்பது

ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு *மமைவுந் தழுவிய தாகும்.

இவ்வோத் தென்ன பெயர்த் தோவெனின்முன்னர்வந் தவியனுள்கி றுள்ளுங் கூறிக் கூறுதவொழி பிலக்கண முணர்த்தினமையான் ஒழிபியலென்னும் பெயர்த்து.

(எ-சூன்)

ஒழிபாவது, இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒழிபென்று சொல்லப்படுவ தகப்பாட்டிற் குரியவுறுப்புக்களையு மகப்பாட்டிலக்கணத்தைத் தப்பியுமமைந்த நீதியினையும் பொருந்தியதா மென்றவாறு. (1)

211] அகப்பாட்டுறுப்புக்கள்

திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென
வப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே.

(எ. சூன்.) அகப்பாட்டுறுப்பின் பாகுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அகப்பாட்டுறுப்பாவன திணை முதலாகத் துறையிறுகப் பன்னிருபகுதிப் பட்டனவா மென்றவாறு (2)

1, 2, திணையும், கைகோளும்

212] அவற்றுண்

முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாகும்.

(இ-ள்) நிறுத்த முறையானே திணையுங் கைகோளு மிவை யென்ப துணர்த்துத னுதலிற்று.

---

*மமைதியுங் (பா. பே.)

அப்பன்னிரண்டனுள்ளு முற்பட்ட இணையுங் கைகோளுமா கிய விரண்டும் மேற்சொல்லப் பட்டனவா மென்றவாறு. (3)

3 கூற்று.

களவின் கூற்றிற் குரியார்

213] தலைவன் றலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவருஞ்
சாற்றிய களவிற் கூற்றிற் குரியர்

(எ,சூ-ன்)

களவுக் கைகோளகத்துக் கூற்றிற் குரியோரை யுணர்த் துத னுதலிற்று.

(இ-ள்) தலைவன் முதலாகச் சொல்லப்பட்ட வறுவரு மேற் சொல்லப்பட்ட களவினகத்திற் கூற்றிற் குரியராவ ரென்றவாறு. (4)

214] கற்பின் கூற்றிற்குரியவர்

நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தைய ரறிவரென் றெழுவரு
*மறுவகை யவரு மாகிய வனைவரும்
குறைவறு கற்பிற் கூற்றிற் குரியர்.

(எ-சூன்)

கற்பிற் கூற்றிற் குரியோரை யுணர்த்துதனுதலிற்று.

(இ ள்) நற்றாய் முதலாகிய வெழுவரும் மேற்சொல்லப் பட்ட தலைவன் முதலாகிய வறுவருமாகிய பதின்மூவருங் குற்றமற்ற கற்பினகத்துக் கூற்றிற்குரிய ராவ ரென்றவாறு. (5)

---

* அறுவரென் றவரும் (பா. பே.)

215] கூற்றிற்குரிமை யில்லாதார்

பயந்தோன் றன்னை யுயங்குநோ யறிவோர்
ஊரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே.
(எ-சூன்)

இதுவு மகப்பொருளகத்து முகத்துரை நிகழாதோரை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) பயந்தோன் முதலாகச் சொல்லப்பட்டவர் முகத்துச் சொன்னிகழா வகப்பொருளிடத் தென்றவாறு.

எனவே யவை பிறராலெடுத்துப் பிறராலோர் சொற்றந்து அடுத்துக் கூறப்படு மென்றவாறு.

இதற்குச் செய்யுள்:—

"...............எந்தையு நிலனுறப் பொருந்நின்
சீறடி சிவப்ப வேயவல் குலவி
வெவனிலங் குறுமகளியங்குதி யென்னும்"
இத்தன்மையன தந்தை கூறினுகைத் தோழியெடுத்துக் கூறுதலாம். பிறவு மன்ன (6)

216] தலைவன் கூற்றிற்கு ஒரு சிறப்பு விதி
தமர்வரி னிடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோ னணையுங் கூறும்.

(எ-சூன்)

தலைவன் கூற்றுள் வரைவியலின் ஒழி புணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) புணர்ந்துடன் போகாநின்ற காலத்துத் தலைமகடமர்பின் சேறலிற் றலைமகன் றலைமகளோ டாணையுங் கூறுவனென்றவாறு.

(உ-ம்)

" கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டும்
நீவிளை யாடுக சிறிதே "

என்பதாம் (7)

217] தலைவி கூற்றிற்கு ஒரு சிறப்பு விதி

உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல் பேசலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலு முரியள் சொல்லுங் காலை.

(எ-ருன்) தலைவி கூற்றுள் வரைவியலின் ஒழிபுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) புணர்ந்துடன் போய்மீண்ட தலைமகள் பிரியுங் காலத்துத் தலைவனொடு சுரத்தியல்பு கூறலுமவன் பிரிந்த காலத்து வருந்தி நெஞ்சொடும் பிறரொடுஞ் சுரத்தியல்பு சொல்லலு முரிய ளாராய்ந்து சொல்லுமிடத் தென்றவாறு. எனவே புணர்ந்துடன் போகாத்தலைகமள் சுரத்தியல்பு கூறா ளென்றவாறு.

தலைமகள் பிரியுங் காலத்தவனொடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள்:—

" நினைத்தலும் நினைதிரோ வைய ! வன்று நாம்
பணைத்தா ளோமைப் படுசினைப் பயந்த
பொருந்தாப் புகர்நிழ லிருந்தன மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி
யொடித்துமிசைக் கொண்ட வோங்குமருப் பியானை
பொறிபடு தடக்கைச் சுருக்கிப் பிறிதோ
ரறியிடை யிட்ட வளவைக்கு வேறுணர்ந்
தென்றூழ் விடரகஞ் சிலம்பப்
புன்றலை மடப்பிடி புலம்பிய குரலே "

என்பதாம்.

பிரிந்துழி, நெஞ்சொடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள்:—

“ வில்லுழவர் நாளு மறுகு புள்ளும் போவர்கொல் ”

என்பதாம்.

பிரிந்துழிப் பிறரொடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள்:—

“ அறியாய் தோழி யவர்சென்ற வாறே
தறுகட் கொண்க னன்ன
சிறுகண் யானை திரிதரு காடே ”

என்பதாம்.

இவை களவின் வழிவந்த கற்பினெறியெனக்கொள்க. (8)

213] நற்றாய் கூற்று நிகழாத இடம்

தலைவன் றலைவியொடு நற்றாய் கூறாள்

(எ-சூன்) நற்றாய் கூற்றிற் கெய்திய தொருசார் விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) தலைவனோடுந் தலைவியோடும் நற்றாய் கூறப் பெறா ளென்றவாறு. (9)

219] நற்றாய் கூற்று நிகழும் இடம்

புணர்ந்துடன் போய துணர்ந்த பின்ன
ரந்தணர் தெய்வ மயலோ ரறிஞர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்.

(எ-சூன்) நற்றாய் கூற்றுக் கெய்தியதன்மேற் சிறப்பு விதியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அந்தணர் முதலாகச் சொல்லப்பட்ட வனைவரோடும் நற்றாய் கூறுந் தலைமகள் புணர்ந்துடன் போனவாறு தானறிந்தபின் னென்றவாறு. (10)

220] செவிலி கூற்று நிகழுமிடம்

தாயொடும் பாங்கி தான்முத லாரொடுஞ்
சேயிழை செவிலியுஞ் செப்பு மாங்கே

(எ-சூன்) செவிலி கூற்றுக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) நற்றாயோடும் பாங்கி முதலானோரோடும் தலைமகள் செவிலித்தாயுஞ் சொல்லும், அவள் புணர்ந்துடன் போனதன்மை தானறிந்த பின்னென்றவாறு.

இவ்விருவர் கூற்றிற்கு முதாரண முடன் போக்கினுட் காட்டப்பட்டன. (11)

221] கண்டோர் கூற்று நிகழுமிடம்.

தாயர் பாங்கியர் தலைவன் றலைவியோ
டேயு மென்ப கண்டோர் கூற்றே.

(எ-சூன்) கண்டோர் கூற்றிற் கெய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தாயர் முதலாகியவரோடு நிகழுங் கண்டோர் கூற்றென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

உதாரண முடன் போக்கினுள்ளுங் கற்பினுள்ளுங் கண்டு கொள்க. (12)

222] ஈண்டு விதந்து சொல்லப்படாதாரின் கூற்று நிகழுந்திறம்.

சாற்று மெழுவருந் தலைவன் றலைவியோ
டேற்றன கூறுப விடந்தொறு மிடந்தொறும்.

(எ-சூன்) மேற் சொல்லப்படாதவர் கூற்றுக் கெய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதனுதலிற்று.

(இ ள்) மேற்சொல்லப்படாத பார்ப்பானும், பாங்கனும் பாணனுங், கூத்தரும், விறலியும், பரத்தையரு, மறிவரு மென்கின்ற வெழுவருந் தலைமகனோடுந் தலைமகளோடு மிடந் தொறு மிடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவ ரென்றவாறு. (13)

223] தலைவி கூற்றிற்குப் புறனடை

நெஞ்சு நாணு நிறைசே ரறிவுஞ்
செஞ்சுடர்ப் பருதியுந் திங்களும் மாலையும்
புள்ளு மாவும் புணரியுங் கானலு
முள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவுந்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை
யின்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்.

(எ-சூன்) தலைவி கூற்றுக் கெய்துவதோர் வேறுபா டுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) நெஞ்சு முதலாகக் கானலீறுகச் சொல்லப் பட்டனவு மவையல்லாத பிறவுந் தன்சொற் கேட்கின்றன போலவுந் தனக்கவை யின்சொற் சொல்லுகின்றன போலவும் தன்னைத்தேற்றுகின்றன போலவுஞ் சொல்லிய மாத்திரத் தானே யாற்றுந் தலைமகளென்றவாறு.

பிறவுமென்றதனுற் கழியும் நெய்தலும் மரமுதலாயினவுங் கொள்க. உதாரண மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற் றுள்ளும் கண்டு கொள்க. (14)

224] எல்லார் கூற்றிற்கும் புறனடை

இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைப.

(எ-ஞ்ன்) எல்லார் கூற்றுக்கு மெய்துவதோர் வேறு பாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய பதின்மூவரும் யாரோடுங் கூருதுதம்மொடு தாமே கூறியு மமைவ ரென்றவாறு.

உதாரணம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டு கொள்க. இத்துணையுங் கூறப்பட்டது கூற்றிய லெனக் கொள்க. (15)

4. கேட்போர்.

225] கிழவன் கூற்றுங் கிழத்தி கூற்றுங் கேட்போர்

கிழவோன் கூற்றுங் கிழத்தி கூற்றும்
***மறையோன் முதலாப் பதின்மருங் கேட்ப.**

(எ-ஞ்ன்) நிறுத்த முறையானே கேட்போரென்னு முறுப்பைக் கூறுவான் ருெடங்கித் தலைவன் கூற்றும் தலைவி கூற்றும் உணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தலைவன் கூற்றுந் தலைவிகூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மருங் கேட்பரென்றவாறு.

தலைவன் றலைவியோடு நற்ருய் கூருள் எனவே நற்ருயோடு அவ்விருவருங் கூருரென்பது போதருதலான் மறையோன் முதலிய பதினெருவருள் நற்ருயையொழித்துப் பதின்மரென்ருரென்க. (16)

---

* பழமறையோன் முதல் (பா. பே.)

226] மறையோன் கூற்றும் அறிஞர் கூற்றும் கேட்போர்.

மறையோர் கூற்று மறிவர் கூற்று
மிறையோர் முதலா வெனைவருங் கேட்ப.

(எ-சூன்) பார்ப்பாரு மறிவருமாகிய விருவர் கூற்றுந் தலைமகன் முதலாகிய வெல்லாருங் கேட்பரென்றவாறு.

இவ்விரண்டு சூத்திரத்தானுஞ் சொல்லியது கேட்போரிவரெனக் கொள்க. (17)

5. இடம்.

227] இடம் இன்னதென்பது

நெறிப்படு கருமம் நிகழ்வுழி யிடனே.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே இடனென்னு முறுப் புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) நெறிமைப்பட்ட காரிய (முறைமைப்பட்ட காரிய நிகழு) நிலமிடமென்னு முறுப்பா மென்றவாறு.

அன்றித் தன்மை, முன்னிலை, படர்க்கை யெலினுமை யும் நெறிப்பட்ட கருமமாவன களவுங் கற்புமென்பனவாம். (18)

6. காலம்.

228] காலம் இன்னதென்பது

சென்றதும் நிகழ்வது மெதிர்வது மெனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே காலமென்னு முறுப் புணர்த்துத னுதலிற்று.

இ-ள்) இறந்த காலமு நிகழ்காலமு மெதிர்காலமு மெனவடைவே நின்றுலகத்திலுள்ள பொருள்களை யறியும் படியாக நடப்பது காலமென்னு முறுப்பா மென்றவாறு. (19)

7. பயன்

229] பயனின்ன தென்பது

இப்பொருள் பயக்குமிஃ தென்பது பயனே.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே பயனென்று முறுப் புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இந்தப் பொருளை யிது பயக்கு மென்று சொல்லுவது பயனென்று முறுப்பா மென்றவாறு. (20)

8. முன்னம்.

230] முன்ன மின்ன தென்பது.

இன்னார்க்கின் னுழி யின்னது பயக்குமென
முன்னந் தருவது முன்ன மாகும்.

(ஓ-சூன்) நிறுத்த முறையானே முன்ன மென்று முறுப் புணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) இத்தன்மையர்க் கிவ்விடத்திது தருமென்னுங் குறிப்பினை வெளிப்படுப்பது முன்ன மென்னுங் குறிப்பா மென்றவாறு. (21)

9. மெய்ப்பாடு.

231] மெய்ப்பாடு இன்னவையென்பது.

நகை முதலாமிரு நான்கு மெய்ப்பாடும்
நிகழ்பொருள் மெய்ப்பட *நிற்பதுமெய்பாடு

(எ-சூன்) நிறுத்தமுறையானே மெய்ப்பாடென்று முறுப்புணர்த்துத னுதலிற்று.

* நிற்பமெய்ப்பாடே (பா-பே)

(இ-ள்) நகையு மழுகையு மிளிவரலு மருட்கையு மச்ச மும் பெருமிதமு முவகையும் வெகுளியு மென்னுமெட்டு வகை மெய்ப்பாடு மவ்விடத்து நிகழும் பொருளைக் கேட் டோர் மெய்யின் கண்ணே வெளிப்பட நிற்பது மெய்ப்பா டென்னும் உறுப்பா மென்றவாறு.

மெய்ப்பாடு வெளிப்பாடெனக் கொள்க. (22)

10. எச்சம்

232] எச்சமின்ன தென்பது

சொல்லே யாயினுங் குறிப்பே யாயினுஞ்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம்

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே யெச்சமென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) ஒருசொல்லே யாயினு மொருகுறிப்பே யாயி னுங் கூட்டிப் பொருள் முடித்தல் வேண்டி நிற்பதெச்ச மென்னு முறுப்பா மென்றவாறு. (23)

11. பொருள்வகை.

233] பொருள்வகையின்னதென்பது

ஒருதிணைக் குரிமை பூணா நிலைமை
பொருள்வகை யென்மனார் புலமை யோரே.

(எ, சூ-ன்) நிறுத்த முறையானே பொருள்வகை யென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) இத்திணைக்கே யிப்பொருளுரித்தாவது என் னுமை யெல்லாத் திணைக்கும் பொதுவாய் நிற்கு நிலைமை பொருள்வகை யென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

அவையாவன நிரனிறை மொழிமாற்று, சுண்ணமொழி மாற்று, அடிமறி மொழிமாற்று, அடிமொழி மாற்று பூட்டு விற்பொருள் கோள் புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள் அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப்பொருள் கோள் என ஒன்பதாம். (24)

12. துறை

234] துறையின்ன தென்பது

சொல்லிய வல்ல வொன்றினு மவற்றோ
டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாம
லுரைப்போர் கேட்போ ருண்மை யின்றி
யுரைக்குங் கவியே யுரைப்பது துறையே.

(எ, ‑ன்) நிறுத்த முறையானே துறையென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ‑ள்) மேற்சொல்லப்பட்ட மக்களு மாவு முதலாயின வன்றிப் பிறவொன்றினவாயினு மவற்றை முன் சொல்லிய வற்றோடும் பொருந்தும் வண்ண மாராய்ந் திலக்கணம் வழுவாதபடியாகத் தன்னை யன்றி யுரைப்போருங் கேட்போரு முண்டாகலின்றிக் கவி சொல்லும் புலவன்றானே கூறுவது துறையென்னு முறுப்பா மென்றவாறு.

“உழையும்வெங் காளமும் போலுங்கண்
ணாளொரு காலமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ்
சேகலிக் கோடைமண்மேல்
மழையுமந் தாரமும் வந்தன்ன
வாணன்றென் மாறையின்மாந்
தழையுநம் போலிங்ங னேகவின்
வாடத் தவஞ்செய்ததே

என்னும் பாட்டிற்குத் 1 திணை-குறிஞ்சி 2 கைகோள்-களவு 3 கூற்று—தலைமகன் கூற்று 4 கேட்போர்-நெஞ்சு 5 இடம்-தனியிடம். முன்னிலையுமாம். 6 காலம்—இறந்தகாலம். 7 பயன் – குறைநேர்தல் 8 முன்னம் - எனைக்குறைவிக்கும் வரையென்பது (இவ்விடத் தெனக்கிது தகுமென்பது) 9 மெய்ப்பாடு-மருட்கை 10 எச்சம்-இனியென்செய்வேமென் னுஞ்சொல், 11 பொருள்வகை-சொற்ருெறுஞ் சொற்ருெறும் பொருளற்றுவந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோளாம்.

" ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ்
 விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் ஞட்டஞ்சை
 வாணனென்னுர்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப்
 புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட
 குரகதமே

என்னு மிப்பாட்டிற்குத் திணை-பாலை, கைகோள்-கற்பு, கூற்று-தலைமகள்கூற்று, கேட்போரில்லை, இடஞ்-சுரத்திடம் காலம் - இறந்தகாலம், பயன் - ஆற்றுவது, முன்னம்-இக் காலத்திற்கிது தகுவதென்பது, மெய்ப்பாடு-உவகை, எச்சம் -நின்ருனுயின் என்பட்டொழியுமென்னுங் குறிப்பு, பொருள் வகை-குரகதமெற் காத்தலின் வாழ்வன வாகவென இறுதியு முதலும் பொருள்பட நிற்றலின் பூட்டுவிற் பொருள்கோள்.

" காதற் கடல்படிந் துன்னேடு காமக்
 கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை
 நீருலகம்
மாதர்க் கமைந்தருள் வாணன்றென் மாறை
 வரக்கடவா

ராதற் கணங்களை யாய்புய லேது
வறிந்தருளே ''

என்னும் பாட்டிற்குத் திணை—முல்லை; கைகோள்—கற்பு; கூற்று—தோழி கூற்று, கேட்போர்-தலைமகள்; இடம் மனையிடம். காலம்—எதிர்காலம். ஆற்றுவது—முன்னமிவ் விடத் திவட்கிது தகுவதென்பது, மெய்ப்பாடு—உவகை. எச்சம்—நீவருந்தல் வேண்டா வென்னுஞ்சொல், பொருள் வகை— சொற்றொறுஞ் சொற்றொறும் பொருளற்று வந் தமையாற், புனல்யாற்றுப் பொருள்கோள்.

" போயே தெருவிற் றனிவிளை யாடும்
புதல்வற்புல்லி
நீயே நிலையல்லை நின்மக னேயிவ
னியுமவன்
றுயே வருகெனச் சேயன்ன வாணன்
றமிழ்த்தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானறிந் தேனன்னை
யெங்கையென்றே "

என்னும் பாட்டிற்குத் திணை—மருதம், கைகோள்—கற்பு, கூற்று—தலைமகள்கூற்று, கேட்போர்—தலைமகன், இடம்பள்ளியிடம்காலம்—இறந்தகாலம், பயன்-பரத்தையிற் பிரிவொழித்தல், முன்னம் — இவ்விடத்திவற்கிது தகுவ தென்பது, மெய்ப்பாடு—அச்சம், எச்சம்—நீ மறைத்தல் வேண்டா வென்னுஞ்சொல், பொருள்வகை-சொற்றொறுஞ் சொற்றொறும் பொருளற்று வந்தமையாற் புனல் யாற்றுப் பொருள்கோள்.

"வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை
வெம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களிற் றேன்றுந் துறைவசெஞ்
சொற்புலவோர்

வடிக்கின்ற முத்தமிழ் வாணன்றென் மாறையெம்
 மான் மருங்கை
யொடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு
 காதவரே.

என்னும் பாட்டிற்குத் திணை—நெய்தல்; கைகோள்—களவு; கூற்று-தோழி கூற்று; கேட்போர்-தலைமகன். இடம்-தனியிடம்; காலம்—எதிர்காலம்; பயன்-வரைவு; முன்னம்—இவ்விடத்திவற்கிது தகுவதென்பது; மெய்ப்பாடு—அச்சம். எச்சம்- வரைதல் வேண்டுமென்னுஞ் சொல்; பொருள்வகை-சொற்றொறுஞ் சொற்றொறும் பொருளற்று வந்தமையாற் புனல் யாற்றுப் பொருள்கோள்; பிறவுமன்ன,

235] எச்சத்திற்குப் புறனடை

அவற்றுள்,
எச்சமின்றியு மியையு மென்ப

(எ-ஞன்) எச்சவுறுப்புக் காவதோர் புறனடை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) மேற்கொள்ளப்பட்ட திணை முதலாகிய பன்னிரண்டனுள்ளு மெச்சமென்னு முறுப்பொழிந்து தொடரவும் பெறு மகப்பாட்டுறுப்பென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

அதற்குச் செய்யுள்:—

"சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்றென்
 மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவ ரியார்மணம்
 வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட லானது
 பங்கயக்கண்

மாலா யினலிவ னுந்திரு வாயினண்
மாதுமின்றே ''

இதற்குத் திணை—முல்லை, கைகோள்—கற்பு, கூற்று—கண்டோர் கூற்று, கேட்போர் — தம்மிற்ரும், இடம்—வதுவைமனையிடம், காலம்—நிகழ்காலம் — பயன் — காட்சி முன்ன—மிவ்விடத்திவற்கிது தகுமென்பது. மெய்ப்பாடு—உவகை, எச்ச-மில்லை, பொருள்வகை-சொற்றெுறும் பொரு ளற்று வந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோள். பிறவு மன்ன. (26)

236] அகப்பாட்டினுள் வரும் பொருள்கள்

**உவமைப் பொருளு மிறைச்சிப் பொருளுமென்
றிருவகைப் பொருளு மெய்துமகப் பாட்டினுள்.**

(எ-சூன்) அகப்பாட்டுள் வரும்பொருள்க ளிவை யென்ப துணர்த்துத ஞதலிற்று.

(இ-ள்) உவமைப் பொருளும் இறைச்சிப் பொருளும் என்று கூறப்பட்ட இரண்டுவகைப் பொருளும் வரும் அகப் பாட்டிடத்து.

(இ-ள்) உள்ளுறை யுவமமும் வெளிப்படை யுவமு மென விரண்டு கூற்றினை யுடைத்தா மகப்பாட்டினுட் கிடக்கு முவமப்பொரு ளென்றவாறு. (27)

237] உவமவகை

**உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
வுள்ளுறை யுவம மிருவகை யுடைத்தே.**

(எ-சூன்) உவம வகை யுணர்த்துத ஞதலிற்று.

(இ-ள்) உள்ளுறை யுவமமும் வெளிப்படை யுவமமு மென விரண்டு கூற்றினை யுடைத்தா மகப்பாட்டினுட் கிடக்கு முவமைப் பொருளா மென்றவாறு. (28)

238] உள்ளுறை யுவமத்தின் இலக்கணம்

அவற்றுள்,
உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்.

(எ-சூன்) உள்ளுறை யுவம மிவ்வியல்பிற் றென்ப துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட விரண் டுவமத்துள்ளு முள்ளுறை யுவமமாவது. ஆராய்ந்தறியும் பகுதியினையுடைத் தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவொடுந் தோன்று மென்றவாறு.

(உ-ம்)

" இழைவிளை யாடு மிளமுலை சாயற்
கிடந்தமஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங்
கலையகலா
துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு
முன்பொருட்டான்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன்
மலயத்திலே. "

இதனுண் மானைப் பிரியாது கலை விளையாடு மெனவே யதுபோல நீயுந் தலைவியைப் பிரியாது விளையாடுகவென வுள்ளுறை யுமமம் விலங்கொடு தோன்றியவாறு காண்க. பிறவுமன்ன, (29)

239] வெளிப்படை யுவமத்தினிலக்கணம்.

வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

(எ-சூன்) வெளிப்படை யுவமமாமாறுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) வெளிப்படை யுவமமாவது தொழிலும், பயனும், வடிவும், நிறனும் புலப்படுமாறு நின்று விளங்குவதாமென்றவாறு. (30)

240] இறைச்சிப் பொருளிலக்கணம்

கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே.

(எ-சூன்) இறைச்சிப் பொருளா மாறுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) இறைச்சிப் பொருளாவது தெய்வ முதலாகிய பொருளின் கண்ணே பிறக்கு மென்றவாறு. (31)

241] அகப்புறக் கைக்கிளை

காமஞ் சாலா விளமை யோள்வயிற்
குறிப்பறி வுறுது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை.

(எ-சூன்) வழுவமைதி கூறுவான் றொடங்கி முதற்கண் அகப்புறக் கைக்கிளை யுணர்த்துத றுதலிற்று.

(இ-ள்) காமஞ்சாலா விளமைத் தன்மையினை யுடைய தலைமகள் பக்கத்துத் தலைமகனது குறிப்பினை யறியாது சென்று சார்ந்தவளோடு மேன்மேலுங் கூறுவதகப்புறக் கைக்கிளையா மென்றவாறு.

அன்னதாதல், "ஊர்க்கா, ஸிவந்த, பொதும்பரு" ளென்னுங் குறிஞ்சிக் கலியுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டு கொள்க. (32)

242] அகப்புறக் கைக்கிளைக் குரியவர்

அதுவே,
இறைமையில் லோர்க்கு மிழிகுலத் தோர்க்கு
முறைமையி னுரித்தே முன்னுங் காலை.

(எ-சூன்) அகப்புறக் கைக்கிளைக் குரியாரை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளைதான் றலைமைப்பாடில்லாதார்க்கு மிழிகுலத்தார்க்கு முறைமையா னுரித்தா மாராயுங் காலத்தென்றவாறு.

முறைமை யென்பது மேற்சொல்லிய முறைமை. முன்னுங்காலை யென்றதனாலிது பயின்றுவாராதெனக் கொள்க.

"ஏஎ இஃதொத்த" னென்னுங் குறிஞ்சிக் கலி யுள்ளும் "என்னெற்றனை கொல்லோ" வென்னு மருதக்கலியுள் ளுங் கண்டு கொள்க. (33)

243] அகப்பொருட் பெருந்திணை

அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றுங்
குறியிடை யீடுந் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச்சூ ளுரையும்
நீப்பி லூடலும் போக்கழுங் கியல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமாறு படுதலும்

வன்பொறை யெதிரழிந்து மொழிதலு மன்புறு
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரிய.

(எ-துன்) அகப்பொருட் பெருந்திணைக்குரியவை யிவையென்ப துணர்த்துதலுதலிற்று.

(இ-ள்) அகன்றுழிக் கலங்கன் முதலாகத் தலைவியுந் தானும் வனமடைந்து நோற்றலீருகச் சொல்லப்பட்டனவும், பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரியவா மென்றவாறு. (34)

244] அகப்புறப் பெருந்திணை

மடலே றுதலொடு விடைதழா லென்று
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னொடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயி
னகன்ற வகப்புறப் பெருந்திணைக் காகும்.

(எ-துன்) அகப்புறப் பெருந்திணை யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) மடலேறன் முதலாகத் தபுதார நிலையீருகச் சொல்லப்பட்டன வியற்பெயர் கூடாவாயி னகப்புறப் பெருந்திணைக்காகு மென்றவாறு.

எனவே யியற்பெயர் கூடுமாயின் புறப்பொருட் பெருந்திணையா மென்பதாயிற்று. அவற்றுண், மடலேற்றிற் குதாரணம் நெய்தற் கலியுட் கண்டு கொள்க. விடைதழாற் குதாரணம் முல்லைக் கலியுட் கண்டுகொள்க. சுரநடை முதலான நான்கற் குதாரணம் புறநானூற்றிற் கண்டுகொள்க. சுரநடை முதலான நான்கற்கு முதாரணம் புறப்பொருள் வெண்பா மாலையுட் கண்டுகொள்க. (35)

245] அகப்பாட்டினுள் பாடப்படுவோர்

பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டி னுட் பாடப் பாடுவோ ரிருவர்.

(எ-சூன்) அகப்பாட்டி னுட் பாடப்படுவோ ரிவரென்ப துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அகப்பாட்டி னுட் பாடப்படுவோர் பாட்டு டைத் தலைமகனுங் கிளவித் தலைமகனுமென விருவரென்ற வா று. (36)

246] அகப்பாட்டின்கண் பாடப்படுவோருள் உயர்ந்தோன்

அவருள்,
உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவ னாகும்.

எ-சூன்) மே ற் சொல்லப்பட்டவரு ளுயர்ந்தோனை யுணர்த்துத னுதலிற் று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட விருவருள்ளு முயர்ந் தோன் பாட்டுடைத் தலைவனு மென்றவா று.

" அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை "
யென்னு நெடுந்தொகைப் பாட்டி னுள்,

" மழைவளந் தரூஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு

வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநாடி யானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே ''

என்னு மதனானும், ''வேளாப் பார்ப்பா'' னென்னு நெடுந் தொகைப் பாட்டினுட்

'' கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோ
ளிரவுத் துயின்முடிந் தானை
யுரவுச்சினவேந்தன் பாசறை யேமே ''

என்றதனானும் பாட்டுடைத் தலைமக னுயர்ந்தா னுதலி னென்றறிக.

இதனுள் வேந்தனென்றது பாண்டியனை; பிறவுமன்ன.
(37)

247] அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள்

நிலப்பெயர் வினைப்பெயர் பண்புகொள் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர் கூறுப வவர்க்கே.

(எ-கூன்) தலைமக்கட்குக் கூறப்படும் பெயர்களிவை யென்ப துணர்த்துத னுதலிற்று,

(இ-ள்) நிலப்பெயர் முதலாக வைந்துபெயருங் கூறுவர். மேற்சொல்லப்பட்ட தலைமக்க ளிருவர்க்கு மென்றவாறு.

அவற்றுள்; நிலப்பெயராவன:-மலைநாடன், சோணாடன் பாண்டியனாட னென்றாற் போல்வனவும், வெற்பன், சேர்ப்

பன் என்றாற் போல்வனவுங் கொள்க. (சிலம்பன், ஊரன், சேர்ப்பன் என்றாற் போல்வனவுமாம்.

வினைப்பெயராவன:—

கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான், வடிம்பலம்ப நின்றான், என்றாற் போல்வனவுங், கோவலன் வேட்டுவ னென்றாற் போல்வனவுங் கொள்க. கோவல னென்பது கோபால னென்னும் வடமொழித் திரிபாய் ஆப்புரத்தற் றொழின்மேனின்றது. வேட்டுவ னென்பது வேட்டைத் தொழிலின் மேனின்றது.

பண்புகொள் பெயராவன:—

நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட்சென்னி, உக்கிரப் பெருவழுதி யென்றாற் போல்வனவுங் கொள்க. (தோன்றல் அண்ணல் என்றாற் போல்வனவுமாம்.

குலப்பெயராவன:— சேரன் சோழன் பாண்டிய னென் றாற் போல்வனவும் குறவன் ஆயன் என்றாற் போல்வனவு மாம்.)

இயற்பெயராவன:— குரவராற் (குரவராதியராற்) பெற்ற பெயரெனக் கொள்க. (38)

218] களவித்தலைவனுக்குக் கூறப்படாத பெயர்கள்

அவற்றுள்,
இயற்பெயர் களவித் தலைவற் கிசையார்.

(எ-றுன்) களவித் தலைமகற்குக் கூறுப்பெய ரிஃதென்ப துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட பெயருட் குரவராற் (குரவராதியராற்) பெற்றபெயரினைக் களவித் தலைமகற்குச் சொல்லார் புலவரென்றவாறு (39)

249] அகப்பாட்டினுள் தலைமக்கள் வருந்திறன்

இருவரு மொருங்கே வருதலுந் தனித்தனி
வருதலு மிருவரும் வாரா தொழிதலு
முரிய வென்மனா ருணர்ந்திசி னோரே.

(எ-ஞூன்) அகப்பாட்டினுட் டலைமக்கள் வரும்வகை யும் வாராவகையு முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தலைமக்க ளிருவருங் கூடவருதலும், பாட்டுடைத் தலைமகனே வருதலுங், கிளவித் தலைமகனே வருதலு, மவ்விருவரும் வாராதொழிதலு முரியவா மகப்பாட்டுக் குள்ளென்று சொன்னா ரறிந்தோரென்ற வாறு.

அரிப்பவர் பிரம்பின் வரிப்புற விலைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
யோவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சிக்
கோன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

என்னும் பாட்டினு ளிருவரும் வந்தவாறு கண்டு கொள்க.

" பெருங்கரை நிவந்த சிறுநறு நெய்தலுங்
கருங்கயத் தமன்ற செந்தா மரையு
மரும்பவிழ் புறவிற் பூத்த முல்லையு
மிரும்புபொ திந் திணரிய பொன்னவிழ் வேங்கையு

மொருங்குநின் று கமழும் பலர்மல்கு மறுகிற்
குடவர் கோமான் குணவிற் றுமுனைத்
தருந்தே ரோன்பொன் றனிபொழி தடக்கைத்
தொண்டிக் கோமான் விண்டவர்த் தேய்க்குங்
கேளோம்பு நெடுந்தகை பறையிற் சாஅய்
நன்னல மிழந்த தீவினை யேனொடு
பண்டை போலா தின்றுபிறி தாகிக்
கடுங்கதிர் கரந்த தண்பனி
நெடும்புலம் படர்ந்த தண்டுறைக் குருகே''

என்னும் பாட்டினுட் பாட்டுடைத் தலைமகன் வந்தவாறு கண்டு கொள்க.

வெண்பா

''கொண்டொழி பண்ட விலையொரீஇக் கொற்சேரிஇ
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி — னென்றானும்
வேறல்லை பாண வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ''

என்னும் பாட்டினுட் கிளவித் தலைமகன் வந்தவாறு கண்டு கொள்க.

வெண்பா

''தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யூரான்பி னைய னுவந் தூதுஞ் — சீர்சால்
சிறுகுழ லோசைச் சிறுதொடீ வேல்கொண்
டெறிவது போலு மெமக்கு''

என்னும் பாட்டினு ளிருவரும் வாராதொழிந்தவாறு கண்டு கொள்க. பிறவுமன்ன. (41)

250] அகப்புறப் பாட்டிற்காகும் ஒருவிதி

அகப்புறப் பாட்டு மிகப்பில வவையே.

(எ-சூன்) அகப்புறப் பாட்டுக்காவதோர் விதியுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) அகப்புறப் பாட்டிற் சொன்ன விலக்கணங்களைக் கடவா தகப்புறப்பாட்டு மென்றவாறு.

(உ-ம்) வெண்பா மாலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டு கொள்க. இத்துணையுங் கூறப்பட்ட வெல்லாமகப் பாட்டிற்கு முரிய வுறுப்புக்களாம். (40)

251] முதல் கரு உரி என்னும் முத்திறப்பொருள்களின் வழுவமைதி

முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய.

(எ-சூன்) ஐந்திணைக்கு முரிய பொருளின் வழுவமைதி யுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்) முதல் கருவுரி யென்னு மூன்று கூற்றவாகிய பொருளுந் தத்தமக் குரிய திணையோடுகூடி யிலக்கண முறைமையின்வாராது பிறதிணையோடுங் கூட மயங்கலு முரியவா மென்றவாறு.

அஃதென்னையெனின், பெரும் பொருளகத்து "உரிப் பொருளல்லன மயங்கவும் பெறுமே" என்பதனானும், உரிப் பொருட் சூத்திரத்துட் டேருங்காலை யென்னு மிலேசினானும் பெறும்.

(உ-ம்)

" கறங்குமணி நெடுந்தேர் கண்வா ளறுப்ப
பிறங்கு.மணன்மேலலவன் பரப்ப
வறங்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க
நிறங்கூறு மாலை வரும்."

என்னுந் திணைமொழி நெய்தற் பாட்டினுண் முல்லைக்குரிய மாலையாகிய முதற்பொருள் மயங்கினவாறு கண்டு கொள்க.

அன்னாய்வாழி வேண்டன்னை யென்னும் பெருங்குறிஞ்சி யுள்ளான். (குறிஞ்சிப்பாட்டுள்)

" மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயில் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற"

வென்புழி, முல்லைக்குரிய கருப்பொருளாகிய வான் கணமும், பாம்புங், கோவலரு, மாம்பற், குழலுமதற்குரிய முதற்பொருளாகிய மாலையும், நெய்தற்குரிய கருப்பொருளாகிய வன்றிலும், பனையும் வந்தவாறு கண்டுகொள்க.

"உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
யெருத்தங் கமழு மீன்றோ
டுறைப்ப வென்றி யிரீஇயரென் னுயிரே"

என்னுஞ் சிற்றட்டகத்துக் குறிஞ்சிப்பாட்டினு ளூட லென்னு முரிப்பொருள் மயங்கியவாறு கண்டு கொள்க.

" சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவி லெயினர் தங்கைநின் முலைய

சுணங்கென நினைதி நீயே
யணங்கென நினையுமென் னணங்குறு நெஞ்சே"

என்னு மைங்குறு நூற்றுப் பாலைப்பாட்டினுட் புணர்த லென்னு முரிப்பொருள் வந்ததாம்

"நாளுநாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனு
வொண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே

என்பது இருத்த லென்னு முரிப்பொருள் வந்தது சிற்றட்டகத்துப் பாலைப்பாட்டு.

"வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழின்
முளைநிரை முறுவ லொருத்தியொடு நெருநற்
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவநு நீள்சினை யறையும்
பருவ மாக்குயிற் கவ்வையிற் பெரிதே"

என்பது ஊடலென்னு முரிப்பொருள் வந்த வைங்குறு நூற்றுப் பாலைப்பாட்டு.

வெண்பா

வெறுக்கைகுச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றாற்பொறுக்க லாமோ—வெறுப்பபோற்
பொன்னு ளுறுபவளம் போன்ற புணர்முருக்க
மென்னு ளுறுநோய் பெரிது

என்ப திரங்கலென்னு முரிப்பொருள் வந்த ஐந்திணைப் பாலைப்பாட்டு

"இகல் வேந்தன் சேனை யிறுத்தவாய் போல"

வென்பதுமுல்லைக்குரிய கருப்பொருளாகிய புணர்த லென்னு முரிப்பொருள் கலித்தொகை முல்லைப்பாட்டு.

" புறவணி நாடன் காதன் மடமக
ளொண்ணுதல் பசப்ப நீசெலிற் றெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முலைக்கே"

என்பது பிரித லென்னு முரிப்பொருள் வந்த வைங்குறு நூற்று முல்லைப்பாட்டு.

" உதுக்கா ணதுவே யிதுவென் மொழிகோ
நோன்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குர லகவக் கேட்டு நீங்கிய
வேதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனைய
லெம்முந் தொடாஅ லென்குவ மன்னே "

என்பது ஊடலென்னு முரிப்பொருள் வந்த முல்லைப் பாட்டு.

" என்னரே யேற்ற துணைபிரிந்தார் ஆற்றென்பா
ரன்னரே யாவ ரவரவர்க்கு—முன்னரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர் தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து "

இஃது இரங்க லென்னு முரிப்பொருள் வந்த திணைமாலை முல்லைப்பாட்டு.

"பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவுங்
கழனி யூரநின் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோயிவ டந்தைகை வேலே "

என்பது புணர்தலென்னு முரிப்பொருள் வந்த வைங் குறு நூற்று மருதப்பாட்டு.

"அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
வெவ்வ நெஞ்சத் தெஃ கெறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலுங் குயிலினுந்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே
யதனினுங் கொடியா டானே மதனின்
றுய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென
வண்டுசூழ் வட்டிய டிரிதருந்
தண்டலை யுழவர் தனிமட மகளே"

என்பது இருத்த லென்னு முரிப்பொருள் வந்த நற்றிணை மருதப்பாட்டு. இரங்கற்கு மிதுவே யுதாரணம்.

"சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி யல்கலு
மிரவுக்குறிக் கொண்கன் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே"

என்பது புணர்தலென்னு முரிப்பொருள் வந்த சிற்றட்டகத்து நெய்தற் பாட்டு.

"கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாட னல்வய லூரன்
றண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதிக் கய்யறு மாலை
கொடுங்கழி நெய்தலுங் கூம்பக்
காலை வரினுங் களைஞரோ விலரே"

என்பது இருத்த லென்னு முரிப்பொருள் வந்த வைங்குறு நூற்றுநெய்தற்பாட்டு

"கண்டிகு மல்லமோ கொண்க நின்கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே"

என்பது ஊடலென்னு முரிப்பொருள் வந்த வைங்குறு நூற்றுநெய்தற்பாட்டு.

பிறவுமிவ்வாறு இவற்றினீங்கி மயங்கி வருவன வெல்லாங் கண்டு கொள்க. இத்துணையுங் கூறியது வழுவமைதியாம். (41)

252] அதிகாரப் புறனடை

கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்றொடுங் கூட்டி மெய்கொளக்
கூறி யுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே

(எ-ஞன்) அதிகாரத்திற் காவதோர் புறனடை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) ஈதிற்பொருள் வேறே தோன்றின வாயினு மவற்றை யிதனுளெடுத் தோதப்பட்ட பொருள்களோடுங் கூட்டி யுண்மை புலப்படச் சொல்லிப் பிறர்க் குணர்த்துதல் குணமுடையோர்க் கிலக்கண மென்றவாறு. (42)

ஐந்தாவது ஒழிபியன் முற்றும்.

அகப்பொருள் விளக்கவுரை முடிந்தது.

காட்டிடத்து செய்யுங்
கூட்டி லடைதல் துனி
ஆடமை யின்றவ் விரத மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை
பாடி னருவி பனிநீ ரின்னிசைத்

தோடமை முழவின் றதிர் குரலிருக்கும்
கருங்குரற் றூம்பொடு மலைப்பூஞ் சாரல்
வண்டியாழ் முரலுமி மிழிசை கேட்டுக்
கலிசி றந்து மந்தி நல்லவை
மருவளர் நோக்கக் கழைவளர கத்திற்
கலியாடு மயில்விழ வுக்களை விறலியிற்
ருேன்று நாட னுருவ வல்விற்
பற்றி யம்பு தெரிந்து நெஞ்சே
சென்னெறி விரவிரவிப்
பெருகுவ லென்ற பொழிலிடை யொருசிறை
யலைதார் மார்ப நின்ருேர் கண்டோர்
பலர்தில் வாழிய தோழி யவளு
ளாரரி கங்கு லணையோடு பொருந்தி
யோரி யானு குவங்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழுந் தோளே.

வெண்பா

ஓரா தெழுதினே னுயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீராய்ந்த
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்

ஒழிபியன் முற்றும்.

வெண்பா

" அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிகுந்தகள வைம்பதுடன் மேனன்—கிருத்த
வரைவிருபத் தொன்ப∴து மன்னுங்கற் பீரைந்
துரையொழிபு நாற்ப∴தோ டொன்று "

போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்குங்கால்
இல்லிருத்தன் முல்லை யிரங்க னறுநெய்தல்
சொல்விரிந்த நூலின் றுகை.

*நாற்கவி ராசநம்பியகப்பொருள் விளக்க மூலமுமுரையும்
முற்றுப்பெற்றது.*

உ

நம்பியகப் பொருள் விளக்கவுரை பிற்சேர்க்கை.

இந்நூல் சூ, 234:—

இச்சூத்திரத்துக் கூறப்பெற்ற துறையினது விளக்கத்தை அடியில் வரும் இலக்கண விளக்கத்து அகத்திணையியலின் 211-ஆஞ் சூத்திரத்தானும் அதன் உரையினும் உணர்க.

அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினும் திறவதின் நாடித்
தத்த மியல்பின் மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே.

(இ-ள்) ஐவகை நிலத்திற்குரியர் எனப்படும் பல்வேறு வகைப்பட்ட மக்களும், மாவும், புள்ளும் ஓதிவந்த வாறன்றிப் படைத்துச் செய்யினும் அவ்வத் திணைக்கேற்ற இலக்கணமும், வரலாற்று முறைமையும் பிறழாமற் செய்யின் அதுமார்க்க மெனப்படும். மார்க்கமெனினும் துறையெனினு மொக்கும்.

"ஊர்க்கா னிவந்த பொதும்பருள் நீர்க்கால்"

என்னுங்கலியுள்,

"கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு
கரும முடித்துக் கண்கூடு கூழை"

என நெய்தல் தலைமகள் போலக்கூறி, யவளை மருத நிலத்துக் கண்டான்போல,

"ஊர்க்கா லிவந்த பொதும்பருள்"

எனவுஞ் சொல்லிப், பின் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தல் உரிப்பொருளான் முடித்தான், அவ்வாறு மயங்கச் செய்யினும் குறிஞ்சித் துறைப்பாற்படச் செய்தமையின் அத்துறை யுறுப்பான் வந்த தென்பது.

இங்ஙனங் கூறிய வாற்றான் உரைப்போர் கேட்போர் உண்மையின்றி, உரைக்குங் கவியே யுரைப்பதூஉம் துறை யென்னு முறுப்பாதல் பெற்றாம்.

" எறிதே னலம்பும் சிலம்பினெப்போதும் இரந்திவள்பின்
வறிதே திரிந்து மெலிந்தனம் யா முள்ள மெல்லியற்குப்
பிறிதேகொ லென்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய் தாடஞ்சை வாணன் வரையணங்கே"

இதனுட் கூற்றிற் குரியன் அல்லாத கவி கூற்றும் அதற்கு உரியர் கூற்றின்பாற் படுத்தி அடக்கப்பட்டவாறு காண்க.

இச்சூத்திரத்திற்குத் தொல்காப்பியத்தில் அதனுரை யாசிரியர்கள் கூறிய உரையையும் கண்டு நோக்குக.

இந்நூல்—சூத்—244

இச்சூத்திரத்திற் கூறிய மடலேறுதல் முதலியவற்றின் விளக்கத்தை அடியில் வருவனவற்றா னுணர்க.

1 மடலேறுலாவது:— தன் குறைதீரப் பெறாத தலைவன் ஒருவன் காமம் மீதூர்ந்து பனங்கருக்காற் குதிரையும், பனை யிலுள்ள மற்றவற்றான் வண்டில் முதலியனவுஞ் செய்து, தன்னுடம்பு முற்றும் நீற்றினை யணிந்துகொண்டு பூளைப்பூ, எலும்பு, எருக்கலர் ஆகிய இவற்றினைத் தாராகக் கட்டித் தரித்துக்கொண்டு தான் விழைந்த தலைவியின் வடிவினையும் ஒருகிழியில் எழுதிச் சித்திரித்துப் பிடித்துக்கொண்டு அக்குதிரையின் மேலேறி யதனைத் தெருவில் பலரறியச் செலுத்துவது.

2 விடைதழாஅலாவது:- கொல்லுந்திறமமைந்த ஓர் எருத்தினை வெல்லுந்திற முடையானொருவன் தான் விரும்பிய தலைமகளை மணத்தற் பொருட்டுப் பிடித்துத் தழுவி யடக்குதலாம். விடை — ஏறு. தழாஅல்—தழுவுதல்.

3 குற்றிசையாவது:— தலைவியைத் தலைவன் முற்றத் துறந்து பற்றின்றி விடுதலாம்

4 குறுங்கலியாவது:— தன்னை முற்றத் துறந்து நீங்கிய தலைமகனைக் கோற்றொடி நங்கை முன்னின்று பழி தூற்றுதலாம்.

5 சுரநடையாவது:— சுரத்தின் கண்ணே நாயகியை யிழந்த நாயகன் வருந்தும் நிலையாம்,

6 முதுபாலையாவது:— சுரத்தின் கண்ணே, நாயகனை யிழந்த நாயகி கவலையுற்று தனிநின்று அரற்றும் நிலை, இது பெரும்பிரிவாதல் பற்றி முதுபாலை யெனப்பட்டது. பாலை—பிரிவு.

7 தாபதநிலையாவது:— நாயகன் இறந்தபின் நாயகி தவம் புரிந்தொழுகும்நிலை. தாபதம்—தவம்புரிவர்தன்மை.

8 தபுதார நிலையாவது:— நாயகி யிறந்தபின் தனிமையாய் மனையின்கணிருக்கும் நாயகனிலை. இது தாரமிழந்த நிலையெனவும்படும். தபு—இறந்த. தாரம்—மனைவி.

மடலேறுதற்கும், விடைதழாலுக்கும், உதாரணம் கலித்தொகையிற் காண்க. குற்றிசை குறுங்கலி முதலியவற்றிற்கு உதாரணம், வெண்பாமாலையிற் காண்க. முதுபாலை முதலியவற்றிற் குதாரணம் புறநானூற்றிலும் காணப்படும். சுரநடை முதலியவாறனுக்குஞ் சூத்திரம் வருமாறு:-

வாய்ந்த

1. சுரநடை மாதர் வருத்தம், சுரனுள்
2. முதுபாலை தன்னை மொழியின் மதுமலர்த்தார்க்
காவலன் வியக் கவன்றது வாகும்.
3. குற்றிசை கோல்வளை யாளைத் தலைமகன்.
முற்றத் துறந்த துறவாம்,
4. குறுங்கலி முற்றுத் துறந்த தலைமகனை முன்னின்று
பொற்றொடி மாதர் பழிதூற்றும், குற்றந்தீர்.
5. தாபதம் காதற்றலைமகனை நீங்கிய
மேவரு மாதர் நிலையாகும், மேவருஞ்சீர்
நீக்கப் பட்டாளை யுவந்த தலைமகன்.
6. பார்த்துறுஉம் தன்மை யதுவாந் தபுதாரம்,
என்பதாம்.

பிற்சேர்க்கை முற்றும்

உ

இறையனார் களவியல் மூலம்

(அகப்பொருள்)

களவு

அன்பி னைந்திணைக் களவெனப் படுவது
அந்தண ரருமறை மன்ற லெட்டனுள்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர் (1)

அதுவே,
தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல் (2)

ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயின்
பாங்க னோரின் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்
றாங்கவ் விரண்டே தலைப்பெயன் மரபே. (3)

அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்
எவ்விடத் தானுங் களவிற் கில்லை (4)

புணர்ந்த பின்றை யாங்ஙன மொழுகாது
பணிந்த மொழியால் தோழி தேஎத்
திரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே (5)

இரந்துகுறை யுறாது கிழவியுந் தோழியும்
ஒருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்

பதியும்பெயரும் பிறவும்வினைஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கு முரிய வென்ப (6)

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி (7)

ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேஎத்துத்
தான்குறை யுறுத றோழிக் கில்லை (8)

முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது (9)

உள்ளத் துணர்ச்சி தெள்ளிதின் கரந்து
கிழவோ டேஎத்துக் குறையுறூஉ முளவே
குறிப்பறி வுறூஉங் காலை யான (10)

தன்னுட் குறிப்பினை யருகுந் தோழிக்கு
முன்னுறு புணர்ச்சியி னருகலு முண்டே (11)

குறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்
என்னை மறைத்த லெவனா கியரென
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலும்
மாயப் புணர்ச்சி யவனொடு நகாஅ
நீயே சென்று கூறென விடுத்தலும்
அறியாள் போறலுங் குறியாள் கூறலும்
படைத்துமொழி கிளவியுங் குறிப்புவேறு கொளலும்
அன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக் குரிய வென்ப (12)

குறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக்
கிழவிக் கில்லை தலைப்பெய லான (13)

தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே (14)

முற்ப டப்புண ராதசொல் லின்மையின்
கற்பெனப் படுவது களவின் வழித்தே (15)

களவி னுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான (16)

அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான (17)

குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த விடமென மொழிப (18)

இரவுக் குறியே இல்வரை யிகவாது (19)

பகற்குறி தானே யிகப்பினும் வரையார் (20)

இரவுமனை யிகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை (21)

அம்பலு மலருங் களவு (22)

வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி (23)

களவு வெளிப்படா முன்னுற வரைதல்
களவு வெளிப்பட்ட பின்றை வரைதலென்
றுயிரண் டென்ப வரைத லாறே (24)

பட்ட பின்றை வரையாக் கிழவன்
நெட்டிடை கழிந்து பொருள்வயின் பிரிதலும்
பொருள்வயின் பிரியா தொருவழித் தணத்தலும்
புரைவ தென்ப கற்பா லான (25)

வெளிப்படை தானே விரிக்குங் காலை
தந்தை தாயே தன்னைய ரென்றுங்
கன்னவ ரறியப் பண்பா குட்டுமே (26)

அவருள்
தாயறி வுறுதலி னேனோரு மறிப (27)

தந்தை தன்னைய ராயிரு வீற்றும்
முன்ன மல்லது கூற்றவ ணில்லை (23)

காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்
அவனூ றஞ்சுங் கால மாயினும்
அந்நா லிடத்தும் மெய்ந்நா ணொரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கு முரித்தே,, (29)

காமம் மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியும்
இரவினும் பகலினு நீவரு மென்றலுங்
கிழவோன் றன்னை வார லென்றலும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியும்
அன்ன மரபின் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி யெல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப (30)

ஆறின் னுமையு மூறு மச்சமுந்
தன்னை யழிதலுங் கிழவோற் கில்லை (31)

களவி னுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
திங்க ளிரண்டி னகமென மொழிப (32)

களவி னுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை (33)

களவு முற்றும்.

2. கற்பு

கற்பி னுட் டுறவே கடிவரை வின்றே (34)

ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயின் பிரிவே (35)

அவற்றுள்,
ஓதலுங் காவலு முயர்ந்தோர்க் குரிய (36)

வேந்துவினை யியற்கை பார்ப்பார்க்கு முரித்தே (37)

அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத் தான (38)

வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்கவ் விரண்டு மிழிந்தோர்க் குரிய (39)

காதற் பரத்தை யெல்லார்க்கு முரித்தே (40)

பிரிவி னீட்டம் நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல் (41)

பரத்தையிற் பிரிவே நிலத்திரி பின்றே (42)

பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறைத லறத்தா றன்றே (43)

கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத்தந்
தறப்பொருள் படுப்பினு வரைநிலை யின்றே (44)

புகழுங் கொடுமையுங் கிழவோன் மேன (45)

கொடுமை யில்லைக் கிழவி மேற்றே (46)

கிழவோன் முன்னர்க் கிழத்திதற் புகழ்தல்
புலவிக் காலத்துப் புரைவ தன்றே (47)

நாடு மூரு மில்லுஞ் சுட்டித்
தன்வயின் கிளப்பின் புலவிப் பொருட்டே (48)

அவன்வயின் கிளப்பின் வரைவின் பொருட்டே (49)

உணர்ப்புவயின் வாரா வூடல் தோன்றின்
புலத்த ருளே கிழவற்கும் வரையார் (50)

நிலம்பெயர்ந் துறையும் நிலையியன் மருங்கின்
களவுறை கிளவி தோன்றுவ தாயின்
இணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார் (51)

நிலம்பெயர்ந் துறையு மெல்லாப் பிரிவும்
ஒழிந்தோ ரறியவு மறியா மையுங்
கழிந்துசேண் படூஉ மியற்கைய வென்ப (52)

எல்லா வாயிலுங் கிழவோன் பிரிவயின்
பல்லாற் றானும் வன்புறை குறித்தன்று (53)

வன்புறை குறித்த வாயி லெல்லாம்
அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறங் குறித்தன் றென்மனர் புலவர் (54)

சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே
அவற்புணர் வறியுங் குறிப்பி னான (55)

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே கால மெச்சமெய்ப் பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையு முரைத்த லன்றே (56)

அவற்றுள்,

எச்சமுங் கோளு மின்மையு முரிய (57)

சொல்லே குறிப்பே யாயிரண் டெச்சம் (58)

முற்படக் கிளந்த பொருட்படைக் கெல்லாம்
எச்ச மாகி வரும்வழி யறிந்து
கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே (59)

களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோர்
உளநிக முன்பின் உயர்ச்சி மேன (60)

கற்பு முற்றும்.

இறையனார் அகப்பொருண் மூலம் முற்றும்.

உ

நாற்கவிராச நம்பியகப் பொருள் விளக்கவுரை

கிளவித்தொகை வகைகளின் பொருள்

களவியல்:— 17

களவிற்குரிய கிளவித்தொகைச் சூத்திரம் 123

1. **இயற்கைப்புணர்ச்சி:—** அஃதாவது ஊழினால் தலைமகன், தலைமகளை எதிர்ப்பட அவ்விருவரும் உளமலிகாதலொடு வளமுறத் தாமே கூடுதலாம்.

2. **வன்புறை:—** தலைவியானவள் ஐயுற்றவழித் தலைவன் ஐயுறவுதீர வற்புறுத்திக் கூறல், வன்பு—வலிமை, உறை—உறுத்தல்.

3. **தெளிவு:** தலைமகனார் கூறிய மொழியைத் தலைமகளார் மெய்யெனத் தெளிந்து ஆற்றுதல்.

4. **பிரிவுழிமகிழ்ச்சி:—** தலைமகள் பிரிந்து போகும் போழ்து அவள் செல்கின்ற தன்மையைக் கண்டு தலைமகன் மகிழ்தல்.

5. **பிரிவுழிக்கலங்கல்:—** தலைமகள் பிரிந்தபோது தலைமகன் கலங்கிக்கூறல்.

6. **இடந்தலைப்பாடு:—** இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைமகன் அடுத்த நாள் அவ்விடத்தே வந்து தலைமகளைக்கூடல்:

7. **பாங்கற்கூட்டம்:—** மூன்றும் நாள் பாங்கனுற் கூடும் கூட்டம்.

8. **பாங்கிமதியுடன் பாடு:—** பாங்கி, தலைவியின் வேறுபாடு கண்டு புணர்ச்சியுண்மை யறிந்தாராய்ந்து தன் மதியை யுடன்படுத்தல்.

9. **பாங்கியிற்கூட்டம்:—** பாங்கியானவள் கூட்டிவைக் கத் தலைமகன் தலைமகளைக் கூடுதல்.

10. **பகற்குறி:—**

(அ) தலைவன் தலைவியைப் பகற்குறியிற் கூடுதல்.

(ஆ) ஒருசார் பகற்குறி:- ஒரு கூற்றுப் பகற்குறி, அஃதாவது மற்றை நாள் தலைவன் தன்வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்து வந்து நிற்கப், பாங்கி குறிக்கண் தலைவியைச் செலுத்தாது மறுத்துக் கூறத் தலைவன் வருந்திப் போதல்.

11. **பகற்குறியிடையீடு:—** பகற்குறிக்கண் வந்த தலை மகன் குறிக்கட்செல்லாது இடையீடுபட்டுப் போதல்.

12. **இரவுக்குறி:—** தலைவன் தலைவியை இரவுக்குறியில் கூடுதல்.

13. **இரவுக்குறியிடையீடு:—** எட்டாம் நாள் இரவுக் குறிக்கண் வந்த தலைமகன் அல்ல குறிப்படுதலால் இடை யீடுபட்டுப் போதல்.

14. **வரைதல்வேட்கை:—** இவ்வாறு இடையீடுபட்டத ஞல் பத்தாம் நாள் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுதல்.

15. **வரைவுகடாதல் —** பாங்கி தலைவனொடு வரைவுகூறி விஞதல்.

16. **ஒருவழித்தணத்தல்:—** வரைவு கூறிய பாங்கியொடு

வரைதற் குடன்பட்ட தலைமகன் தன்னுடைய ஊர்க்கு ஒரு வழிப்போய் வருகின்றேன் என்றுக் கூறிப்போதல்.

17. **வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்:—** *வரைவை யிடையிலே வைத்து, வரைதற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல்.*

வகை:— *இயற்கைப் புணர்ச்சியின் தலைவியிற் புணர்ச்சியின் வகை நான்கு (4) சூத்திரம் 126.*

இயற்கைப் புணர்ச்சியின் மற்றொருபகுதியாகிய தெய்வப்புணர்ச்சிக்கு வகையில்லை கிளவிகள் மாத்திர முள.

1. **வேட்கை யுணர்த்தல்:—** *தலைமகளுக்குத் தலைவன் தன்வேட்கையினைத் தெளிவித்தல்.*

2. **மறுத்தல்:—** *தலைவி மறுத்தல்,*

3, **உடன் படல்:—** *தலைவி கூட்டத்திற்குடன் படல்.*

4. **கூடல்:—** *தலைவியைத் தலைவன் கூடுதல்.*

வன்புறையின் வகை—2 சூத்திரம். 128

1. **ஐயந்தீர்த்தல்:** *தலைவிக்குண்டான ஐயத்தைத்தலைவன் றீர்த்தல்.*

2. **பிரிவறிவுறுத்தல்:-** *தலைவன் றன்பிரிவைத் தலைவிக்குத் தெரிவித்தல்.*

தெளிவின் வகை (1) சூத்திரம் 130.

1. **தலைவன் மாற்றம் தலைவி தேற்றம்:—** *தலைமகன் சொல்லைத் தலைமகள் தெளிதல்.*

பிரிவுழி மகிழ்ச்சியின் வகை 2. சூத்திரம் 131

1. **செல்லுங் கிழத்தி செலவு கண்டுளத்தொடு**

சொல்லல்:— செல்லுந்தலைவி செல்லுந் தன்மையைக் கண்டு தலைமகன் றன்மனத்தொடு சொல்லுதல்.

2. **செல்லுங்கிழத்தி செலவு கண்டு பாகனொடு சொல்லல்:—** தலைவி செல்லுந் தன்மையைக் கண்டு தலைவன் பாகனொடு மொழிதல்.

பிரிவுழிக்கலங்கலின் வகை 2. சூத்திரம் 132.

1. **மருளுற்றுரைத்தல்:—** தலைமகளை யாயவெள்ளம் வழிபடக் கண்டு இத்தகையாளை நாங்கூடப் பெற்றது என்ன வியப்பெனத் தலைமகன் மயங்கிக் கூறல்.

2. **தெருளுற்றுரைத்தல்:—** தலைவன் றெளிவு பெற்றுச் செப்பல்.

இடந்தலைப் பாட்டின் வகை 3. சூத் 134.

1. **தெய்வந் தெளிதல்:—** முன்னே நமக்கு அவளைக் கூட்டி வைத்த தெய்வம் பின்னுங் கூட்டி வைக்குமெனத் தெளிந்து செல்லுதல்.

2. **கூடல்:—** தலைவன் றலைவியைக் கூடுதல்.

3. **விடுத்தல்:—** தலைவன் றலைவியை ஆயத்தின்பாற் செல்ல விடுத்தல்.

பாங்கற் கூட்டத்தின் வகை 7. சூத் 136.

1. **சார்தல்:—** தலைவன் றன் பாங்கனைச் சேர்தல்.

2. **கேட்டல்:—** பாங்கன் றலைவனது வாட்டத்தைக்கண்டு உனக்கியாதுற்றது என்று தலைவனை வினுதல்.

3. **சாற்றல்** தலைவன் வாட்டத்தின் காரணத்தினைத் தெரிவித்தல்; பாங்கற்கு.

4. **எதிர்மறை:—** பாங்கன் றலைமகனை நோக்கி நினக்கிது தகுவதன்றென இடித்துரைத்தல்.

5. **நேர்தல்:—** தலைவன் சொற்படி தலைவியைச் சென்று கண்டுவந்த பாங்கன் றலைவன் கருத்திற் கிசைதல்.

6. **கூடல்:—** தலைவன் சென்று தலைவியைக்கூடல்

7. **பாங்கிற் கூட்டல்:—** நின்னுயிர்ப் பாங்கியொடு வருக வெனக்கூறித் தலைவன் றலைவியை யவள் பாங்கியர்பாற் செல்ல விடுத்தல்.

பாங்கி மதியுடன்பாட்டின் வகை—3. சூத்திரம் 158.

1. **முன்னுற வுணர்தல்:—** பாங்கற் கூட்டத்தின்கண் தலைவன் றலைமகளைக் கூடி மீண்டு வந்து பாங்கி முன்னுற்ற வழிப் பாங்கி தலைவியின் வேறுபாட்டைக் கண்டு கூட்ட முண்மை யறிதல்,

2. **குறையுற வுணர்தல்:—** தலைவன் றழையும் கண்ணியுங்கொண்டு சென்று பாங்கியின்பாற் குறையுற்று நிற்பக் கண்டு பாங்கியதனுனே கூட்ட முண்மை யறிதல்.

3. **இருவரு முள்வழி யவன் வர வுணர்தல்:-** தலைவியுந் தானும் ஒருங்கிருந்தபோது தலைமகன் முன்போலத் தழையுங் கண்ணியுங் கொண்டுவரப் பாங்கியதனுனே கூட்ட முண்மை யறிதல்.

பாங்கியிற் கூட்டத்தின் வகை—12 சூத்திரம். 143.

1. **இரந்துபின்னிற்றல்:-** தலைமகன் பாங்கியின் பாற் குறையுற்று நிற்றல்.

அஃதாவது, தலைவன் பாங்கியின்பால் தன் குறையைத் தீர்க்கவேண்டும் என இளிமையாக இயம்பல் பின்னிற்றலென் பது ஒருமொழி. இளிமை மொழித லென்பது அதன்பொருள்.

2. **சேட்படை:-** பாங்கி தலைமகன் குறையைத் தீர்க்கவுடன் படாமல் மறுத்தல் (சேட்படையென்பதற்குத் தூரவிடல், அகற்றல் என்பன சொற்பொருள், மறுத்தலென்பது கருத்து.

3. **மடற்கூற்று:—** தலைவன் மடலேறுவலெனக் கூறுதல்

4. **மடல்விலக்கு:—** பாங்கியானவள், அவன் மடலேறலை விலக்கல்.

5. **உடன்படல்;—** பாங்கி தலைவனது குறையை முடிக்க நேர்தல்.

6. **மடற்கூற்றொழிதல்:—** தலைவன்றன் குறையைத் தீர்க்கப் பாங்கியுடன் பட்டமையின், தலைவன் 'நான் மடலே றுவல்' என்றுரைத்தபடி மடலேறாமல் அதனை விடுத்தல்.

7. **குறைநயப்பித்தல்:—** பாங்கி தலைவனது குறையை முடித்தற்குத் தலைவியை விரும்புவித்தல்.

8. **நயத்தல்:—** தலைவி விரும்புதல் (அஃதாவது தலைவி தலைவன்றன் குறையை முடிக்க உடன்படல்)

9. **கூட்டல்:—** பாங்கி குறியிடத்துத் தலைவியை யுய்த்தல்.

10. **கூடல்:—** தலைவன் றலைவியைக் கூடுதல்.

11. **ஆயங்கூட்டல்:—** பாங்கி தலைவியை யழைத்துச் சென்று பாங்கிய ரிடத்துச் சேர்த்தல்.

12 **வேட்டல்:—** தலைவன் பாங்கியின் சொற்படி விருந்து விரும்பல்.

பகற்குறியின் வகை 4. சூத். 151

அவை, கூட்டல், கூடல், பாங்கியிற் கூட்டல், வேட்டல் என்பனவாம். இவை, பாங்கியிற் கூட்டத்தின் வகைகள் பன்னிரண்டினுள் ஈற்றிற் கூறப்பட்ட கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் என்னும் நான்குமே யாகும். பாங்

கியிற் கூட்டத்திற்கு உரிய கிளவிகளுள் ஈற்றிற் கூறப்பட்ட குறியிடங் கூடல் முதலிய பன்னிரண்டு கிளவிகளே இவற்றிற்குங் கிளவிகளாகும்.

ஒருசார் பகற்குறியின் வகை—3. சூத்திரம் 153

1. **இரங்கல்:—** தலைவன் பிரிந்துழித் தலைவி வருந்துதலும் அதுகண்டு பாங்கி புலம்பலும், தஞ்சம் பெருது தலைவி வருந்துதலுமாம்.

2. **வன்புறை:—** பாங்கி தலைவியை இடித்துரைத்தல் 123-ம் சூத்திரத்திற்கூறிய வன்புறை. களவியலின் கிளவித் தொகைகள் பதினேழனுள் ஒன்றும் எனவும், ஈண்டுக்கூறிய வன்புறை, ஒருசார் பகற்குறியின் வகைகள் மூன்றனுள் ஒன்றுகும் எனவும் அறிக.

3. **இற்செறிப்பு உணர்த்தல்:—** தலைவியைப் புறத்திற் போகாதபடி இல்லின்கண் செறித்தமையைப் பாங்கி தலைவனுக்கு உணர்த்துதல்.

பகற்குறி யிடையீட்டின் வகை—3. சூத்திரம் 155.

1 **விலக்கல்:—** தலைவனும் தலைவியும் குறியின்கண் வருதலைப் பாங்கி விலக்கல்.

2. **சேறல்:—** தோழி, தலைமகளை யாடும் இடத்தினின்றும் அழைத்துச் செல்லுதல்.

3. **கலக்கம்:—** தலைவனை யடையப் பெருமையின் தலைவி மனங்கலங்குதலும், தலைவியை யடையப் பெருமையின் தலைவன் மனங்கலங்குதலுமாம்.

இரவுக்குறியின் வகை:— 9. சூத். 157

1. **வேண்டல்** இறையோன் பகற்குறி வேண்டலும் தோழி யிறைவியை வேண்டலுமாம்.

2. மறுத்தல்:— தோழியும், தலைவியும் தலைவன் வேண்டு கோளை மறுத்தல்.

3. உடன்படல்:— தோழி இறையோன் வேண்டுகோட் குடன் படலும், தலைவி தோழியின் சொற்கு உடன்படுதலு மாம்.

4. கூட்டல்:— பாங்கி தலைவியை யழைத்துச் சென்று குறியிடத் துய்த்தல்.

5. கூடல்:— இறைவன் இறைவியைக் கூடுதல்.

6. பாராட்டல்:— தலைவன் தலைவியைப் புகழ்தலும், பாங்கி இறைவன் அளித்த கையுறையைப் புகழ்தலுமாம்.

7. பாங்கியிற்கூட்டல்:— தலைவன் தலைவியை இல்வயின் செல்ல விடுப்பப் பாங்கி தலைவியை இற்கொண்டு செல்லு தல்.

8 உயங்கல்:— இரவுக் குறிக்கண் இறைவன் வரும் ஆற் றினது அருமையினை யெண்ணி யிறைவி வருந்துதலும், அத ணால், தலைவன் மயங்கி வருந்துதலுமாம்.

9. நீங்கல்:— தோழி தலைவியைக் குறிக்கண் உய்த்து நீங்கலும், தலைவன் தலைவியைக் கூடி நீங்கலுமாம்.

இரவுக்குறி யிடையீட்டின் வகை 2. சூத். 159

1. அல்லகுறி:— தலைவனும், தலைவியும், தோழியும், தங் களுக்குட் குறித்துக் கொண்டபடி தலைவனால் நிகழ்த்தப் படு தற்குரிய புள்ளெழுப்பல், நீரின்கண் கல்லினை எறிதல், இள நீர் விழ்த்தன் முதலிய குறிகள் பிறிதொன்றனால் நிகழ்த்தப் படத் தலைவி குறிக்கண் வந்து தலைவனைக் காணப்பெறாது சென்றனள். பின்னர் தலைவன் அங்கு வந்து தலைவியினைக்

கூடப்பெறாது சென்றனன். இங்ஙனமாகத் தலைவனான் நிகழ்த்தப் படுதற் குரியவைகள் பிறிதொன்றனால் நிகழ்த்தப் படுதலின் அஃது அல்ல குறியாயிற்று.

2. **வருந்தொழிற் கருமை:—** தலைவன் இரவுக் குறிக்கண் வரற்கிடையூறாகிய நிகழ்ச்சிகள் நிகழ்தல்.

வரைதல் வேட்கையின் வகை:— 3. சூத். 163

1. **அச்சம்:—** தலைவி தலைவனை யெய்துதற் கிடையூறான நிகழ்ச்சிகள் உண்டாகத் தலைவியானவள் அஞ்சுதலாம்.

2. **உவர்த்தல்:—** பாங்கி தலைவனை வெறுத்துக் கூறல். உவர்த்தல்—வெறுத்தல்.

3 **ஆற்றாமை:—** தலைவன் வாராமையைத் தலைவி பொறாமல் வருந்துதல்.

வரைவு கடாதலின் வகை— 4 சூத். 165

1 **பொய்த்தல்:—** தோழியானவள் தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளும்படிச் செய்ய வெண்ணித் தலைவனிடம் பொய்யாயினவற்றைத் தானே புனைந்து கூறுதல்.

2 **மறுத்தல்:—** தலைவன் குறிக்கண் வருதலைத் தோழி குறிப்பாகவும் வெளிப்படையாகவும் மறுத்தல்.

3 **கழறல்:—** தோழி, நீ தலைவியை மணந்து கொள்ளாமல் களவின்கண் ஒழுகுதல் நின்னொடு முதலியனவற்றிற்கு ஏற்றதன்றெனத் தலைவற்குக் கூறுதல்.

4 **மெய்த்தல்:-** தோழி, தலைவனுக்கு மெய்யாயினவற்றைக் கூறுதல்

ஒருவழித் தணத்தலின் வகை 7 சூத். 167

1. **செலவறிவுறுத்தல்:—** *தலைவன் தான் ஒருவழித் தணந்து செல்லுஞ் செலவைப் பாங்கிக்குத் தெரிவித்தலும் அவள் அதனைத் தலைவிக்குத் தெரிவித்தலுமாம்.*

2. **செலவுடன் படாமை:—** *தலைவன் செலவைப் பாங்கி தடுத்தல்.*

3. **செலவுடன்படுத்தல்:—** *தலைவன் தான் செல்ல வேண்டியது இன்றியமையாதது என்று கூறிப் பாங்கியை யுடன் படச்செய்தல்.*

4. **செலவுடன்படுதல்:—** *தலைவன் செல்வதற்குப் பாங்கி யுடன் படல்.*

5. **சென்றுழிக்கலங்கல்:—** *தலைவன் ஒருவழித் தணந்த போது தலைவி மனங் கலங்கி வருந்தல்.*

6. **தேற்றியாற்றுவித்தல்:—** *தோழி தலைவியின் மனந் தெளியும்படியான சொற்களைச் சொல்லி யவற்றால் அவள் துயர் ஆறும்படிச் செய்தல்.*

7. **வந்துழிநொந்துரை:—** *மீண்டு வந்த தலைவன்பாற் பாங்கி வருந்தி யுரைத்தலும், தன் பிரிவினால் தலைவிக்கும் தோழிக்கும் உண்டாகிய துயரத்திற்காகத் தலைவன் வருந்தி யுரைத்தலுமாம்.*

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின்
வகை 9. சூத்திரம் 169.

1. **பிரிவறிவுறுத்தல்:—** *தலைவன்றான் வரைவிடை வைத்துப் பொருள் காரணமாகப் பிரிந்து போவதைத் தலைவிக்குத் தெரிவிக்கும்படித் தோழியிடங் கூறுதல்.*

2. **பிரிவுடன் படாமை:—** *தலைவன் பிரிந்து செல்லுதற்குப் பாங்கியுடன் படாமை.*

3. **பிரிவுடன் படுத்தல்:—** பாங்கியுடன் படற்குரிய சொற்களைச் சொல்லி யவளை யுடன்படச்செய்தல்.

4. **பிரிவுடன் படுதல்:—** வரைவிடை வைத்துப் பொருள் காரணமாகத் தலைவன் செல்லுதற்குப் பாங்கி யுடன்படுதல்.

5. **பிரிவுழிக் கலங்கல்:** —தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்தபோது தலைவி மனங்கலங்கி வருந்தல்.

6. **வன்புறை:—** தோழி, தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல் இது வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலின் வகைகளுளொன்று. 153-ம் சூத்திரத்தில் வந்த வன்புறையை நோக்குக.

7. **வன்பொறை:—** வலிமையாகிய பொறை. தலைவன் பிரிவினால் உளதாகிய பொறுத்தற்கரிய துயரத்தைத் தலைவி பொறுத்துக் கொண்டிருத்தல்.

8. **வரும்வழிக் கலங்கல்:—** தலைவன் மீண்டு வரும் வழியில் தன்பிரிவால் தன் தலைவிக்கு உண்டாகக் கூடிய ஆற்றாமையை நினைந்து மனங்கலங்கிக் கூறல்.

9. **வந்துழி மகிழ்ச்சி:—** தலைவன் மீண்டு வந்தபோது தலைவி மகிழ்தல்.

வரைவியல்

வரைவிற்குரிய கிளவித்தொகை 2. சூத் 172.

1. **வரைவு மலிதல்:—** வரைவு தொடங்கி நடக்கு முயற்சி மிகுதல்.

2. **அறத்தொடு நிலை:—** களவினை வெளிப்படுத்தி நிற்றல் இதற்கு இப்பொருள் இவ்விடத்து மாத்திரமே கோடற்குரியதாம். எவ்விடத்துங் கோடற்குரியதன்று.

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை 3. சூத் 180.

1. **உடன் போக்கு:—** தலைவன் தன் ஊருக்குத் தலைவியைக் கொண்டு செல்லுதல்.

2. **கற்பொடு புணர்ந்த கவ்வை:—** தலைவி தலைவனுடைய உடைமையாய்க் கற்பொடு கூடியிருத்தலை அயலார் விரவிய சேரியினர் பலரும் அறிதல். கவ்வை—அலர், வெளிப்பாடு.

3. **மீட்சி:—** புதல்வியைத் தேடிச்சென்ற செவிலி மீண்டு வருதலும் உடன் போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலுமாம்.

வகை.

வரைவுமலிதலின் வகை 4 சூத் 173.

1. **வரைவு முயல்வுணர்த்தல்:—** பாங்கியானவள் வரைவின் பொருட்டு நிகழும் முயற்சியினைத் தலைமகட்குத் தெரிவித்தல்.

2. **வரைவெதிர் வுணர்த்தல்:—** தலைவன்றமர் மணங் கூறிவந்தபோது தலைவியின்றமர் மணமெதிர்ந்தமையைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

3. **வரைவறிந்து மகிழ்தல்:—** தம்முடைய தமர் வரைவு எதிர்ந்ததனால் தலைவியானவள் மகிழ்தல்.

4. **பராவல் கண்டுவத்தல்:—** மணம் நேர்ந்த தமர் ஏவலால் தலைவி மணத்தின் பொருட்டு அணங்கைப் பராவுதல் கண்டு தலைவன் மகிழ்தல்.

அறத்தொடு நிலையின் வகை— 8 சூத். 181

1. **போக்கறிவுறுத்தல்:—** பாங்கி தலைவியை யுடன் கொண்டு செல்லுமாறு தலைவனுக்குச் சாற்றல்.

2. **போக்குடன் படாமை:—** தலைவனுந் தலைவியும் அதனை மறுத்தல்.

3. **போக்குடன் படுத்தல்:—** உடன்கொண்டு செல்லுத லன்றித் தலைவிக்கு வேறு தஞ்ச மின்மையைத் தலைவனுக் கும், கற்பின் மேன்மையைத் தலைவிக்குங் கூறி யவ்விரு வரையும் உடன் போக்கிற்கு உடன்படும்படிச் செய்தல்.

4. **உடன்படுதல்:—** உடன்போக்கிற்குத் தலைவனுந் தலை வியும் உளமொருமித்தல்.

5. **போக்கல்:—** தலைவனுடன் தலைவியைப் பாங்கியான வள் செல்லவிடல்.

6. **விலக்கல்:—** தலைவன் றலைவியின் றளர்ச்சிகண்டு அவ ளுடன் ஓரிடத்திற் றங்கியபோது கண்டோர் அன்பினால் அவர்தம் போக்கை விலக்கித் தங்கள் விடுதியில் (பாடியில்) தங்கிச் செல்லும்படிச் சாற்றல்.

7. **புகழ்தல்:—** தலைமகன் தலைமகளை உவந்து கூறுதல்.

8. **தேற்றல்:—** கண்டோர், தலைவன்றன் பதியணிமை யானமையைக் கூறி விடுப்பத் தலைவனுடன் சென்ற தலை விக்குத் தன்பதி அடைந்ததனைக் கூறித் தலைவனானவன் அவ ளைத் தேறச் செய்தல்

கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை— 5 சூத் 183

1. **செவிலி புலம்பல்:—** தன் புதல்வி காதலனுடன் சென்றதனை யுணர்ந்து செவிலி புலம்பல்.

2. **நற்றாய் புலம்பல்:—** தன் புதல்வி காதலனுடன் சென்றதனை யுணர்ந்து நற்றாய் புலம்பல்.

3. **கவல்மனை மருட்சி:—** நற்றாய் வீட்டின்கண் இருந்து வருந்துதல்.

4. **கண்டோரிரக்கம்:—** தலைவியின் தோழிமார்களும், தாயும் வருந்துதலைக் கண்டோர் இரங்கிக் கூறுதல்.

5. **செவிலிபின் றேடிச்சேறல்:—** செவிலியானவள் தலைவியைப் பின்னே தேடிக்கொண்டு செல்லுதல்.

மீட்சியின் வகை— 4 சூத். 190

1 **தெளித்தல்:—** செவிலித்தாய் நற்றாய்க்குத் தலைவி நெடுந்தூரம் சென்று விட்டதனைக்கூறி யவளைத தெளிவித்தலும், உடன்போய் மீண்டு வருகையில் தலைவன் தலைவியினது ஊரை யடைந்தமையைக் கூறித் தலைவியைத் தெளிவித்தலும் ஆம்.

2 **மகிழ்ச்சி:—** தலைவிக்கு முன் செல்கின்றவர்கள், சென்று தலைவியின் வரவைப் பாங்கியார்க்குக் கூறப் பாங்கியர் மகிழ்தலும், பாங்கியர் சென்று நற்றாய்க்குக் கூற நற்றாய் மகிழ்தலுமாம்.

3 **வினுதல்:—** தன் மகள் காதலனுடன் வருகின்றாள் என்பதனைக் கேட்ட நற்றாய் நம்புதல்வியை நம் மனைக்கே கொண்டு வருவனோ? தன் நெடுநகர்க்கே கொண்டு செல்வனோ? என்று வெறியாட்டாளனை வினவுதல்.

4 **செப்பல்:—** முன் சென்றோர் தலைவியின் வருகையைப் பாங்கியர்க்குச் சொல்லுதல்.

வரைவியலில் தன்மனைவரைதல், உடன் போக்கிடையிடு வரைதல் என மற்றும் மூன்று உள்ளன களவியலில் 123 சூத்திரத்தான் இயற்கைப் புணர்ச்சி முதல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் வரையிலுமுள்ள பதினேழும், வரைவியலில் 172ஞ் சூத்திரத்தானும் 180 — ஆம் சூத்திரத்தானும், வரைவு மலிதல் முதல் மீட்சி வரையிலுமுள்ள வைந்தும், கற்பியலில் 201 — ஆம் சூத்திரத்தான்

இல்வாழ்க்கை முதல் பொருள்வயிற் பிரிவு வரையிலும் உள்ள ஏழும் கிளவித்தொகை எனக் கூறப்பட்டன. மேலே கூறப்பட்ட தன் மனை வரைதல் முதலிய மூன்றும் கிளவித் தொகை எனக் கூறப்பட்டன. ஆனால், அவற்றுள் தன்மனை வரைதல் உடன்போக்கிடையீடு என்று மிரண்டற்கும் வகை களும் கிளவிகளும் உள.

தஞ்சை வாணன் கோவை யுரையாசிரியர் ஆகிய சொக்கப்ப நாவலர் வரைவியலின் உரைப்பாயிரத்துள் “ஆதியில் எடுத்துக் கோடற்கண்ணே களவு என்றும், கற்பு என்றும், கைகோள் இரண்டென வைத்து அவ்விரண் டற்கும் நடுவே வரைவியல் என ஒன்று கூறியவதனால் முன் னதனோடு மாறுகொள்ளும் எனின் மாறுகொள்ளாது. என்னை ? கற்பிற்கு நிமித்த மாயவரைவு கூறுதலின் இதுவுங் கற்பின்பாற் படும். ஆயின் இதனைக் கற்பின்பாற் படுத்துக் கூறாது வரைவியல் என வேறாகக் கூறியது என்னை யெனின் வரைவு மலிவு முதலாக உடன்போக்கிடை யீறாக பலவகைப் பட்டு ஒவ்வோர் வகைக்குங் கிளவிகளும் பலவாக அதிகாரப் பட்டு நடத்தலின் விளங்குதற்கு வரைவியல் என்று வேறு கூறப்பட்டது” என்று கூறினர் ஆதலின், கிளவித்தொகை வகைகளின் பொருள் கூறப்படும் இவ்விடத்துத் தன் மனை வருதல் முதலிய இம்மூன்றும் வைக்கப்பெற்று, இவற்றிற் கும் இவற்றின் வகைகளுக்கும் பொருள் கூறப் பெறுவன வாயின.

தன்மனை வரைதல் முதலிய— 3. சூத். 193

1 **தன்மனைவரைதல்:—** உடன்போய் மீண்டு வந்த தலைவன் தன்னூர்க்குத் தலைவியைக் கொண்டு சென்று தன் மனையின்கண் வரைந்து கொள்ளுதல்.

சூத்திரம்— 197

2 **உடன்போக்கிடையீடு:—** சுற்றத்தினர் “நம் மனை யின்கண் வரைந்து கொள்ளாமல் தன்னூரின்கண் வரைந்த

னன் " என்று வெறுப்படைதல் கண்டு தலைவன் றலைவியை உடன்கொண்டு போகையில் தலைவியின் சுற்றத்தார் பின்றொடர்ந்து செல்லத் தலைமகளைத் தலைவன் விடுத்துச் செல்லுதல்.

சூத்திரம்— 199

வரைதல்:— ஐம்பத்தாறும் நாள் தலைவன் தலைவியின் இல்லத்திற்கு மீண்டு வருகையில் தலைவியின் றமர் எதிர் கொண்டுபோய் அழைத்து வந்தபின் தலைவன் அருங்கல முதலியன கொடுத்து உலக வியற்கையின்படி அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு மணத்திற்குரிய சடங்குடன் வதுவை முடித்துக்கொள்ளுதல்.

வகை

தன்மனை வரைதலின் வகை— 3. சூத். 193

1 **வினுதல்:—** தலைவியி னற்றாய் " நம்மனையின்கண் நம் புதல்விக்கு வதுவை நடத்தும்படி தலைமகன் நற்றாயைக் கேட்போமா ? என்று செவிலியை வினுதல்

2 **செப்பல்:—** இகுளை செவிலிக்கு வரைந்தமை சொல்லுதலும், அதனைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதலும், தலைமகன் யான் வரைந்தமையை நுமர்க்கியம்புக " எனத் தோழிக்குக் கூற அவள் " யான் முன்னரே அதனை யெம்மவர்க்கு இயம்பினென் " என்றலுமாம்.

2 **மேவுதல்:—** தலைமகன் " யான் வரைந்தமையை நுமர்க்குரை " என்று கூறுதல்.

உடன்போக்கிடை யீட்டின் வகை— 4. சூத். 197

1 **போக்கறிவுறுத்தல்:—** ஐம்பத்தாறு நாள் தன்னூரை விட்டு நீங்குந் தலைவி எதிர் வந்தவர்களைத் தலைமகனுடன் தான் செல்லுதலைத் தோழியர்க்கும் நற்றாய்க்கு முணர்ந்த

அறுப்புதலும், அந்தணர்கள் தலைவியின் செலவினை நற்றாய்க்குக் கூறுதலுமாம்.

2 **வரவறிவுறுத்தல்:—** தமர் பின் வருதலைத் தலைமகள் கண்டு தலைவனுக்கு உணர்த்தல்.

3 **நீக்கம்:—** தலைமகன் தலைமகளின் தமர் பின் வருதலை உணர்ந்து தலைமகளை விடுத்துச் செல்லுதல்.

4 **இரக்கமொடுமீட்சி:—** தலைவன் நீங்கினமையின் தலைவி வருத்தத்துடன் தமர்பின் தன்னில்லத்திற்கு மீண்டு வரல்.

கற்பியல்

களவித்தொகை—7. சூத்திரம் 201

1 **இல்வாழ்க்கை:—** தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் மேன்மையைக் கூறுதல்.

2 **பரத்தையிற்பிரிவு:—** தலைமகன் பரத்தையின் மேற் காதல் கொண்டு தலைவியைப் பிரிந்து பரத்தையர்தஞ் சேரிக்குச் செல்லுதல்.

3 **ஓதற்பிரிவு:—** தலைவன் கல்வியின் காரணமாகப் பிரியும் பிரிவு.

4 **காவற்பிரிவு:—** தலைவன் நாடு காத்தற் பொருட்டுப் பிரியும் பிரிவு.

5 **தூதிற்பிரிவு:—** அரசரிருவர் தம்மிற் பொராஅநின்றவழி அவரைச் சந்து செய்விப்பதற்குத் தலைவன் பிரியும் பிரிவு.

6 **துணைவயிற்பிரிவு:—** தன் நண்பனாகிய அரசனுக்குப் பகை வேந்தர்களால் இடையூறு நேர்ந்தவழி அவ்விடையூற்றைத் தீர்த்தற் பொருட்டுத் துணையாகத் தலைமகன் பிரிதல்.

7 **பொருள் வயிற்பிரிவு:—** தலைமகன் பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு.

வகை

இல்வாழ்க்கையின் வகை— 4. சூத்திரம் 202

1 **கிழவோன் மகிழ்ச்சி:—** தலைவன் மகிழ்ச்சி. இது தலைமகன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலால் விளங்கும்.

2 **கிழத்தி மகிழ்ச்சி:—** தலைவியின் மகிழ்ச்சி. இது தலைவி தான் வருந்தா திருந்ததன் காரணத்தைப் பாங்கிக் குரைத்தலான் விளங்கும்.

3 **பாங்கி மகிழ்ச்சி:—** தோழியினது மகிழ்ச்சி. இது, வரையும் நாளளவும் ஆற்றியிருந்தமையைத் தலைவியையும் தலைவனையும் தோழி வினவுதலாலும், மணமனை வந்த செவிலிக்கு, தலைவனுக்குந் தலைவிக்குமுள்ள அன்பையும் உறவையும் அவர்களின் வாழ்க்கையின் நலத்தினையும் கூறுதலானும் விளங்கும்.

4 **செவிலிமகிழ்ச்சி:—** செவிலியினது மகிழ்ச்சி. இது மணமனை சென்று வந்த செவிலி நற்றாய்க்குத் தலைவியின் கற்பின் றன்மையையும், தலைவன் தலைவியர்களின் வாழ்க்கைத் தன்மையையும், அவ்விருவர் காதலையும் உணர்த்தலான் விளங்கும்.

பரத்தையிற் பிரிவின் வகை— 4. சூத்திரம் 204

1 **வாயில்வேண்டல்:—** பரத்தையிற் பிரிந்த தலைமகன் தோழியைத் தனக்கு வாயிலாகும்படி வேண்டல்.

2 **மறுத்தல்:—** தலைமகன் பாணன் முதலியவர்களை வாயிலாக அனுப்பத் தலைவி மறுத்தல்.

3 **வாயினேர்வித்தல்:—** தலைமகளை வாயிலை யேற்றுக் கொள்ளும்படிச் செய்தல்.

4 **வாயினேர்தல்:—** தலைமகள் வாயிலை யேற்றுக் கொள்ளுதல். [இவற்றின் கிளவிகளை நோக்கி இவ்வகைகளை யேற்றபடி யாராய்ந்து கொள்க.]

ஓதற் பிரிவு முதலிய வைந்து பிரிவுகளுக்குமுரிய
கிளவித் தொகைகளின் வகை— 9. சூத். 209

1 **பிரிவறிவுறுத்தல்:—** தலைவன் பிரிய விருத்தலைத் தோழி தலைவிக் குணர்த்தல்.

2 **பிரிவுடன் படாமை:—** தலைவன் பிரிவுக்குத் தலைவி யுடன் படாமை.

3 **பிரிவுடன் படுத்தல்:—** பாங்கி தலைவன் பிரிவுக்குத் தலைவியை யுடன்படச் செய்தல்.

4 **பிரிவுடன் படுதல்:—** தலைவன் பிரிவுக்குத் தலைவி யுடன் படுதல்.

5 **பிரிவுழிக் கலங்கல்:—** தலைவன் பிரிந்துழித் தலைவி வருந்துதல்.

6 **வன்புறை:—** பிரிவுழி வருந்துந் தலைவியை இகுளை யிடித்துக் கூறுதல் (169 ஆம் சூத்திரத்தில் வந்துள்ள வன்புறையை நோக்குக.)

7 **வன்பொறை:—** *தலைவன் பிரிவைத் தலைவி வலிதிற் பொறுத்தல்.(169)-ஆம் சூத்திரத்தில் வந்துள்ள வன்பொறையையும் நோக்குக)*

8 **வரும்வழிக் கலங்கல்:—** *தலைவன் மீண்டு வரும் வழியில் தலைவியின் நிலையை யெண்ணி வருந்துதல்.*

9 **வந்துழி மகிழ்ச்சி:—** *தலைவன் வந்தபோது தலைவியும் தோழியும் மகிழ்தல். (இவற்றையும் இவற்றிற்குரிய கிளவிகளை நோக்கி யமைத்துக்கொள்க.)*

முற்றும்.

நாற்கவிராச நம்பி அகப்பொருள் விளக்கவுரை நூற்பா முதற்குறிப்பகராதி.

நூற்பா		சூத் எண்	பக்கம்
		அ	
அகப்புறப்பாட்டும்	....	250	332
அகன்றுழிக் கலங்கலும்	....	243	375
அச்சமுவர்த்த லாற்று	....	163	203
அணிந்துழி நாணிய	....	129	91
அதுவே, புணைந்துரை	....	2	14
,, இறைமையில்	....	2 2	375
,, காமஞ்சான்ற	....	29	33
,, மொழிந்தோர்	....	31	33
அயன்மனைப் பிரி	....	63	49
அரிவை நாட்டம்	....	122	80
அல்லகுறி வருந்தொழிற்	....	159	192
அல்லாக் கல்வி	....	70	52
அவண்மனை வரை	....	46	41
அவருளும் வரைதற்	....	115	72
அவருள் உயர்ந்தோன்	....	246	377
,, காதற்பரத்தை	....	60	48
அவற்றுள், அறப்புறங்காவல்	....	73	53
,, இயற்பெயர்க்கிளவி		248	379
,, உடன்போய்	....	45	40
,, உள்ளுறை யுவமம்		238	373

நூற்பா		சூத் எண்	பக்கம்
,, எச்சமின்றியும்	....	235	371
,, ஓதற்பிரிவிடைத்	....	89	61
,, ஒருவழித் தணத்தற்கு		40	38
,, களவின்வழி	....	57	46
,, கைக்கிளை	....	3	13
,, கூதிர்யாமம்	....	13	20
,, முன்னவை	....	212	357
அவைதாம் முதற்பொருள்	....	7	17
அளவில் இன்பத்	....	26	31
அறப்புறங் காவல்	....	72	53
அறிவர் கிழவோன்	....	112	71
அற்றமில் சிறப்பினில்	....	150	160

ஆ

ஆங்குடன் போயுழி	....	54	45
ஆதியொன்றுழித்	....	195	312
ஆயமும் தாயும்	....	137	295
ஆய வெள்ளம்	....	133	97
ஆயிழை மைந்தனும்	....	207	344
ஆரணங் குயர்ந்தோர்	....	19	23
ஆற்றுத் தாயை	....	138	296
ஆற்றா ரஞ்சினும்	....	47	41

இ

இந்திரன் ஊரன்	....	23	26
இப்பொருள் பயக்கு	....	229	366
இயற்கைப் புணர்ச்சியிடம்	....	27	32
இயற்கைப்—தெய்வத்	....	33	34
இயற்கைப்—வன்புறை	....	123	81
இரங்கல் வன்புறை	....	153	163

நூற்பா		சூத் எண்	பக்கம்
இரந்துகுறை பெறாது	....	145	135
இருந்து பின்னிற்றல் கேட்	....	143	125
இரந்து பின்னீற்றற் கெண்ணல்		127	83
இருவகைப் பாங்கரும்	....	109	70
இருவரில்லிற்கும்	....	196	312
இருவரும் ஒருங்கே	....	249	380
இருள்புலர்காலே	....	16	22
இல்லத்தழுங்கலும்	....	87	59
இல்வரை யிகந்தது	....	38	37
இல்வாழ்க்கையே	....	201	320
இழிந்தோர் தமக்கும்	....	79	55
இளமையும் யாக்கையும்	....	100	67
இளேயோற் கிழவோற்	....	108	70
இறையோன் இருட்குறி	...	153	178
இறையோன் முதலோர்	....	224	364
இறைவனைப் பாங்கி	....	156	173
இறைவன் றனக்குக்	....	147	145
இறைவி கையுறை	....	149	154
இறைவிக் கிகுளை	....	160	193
இன்னார்க் கின்னுழி	....	230	366

ஈ

ஈங்ஙன மியம்பிய	....	142	125

உ

உடன்போய் மீண்ட	....	217	360
உடன்போய் வரைதலும்	....	44	40
உதவி யந்தண	....	77	55
உவமைப் பொருளும்	....	236	372
உளமலிகாதற்	....	117	74

நூற்பா		சூத் எண்	பக்கம்
உள்ளப் புணர்ச்சியும்	....	34	35
உள்ளுறை யுவமம்	....	237	372

ஊ

ஊடலவ்வழிக்	....	67	50

எ

எழுதிய வல்லியும்	....	121	79
எறிவளை வேற்றுமைக்	....	177	263
என்பொருட் பிரிவுணர்த்	....	170	236
என்றுடன் இயம்பிய	....	179	269

ஐ

ஐந்திணையுடைய	....	4	15
ஐயந் தீர்த்தல்	....	123	91

ஒ

ஒருதிணைக் குரிமை	....	233	367
ஒருபுணர் வொழிந்தவற்	....	49	42
ஒருவழித் தணத்தல்	....	39	38
ஒருவன் றனக்கே	....	113	72
ஒழிந்தோர் மன்றற்	....	61	48
ஒழிபெனப் படுவ	....	210	357

ஓ

ஓதல் முதலா	....	86	59
ஓதற் ககன்றோன்	....	92	63
ஓதற்றொழி லுரித்	....	69	52

நூற்பா		சூத் எண்	பக்கம்
க			
கருப்பொருட் பிறக்கும்	....	240	374
கலந்துழி மகிழ்தலும்	....	125	82
கல்வி முதலா	....	80	56
களவின் வழிவந்த	....	55	45
களவு வெளிப்படா	....	42	39
கன்னி விடலை	....	24	21
கா			
காட்சியையங்	....	118	76
காட்சி முதலாச்	....	36	36
காதலன் பிரிவுழிக்	....	205	327
காதலன் முலைவிலை	....	174	251
காதற் பரத்தையர்	....	59	47
காமஞ்சாலா	....	341	374
காரே கூதிர்	....	11	19
காலிற் சேறலும்	....	83	47
கி			
கிழவோன் கூற்றும்	....	225	364
கிழவோன் பிரிந்துழிக்	....	154	162
கிழவோன் மகிழ்ச்சி	....	202,	329, 321
கிழவோன் றன்னையும்	....	106	69
கு			
குடிப்பிறந்தோரை	....	105	69
குரவரிற் புணர்ச்சி	....	56	46

நூற்பா		சூத் எண்	பக்கம்
குறிஞ்சிபாலே	....	6	15
குறிப்பின் உணர்த்தும்	....	82	56
குறியிடங் கூறல்	....	152	161

கூ

கூட்டல் கூடல்	....	151	161
கூறிய வல்ல	....	252	387

கெ

கெழீஇய காமக்	....	64	49

கை

கையறு தோழி	....	176	259
கையுறை யேந்தி	....	141	122

கொ

கொலேவல் பாணன்	....	68	51

சா

சார்தல் கேட்டல்	....	136	102
சாற்று வெழுவருந்	....	222	362

சி

சிறப்புப் பெயர்	....	76	54

செ

செலவறிவுறுத்தல்	....	167	228
செலவிற் றேற்றலும்	....	96	65
செல்லுங் கிழத்தி	....	131	95
செல்வம் வாழ்த்தலும்	....	66	97

நூற்பா		சூத் எண்	பக்கம்
செவிலி நற்ருய்க்குக்	....	43	51
செவிலி நற்ருய்	....	71	111
செவிலி புலம்பல்	....	283	183
செவிலி யறத்தொடு	....	287	185
சென்றதும் நிகழ்வதும்	....	365	228
சே			
சேயிழைக் கிழத்தியை	....	68	102
சொ			
சொல்லாதகலினுஞ்	....	56	81
சொல்லிய அல்ல	....	368	234
சொல்லேயாயினும்	....	369	232
த			
தந்த தெய்வந்	....	101	135
தமர்வரி னிடைச்சுரந்	....	359	216
தலைவனுட் கோள்	....	126	144
தலைவன் பாங்கனே	....	103	137
தலைவன் மாற்றந்	....	94	130
தலைவன் றலைவிபார்ப்	....	358	213
தலைவன் றலைவிமுன்	....	321, 329	203
தலைவன் றலைவியொடு	....	361	218
தலைவி சேணகன்றமை	....	303	191
தலைவி தன்னையும்	....	60	88
தலைவிபாங்கிக்	....	42	48
தலைவி யிளமைத்	....	140	146
தன்பதிக் ககற்சி	....	228	168
தன்னூர் வரைதலும்	....	318	199

நூற்பா		சூத் எண்	பக்கம்
தா			
தாயர் பாங்கியர்	....	362	221
தாயும் நாயும்	....	199	161
தாயொடு பாங்கி	....	362	220
தி			
திணையே கைகோள்	....	357	211
திரட்டி யிவ்வாறு	....	203	162
தீ			
தீதுடைப் புலவி	....	67	99
தூ			
தூதிற் பிரிவும்	....	61	90
தூதுந் துணைமையும்	....	63	93
தெ			
தெய்வந் தன்னின்	....	34	32
தெய்வந் தெளிதல்	....	100	134
தெய்வம் புணர்ப்பச்	....	82	124
தெளித்தன் மகிழ்ச்சி	....	303	190
தோ			
தோழி கிழவோன்	....	149	148
தோழி செவிலி	....	71	110
ந			
நகை முதலாமிரு	....	366	231
நற்ற யறத்தொடு	....	44	52

நூற்பா		சூத் எண்	பக்கம்
நற்றாய் கண்டோர்	....	358	214
நன்மையினிறுத்தலும்	....	67	101
நா			
நாற்றமுந் தோற்றமும்	....	114	139
நான்கு வகைப்	....	40	43
நி			
நிமித்தம் போற்றலும்	....	291	186
நிலப்பெயர் வினைப்பெயர்	....	378	247
நிலமும் பொழுதும்	....	18	8
நீ			
நீங்குங் கிழத்தி	....	313	198
நெ			
நெஞ்சு நாணு	....	223	363
நெடுமால் குறும்பொறை	....	25	22
நெறிப்படு கருமம்	....	365	227
ப			
பகற்குறியிரவுக்	....	37	37
படைக்கலம் பயிறலும்	....	52	71
பணிமொழி நற்றாய்	....	308	194
பயந்தோன் றன்னை	....	359	215
பரத்தையர் காதற்	....	70	107
பரத்தையிற் பிரிதல்	....	48	62
பரத்தையிற் பிரிவும்	....	55	78
பருவரல் வினவிய	....	203	164

நூற்பா		சூத் எண்	பக்கம்
பா			
பாங்கி தலைவற்	....	270	182
பாங்கி தலைவியை	....	44	53
பாட்டுடைத் தலைவன்	....	377	245
பி			
பிரிவறிவுறுத்—பிரி	....	236	169
பிரிவறிவுறுத்—படா	....	348	209
பிரிவுழி விலக்கலும்	....	68	103
பின்னர் வரைந்த	....	50	65
பு			
புணர்தலும் பிரிதலும்	....	28	25
புணர்ந்துடன் போய	....	361	219
புணர்ப்பதும் பிரிப்பதும்	....	77	119
புலத்திற் சிறந்த	....	57	84
பூ			
பூத்தகாலை	....	62	91
பூத்தமை சேடியிற்	....	64, 200,	94
பெ			
பெட்டவாயில்பெற்	....	119	140
பெருந்திணை யென்பது	....	15	5
பெரும்பொழு தென்று	....	19	10
பொ			
பொய்த்தல் மறுத்தல்	....	216	165

நூற்பா		சூத் எண்	பக்கம்
பொருவிறந் தோற்குப்	....	35	35
பொற்பமை சிறப்பிற்	....	320	200
போ			
போக்கறி வுறுத்தல்	....	313	197
போக்கறி போக்	....	269	181
போக்கே கற்பொடு	....	269	180
ம			
மக்களொடு மகிழ்ந்து	....	73	116
மடந்தையுடன் போய்	....	307	192
மடந்தையை வாயில்	....	66	98
மடமானோக்கி	....	78	120
மடலேறுதலொடு	....	376	244
மருதம் நெய்தலென்	....	23	18
மருளுற் றுரைத்தல்	....	96	132
மலர்தலை யுலகத்துப்	...	9	1
மல்குகார் மாலை	....	21	15
மறையோர் மன்னவர்	....	33	30
மறையோன் கூற்றும்	....	365	226
மறையிற் புணர்ச்சியும்	....	47	58
மற்றைக் காவல்	....	53	74
மா			
மாலையாமம்	....	20	12
மி			
மின்னிடை வேற்றுமை	....	267	178

நூற்பா		சூத். எண்	பக்கம்
மு			
முத்திறப் பொருளும்	...	382	251
முற்பட மொழிந்த	....		
முன்வரு நீதியும்	....	68	104
முன்னிலைப் புறமொழி	....	43	50
முன்னிலை முன்னிலை	....	256	175
முன்றுற வுணர்தல்	....	114	138
மூ			
மூன்று சூத்திரத்து	....	347	203
மெ			
மெய்க்கிளை யாரோர்	....	32	28
யா			
யாரையும் நயவா	...	72	114
வ			
வருணன் சேர்ப்பன்	....	27	24
வரையே சுரமே	....	18	9
வரைவிடை வைத்து	....	39	41
வரைவு மலிவே	....	250	172
வரைவு முயல்வு	....	251	173
வரைவெனப் படுவது	...	250	171
வலனுயர் சிறப்பின்	....	57	85
வா			
வாயில் வேண்டல்	....	327	204
வாயில் வேண்டலும்	...	65	95

நூற்பா		சூத் எண்	பக்கம்
வி			
விருந்தியற் பரத்தை	....	50	66
விலக்கல் சேறல்	....	173	165
விறற்சேய் பொருப்பன்	....	24	20
வினவிய செவிலிக்கு	....	216	166
வினவிய பாங்கியின்	....	233	184
விறுதல் செப்பல்	....	308	193
வெ			
வெய்யோன் பாடு	....	22	17
வெளிப்படை யுவமம்	....	374	239
வெள்ளணி யணிந்து	...	333	206
வே			
வேட்கை யுணர்த்தல்	....	83	126
வேண்டல் மறுத்தல்	....	177	157
வேத மாந்தர்	....	53	75
வேனில் நண்பகல்	....	21	14

அகப்பொருள் விளக்கம் நூற்பா அகராதி

முற்றும்.

உ

நாற்கவிராச நம்பியகப்பொருள் விளக்கம்

முதற்பொருள் கருப்பொருள் உரிப் பொருள்களின் குறிப்புரை

அகப்பொருளின்கண் பண்டையோர் கொண்டுரைக்கும் எழுதிணைகளுள் நடுவணைந்திணையினை அன்புடைக் காம மெனக்கண்டனர். அவ்வைந்திணைகளுள் நிலைத்த நிலமுடையது நான்கேயாம். நானிலத்து ஐந்திணைவளமென நவில்வதுகொண்டு அஃது துணியப்பெறும் அந்நான்கு நிலமாவன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

" முல்லையுங் குறிஞ்சியும் முறையிற்றிரிந்து,
நல்லியல் பழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலையென்பதோர் படிமங் கொள்ளும் காலை "

என்பதனானும்,

முல்லையுங் குறிஞ்சியும் மொழிசமப்பாலை "

யென்பதனானும், பாலைமென வொரு நிலமுண்டெனத் தெளியப் பெறுகின்றது, பிற்கால நூல்களெல்லாம் ஐந்திணை யென வரையலாயிற்று. இந்நிலங்கட்கு " முதற் கரும்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், எனமுறை·

" நுதற்பொருள் மூன்றினும் நுவலப்படுமே "

என்னுஞ் சூத்திரத்தான் பொருள் மூன்றென வறியப்படுகின்றது.

" நிலமும் பொழுதும் முதற் பொருளாம்
ஆரணங் குயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு
ஊர்நீர் பூமரம் உணப்பபறை யாழ்ப்பண்
தொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும் "

என்பது கருப்பொருளாம்.

" புணர்த்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்
இருத்தலும் இவற்றி னிமித்தமும் எனவாங்கு
எய்திய உரிப்பொருள் ஐயிருவகைத்தே "

என்பதனல் உரிப்பொருள் இவையெனல் புலனுகும்.

I **குறிஞ்சிநிலம்:—** என்பது மலையும் மலைசார்ந்த விடமு மாகும். முதல்பொருள் பெரும்பொழுதும் சிறு பொழுது மாகும்.

இந்நிலத்திற்குரிய பெரும்பொழுது கூதிர்காலமும், முன் பனிக்காலமுமாம். சிறுபொழுது யாமம்.

2 1 **தெய்வம்:—** முருகக்கடவுள்

2 **உயர்ந்தோர்:—** பொருப்பன் (கரு) வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி, எனும் ஆண்பாலும் பெண் பாலும்.

3 **அல்லோர்:—** (தாழ்ந்தோர்) குறவர், கானவர், குறத்தியர் என்பவர்களாம்.

4 **பறவை:—** கிளி, மயில்.

5 **விலங்கு:—** புலி, கரடி, யானை, சிங்கம் என்பன.

6 **ஊர்:—** சிறுகுடி.

7 **நீர்:—** அருவிநீர், சுனைநீர்.

8 **பூ:—** குறிஞ்சிப்பூ, வேங்கைப்பூ, காந்தட்பூ என்பன.

9 **மரம்:—** சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்.

10 **உணவு:—** மலைநெல், மூங்கிலரிசி, தினை.

11 **பறை:—** தொண்டகப்பறை.

12 **யாழ்:—** குறிஞ்சியாழ்.

13 **பண்:—** குறிஞ்சிப்பண்.

14 **தொழில்:—** வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேனழித்து எடுத்தல், கிழங்கு கல்லியெடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.

II **பாலைநிலமாவது:—** சுரமும் சுரஞ்சார்ந்த விடமும் ஆம். அஃதாவது முல்லை நிலத்தன்மையும் குறிஞ்சி நிலத்தன்மையும் மாறி ஒரே வெட்டவெளியாய்க் கண்டோர் உட்குந்தன்மைத்தாய்ப் பேய்த்தேர் உலாவும் பெருவளியாய், என்றும் வெப்பமருததாய்க் காணப்பெறுவது.

இந்நிலத்திற்குரிய கருப்பொருள்களாவன:

1 **தெய்வம்:—** கன்னி (துர்க்கை) காடுகிழாள் எனவும் பெயருண்டு.

2 **உயர்ந்தோர்:—** விடலை, காளை, மீளி, எயிற்றி, ஆகிய இருபாலுமாம்.

3 **அல்லோர்:—** (தாழ்ந்தோர்) எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் என்பவர்களாம்.

4 **பறவை:—** (புள்) புறவு, பருந்து, எருவை, கழுகு, என்பவைகளாம்.

5 **விலங்கு:—** (மிருகம்) செந்நாய்.

6 **ஊர்:—** குறும்பு.

7 **நீர்:—** நீரில்லாக்குழி, நீரில்லாக்கிணறு, ஆயவைகளாம். பெருமழை பெய்துழி சிறிது தங்கிநிற்கும் நிலை பற்றிக் கூறப்பட்டதாகும்.

8 **பூ:—** குராஅம்பூ, மராஅம்பூ, என்பன.

9 **மரம்:—** உழிஞை, பாலை, இருப்பை, ஓமை, ஆயவை.

10 **உணவு:—** வழியிற் பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள்.

11 **பறை:—** துடி என்னும் பறையாகும்.

12 **யாழ்:—** பாலையாழ் ஆகும்.

13 **பண்:—** பஞ்சுரம் என்பதாம்

14 **தொழில்:—** போர்புரிதல், பகற் சூறையாடல் ஆயவையே.

பாலையின் உரிப்பொருள்:— பிரிதலும், பிரிதல் நிமித்தமும்.

III **முல்லை நிலமாவது:—** புறவும் (காடும்) புறவு சார்ந்த இடமும்.

இந்நிலத்திற் கருப்பொருள்களாவன:

1 **தெய்வம்:—** நெடுமால் (மாயோன்) விட்டுணு.

2 **உயர்ந்தோர்:—** குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி என்பவர்.

3 **அல்லோர்:—** இடையர், இடைச்சியர், ஆயர் ஆய்ச்சியர்,

4 **பறவை:—** கானங்கோழி (காட்டுக்கோழி)

5 **மிருகம்:—** மானும், முயலுமாம்.

6 **ஊர்:—** பாடி (ஆயர்பாடி, தரங்கமபாடி) காண்க.

7 **நீர்:—** குறுஞ்சுனைநீர், கானியாற்று நீர்.

8 **பூ:—** குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ.

9 **மரம்:—** கொன்றை, காயா, குருந்தம் என்பன.

10 **உணவு:—** வரகு, சாமை, முதிரை முதலியன.

11 **பறை —** ஏறு கோட்பறை (ஏறங்கோட்பறை)

12 **யாழ்:—** முல்லையாழ் என்பதாகும்.

13 **பண்:—** சாதாரி, ஆம்.

14 **தொழில்:—** சாமை வித்திடல், வரகுவித்திடல், அவற்றின் களைகளைப் பறித்தல், அவற்றினை யரிதல், கடா விடுதல் கொன்றையங் குழலூதல், மூவின மேய்த்தல்.) கொல்லேறு தழுவல், குரவைக்கூத்தாட்டு, கான்யாறுடல்

இந்நிலத்தின் உரிப்பொருள்:— இருத்தலும் (உறைதலும்) இருத்தல் நிமித்தமும்.

IV **மருதநிலமாவது:—** பழனமும் பழனஞ்சார்ந்த இடமும் ஆம். பழனம் — வயல். அஃதாவது நன்செய் நிலமாம்.

மருதநிலக் கருப் பொருளாவன:

1 **தெய்வம்:—** இந்திரன் (மருதநிலத்து வேந்தன்)

2 **உயர்ந்தோர்:—** ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.

3 **அல்லோர்:—** உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.

4 **பறவை:—** வண்டானம், மகன்றில், நாரை, அன்னப்புள், பெருநாரை, கம்புள், குருகு, தாரா என்பன.

5 **மிருகம்:—** எருமை, நீர்நாய்.

6 **ஊர்:—** பேரூர், மூதூர்.

7 **நீர்:—** யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்.

8 **பூ:—** தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ.

9 **மரம்:—** காஞ்சி, வஞ்சி, மருதம்.

10 **உணவு:—** செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி.

11 **பறை:—** நெல்லரிகிணை, மணமுழவு

12 **யாழ்:—** மருதயாழ்.

13 **பண்:—** மருதப்பண்

14 **தொழில்** விழாச்செய்தல், வயற் களை பறித்தல், நெல்லரிதல், கடாவிடல், குளங்குடைதல் புதுநீராடல்.

உரிப்பொருள்:— ஊடலும், ஊடல் நிமித்தமுமாம்.

V நெய்தல்நிலம்:— கடலும் கடலுஞ்சார்ந்த விடமும்.

நெய்தனிலக் கருப்பொருள்களாவன:—

1 **தெய்வம்:—** வருணன், (கடற்குரிய தெய்வம்)

2 **உயர்ந்தோர்:—** சேர்ப்பன், புலம்பன், பரத்தி நுளைச்சி.

3 **அல்லோர்:—** நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

4 **புள்:—** கடற்காகம்.

5 **விலங்கு:—** சுறுமீன்.

6 **ஊர்:—** பாக்கம், பட்டினம்.

7 **நீர்:—** உவர்நீர்க்கேணி, கவர்நீர்.

8 **பூ:—** நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடப்பம்பூ.

9 **மரம்:—** கண்டல், புன்னை ஞாழல்.

10 **உணவு:—** மீனும், உப்பும் விற்றுப்பெற்ற பொருள்கள்.

11 **பறை:—** மீன்கோட்பறை, நாவாய்ப்பம்பை.

12 **யாழ்:—** விளரியாழ்.

13 **பண்:—** செவ்வழிப்பண்,

14 **தொழில்:—** மீன்பிடித்தல், உப்புண்டாக்கல், அவை விற்றல், மீனுணக்கல், அவற்றினை யுண்ண வரும் பறவைகளை யோட்டுதல் கடலாடல்.

திணைமயக்கம் என்பது ஒன்றும், இரண்டும், மூன்றும், நான்கும், ஐந்தும், முதற்பொருளல்லன ஒன்றோடொன்று மயங்கப்பெற்று வருவது. இப்பொருளைக் கொண்டு நவிதற் பாற்று.

குறிப்புப்பொருள் விளக்கம் முற்றும்.

நாற்கவிராச நம்பி விளக்கவுரை

முற்றும்.

உ

நாற்கவிராச நம்பியகப்பொருள் விளக்கவுரை

பிழைதிருத்தம்

பிழை	திருத்தம்	பக்கம்	வரிஎண்
ஏ—று	எ—று	3	27
ஒத்திறுட்	ஒத்திறுட்	12	21
நுதவிற்று	நுதலிற்று	20	3
தென்ஜேயோர	தென்னேயோ	21	10
நுதவிற்று	நுதலிற்று	23	8
முரியவொன்றவாறு	முரியவென்றவாறு	23	9
அகத்திணயல்	அகத்திணையியல்	31	1
நுதவிற்று	நுதலிற்று	31	26
நுதவிற்று	நுதலிற்று	32	9
அகத்திணயல்	அகத்திணையியல்	35	1
நுதவிற்று	நுதலிற்று	35	19
அகத்திணயல்	அகத்திணையியல்	39	1
நுதவிற்று	நுதலிற்று	44	21
நுதவிற்று	நுதலிற்று	46	23
தொளேவல்	கொளேவல்	51	5
லுயலு	லுயவ	54	9
பாச்றை	பாசறை	64	7
தலேமசளுடைய	தலேமகளுடைய	71	16
நலத்துத	நலத்தை	85	17
தலேமகதறிவின்மை	தலேமகளதறிவின்மை	91	25
யாரிரிலரிப்	யாரிலரிப்	93	5

பிழை	திருத்தம்	பக்கம்	வரிஎண்
குரித்தர்மெனக்	குரித்தாமெனக்	102	19
வாங்சமை	வாங்கமை	116	4
கோடுத்தற்குச்	கொடுத்தற்குச்	123	18
நற்றினே	நற்றிணை	127	26
என்வும்	எனவும்	130	4
யமைமாமை	யமையாமை	130	5
வல்ளோ	வல்லலோ	131	21
கல்லிலிடை	கல்லிடை	133	28
மயோனன்ன	மாயோனன்ன	152	12
வள்ளெற்ரறவொடு	வள்ளெயிற்றரவொடு	159	14
பகற்குறியின்வீரி	பகற்குறியின்விரி	161	14
செய்யள்	செய்யுள்	174	22
தேடிவருவுதல்	தேடிவருதல்	176	18
தாலவர்	தாலவள்	177	4
சிறு	சிறா	179	18
செய்யிள்	செய்யுள்	18 12	
நம்வயிறிற்	நம்வயிற்	183	22
முதிராமூலேயிப்	முதிராமுலேயிப்	184	18
செய்யள்	செய்யுள்	193	15
பெணடி	பெண்டி	201	5
பயிற்றியயுரை	பயிற்றியவுரை	201	6
விரும்புலிக்	லிரும்புலிக்	201	24
மயலிய	மயிலிய	202	8
வாயிலுண்டுறைத்	வாயிலொண்டுறைத்	202	11
மலியப	மலியாப்	202	16
கனமுதி	கன்முதி	206	26
மாய்மணியு	மாமணியும்	207	25
நெறியாநரருள்	நெறியாரருள்	207	27
தருஉ.ங்	தருஉங்	210	6
வல்லலென்	வல்லென	211	8

பிழை	திருத்தம்	பக்கம்	வரிஎண்
பெரியகண்	பெயருங்கண்	211	11
———	பகலினுமிரவினும் பயின்றுவரு கென்றலும்	211	25
செவிவிக்கு	செவிலிக்கு	217	8
கங்கலின்	கங்குலின்	233	19
நற்றினை	நற்றிணை	238	21
வீனுவிற்கு	விஞுவிற்கு	247	16
என்வும்	எனவும்	254	6
புரிவிப்டனை	புரிவிப்புனை	255	5
செயயுள்	செய்யுள்	257	9
தோறியறத்தொடு	தோழியறத்தொடு	265	14
நிற்றறலமையு	நிற்றலமையு	267	14
ற்வலின்	நிற்றலின்	269	2
முன்றுங்	மூன்றுங்	269	20
யாய்நயரு	யாய்நயங்	314	22
மருன்ட	மருண்ட	316	2
எவைவிம்	எனவும்	316	12
தலைவி	தலைவி	323	11
லர்ம்பல்	லாம்பல்	324	16
பாத்தையர்	பரத்தையர்	323	5
ஏனவும்	எனவும்	329	11
செவிவ்யொடு	செவிலியொடு	336	22
பசிநோய்	பசுநெய்	336	24
புதவ்வனை	புதல்வனை	337	14
வையநன்	வையைநன்	337	22
டழிவுடன்	டொழிபுடன்	339	5
டமர்ந்த	டமர்த்த	339	25
பேழைச்	பேதைச்	339	23
விரைவினள்	விரைவனெனன்	342	3
செய்யுள	செய்யுள்	346	27

பிழை	திருத்தம்	பக்கம்	வரிஎண்
காப்பாடும்மே	கரப்பாடும்மே	347	26
நாவில்வைத்தான்	நாவில்வைத்தோன்	349	4
வென்னுவரு	வெண்ணுவரு	349	20
தலைமகளுருவு	தலைமகளுருவு	355	8
ஒருதிணைக்	ஒருதிணைக்	367	19
யுவமு	யுவமமு	372	19
யும்மம்	யுவமம்	373	26
குரவயுநீள்சினை	குரவநீள்சினை	384	15
வெறுக்கைகுச்	வெறுக்கைக்குச்	334	20
கற்பிறகு	கற்பிற்கு	415	14
முணர்ந்த	முணர்த்த	416	28
யிவ்வாறு	யிவ்வாறு	428	6
பாலைமென	பாலையென	434	17
முதற்கருப்பொருள்	முதற்பொருள்	434	20
நுலைப்படுமே	நுவலப்படுமே	434	21
விளங்கு	விலங்கு	440	5
நுனிதற்பாற்று	நுனித்தறிதற்பாற்று	440	21